தஞ்சை மராட்டிய மன்னர் வளர்த்த தமிழ் இலக்கியம்

பகுதி - 1

ம.சா. அறிவுடைநம்பி

எட்டாம் உலகத் தமிழ்மாநாடு

பதிப்புச் சுழல்நிதி வெளியீடு

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

தஞ்சை மராட்டிய மன்னர் வளர்த்த தமிழ் இலக்கியம்

பகுதி 1

முனைவர்: ம. சா. அறிவுடைநம்பி

முதுநிலை விரிவுரையாளர்

அரிய கையெழுத்துச் சுவடித்துறை

தமிழ்ப் பல்கலைக் கழகம்

தஞ்சாவூர்.

ISBN : 81 - 7090 - 226 - 6

எட்டாம் உலகத் தமிழ் மாநாடு

பதிப்புச் சுழல்நிதி வெளியீடு எண் 21.

தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு : 178

திருவள்ளுவராண்டு 2025 கார்த்திகை, திசம்பர் 1994

நூல் : தஞ்சை மராட்டிய மன்னர் வளர்த்த தமிழ் இலக்கியம் பகுதி 1

ஆசிரியர் : முனைவர் ம. சா. அறிவுடைநம்பி

பதிப்பு : முதற்பதிப்பு

விலை : உரு. 60 - 00

அச்சு : அமுதச்சகம்
38, மேலப்பொன்னகரம் 7-ஆவது தெரு,
மதுரை - 625016. (தொலைபேசி: 602029)

முனைவர் ஔவை நடராசன்
துணைவேந்தர்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

முகவுரை

சங்கம் என்ற சொல் முன்னாளில் வழக்கில் இல்லை மன்றம் என்பது அப்பொருளில் வழங்கியது அகன்ற இலந்தை மரத்தின் நிழலில் - மன்றத்தில் புலவர்களும் பாணர்களும் குழீஇயிருந்து தமிழ் நலம் பேசி உவந்ததைக் கேட்டு மகிழ்ந்து சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் பாணர்க்கும் புலவர்க்கும் அழியாப் பெருஞ்செல்வம் வழங்கினான் என்பர். இரத்திநீடிய அகன்றலை மன்றத்துக் 'கரப்பில் உள்ளமொடு வேண்டுமொழி பயிற்றி, அமலைக் கொழுஞ்சோறு ஆர்ந்த பாணர்க்கு அகாலச் செல்வம் முழுவதும் செய்தோன், எங்கோன் வளவன் வாழ்க! நின்பீடு கெழு நோன்றாள் பாடேனாயின் பல்கதிர்ச் செல்வன் படுவது அறியேன்' என ஆலத்தூர் கிழார் பாடும் பாடற் பொருளில் சோழர் பேரூரில் புலவர் கூடல் மிளிர்ந்தென அறிஞர் கருதுவர். அம் மரபை ஒட்டியே பல்லாண்டுகள் கழிந்து, தண்ணார் தமிழ் வளர்க்கும் தஞ்சை மாநகரில் அருட்டுறைக்குப் பெரிய கோயிற் போலவே தமிழ் நலம்பேணும் அரியகோயிலாகத் தமிழ்ப் பல்கலைக்கழகம் திகழ்கிறது.

1981 ஆம் ஆண்டு மாமதுரையில் நிகழ்ந்த ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டின் அறிவுப் பயனாகத் தமிழ்ப் பல்கலைக் கழகம் தஞ்சையில் தோற்றம் பெற்றது. கடந்த பதின்மூன்று ஆண்டுகளில் இப்பல்கலைக்கழகம் உயராய்வு நிறுவனமாக ஓங்கி வளர்ந்துள்ளது. உலகிலுள்ள எழுபதுக்கும் மேற்பட்ட நாடுகளில் தமிழ் பேசும் மக்கள் பரவியுள்ளனர். உலகெங்கும் வாழும் தமிழ் மக்களின் கனவுகளை நனவாக்கும் முயற்சியில்

இப்பல்கலைக்கழகம் தமிழ் பண்பாட்டுக் கலையரங்கமாக மிளிர வேண்டுமென்பதும் நமது நோக்கமாகும். எட்டாம் உலகத் தமிழ் மாநாடு தஞ்சையில் தமிழ்ப்பல்கலைக்கழக வாகை வளாகத்தில் 1995 சனவரி 1 முதல் 5 ஆம் நாள் வரை நடைபெறுகிறது. இவ்வரிய நிகழ்ச்சியை நினைவுகூரும் வகையில் தமிழக அரசு இப்பல்கலைக் கழகத்திற்குப் பத்து இலட்ச நிதி வழங்கி பதிப்புச் சுழல் நிதியை அமைத்தது சுழல் நிதியின் பதிப்பாக இந்நூல் தொடங்கும் உலகத் தமிழ்மாநாட்டின் போது வெளியிடப்பெறுகிறது. பல்லாண்டுகளாக அச்சேறாமல் இருந்த இந்நூல் தமிழுலகின் கையில் இப்போது கிடைப்பது நமது பேறாகும்.

துறைதோறும் தமிழின் சிறப்பையும் வளத்தையும் உலகுக்கு ஆய்வு நூல்களாகப் படைத்து வழங்குவது பல்கலைக் கழகத்தின் கடமையாகும். பல்கலைக்கழக அறிஞராகிய நூலாசிரியரைப் பாராட்டி மகிழ்கிறேன். ஏட்டளவில் இருந்த பனுவல்களின் அச்சு வடிவைக்காணும் கற்றோர் போற்றவும் ஊக்கமளிக்கவும் வேண்டுகிறோம்,

ஔவை நடராசன்

நன்றியுரை

எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டை ஒட்டித் தமிழ்நாடு அரசு தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு வழங்கிய நிதியுதவியில் ''தஞ்சை மராட்டிய மன்னர் வளர்த்த தமிழ் இலக்கியம்'' பகுதி 1 எனும் இந்நூல் வெளிவருவதற்கு மூலகாரணமாய் விளங்கி வருகின்ற தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் மாண்புநிறை முனைவர் அவ்வை து. நடராசனார் அவர்கட்கு என் உளங்கனிந்த நன்றி.

இந்த ஆய்வினை மேற்கொள்வதற்கு வித்திட்ட முது முனைவர் வ. அய். சுப்பிரமணியன் (முன்னைத் துணைவேந்தர்) அவர்கட்கும், தொடர்ந்து ஆய்வினை மேற்கொள்வதற்குப் பெரிதும் ஊக்கமளித்த முனைவர் ச. அகத்தியலிங்கம் (முன்னைத் துணைவேந்தர்) அவர்கட்கும் என் உளங்கனிந்த நன்றி.

இந்த ஆய்வு நூலாக வெளிவருவதற்குப் பல்வேறு வகைகளில் உதவி செய்த முன்னைத் துணைவேந்தர் முனைவர் சி. பாலசுப்பிரமணியன் அவர்கட்கும் என் உளங்கனிந்த நன்றி.

இந்த ஆய்வினை உரிய காலத்தில் செய்து முடிப்பதற்கு நாள்தோறும் தூண்டியும் உற்சாகப்படுத்தியும் சிறப்புற அமைவதற்கு உறுதுணையாக இருந்த துறைத்தலைவரும் சுவடிப்-புலத்தலைவருமான பேராசிரியர் முனைவர் பா. சுப்பிரமணியன் அவர்கட்கு என் இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆய்வின்போது அவ்வப்போது பல்வேறு கருத்துக்களைக் கூறிய பேராசிரியர் கே.எம். வேங்கடராமையா (முன்னைச் சுவடிப்புலத்தலைவர்), முனைவர் எ. சுப்பராயலு (முன்னைச் சுவடிப்புலத்தலைவர்), புலவர் திரு செ. இராசு (இணைப் பேராசிரியர், துறைத்தலைவர், கல்வெட்டியல்துறை), முனைவர் நா. பாலுசாமி, முனைவர் அ.மா. பரிமணம், முனைவர் இ. சுந்தரமூர்த்தி ஆகியோருக்கு என் உளங்கனிந்த நன்றி.

இந்த ஆய்வேட்டிற்குரிய குறிப்புக்களை எடுப்பதற்கு உதவி புரிந்த தமிழ்ப் பல்கலைக்கழக நூலகம், சரசுவதி மகால் நூல் நிலையம், மற்றும் இந்நூல்நிலையங்களில் பணிபுரிகின்ற அலுவலர்கள், நண்பர்கள் அனைவருக்கும் என் நன்றி.

இந் நூலைக் குறுகிய காலத்தில் அச்சிட்டுக் கொடுத்த மதுரை, அமுதச்சக உரிமையாளர் திரு சா. திருமாவளவண் அவர்கட்கும் மற்றும் அச்சகத்தில் பணிபுரிகின்ற பணியாளர் களுக்கும் என் நன்றி.

ம. சா. அறிவுடைநம்பி

தஞ்சாவூர்

திருவள்ளுவராண்டு 2025 கார்த்திகை 28

14—12—1994

உள்ளுறை

			பக்கம்
	முகவுரை		
	நன்றியுரை		
	முன்னுரை	...	1 — 5
1	அறிமுகம்	...	6 — 16
2	இலக்கிய வகைகள்	...	17 — 21
	I தூது இலக்கியம்	...	22 — 27
	1) செண்டலங்காரன் விறலிவிடுதூது	...	28 — 49
	II உலா இலக்கியம்	...	50 — 52
	2) தஞ்சைப் பெருவுடையாருலா	...	53 — 89
	III நாடக இலக்கியம்	...	90 — 92
	அ) குறவஞ்சி நாடகங்கள்	...	93 — 96
	3) சகசிராசன் குறவஞ்சி	...	97 — 111
	4) தியாகேசர் குறவஞ்சி	...	112 — 149
	5) சரபேந்திர பூபாலக் குறவஞ்சி	...	150 — 177
	ஆ) விலாச நாடகங்கள்	...	178
	6) பூலோக தேவேந்திர விலாசம்	...	179 — 188
	7) சந்திரகாசை விலாசம்	...	189 — 197
	8) விஷ்ணு சாகராச விலாசம்	...	198 — 212
	இ) நொண்டி நாடகங்கள்	...	213 — 215
	9) திருவிடைமருதூர் நொண்டி நாடகம்	...	216 — 243
	ஈ) பிற நாடகங்கள்	...	244
	10) காவேரி கல்யாணம்	...	244 — 257
3	நூலோதி (Bibliography)	...	258 — 262
4	பின்னிணைப்புகள்		
	1. தூது இலக்கியங்கள்	...	263 — 266
	2. உலா இலக்கியங்கள்	...	267 — 269
	3. குறவஞ்சி இலக்கியங்கள்	...	270 — 272

முன்னுரை

ஆய்வு நோக்கம்

போசளக் குலத்தைச் சார்ந்த மராட்டிய மன்னர்கள் தஞ்சையைத் தலைநகரமாகக் கொண்டும் தஞ்சையிலேயே தங்கிச் செல்வாக்குப் பெற்றும் ஏறத்தாழ நூற்றெண்பது ஆண்டுகள் இருந்திருக்கின்றனர். இவர்கள் ஆட்சிக் காலத்தில் தமிழ், தெலுங்கு, மராட்டி, வடமொழி, உருது, ஆங்கிலம் ஆகிய மொழிகளின் தாக்கம் இருந்திருக்கிறது. இவர்கள் ஆட்சிக் காலத்தில் வளர்ந்த தமிழ் இலக்கியத்தின் மூலம் வெளிப்படும் மக்களின் சமூகப் பொருளாதாரப் பண்பாடு. மொழிநடை, பழக்க வழக்கங்கள் போன்றவற்றை வெளிக்கொணரும் நோக்கத்தில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

முன் ஆய்வுகள்

இதுவரை பல்வேறு ஆவணங்கள், செப்பேடுகள், கல்வெட்டுகள் போன்றவற்றை ஆதாரமாகக் கொண்டு பல ஆய்வுகள் வெளிவந்துள்ளன.

ஆங்கிலத்தில் ஹிக்கி என்பவர் 'தஞ்சை மராட்டிய அரசு' என்ற தலைப்பிலும்,[1] கே.ஆர்.சுப்பிரமணியன் 'தஞ்சை மராட்டிய அரசர்கள்' எனும் தலைப்பிலும்,[2] சி கே.சீனிவாசன் 'கருநாடகத்தில் மராட்டியர் ஆட்சி' எனும் தலைப்பிலும்[3] ஆய்வு செய்து வெளியிட்டுள்ளனர். கே. இராசய்யன்,[4]

---

1. W. Hickey, The Tanjore Mahratta Principality in South India, St. Thome, 1874.
2. K. R. Subramanian, Maratha Rajas of Tanjore, Madras, 1928.
3. C. K. Srinivasan, Maratha Rule in the Carnatic, Annamalai University, Annamalainagar, 1944.
4. K. Rajayyan, A History of British Diplomacy in Tanjore, Rao and Ragavan, Mysore, 1969.

என். சுப்பிரமணியன்[5] ஆகியோர் தமிழக வரலாற்று நூல்களில் மராட்டியர் வரலாற்றினை ஆராய்ந்து வெளியிட்டுள்ளனர்.

புலவர் செ. இராசு 'தஞ்சை மராட்டியர் செப்பேடுகள்' எனும் தலைப்பில் 1983 ஆம் ஆண்டிலும்,[6] 'தஞ்சை மராட்டியர் கல்வெட்டுக்கள்' எனும் தலைப்பில் 1987 ஆம் ஆண்டிலும்[7] ஆய்வு செய்து நூலாக வெளியிட்டுள்ளார்.

கே. எம். வேங்கடராமையா 'தஞ்சை மராட்டிய மன்னர் கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும்' எனும் தலைப்பில் மோடி ஆவணங்களைச் சான்றாதாரமாகக் கொண்டு ஆய்வு செய்து 1984 இல் நூலாக வெளியிட்டுள்ளார்.[8]

பல்வேறு ஆவணங்கள், சுவடிகள் போன்றவற்றின் துணைகொண்டு 'தஞ்சை மராட்டிய மன்னர் வளர்த்த நுண்கலைகள்' எனும் தலைப்பில் முதுமுனைவர் பட்டத்திற்கு (டி. லிட்.) இவ் ஆய்வாளர் பதிவு செய்து தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் 1986 டிசம்பர்த் திங்களில் அளித்துள்ளார்.[9]

'தஞ்சை மராட்டிய அரசர் மோடி ஆவணக் கருத்தரங்கு' ஒன்றினை 1983ஆம் ஆண்டில் அரிய கையெழுத்துச் சுவடித் துறையினர் மூன்றுநாள் கருத்தரங்கு ஒன்றினை நடத்தியது.

---

5. N. Subramanian, History of Tamilnadu, Koodal Publishers, Madurai, 1982.
6. செ. இராசு, தஞ்சை மராட்டியர் செப்பேடுகள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1983.
7. செ. இராசு, தஞ்சை மராட்டியர் கல்வெட்டுக்கள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1987.
8. கே. எம். வேங்கடராமையா. தஞ்சை மராட்டிய மன்னர் கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1984.
9. ம. சா. அறிவுடைநம்பி, தஞ்சை மராட்டிய மன்னர் வளர்த்த நுண்கலைகள், முதுமுனைவர் பட்ட (டி. லிட்) ஆய்வேடு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1986.

இக்கருத்தரங்கில் தமிழ், மராட்டி, தெலுங்கு, வடமொழி ஆகிய மொழிகளில் தஞ்சை மராட்டிய மன்னர் வளர்த்த இலக்கியங்கள் பல்வேறு அறிஞர்களால் ஆய்வு செய்யப்பட்டன. தவிர ஒரு சில திங்கள் இதழ்களில் தஞ்சை மராட்டிய மன்னர்கள் ஆற்றிய பணிகள், இலக்கியங்கள் தொடர்பான சிறுசிறு கட்டுரைகளும் வெளிவந்துள்ளன.

ஆய்வு எல்லை

இதுவரை முழுமையாக யாரும் தஞ்சை மராட்டிய மன்னர்கள் வளர்த்த தமிழ் இலக்கியம் தொடர்பாக ஆய்வு செய்யவில்லை. எனவே இம் மன்னர்கள் ஆட்சியில் மலர்ந்த பன்மொழி இலக்கியங்களில் தமிழ்மொழி இலக்கியம் மட்டும் ஆய்வு எல்லையாகக் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. மேலும் இம் மன்னர்களுடைய நேரிடை ஆதரவு பெற்ற புலவர்கள் படைத்த இலக்கியங்கள், தஞ்சை அரசோடு நெருங்கிய தொடர்பு கொண்ட புலவர்கள் இயற்றிய இலக்கியங்கள், மராட்டிய மன்னர்கள் படைத்த இலக்கியங்கள் ஆகியவற்றை மட்டும் ஆய்வு எல்லையாகக் கொள்ளப்பட்டிருக்கிறது.

ஆய்வுப் பகுப்பு

இந்த ஆய்வு நான்கு தொகுதிகளாக அமைகிறது.

முதல் தொகுதி :- இத்தொகுதியில் இடம்பெறும் இயல்கள் வருமாறு :-

1. அறிமுகம்
2. இலக்கிய வகைகள்
    1. தூது இலக்கியம்
    2. உலா இலக்கியம்
    3. நாடக இலக்கியம்
        - அ) குறவஞ்சி நாடகங்கள்
        - ஆ) விலாச நாடகங்கள்
        - இ) நொண்டி நாடகங்கள்
        - ஈ) பிற நாடகங்கள்

3. நூலோதி

4. பின்னிணைப்புகள்

1. அறிமுகம் :- தஞ்சை மராட்டிய மன்னர்கள் மரபு, தமிழ் இலக்கியம். மன்னர்கள் ஆதரித்த புலவர்கள் போன்ற வற்றை இவ்வியல் விரிவாக ஆராய்கிறது.

2. இலக்கிய வகைகள் :- தஞ்சை மராட்டிய மன்னர்கள் வளர்த்த தமிழ் இலக்கியங்களுள் இதுவரை 68 நூல்கள் கிடைத்துள்ளன. இவற்றுள்ளும் சில நூல்களின் பெயர்கள் மட்டும்தான் கிடைக்கின்றன. ஒருசிலவே நூலாகக் கிடைத்துள்ளன. இந்நூல்களைப் பல வகைகளாகப் பிரித்து விளக்கப் பட்டுள்ளன. தூது, உலா, நாடகம் (குறவஞ்சி, விலாசம், நொண்டி, கீர்த்தனை, பிற), கோவை, சதகம், பிள்ளைத்தமிழ், சரித்திரம், பிரபந்தம், பதம், வண்ணம், அம்மானை, புராணம், தலபுராணம், பிற இலக்கியங்கள், மொழி பெயர்ப்பு இலக்கியங்கள், மருத்துவ இலக்கியங்கள் ஆகிய இலக்கிய வகைகளில் இந்நூல்கள் அடங்குகின்றன.

இந்த இலக்கிய வகைகளுள் தூது, உலா, குறவஞ்சி, விலாசம், நொண்டி, பிற, நாடகங்கள் ஆகியவற்றை மட்டும் இத்தொகுதியில் ஆய்வு செய்யப்பட்டுள்ளன எஞ்சிய இலக்கிய வகைகளும், இத்தொகுதியில் விடுபட்ட நூல்களும் அடுத்து வெளிவரும் தொகுதிகளில் இடம்பெறும். ஆய்வு நிறைவு பெறுவதற்கு முன்னர் இவர்கள் காலத்திய நூல்களுள் அறுபத்தெட்டைத் தவிர வேறு ஏதேனும் புதிதாகக் கிடைக்குமாயின் அவற்றை நான்காவது தொகுதியில் இடம் பெறச் செய்யப்பெறும்.

3. நூலோதி :- இத்தொகுதிக்கு உறுதுணையாக இருந்த நூல்களின் பட்டியல் இதில் இடம்பெறுகிறது.

4. பின்னிணைப்புகள் :- தூது, உலா, குறவஞ்சி ஆகிய இலக்கியங்களின் பட்டியல் காலமுறைப்படித் தொகுத்துத் தரப்படுகிறது.

ஆய்வுப் போக்கு

தஞ்சை மராட்டிய மன்னர்கள் காலத்தில் மக்கள் வாழ்ந்த வாழ்க்கை முறை, பண்பாடு போன்றவற்றை அறி-தற்கு இலக்கியங்கள் பெரிதும் சான்றாதாரங்களாகத் திகழ்-கின்றன. மேலும் மூல நூல்கள் இல்லாமல் தனியாக அந்நூல் களைத் திறனாய்வு செய்து எழுதப்பெறும் இந்த ஆய்வு பெரும் பயன் நல்கும். டாக்டர் உ.வே.சாமிநாதய்யர் தாம் பதிப்பித்துள்ள நூல்களுக்கு விரிவாகத்தந்துள்ள ஆராய்ச்சிக் கட்டுரைகள் போன்று இந்த ஆய்வுப் போக்கு அமைகிறது. இந்த ஆய்வுரையைப் படித்தால் மூல நூலைப் படித்தது போன்று அமையும் விதத்தில் ஆய்வு மேற்கொள்ளப்-பட்டுள்ளது.

ஒவ்வொரு வகை இலக்கியம் பற்றியும் தொல்காப்பியம் முதல் தஞ்சை மராட்டியர் காலத்து இலக்கியம் வரையும் சுருக்கமாக அந்தந்த வகையின் இலக்கணம், வரலாறு போன்ற செய்திகள் பொது முன்னுரையாக இடம்பெறுகிறது. அதனை யடுத்துத் தஞ்சை மராட்டியர் வளர்த்த இலக்கிய நூல்கள் திறனாய்வு செய்யப்படுகின்றன.

— o —

1

அறிமுகம்

தஞ்சை மாநகரைத் தலைநகரமாகக் கொண்டு கி.பி.1676 முதல் கி.பி.1799 வரை ஆட்சி புரிந்தும் பிறகு கி.பி. 1855 வரை தஞ்சையிலேயே செல்வாக்குப் பெற்றும் மராட்டிய மன்னர்கள் இருந்திருக்கின்றனர். தஞ்சை விசயராகவ நாயக்கருக்கும் மதுரை சொக்கநாத நாயக்கருக்கும் இடையே நீண்ட நாட்களாகப் பகைமை இருந்து வந்தது. கி.பி. 1673இல் இருவருக்குமிடையே பெரும் போர் ஒன்று தோன்றியது. 1673 முதல் 1676 வரை தஞ்சை அரசியலில் பெருங்குழப்பம் இருந்தது. இந்நிலையில் பீசப்பூர் சுல்தான் அலிஅடில்சாவின் தானைத் தலைவராக விளங்கிய ஏகோசி அப்பொழுது தஞ்சையிலிருந்து ஆட்சி புரிந்த அளகிரி நாயக்கரை நீக்கி விட்டுச் செங்கமலதாசைத் தஞ்சை அரசனாக நிலைபெறும்படிச் செய்ய வந்தார். அதன்படி ஏகோசி தஞ்சையைக் கைப்பற்றிச் செங்கமலதாசைத் தஞ்சைக்கு அரசராக்கினார்.[1] அதன்பின்னர் ஏகோசி தன் படையுடன் கும்பகோணத்தில் சிறிது காலம் தங்கியிருந்து விட்டுக் கி.பி. 1676இல் தஞ்சையை எளிதில் கைப்பற்றி அந்நகரைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி புரிந்தார். அது முதல் தஞ்சையில் மராட்டியர் ஆட்சி தொடரலாயிற்று.

தஞ்சை மராட்டிய மன்னர்கள் மரபு

போசளக் குலத்தைச் சார்ந்த இம் மராட்டிய மன்னர்களின் குலதெய்வம் சந்திர மௌலீசுவரராவர். சிறந்த சைவக் குடும்பத்தைச் சேர்ந்த இம் மராட்டிய மன்னர்கள் ஆட்சி செய்த மரபினை அட்டவணை விளக்குகிறது.

---

1. K. Rajayyan, A History of British Diplomacy in Tanjore, Rao and Raghavan, Mysore, 1969, pp. 12-13.

தஞ்சை மராட்டிய மன்னர்களும் தமிழ் இலக்கியமும்

தஞ்சை மராட்டிய மன்னர்கள் ஏறத்தாழ நூற்றெண்பது ஆண்டுகள் தஞ்சையிலேயே வேரூன்றி இருந்திருக்கின்றனர். இவர்கள் அரசு தொடர்பான எல்லாவற்றையும் தங்கள் தாய் மொழியான மராட்டியிலேயே மோடி எழுத்தில் எழுதி வந்திருக்கின்றனர். இவர்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்னால் நாயக்கர் ஆட்சி செலுத்திய காரணத்தினால் அப்பொழுது தெலுங்கு ஆட்சி மொழியாக இருந்திருக்கிறது. ஆனால் இந்நாட்டில் வாழ்ந்து வந்த மக்களில் பெரும்பாலோர் பேசி வந்த மொழி 'தமிழா'கும். வடக்கிலிருந்து வந்த மராட்டியர்கள் வடமொழியிலும் சிறந்து விளங்கியிருந்திருக்கின்றனர். எனவே தமிழ், தெலுங்கு, மராட்டி, வடமொழி ஆகிய இந்நான்கு மொழிகளிலும் இம் மன்னர்கள் காலத்தில் பல்வேறு வகையான இலக்கியங்கள் மலர்ந்திருக்கின்றன.

மன்னர்களில் இரண்டாம் சகசி, முதலாம் சரபோசி, முதலாம் துளசா என்ற துக்கோசி, இரண்டாம் ஏகோசி என்ற யாபாசாகேப், பிரதாபசிம்மர், அமரசிம்மர், இரண்டாம் சரபோசி, இரண்டாம் சிவாசி ஆகியோர் பன்மொழிப் புலவர்களாகச் சிறந்து விளங்கியதோடு அமையாமல் பலமொழி இலக்கியங்களையும் படைத்திருக்கின்றனர்.

பதின்மூன்று மன்னர்களில் ஒன்பது மன்னர்கள் ஆட்சி செய்த காலத்திலேயே 68 தமிழ் இலக்கியங்கள் மலர்ந்திருக்கின்றன. அவற்றின் விவரம் வருமாறு :

1.	முதலாம் ஏகோசி	(1676-1683)	— 1
2.	இரண்டாம் சகசி	(1684-1712)	— 15
3.	முதலாம் சரபோசி	(1712-1728)	— 2
4.	முதலாம் துளசா என்ற துக்கோசி	(1728-1736)	— 1
5.	பிரதாபசிம்மர்	(1739-1763)	— 1
6.	இரண்டாம் துளசா	(1763-1787)	— 5
7.	அமரசிம்மர்	(1787-1798)	— 1
8	இரண்டாம் சரபோசி	(1798-1832)	— 33
9.	இரண்டாம் சிவாசி	(1832-1855)	— 9
	ஆகக் கூடுதல்		**68**

இரண்டாம் சகசி, இரண்டாம் சரபோசி ஆகியோர் காலத்திலேயே தமிழ் இலக்கியங்கள் மிகுதியாகத் தோன்றி-யிருக்கின்றன. அரசியல் குழப்பம் இல்லாத காரணத்தால் இவர்கள் காலத்தில் இலக்கியங்கள் நன்கு தோன்றியிருக்-கின்றன. பொதுவாகப் பார்க்கும்பொழுது இவர்கள் காலத்-திலேயே பிறமொழி இலக்கியங்களும் கலைகளும்கூடச்சிறந்த முறையில் வேரூன்றி வளர்ந்திருக்கின்றமையைக் காண முடி-கின்றன. பல பழைய கலைகள் புதிய முறையிலும் வேறு பல புதிய கலைகளும் இவர்கள் காலத்தில் புதுமெருகு பெற்றுச் சிறந்திருக்கின்றன.

ஆதரித்த புலவர்கள்

தஞ்சை மராட்டிய மன்னர்கள் தமிழ் நாட்டில் காலூன்றி ஆட்சி செலுத்திய காரணத்தினால் தொடக்க காலத்திலிருந்தே தமிழ் மொழியைப் போற்றிப் பல புலவர்களுக்குத் தம் அர-சவையில் ஆதரவு நல்கி இருக்கின்றனர். இம் மன்னர்களும் தமிழ் மொழியைக் கற்பதில் ஆர்வங்காட்டி அவ்வாறே செய-லிலும் ஈடுபட்டுச் சிறந்து விளங்கிப் பல கலை இலக்கியங்கள் மறுமலர்ச்சி அடைவதற்குத் தங்களாலியன்ற உதவிகளைச் செய்திருக்கின்றனர். இவ்வாறு இம் மன்னர்கள் ஆதரித்துப் போற்றிய தமிழ்ப் புலவர்களைப் பற்றிக் காண்பது இப்பகுதி-யின் நோக்கம்.

1. சொக்கப்பப் புலவர் (1684 1712) :- தொண்டை நாட்டைச் சேர்ந்த அரசூர் என்பது இவரூர். இரண்-டாம் சகசி மன்னன் அவைக்களப் புலவர்களில் தலைமை யானவர். சைவ சித்தாந்தத்தில் உறுதி வாய்ந்தவர். 'தொண் டை நாட்டரைசு சொக்கன்' என்று தம்மைக் கூறிக் கொள்-வதில் பெருமை உடையவர். தஞ்சையைத் தலைநகரயாக மராட்டிய மன்னர்கள் கொண்டிருந்தாலும் திருவிடைமருதூர், கும்பகோணம், திருவாரூர் ஆகிய ஊர்களிலும் இம் மன்னர் கள் அரண்மனை கட்டி அதில் வாழ்ந்திருக்கின்றனர் இரண்-டாம் சகசி மன்னர் கும்பகோணத்திலேயே தம் வாழ்நாளின் பெரும் பகுதியைக் கழித்திருக்கின்றார் என்று தெரிகிறது. இப் புலவர் தாம் பாடிய 'கும்பகோணப் புராணத்'தை இம் மன்னர்

அவையில் அரங்கேற்றியிருக்கிறார். 'குடந்தைப் புராணம்' என்பதே இந்நூலுக்கு ஆசிரியர் வைத்த பெயராகும். இப் பெயர் பின்னால் கும்பகோணப் புராண'மாக மருவி வழங்கி வரலாயிற்று.

சொக்கப்பப் புலவர் பற்றிய வரலாற்றுச் செய்திகள் எதுவும் தெரிவதற்கு இயலவில்லை. இரண்டாம் சகசி மன்னர் ஆட்சி செய்த காலததில் (1684-1712) இவர் வாழ்ந்திருக்கிறார்.

2. வாசுதேவ கவி (1684-1712) :- இப் புலவரைப் பற்றியும் முழுமையான வரலாற்றுச் செய்திகள் எதுவும்கிடைக்க வில்லை. இரண்டாம் சகசியின் அவைக்களப் புலவர்களில் ஒருவரான இவர் அம் மன்னர் வாழ்ந்த காலத்தில் (1684-1712) வாழ்ந்திருக்கிறார். இச் சகசி மன்னன்மீது நூற்றுக்கும் மேற்பட்ட பதங்களைத் தமிழ், தெலுங்கு, வடமொழி ஆகிய மொழிகளில் பாடியிருக்கின்றார். சிலபாடல்களை மணிப்பிரவாளத்திலும் பாடியிருக்கின்றார். காதற்சுவை நிறைந்த இப் பதங்களில் 'வாசுதேவ கவிநுத' என்ற முத்திரையைப் பதித்திருக்கிறார். இவர் பாடிய சாகித்தியங்களில் பல இசை நாட்டியத்திற்காகப் பாடப்பட்டிருக்கின்றன.

தௌத்ய பஞ்சகம், நவரத்ன மாலிகா என்ற இரண்டு வடமொழி நூல்களையும் எழுதியிருக்கின்றார். தௌத்ய பஞ்சகத்தில் ஆடலணங்கு ஒருத்தி சகசி மன்னரைக் காதலிப்பது போலப் பாடப்பட்டிருக்கிறது. பல்வேறுபட்ட வடிவங்களில் பறவைகள், விலங்குகள், மேகங்கள், மனிதர்கள் ஆகியோர் மூலம் காதல் தூது விடுவதாகப் பாடியிருக்கின்றார். அதே போன்று ஒன்பது தொகுப்புக்களை உடைய 'நவரத்ன மாலிகா' வில் சகசியைப் புகழ்ந்து பாடியிருக்கின்றார்.

3. இராமபாரதி (1684-1712) இவர் வாழ்க்கை வரலாறு பற்றியும் அறிய முடியவில்லை. இரண்டாம் சகசி மன்னர் அவைக்களப் புலவர்களில் ஒருவரான இவர் அம் மன்னர் ஆட்சி செய்த காலத்தில் (1684-1712) வாழ்ந்திருக்கிறார். இம் மன்னரைப் புகழ்ந்து பல காதற்சுவைப் பதங்களைப் பாடியிருக்கின்றார். ஒரு பாடலில் தம்மைப் 'பஞ்சநத இராமபாரதி' என்று கூறியிருக்கின்றார். இரண்டாம் சகசியைக் கிருதி நாயகனாகக்

கொண்டு அரண்மனை நாட்டிய மகளிர் நடனமாடுவதாகப் பாடி இருக்கின்றார். மன்னரைத் தலைவனாகப் பாவனை செய்து அவரை ஒரு பெண் காதல் கொண்டு பாடுவதாகப் பாடல்கள் அமைந்திருக்கின்றன. இசையுடன் கூடிய நாட்டியத்-திற்கேற்ப ஜதி, வர்ணம், தாழிசை, ஆசிரிய விருத்தம், கலிப்பா போன்றவற்றில் இப் பாக்கள் பாடப்பட்டிருக்கின்றன. 49 காதற் சுவைப் பதங்கள், பல செய்யுள் உறுப்புப் பாடல்கள் உட்பட மொத்தம் 74 பாக்களைப் பாடியிருக்கின்றார்.[2]

4. முத்துக்கவிராயர் (1684-1712) :- இவர் வாழ்க்கை வரலாறு பற்றியும் அறிய முடியவில்லை. இரண்டாம் சகசி மன்னன் அவைக்களப் புலவர்களில் ஒருவர். அம்மன்னர் வாழ்ந்த காலத்திலேயே (1684-1712) இவரும் வாழ்ந்திருக்கிறார். மன்ன-ரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு 'சகசிராசன் குற வஞ்சி' என்ற நூலைப் பாடியிருக்கின்றார். இந் நாடகம் தமிழ் மொழியில் தெலுங்கு எழுத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

5. ஒப்பிலாமணிப் புலவர் (1712-1728) :- முதலாம் சரபோசி மன்னன் அவைக்களப் புலவர்களில் ஒருவரான இவர் அம் மன்னர் ஆட்சி செய்த காலத்தில் (1712-1728) வாழ்ந்திருக் கிறார். நாலாயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களைக் கொண்ட 'சிவரகசியம்' என்றதொரு நூலை அம் மன்னர் அவையில் 1—1—1718 இல் அரங்கேற்றியிருக்கின்றார்.[3] இச் செய்தியை,

> ''மன்னர்புகழ் சரபோஜி மகாராச ராசர்
> மாநிலங்கள்த் திருநாளிற் றஞ்சைமா நகரிற்
> றுன்னுமே விளம்பி(யிற்) மகரமதி யைந்திற்
> சோதிசிவ ரகசிய மொப்பிலாமணி சொற்றமிழை
> யின்னிலத்தி னரங்கேறச் செய்தனர் பொன்மாறை
> யெழில்சேருந் தீராத வினைதீர்த்தான் பாகைப்

---

2. Ramabharati Padas B. No. 11654, T.S.S.M.L.

3. வீ. சொக்கலிங்கம், 'தஞ்சை மராத்திய மன்னர்கள் காலத்-திய தமிழ் இலக்கியங்கள்', தஞ்சை மராட்டிய அரசர் மோடி ஆவணக் கருத்தரங்கு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 20, 21, 22-1-1983, உருளச்சு, பக் 4-5.

புன்னைவன நாதனிவர் சைவநெறி வளர்க்கும்
பூபால னவனியெங்கும் புகழினி தோங்கிடவே''

எனும் பாடல் குறிப்பிடுகின்றது. இந்நூலினிறுதியில்.

''1042ஆம் வருடம் பிரபவ வருடம் ஆடிமீ 15ஆம் தேதி சுக்கிர வாரம் கிருஷ்ண பட்சம்—திருதிகை—அவிட்ட நட்சத்திரம் அன்று திருநெல்வேலி, வடக்குக் கோபுரவாசல் தெருவென்ற கற்பக விநாயகப் பெருந்தெரு, வடக்கனாய (ஆத்தி)ராய கோத்திரஞ் சங்கரமூர்த்தியாபிள்ளையவர்கள் குமாரன் காந்தி மதிநாதனெழுத்து''

என்று இருக்கிறது.

6. சர்க்கரைப்புலவர் (1739 - 1763) :- இராமநாதபுரம் கடார ஊரைச் சார்ந்த சர்க்கரைப்புலவர் என்ற ஒருவர் இருந்தார். இவர் வாழ்ந்த காலம் 1645-1670 ஆகும். சிறந்த சைவப் புலவராகத் திகழ்ந்த இவர் 'திருச்செந்தூர்க் கோவை' பாடி இருக்கின்றார்.[4] இவர் வழியில் வந்த இரண்டாவது சர்க்கரைப் புலவர் என்பவரே தஞ்சை மராட்டிய மன்னர் பிரதாபசிம்மர் ஆதரவில் அரசவைப் புலவராக விளங்கியவர். பிரதாபசிம்மர் ஆட்சி செய்த 1739 முதல் 1763 வரை உள்ள காலமே இச் சர்க்கரைப்புலவர் காலமாகும். இம்மன்னரவையில் இப்புலவர் பாடிய 'மிழலைச் சதகம்' அரங்கேற்றம் பெற்ற செய்தியை,

''தருதஞ்சை வாழும் பிரதாபசிங் கேந்த்ர தருமண்மெச்ச
வருமணி மாமுத் திரைவேங்க டாசல மால்சம்பிரதி
நாதுங்க மாணிக்க வாசக வேள்சபை நாலையிலே
உரைசெய் மிழலைச் சதகத்தைச்சர்க்கரை யோதினனே''

எனும் பாடலால் அறியமுடிகிறது

4. கா. சுப்பிரமணியபிள்ளை, இலக்கிய வரலாறு இரண்டாம் பாகம், ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், சென்னை, ஐந்தாம் பதிப்பு 1958, பக் 406 - 407.

7. சீகாழி அருணாசலக் கவிராயர் (1763 - 1787) :- சீகாழியில் பிறந்த இவர் இரண்டாம் துளசாவின் அரசவையில் சிறந்து விளங்கியிருக்கிறார். "1776, தேதி 23, மாதம் சௌவல்; சீயாழி அருணாசலக் கவிராயர் இவர்களுக்கு பக்ஷீஸ் பரங்கிப்பேட்டை ஹோன்னம் 30 சக்கரம் கொடுப்பு"[5] என்ற குறிப்பினால் இப்புலவரை இரண்டாம் துளசா ஆதரித்தார் என்பது தெரிகிறது. இப்புலவர் வாழ்ந்த காலம் 1712 முதல் 1777 வரையாகும். இவர் தருமபுரத்திலிருந்த அம்பலவாணக் கவிராயரிடம் கல்வி பயின்றவர்; தரங்கம்பாடி வேளாள மரபினர். இராமாயணக் காப்பியக் கதையை எளிய நடையில் கீர்த்தனை வடிவில் பாடியிருக்கின்றார். தில்லையாடி மணலி முத்துக்கிருட்டிண முதலியாரிடம் இந்த 'இராம நாடகத்'தை அரங்கேற்றம் செய்து அம் முதலியாரால் 'கனகாபிடேகம்' செய்விக்கப் பெற்றிருக்கிறார். இவரியற்றிய பிற நூல்கள் சீகாழிப் புராணம், அசோமுகி நாடகம், சீகாழிக்கோவை, அனுமார் பிள்ளைத்தமிழ் ஆகியனவாகும்.

8. உளுந்தூர்ப்பேட்டை முத்தம்பல வாத்தியார் (1787-1798):- இவரைப்பற்றிய செய்திகள் தெரியவில்லை. அமரசிம்மர் ஆட்சி செய்தபொழுது அவர் அவைக்களத்தில் இப்புலவர் இருந்திருக்கிறார். ஔவையார் பாடிய ஆத்திச்சூடியின் பாடல் தொடர்களை முதலாகக் கொண்டு அறுபத்து மூன்று நாயன்மார்களின் வரலாற்றினையும் சிவத்தலங்களின் பெருமைகளையும் வீரசைவ வரலாறுகளையும் விரித்து 'ஆத்திச்சூடிப் புராணம்' எனும் நூலைப் பாடியிருக்கின்றார். இந்நூல் எழுதிய காலம், பிரமாதீச ஆண்டு ஆனித் திங்கள் முதலாம் நாள் செவ்வாய்க்கிழமையாகும். இதற்குச் சரியான ஆங்கில (ஆண்டு) நாள் 11-5 1793 ஆகும். இதனைப்

"பார்புகழ் பிரமாதீச வருடம்
பரவிய மிதுனமாதத் தையிலே

---

5. கே. எம். வேங்கடராமையா, தஞ்சை மராட்டிய மன்னர் கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1984, ப.451.

நேர்முதல் தேதி மங்கள வாரம்
நிகழ்த்திய கோகிரி மாலை
பேர்பெறு முதகிரி பஞ்சமா லாளும்
பிரபலர் சொன்மறை கண்டார்
ஆர்பரிக் கெங்கைக் கோகிரி மேவு
மாதிசத் தீச நாயகனே''

என்ற பாடல் மூலம் அறியமுடிகிறது.

9. கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர்[6] (1798-1832): கும்பகோணத்திற்கு அருகில் காவிரியாற்றின் வடபாலுள்ளதும் தேவாரப்பாடல் பெற்றதுமாகிய கோடீச்சுரம் என்றும் ஏரண்ட புரம் என்றும் வழங்கப்படுகின்ற கொட்டையூர் எனும் ஊரில் தண்டபாணி தேசிகர் என்பவரின் மகனாகச் சிவக்கொழுந்து தேசிகர் பிறந்தார். கொட்டையூருக்குத் தென்பாலுள்ள திருச் சத்திமுற்றத்தில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் சிவபெருமான் திருப்பெயர் சிவக்கொழுந்தாகும். அப்பெயரை-யே பெற்றோர் இவருக்கும் வைத்தனர்.

இலக்கண விளக்க நூலாசிரியராகிய வைத்தியநாத தேசிகரிடம் இவர் தமிழ் இலக்கணம் கற்றார். கொட்டையூரில் தங்கியிருந்து சில மாணவர்களுக்குக் கல்வி கற்றுக்கொடுத்தும் பல தனிச்செய்யுட்கள் செய்தும் வரலானார். இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழிலும் சிறந்து விளங்கிய இவரை இரண்டாம் சரபோசி மன்னர் (1798 1832) அழைத்துத் தம் அரசவையில் தலைமைப் புலவராக இருக்கும்படிச் செய்தார். மன்னரின் வேண்டுகோட்கேற்பப் பலவகைத் தமிழ் நூல் ஏட்டுப் பிரதிகளைத் தக்க விலை கொடுத்து வருவித்துத் தொகுப்பித்து வைத்தார். அத்துடன் 1826இல் சரபேந்திர வைத்திய முறை-கள், சரபேந்திரர் சன்னிரோக சிகிச்சைகள், சரபேந்திரர் வைத்தியம் எனும் மூன்று வைத்திய நூல்களைப் பா வடிவில் எழுதினார். இப் பாக்கள் எளிய நடையில் அமைந்திருக்-கின்றன.

---

6. இப்புலவரின் வரலாற்றினைக் 'கொட்டையூர் ஸ்ரீ சிவக்-கொழுந்து தேசிகர் இயற்றிய பிரபந்தங்கள்' எனும் நூலில் (1932) உ.வே. சாமிநாதையர் அவர்கள் எழுதிய வற்றை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டிருக்கிறது

தவிர, கோடீச்சுரக் கோவை, தஞ்சைப் பெருவுடையாருலா, சரபேந்திர பூபாலக் குறவஞ்சி, சரபோசிராசன் குறவஞ்சி, கொட்டையூர் உலா, கொட்டையூர்ப் புராணம், ஆச்சாபுரத் தலபுராணம், சிவநெறிப் பிரகாசம், திருவிடைமருதூர்ப் புராணம் (மருதவனப் புராணம்) ஆகிய நூல்களையும் இயற்றியிருக்கின்றார்.

இவற்றுள் கொட்டையூர் உலா இதுவரை கிடைக்கப் பெறவில்லை. சரபேந்திர பூபாலக் குறவஞ்சி நாடக இசைப் பாட்டுக்களின் மெட்டுக்கள் தஞ்சை நால்வர்களில் ஒருவரான பொன்னையா என்பவரின் உதவியினால் அமைக்கப்பட்டுப் பெரிய கோயிலில் அரங்கேற்றப்பட்டன.

இவர் 90 வயதுவரை இவ்வுலகில் வாழ்ந்திருக்கிறார். இவருக்கு மனைவியர் இருவர்; மகன்கள் இருவர்; பெண்கள் ஐவர். இவர் குலதெய்வம் சீகாழிச் சட்டைநாதர் இவர் வழி வந்தவர்களைப் பின்வரும் வரைபடம் காட்டுகிறது.

முதல் மனைவி + சிவக்கொழுந்து தேசிகர் + இரண்டாம் மனைவி

வடுகநாத தேசிகர் (முதல் மகன்) | ஐந்து பெண்கள் | சாமிநாத தேசிகர் (இரண்டாம் மகன்)

வடுகநாத தேசிகர் → குருசாமி தேசிகர்

குருசாமி தேசிகர் → தியாகராச தேசிகர் | சிவக்கொழுந்து தேசிகர் | சோமசுந்தர தேசிகர்

சிவக்கொழுந்து தேசிகர் → காசிவாசி சுவாமிநாத சுவாமிகள்

சாமிநாத தேசிகர் → சிவராச தேசிகர் | நடராச தேசிகர்

10. வேலாயுத வாத்தியார் (1798-1832) :- இவர் வரலாறு பற்றியும் எவ்விதச் சான்றும் கிடைக்கவில்லை, இரண்டாம் சரபோசி மன்னர் அவைக்களப் புலவர்களில் ஒருவராகத் திகழ்ந்த இவர் 'சரபேந்திர வைத்திய முறை'களில் சிரோரோகம், விஷரோகம், குன்மரோகம், விரேசன முறையும் அதிகாரசிகிச்சையும், காசரோகம், நீரிழிவு, விரணம் கரப்பான் ஆகிய நூல்களையும்

எளிய செய்யுள் நடையில் எழுதியிருக்கின்றார். இரண்டாம் சரபோசி மன்னர் ஆட்சி செய்த 1798 முதல் 1832 வரையில் உள்ள காலத்தில் இவர் வாழ்ந்திருக்கிறார்.

11. திருவேங்கடத்தாபிள்ளை (1798-1832) :- இவர் வரலாறு பற்றியும் தெரிவதற்கு இயலவில்லை. இவரும் இரண்டாம் சரபோசி மன்னர் ஆட்சி செய்த (1798-1832) காலத்தைச் சேர்ந்தவராவர். மன்னர் அவைக்களப் புலவர்களில் ஒருவரான இவர் 'சரபேந்திர வைத்திய முறை'களில் வாதரோகம், கர்ப்பிணி, பாலரோகம் எனும் நூல்களைப் பா வடிவில் இயற்றியிருக்கின்றார்.

12. வேங்கடாசலம்பிள்ளை (1798-1832):- இவர் வரலாறு பற்றியும் எதுவும் தெரிய இயலவில்லை. இவரும் இரண்டாம் சரபோசி மன்னர் ஆட்சி செய்த (1798-1832) காலத்தைச் சேர்ந்தவராவர். 'சரபேந்திர வைத்திய முறை'களில் பாண்டு காமாலை எனும் நூலைப் பா வடிவில் இயற்றியிருக்கின்றார்.

13. சுப்பராயக்கவிராயர் (1798-1832) :- இவர் வாழ்ந்த வரலாறுபற்றிய குறிப்புக்களும் கிடைக்கவில்லை. இரண்டாம் சரபோசி மன்னர் அவைக்களப் புலவர்களில் ஒருவராக விளங்கியிருக்கிறார். 'சரபேந்திர வைத்திய முறை'களில் சுரரோகத்திற்குப் பா வடிவில் பாடியிருக்கின்றார்.

14. அனந்தபாரதி ஐயங்கார் (1798-1832) :- இரண்டாம் சரபோசி மன்னர் அவைக்களப் புலவர்களில் ஒருவர். இவர் வரலாறும் தெரியவில்லை. இவர் திருவிடை மருதூர் நொண்டி நாடகம், உத்தர ராமாயணக் கீர்த்தனை, பாகவத தசம ஸ்கந்த நாடகம், தேசிகப் பிரபந்தம், யானை மேலழகர் நொண்டிச்சிந்து, மருதூர் வெண்பா, முப்பாற்றிரட்டு ஆகிய நூல்களை இயற்றியிருக்கின்றார்.

15. அருணாசலக் கவி (1832-1855) :- இரண்டாம் சிவாசியின் அவைக்களப் புலவர்களில் ஒருவர். இவர் வரலாறும் தெரிய இயலவில்லை. 'மதன சுந்தரப் பிரசாத சந்தான விலாச நாடகம்' எனும் நூலை இயற்றியிருக்கின்றார்.

16. **நாராயண கவி** (1832-1855) :- இரண்டாம் சிவாசி அவைக்களப் புலவர்களில் ஒருவரான இவர் 'பாண்டீ கேளி விலாச நாடகத்'தை எழுதியிருக்கின்றார்.

17. **கிருட்டிணகவி** (1832-1855) :- இரண்டாம் சிவாசி ஆட்சிக் காலத்தைச் சார்ந்த இவர் மன்னர் அரசவையில் 'பாரத அம்மானை' பாடி அரங்கேற்றி இருக்கிறார்.

18. **பூரணப் பிரம்மானந்த யோகி** (1832 - 1855) :- இரண்டாம் சிவாசி மன்னர் காலத்தில் வாழ்ந்த இம் முனிவர் மன்னர் வேண்டுகோட்கேற்பப் 'பிரம்மானந்தயோகி சரித்திரம்' என்ற நூலை இயற்றியிருக்கின்றார்.

19. **நாராயணசாமி நாவலர்** (1832-1855) :- இப்புலவர் 'திருக்கண்ணபுரம் புராணம்' என்றதொரு நூலை இயற்றியிருக்கின்றார். இவர் முத்தம்மாள்புரத்துச் சத்திரத்தில் இருந்த இலக்கணப் பாடசாலையில் முதலாசிரியராய் அரும்பணி ஆற்றியிருக்கிறார்.

— o —

தஞ்சை மராட்டிய மன்னர்கள் ஆட்சி செய்த மரபு (கி. பி. 1676-1855)



* சையாசியை நீக்கிக் காட்டுராசா அரசெய்தினார் மீண்டும் காட்டுராசாவை நீக்கி இவர் அரசெய்தினார் (8 அ).

† இவருக்கு ஆண் வாரிசு இல்லாத காரணத்தால் அரசைக் கிழக்கிந்தியக் கம்பெனி மேற்கொண்டது.

( ) இவ்வட்டத்திற்குள் இருக்கும் வரிசை எண்கள் தஞ்சை மராட்டிய மன்னர்களைக் குறிப்பனவாகும்.

2

இலக்கிய வகைகள்

தஞ்சை மராட்டிய மன்னர்கள் காலத்தில் பல்வேறு இலக்கிய நூல்கள் பல புலவர்களால் இயற்றப்பட்டிருக்கின்றன. அவைபற்றி இவ்வியலில் ஆராயப்படவில்லை.

தஞ்சை மராட்டிய மன்னர்களுடைய நேரிடை ஆதரவு பெற்ற புலவர்கள் படைத்த இலக்கியங்களையும் தஞ்சை அரசோடு நெருங்கிய தொடர்பு கொண்டு புலவர்கள் இயற்றிய இலக்கியங்களையும் மராட்டிய மன்னர்களில் தமிழ்ப் புலமை பெற்ற மன்னர்கள் படைத்த இலக்கியங்களையும் பற்றிமட்டுமே இவ்வியலில் ஆராயப்படுகிறது.

இம் மராட்டிய மன்னர்களால் வளர்க்கப்பட்ட இலக்கியங்கள் பின்வருமாறு பாகுபடுத்தப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

1. தூது இலக்கியம் (1)

    1. செண்டலங்காரன் விறலிவிடு தூது - ?

2. உலா இலக்கியம் (2)

    2 தஞ்சைப்பெருவுடையாருலா சிவக்கொழுந்து தேசிகர்
    3. கொட்டையூருலா (கோடீச்சுர உலா) — ,,

3. நாடக இலக்கியம் (20)

    அ) குறவஞ்சி நாடகங்கள் (4)

    4. சகசிராசன் குறவஞ்சி — முத்துக்கவிராயர்
    5. தியாகேசர் குறவஞ்சி — ?
    6. சரபேந்திர பூபாலக் குறவஞ்சி — சிவக்கொழுந்து தேசிகர்
    7. சரபோசிராசன் குறவஞ்சி — ,,

ஆ) விலாச நாடகங்கள் (7)

8. சங்கரநாராயண
விலாசம் — இரண்டாம் சகசி

9. சகசிராச விலாசம்— ?

10. பூலோக தேவேந்திர
விலாசம்— ?

11. சந்திரிகாகாசை விலாசம்—?

12. விஷ்ணு சாகராச விலாசம்—?

13. மதன சுந்தரப் பிரசாத
சந்தான விலாசம் —அருணாசலக்கவி

14. பாண்டீ கேளீ விலாசம் —நாராயணகவி

இ) நொண்டி நாடகங்கள் (2)

15. திருவிடைமருதூர்
நொண்டி நாடகம் — அனந்தபாரதி ஐயங்கார்

16. யானை மேலழகர்
நொண்டிச்சிந்து — ,,

ஈ) கீர்த்தனை நாடகங்கள் (2)

17. இராமநாடகக் கீர்த்தனை—அருணாசலக் கவிராயர்

18. உத்தர ராமாயணக்
கீர்த்தனை — அனந்தபாரதி ஐயங்கார்

உ) பிற நாடகங்கள் (5)

19. காவேரி கல்யாணம் — இரண்டாம் சகசி

20. அதிரூபவதி கல்யாணம்— ,,

21. அசோமுகி நாடகம் —அருணாசலக் கவிராயர்

22. இராதாகிருட்டிண நாடகம்—இரண்டாம் சரபோசி

23. பாகவத தசம ஸ்கந்த
நாடகம் — அனந்தபாரதி ஐயங்கார்

4. கோவை இலக்கியம் (2)

24. கோடீச்சுரக் கோவை —சிவக்கொழுந்து தேசிகர்

25. சீகாழிக் கோவை —அருணாசலக் கவிராயர்

5. சதக இலக்கியம் (1)

26. மிழலைச் சதகம் —சர்க்கரைப் புலவர்

6. பிள்ளைத்தமிழ் இலக்கியம் (1)

27. அனுமார் பிள்ளைத்தமிழ் —அருணாசலக் கவிராயர்

7. சரித்திர இலக்கியம் (1)

28. பிரம்மானந்தயோகி
சரித்திரம் — பூரணப் பிரம்மானந்தயோகி

8. பிரபந்த இலக்கியம் (1)

29. தேசிகப் பிரபந்தம் — அனந்தபாரதி ஐயங்கார்

9. பத இலக்கியம் (2)

30. சிங்காரப் பதங்கள் — வாசுதேவகவி

31. சிங்காரப் பதங்கள் — இராமபாரதி

10. வண்ண இலக்கியம் (1)

32. தஞ்சை நாயகம்பிள்ளை
பேரில் வண்ணம் — ?

11. அம்மானை இலக்கியம் (1)

33. பாரத அம்மானை — கிருட்டிணகவி

12. புராண இலக்கியம் (2)

34. ஆத்திச்சூடிப் புராணம் — உளுந்தூர்ப்பேட்டை
முத்தம்பல வாத்தியார்

35. சிவரகசியம் — ஒப்பிலாமணிப் புலவர்

13. தலபுராண இலக்கியம் (6)

36. கும்பகோணப் புராணம் — சொக்கப்பப் புலவர்

37. சீகாழிப் புராணம் — அருணாசலக் கவிராயர்
38. ஆச்சாபுரத் தலபுராணம் — சிவக்கொழுந்து தேசிகர்
39. மருதவனப் புராணம் — ,,
40. கொட்டையூர்ப் புராணம் — ,,
41. திருக்கண்ணபுரப் புராணம் — நாராயணசாமி நாவலர்

14. பிற இலக்கியங்கள் (6)

42. கணபதி தோத்திரம் — ?
43. சிவநெறிப் பிரகாசம் — சிவக்கொழுந்து தேசிகர்
44. மருதூர் வெண்பா — அனந்தபாரதி ஐயங்கார்
45. முப்பாற்றிரட்டு — ,,
46. சிவாசி மகாராசாவின் பேரில் கவிகள் — ?
47. தஞ்சையை அரசு புரிந்த சிவாசி மகாராசா பேரில் பாடல்கள் — ?

15. மொழிபெயர்ப்பு இலக்கியங்கள் (5)

48. பல்லகி சேவாப் பிரபந்தம் (தெலுங்கு—தமிழ்) — இரண்டாம் சகசி
49. சிவகாமசுந்தரி பரிணயம் (தெலுங்கு—தமிழ்) — ?
50. சிவபாரதம் (மாயூரப் புராணம்) (வடமொழி—தமிழ் — ?
51. சுமிருதி சந்திரிகை (வடமொழி—தமிழ்) — ?
52 தாச போதம் (மராட்டி — தமிழ்) — ?

16. மருத்துவ இலக்கியங்கள் (16)

சரபேந்திர வைத்திய முறைகள்

53.	வாதரோகம்	—	சிவக்கொழுந்து தேசிகர்
54.	சன்னிரோகம்	—	,,
55.	குன்மரோகம்	—	,,
56.	உளமாந்தை, சயம்	—	,,
57.	மூலம், இளைப்பு, குட்டம் முதலாயின	—	,,
58.	சிரோரோகம்	—	வேலாயுத வாத்தியார்
59.	விஷரோகம்	—	,,
60.	குன்மரோகம்	—	,,
61.	விரேசன முறையும் அதிசார சிகிச்சையும்	—	,,
62.	காசரோகம்	—	,,
63.	நீரிழிவு	—	,,
64.	விரணம் கரப்பான்	—	,,
65.	வாதரோகம், கர்ப்பிணி, பாலரோகம்	—	திருவேங்கடத்தாபிள்ளை
66.	பாண்டு, காமாலை	—	வேங்கடாசலம்பிள்ளை
67.	சுரரோகம்	—	சுப்பராயக் கவிராயர்
68.	திரட்டு வாகடம்	—	?

தஞ்சை மாராட்டிய மன்னர்கள் வளர்த்த தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சிப் போக்கினைத் திறனாய்வின் அடிப்படையில் பல்வேறு இலக்கிய வகைகளாகப் பாகுபாடு செய்யப்பட்டுள்ள முறையில் இந்த ஆய்வு அமைகிறது.

— 0 —

I

தூது இலக்கியம்

தமிழ்ச் சிற்றிலக்கிய வகைகளுள் தூது என்பதுமொன்று. ஒருவர் தம் கருத்தை மற்றொருவருக்குத் தெரிவிக்க இடையே பிறிதொருவரைச் செய்தியாளராக அனுப்புவது தூது ஆகும். தொல்காப்பியப் பொருளதிகார அகத்திணை இயலில் பாலை என்னும் பிரிதற் பொருண்மையைக் கூறவந்த தொல்காப்பியர்,

"ஓதல் பகையே தூதிவை பிரிவே"[1]

என்றும்

"அவற்றுள்
ஓதலுந் தூதும் உயர்ந்தோர் மேன"[2]

என்றும் இரு நூற்பாக்களைச் செய்திருக்கிறார்.

அந்தணர் தூதிற் பிரிந்தமைக்கு அகநானூறு,[3] புறநானூறு[4] ஆகியவற்றிலும் அரசர் தூதிற் பிரிந்தமைக்குப் பாரதக் கதையில் கண்ணன் தூதும் சான்றுகளாக அமைந்திருக்கின்றன.

பிசிராந்தையார் எனும் புலவர் தம் நண்பர் கோப்பெருஞ் சோழனிடத்தில் ஒரு அன்னச் சேவலைத் தூது விடுத்த செய்தியைப் புறநானூறு[5] கூறுகின்றது. அதேபோன்று அதியமான் எனும் மன்னன் தம் பகையரசன் தொண்டைமானிடத்தில் ஔவைப் பிராட்டியைத் தூது விடுத்த செய்தியைப் புறநானூறு[6] குறிப்பிடுகிறது.

---

1. தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், 25.
2. மேலது, அகத்திணையியல், 26.
3. அகநானூறு, 54, 337.
4. புறநானூறு, 305.
5. புறநானூறு, 67.
6. புறநானூறு, 95.

இவைதவிர நண்டு, நாரை, கிளி, வண்டு, நெஞ்சு ஆகிய வற்றைத் தூதுப் பொருளாகப் பயன்படுத்தியிருப்பதைச் சங்க இலக்கியங்களில்[7] காணமுடிகின்றன.

திருவள்ளுவர் 'தூது' என்று தனியொரு அதிகாரத்தைப்[8] படைத்து அதில் தூதுவர் இலக்கணத்தையும் அவர் அரசியலில் பெற்றிருந்த பெருஞ்சிறப்பையும் காட்டுகின்றார்.

தேவாரத்தில அன்னம், அன்றில், குயில், குருகு, கிளி, நாரை, பூவை, வண்டு, வாரணம், தென்றல், சேவல், கொண்டல் போன்ற அஃறிணைப் பொருள்களைத் தூது சென்று வருமாறு வேண்டிப் பாடப்பெற்ற பாடல்கள்[9] இடம்பெற்றிருக்கின்றன.

நாச்சியார் திருமொழியில்[10] மேகவிடு தூது, குயில்விடு தூது ஆகியவற்றையும் பெரியாழ்வார் திருமொழியில்[11] செம்போத்துவிடு தூதையும் காணமுடிகின்றன.

சீவகனுக்குக் குணமாலை கிளியைத் தூது விடுக்கின்றாள்.[12] இவைதவிரச் சூளாமணியில் சுவலனசடி எனும் மன்னன் பயாபதிக்குத் திருமணத் தூது விடுக்கின்றான். பெரிய புராணத்தில் சுந்தரர்தம் மனைவி பரவை நாச்சியாருக்கு இறைவனையே தூது விடுக்கின்றார். இராமாயணத்தில் அனுமன், அங்கதன் ஆகியோர் தூது செல்கின்றனர். கந்தபுராணத்தில் வீரபாகுத்தேவர் தூது, தேம்பாவணியில் சூசையப்பரின் விண்-

---

7. நண்டு — அகநானூறு 170; நாரை — நற்றிணை 54, 70; கிளி — நற்றிணை 102; வண்டு — நற்றிணை 277, குறுந்தொகை 392; நெஞ்சு — ஐங்குறுநூறு 317.
8. திருக்குறள் அதிகாரம் 69.
9. தேவாரம் 1. 60. 4. 12. 7. 37.
10. நாச்சியார் திருமொழி 580 - 583.
11. பெரியாழ்வார் திருமொழி 1942 - 1947.
12. சீவக சிந்தாமணி, குணமாலையாரிலம்பகம் 1001.

னுலகத் தூது, நளவெண்பாவில் தமயந்தி நளனுக்கு விடுத்த அன்னத்தூது, மனோன்மணீயத்தில் பலதேவன் தூது என்று இப்படிப் பல்வேறு தூது விடுக்கும் செய்திகளை இலக்கியங்கள் தெளிவுபடுத்துகின்றன.

கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியார் இயற்றிய 'நெஞ்சுவிடு தூது' எனும் நூலே முதல் தூது இலக்கியமாக உருப்பெறுகிறது. இத்தூது இலக்கியத்தின் இலக்கணத்தை இலக்கண விளக்கம், பிரபந்தத் திரட்டு போன்ற பாட்டியல் நூல்கள் எடுத்து விளக்குகின்றன.

> ''எகினமயில் கிள்ளை எழிலியொடு பூவை
> சகிகுயினெஞ் சந்தென்றல் வண்டு - தொகைபத்தை
> வேறுவே றாகப்பிரித்து வித்தரித்து மாலை
> கொண்டன்பு
> ஊறிவா வென்றல் தூது''[13]

எனவரும் பிரபந்தத் திரட்டில் எகினம், மயில், கிள்ளை, எழிலி, பூவை, தோழி, குயில், நெஞ்சம், தென்றல், வண்டு ஆகிய இப் பத்தையும் தலைவனிடத்தில் தூது சென்று வருமாறு தலைவி பாடுவதாகக் கலிவெண்பாவினால் பாடப்-பெறுவது தூதின் இலக்கணமாகும் என்று கூறப்பட்டிருக்கிறது.

இப் பத்திலும் அடங்காமல் பணம், முகில், தமிழ், மான், வனசம் (தாமரை), சவ்வாது, நெல், விறலி, புகையிலை, துகில், காக்கை, மதங்கி, பொன், கழுதை, பழையது, அன்பு, செருப்பு முதலான பொருள்களையும்

குவளை, செண்பகம், பாரிசாதம், பிச்சி, இருவாட்சி முதலான மலர்களையும் தூதுப் பொருளாகக் கொண்ட நூல்கள் இருக்கின்றன. இவற்றுள் ஒரே பொருளைத் தூதுப்பொருளாகக் கொண்ட நூல்கள் பல இருக்கின்றன.

தூதுப் பொருள் பத்தாகக் கூறப்பட்டவற்றுள் அன்னம், மயில், தோழி, குயில், பூவை ஆகிய தூதுப் பொருளமைந்த நூல்கள் இல்லாததையும் காணமுடிகிறது.

---

13. பிரபந்தத்திரட்டு

தூது இலக்கியங்களில் கூறப்படும் பொருண்மையினைப் பொதுவாக மூன்று பகுப்பில் பிரித்து விளக்குகிறார் அறிஞர்.[14]

1. எந்தப் பொருள் தூது சென்று வருமாறு வேண்டிப் பாடப்பெற்றுள்ளதோ அந்தப் பொருளின் குறிப்பும் பெருமையும் உரைக்கப்படும்.

2. எந்தத் தலைவனுக்குத் தூது விடுக்கப்படுகின்றதோ, அப் பாட்டுடைத் தலைவனின் சிறப்பும் பெருமையும் உரைக்கப்படும் அவனது தலச் சிறப்பு, பெருமைகள், தசாங்கம் முதலியவை இப்பகுதியில் உரைக்கப்படும்.

3. தூது விடுக்கும் தலைவி, தலைவனைக் கண்டு மையலுற்ற செய்தி, தூது சென்று வருமாறு தூது விடுக்கும் பொருளைக் கூறவேண்டும் பகுதி ஆகியன இடம்பெறும்.

எனவே இதுவரை வெளிவந்துள்ள தூது நூல்களைப் பொருளமைப்பு நோக்கில்,

1. அகப்பொருள் தூது நூல்கள்
2. புறப்பொருள் தூது நூல்கள்

என்று இரண்டாகவும்

தூது விடுத்துள்ள பொருள்களை அடிப்படையாகவைத்து,

1. உயர்திணைப் பொருளை விடுத்தல்
2. அஃறிணைப் பொருளை விடுத்தல்

என்று இரண்டாகவும்

தூது விடுப்பாரை நோக்கி அமைந்தவை,

1. தலைவி விடுத்தது

14. ந. வீ. செயராமன், சிற்றிலக்கியச் செல்வம், மணிவாசகர் நூலகம், சிதம்பரம், இரண்டாம் பதிப்பு 1979, பக். 161-162.

2. தலைவன் விடுத்தது

என்று இரண்டாகவும் வகைப்படுத்துகின்றனர்.[15]

விறலிவிடு தூது

தூது இலக்கியங்களில் விறலியைத் தூது விடுப்பதாக அமைந்துள்ள நூல்களின் பொருளமைதியில் மாற்றம் இருக்கிறது. விலைமகளிடம் மையலுற்ற தலைவன் தன் கைப்பொருளை இழந்த பின்னர், தன் மனைவியோடு வாழ எண்ணி, விறலியைத் தூது விடுப்பதாக அமைந்த கதைப்பகுதி இத்தூது நூல்களில் இடம்பெறுகின்றது. விறலி உயர்திணையைச் சார்ந்தவளாதலின் இவ் விறலிவிடு தூது நூல்களை 'உயர்திணைப் பொருளை விடுத்தல்' என்ற பிரிவினுள் கூறுவது பொருத்தமுடையதாகும்.

இதுவரை வெளிவந்துள்ள விறலிவிடு தூது நூல்கள் வருமாறு :

1. கூளப்பநாயக்கன் விறலிவிடு தூது — சுப்பிரதீபக்கவிராயர் (18 ஆம் நூற்.)
2. சங்கரமூர்த்தி விறலிவிடு தூது — ?
3. சிதம்பரேசர் விறலிவிடு தூது — தில்லைவிடங்கன் மாரிமுத்தாப்பிள்ளை (18 ஆம் நூற்.)
4. சின்னனைஞ்சாத்துரை விறலிவிடுதூது — ?
5. சென்டலங்காரன் விறலிவிடு தூது — ?
6. சேதுபதி விறலிவிடு தூது — சரவணப்பெருமாள் கவிராயர் (19ஆம் நூற்.)

15. இரா. நிர்மலாதேவி (ப.ஆ.), பணவிடு தூது, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1930, பக்.21-22.

7. தெய்வச்சிலையார் விறலிவிடு தூது — குமாரசாமி அவதானி (16 ஆம் நூற்.)

8. நண்ணாவூர் சங்கமேசுவரி விறலிவிடு தூது — ?

9. நாதையன் விறலிவிடு தூது — ?

10. பழனியாண்டவர் விறலிவிடு தூது — ?

11. மூவரையன் விறலிவிடு தூது — மீதிலைப்பட்டி சிற்றம்பலக் கவிராயர் (19 ஆம் நூற்)

12. விறலிவிடு தூது — ?

13. வையாபுரிப்பிள்ளை விறலிவிடு தூது — ?

தூது இலக்கியங்கள் கலிவெண்பாட்டால் அமைவது போலவே இவ் விறலிவிடு தூது இலக்கியங்களும் கலிவெண்பாவினாலேயே பாடப்பட்டிருக்கின்றன.

தஞ்சை மராட்டிய மன்னர்கள் ஆதரித்துப் போற்றி வளர்த்த இலக்கியங்களில் 'செண்டலங்காரன் விறலிவிடு தூது' என்பது மொன்று. இந் நூல்பற்றிய திறனாய்வினை இப்பகுதி விளக்குகிறது.

— 0 —

1

செண்டலங்காரன் விறலிவிடு தூது

'செண்டலங்காரன் விறலிவிடு தூது' என்பது, வாகு பட்டன் எனும் அந்தணன் ஊடல் கொண்ட மனைவிக்கு ஆடலில் வல்லாளாகிய விறலியைத் தூது விடும் பாங்கிலும் பாட்டுடைத் தலைவனான செண்டலங்காரனைப் புகழும் பாங்கிலும் அமைக்கப்பட்டிருக்கிறது.

செண்டலங்காரன் என்னும் பெயரை உடைய வள்ளல் மீது தாம் வைத்த மதிப்பினை, நன்றியறிதலாகப் புகழ்ந்து நிலைநிறுத்தும் விருப்புடன், ஆசிரியர் இந்நூலினைச் செய்திருக்கிறார்.

நூலாசிரியர்

இந் நூலாசிரியரின் பெயரும் வாழ்ந்த வரலாறும் தெரியவில்லை. சரசுவதி மகால் நூல்நிலையத்தில் இருக்கின்ற இந்நூற்சுவடியின் இறுதியில் 'ஆறுமுகம்' எனும் கையொப்பம் காணப்படுகின்றது. இச்சுவடி மூலச்சுவடி அல்ல என்று இந் நூலினைப் பதிப்பித்த ஆசிரியர் கூறுகின்றார். அதனால் மூலச் சுவடியினைக்கண்டு பிரதி செய்தவரின் பெயராக இப்பெயர் இருக்கிறது என்ற முடிவுக்கு வரலாம்.

செண்டலங்காரன் எனும் வள்ளல், தஞ்சைச் சகசி அரசருக்குரிய கிராம மணியத்து அட்டவணை அதிகாரியாக இருந்திருக்கிறார். இதனை,

''தன்மதுரைத் தஞ்சைச் சகசிமா ராசனுக்குப்
பொன்முகிர வேண்டிப் புதுக்கியே - நன்மணியத்
திட்டமிட்டு நாளுந் திகழ்நல் லவன்வாசல்
அட்டவணை யாஞ்செண் டலங்காரன்'' (544-545)

எனும் கண்ணிகள் விளக்குகின்றன. எனவே இந்நூலாசிரியர் இரண்டாம் சகசி மன்னர் ஆட்சி செய்த கி.பி. 1684 முதல் 1712 வரையிலுள்ள காலத்தில் வாழ்ந்திருக்கிறார் எனலாம்.

நூலின் ஓலை அமைப்பும் எழுத்தமைப்பும்

இந்நூலின் ஓலை 16 அங்குல நீளமும் 1.2 அங்குல அகலமும் கொண்டிருக்கிறது. 64 ஓலைகளையும் 127 பக்கங்களையும் உடைய இதன் ஒவ்வொரு பக்கமும் 2 முதல் 4 வரை வரிகள் இருக்கின்றன.[16]

எழுத்துக்கள் பெரியனவாகவும் அதே நேரத்தில் தெளிவாகவும் வரிகள் தொடர்ச்சியாகவும் இருக்கின்றன. சில இடங்களில் பழுதடைந்திருக்கிறது.

எழுதப்பட்டுள்ள முறை

1. ஒற்றெழுத்துக்களுக்குப் புள்ளி இல்லை.
2. குறில், நெடில் வேறுபாடு அறிய ஒற்றை, இரட்டைக் கொம்புகள் பயன்படுத்தப்படவில்லை.
3. றகரம் ரகரமாகவும் நகரம் ணகரமாகவும் எழுதப்பட்டிருக்கின்றன.

நூற்பதிப்பு

தஞ்சைச் சரசுவதி மகால் நூல்நிலையத்தினர் சி கோவிந்த ராசனாரைப் பதிப்பாசிரியராகக் கொண்டு 1969இல் இந்நூலை வெளியிட்டிருக்கின்றனர்.[17] இவர் ஓலைச்சுவடியில் காணப்பட்ட சொற்பிழைகள், எழுத்துப்பிழைகள் போன்றவற்றை இலக்கண வியல்புக்கு மாறுபடாமல் செப்பம் செய்து சுவடியில் இல்லாத பல உள்தலைப்புக்களைக் கொடுத்துப் பதிப்பித்திருக்கிறார்.

நூலமைப்பு

இத் தூது, முதற்கண் நேரிசை வெண்பாவாலியன்ற கைலாசநாதரின் வணக்கத்தையும் கலிவெண்பாவாலமைந்த 566 கண்ணிகளையும் நூலினிறுதியில் 1 வெண்பாவையும்

---

16. தஞ்சைச் சரசுவதி மகால் நூல்நிலையச் சுவடி எண் 286/99.
17. சி. கோவிந்தராசனார் (ப ஆ.), செண்டலங்காரன் விறலி விடு தூது. சரசுவதிமகால் நூலகம், தஞ்சாவூர், 1969.

கொண்டதாகத் திகழ்கின்றது. பொதுவாக நூலை 'விநாயகர் வணக்கத்'துடன் தொடங்குவது மரபு. இந்நூலில் இம் மரபிற்கு மாறாகக் கைலாசநாதரின் வணக்கம் இடம்பெற்றிருக்கிறது.

இந் நூலமைப்பினை,

1. பாட்டுடைத் தலைவனைப்பற்றிய செய்திகள்
2. கதைத் தலைவன் தொடர்பான செய்திகள்

என்று இரு பகுதிகளாகப் பிரித்து ஆய்வு செய்யப்படுகிறது.

நூலாசிரியர் கூற்றாகவும் கதைத் தலைவனின் கூற்றாகவும் பாட்டுடைத் தலைவன் கூறப்படுகின்றான்.

கதைப் பகுதியில் பாத்திரங்களை அறிமுகப்படுத்தும் பொழுது ஆசிரியர் கூற்றிலும் பின்னர்ப் பாத்திரங்களின் கூற்றிலும் நூற்போக்கு அமைந்திருக்கிறது.

ஊடல் கொண்ட தன் மனைவியிடம் விறலியைத் தூது விடும் தலைவன் தன்னுடைய வரலாறு முழுவதையும் அவளிடம் கூறுவதாக இந்நூல் அமைந்திருக்கிறது.

பாட்டுடைத் தலைவனைப் பற்றிய செய்திகள்

செண்டலங்காரன் இந்நூலின் பாட்டுடைத் தலைவன் ; சிறந்த வள்ளலாகத் திகழ்ந்தவன் ; தலம், மதில், கோபுரம், பலகணி, மலர்ச் சோலை, தோட்டம், கரும்பாலை, ஆலயம், அம்பலம், சாலைகள், மண்டபம், சாவடி, வாவிகள், பூம்புனல், செந்நெல்,அரண்மனை, சத்திரம், திண்ணைகள், மங்கைநல்லார் வீதிகள், தங்கக் கடை, கடைத்தெரு, கம்பம், கொற்றக்குடை, கொடி, குமிறு, கடகளிறு, செண்டழகர் சந்நிதி முதலான அத்தனையும் சேர்த்து வளம் தரும் ஊரே 'வண்டுவரை ராசை வளம்பதி' எனும் இராசமன்னார் குடியாகும் (44-49).[18] இவ்வூர் தஞ்சை மாவட்டத்தில் இருக்கிறது. இவ்வூரில்

18. பிறை வளைவில் இருக்கின்ற எண்கள் செண்டலங்காரன் விறலிவிடு தூது நூலின் கண்ணிகளைக் குறிக்கும்.

வாழ்ந்த மன்னப்பன் என்னும் பெயருடையாரின் பேரன்தியாகப் பனின் மகனாகப் பிறந்தவன் செண்டலங்காரன் எனும் வள்ளல்.

'நந்தகோபன் குலத்துதித்த கோபாலன்' (11)

என்று கூறுவதனால் இவன் யாதவ மரபினனாவன்.

''செய்ய நாராயணனுஞ் செண்பகப் பூபாலகனுந்
துய்ய துணையெனவே தோன்றினோன்'' (59)

என்பதனாலும்

''முச்சகமு முண்டுமிழ்ந்த மன்னன்பதத்தை மறவாமல்'' (5) என்பதனாலும் இவன் திருமால் வழிபாட்டில் சிறந்திருந் தவன் என்பது புலப்படுகிறது.

இவன் சிறந்த வள்ளலாக விளங்கினான் என்பதனை,

''கன்னனைப் போல், தேடிக் கொடுக்குந் திகழுந்
தளிர்க்கரத்தான்'' (8)

''இங்கிதவேள், காரி மலையன் கனபோசன் நள்ளிமுதற்
பாரி யெழிலி யெனும் பண்பினான்'' (15)

என்று ஆசிரியர் கூறுவதனால் அறியமுடிகிறது.

இவன் மந்திர வித்தைகள் கற்றவன் (29-33); சிறந்த வீரமுடையவன் (39-40); மகாராட்டிர அரச குலத்தாராலும் சான்றோர்களாலும் உறவின் முறையோடு மதித்துப் பழகும் மேன்மை உடையவன்; சிறந்த ஈகைத்தன்மை உடையவன்; தமிழ்ப் புலவர்களைப் போற்றிப் பரிசுகள் பல நல்கும் பண்புடையவன்; மேருமலை, துளுவம், திரிகூடம், கடாரம் முதலான நாடுகளில் வாழ்வோர் மெச்சும் தன்மை உடையவன் (73-84).

இவன் அட்டவணை அதிகாரியாக இருந்தான் (545). அரசுக்குரிய இறை வரி, கடமை, குடிக்கூலி, வாரம், சுங்கம், ஊர்க்காவல், மாவடை, மரவடை ஆகிய எட்டு வரிகளுக்குரிய

கணக்கதிகாரியே அட்டவணை அதிகாரியாவர் என்று இந்நூலின் குறிப்புரை கூறுகிறது.[19]

இவ் வள்ளலின் காலம் சகசி மன்னர் வாழ்ந்த கி.பி. 1684 முதல் 1712 வரையிலுள்ள காலமேயாகும்.

கதைத் தலைவன் தொடர்பான செய்திகள்

நாகப்பட்டினத்தில் வாழ்ந்து வந்த வாகுபட்டர் எனும் அந்தணர் இந்நூலின் கதைத் தலைவன். இவர் அத்தை மகள் முத்து என்பாளையும் அபரஞ்சி எனும் அழகியை இளையாளாகவும் மணந்திருந்தார். அவ்விருவர்க்கும் இரண்டு மனை கட்டி அங்குமிங்கும் நாளொருநாள் இருந்து இன்புற்றிருந்தார். ஒருநாள் இளைய மனைவி அபரஞ்சியோடு முயங்குங்கால் சிந்தை பேதித்துப் பெருமூச்செறிந்ததைக் கண்ட அவள் அவரிடம் ஊடல் கொண்டாள்; பின்னர் முயங்க மறுத்து விட்டாள். பலவாறு கூறி அவள் ஊடலைப் போக்க முயன்ற வாகுபட்டர் இறுதியில் பயனொன்றும் கிட்டாத நிலையில் மனம் குழம்பிக் கங்கை நதியில் நீராடித் தவம் முதலியன செய்துவரப் புறப்பட்டார்.

அவ்வாறு புறப்பட்ட அவர் திருவாரூரில் அழகில் மிகுந்த நாட்டியக் கணிகைமீது மையல்கொண்டு தான் கொண்டு வந்திருந்த பொருளை யெல்லாம் இழந்து விடுகிறார். பொருள் இழந்த நிலையில் அக் கணிகையும் அவளின் தாயும் அவரைத் துரத்தி விடுகின்றனர். அந்நிலையில் அவர் அவ்வூர்ச் சபையாரிடம் நீதி கேட்கிறார். ஊர்ச்சபையார் அவருக்கு நன்மொழிகளைக் கூறி அவரை அவர் ஊருக்குத் திரும்பிச் செல்லும்படிக் கூறுகின்றனர். அதனைக் கேட்ட அவர் திருந்தித் தலங்கள் பல வற்றிற்குச் செல்கிறார். பல புண்ணியத் தீர்த்தங்களில் நீராடி ஊர் திரும்பும்பொழுது மன்னார்குடியில் செண்டலங்கார வள்ளலைக் காண்கிறார். காசித் தீர்த்தத்தை அவருக்கு வழங்கி ஆசி

19. சி. கோவிந்தராசனார் (ப.ஆ.), செண்டலங்காரன் விறலிவிடு தூது. மூ. கா. நூல், ப.49.

செய்த அவ் வாகுபட்டருக்குச் செண்டலங்காரன் பல பரிசுகளை வழங்குகிறார். மகிழ்வுடன் பெற்ற வாகுபட்டர் தம் ஊருக்குத் திரும்புகிறார்.

தாம் பெற்ற பரிசுகளை விறலியிடம் கூறி அவளைத் தன் பொருட்டுத் தன் இளைய மனைவியிடம் தூது செல்லுமாறு கூறு கிறார். விறலியும் அவருக்காகத் தூது செல்கிறாள். இறுதியில் வாகுபட்டரையும் அவர்தம் மனைவியர் இருவரையும் ஒன்றுசேர வைக்கிறாள் விறலி. விறலிக்குப் பரிசுகள் பல நல்கி இன்புற்று இனிது வாழ்கின்றனர்.

1. *சித்திரவல்லி* :- தென்கமலையூர் எனும் திருவாரூரில் கமலவல்லி என்றோர் பூம்பாவை பெற்றெடுத்த பெண் சித்திர வல்லி. இவள் இசை, யாழ், வீணை முதலானவற்றைத் திறம் படக் கற்று அம்பலத்தில் ஆடுவதில் சிறந்தவளாக இருக்கிறாள். இவள் கல்லாத கல்வியில்லை; வெல்லாத வித்தையில்லை; இவ் வுலகில் இவளைக் கண்டு மயங்காதவர் இலர். மங்கைப் பருவ வயதடைந்த இவளுக்குத் தாய்க்கிழவி பரத்தையர்களைப் பற்றி யும் அறிவுரைகள் பலவற்றையும் கூறுகிறாள்.

சித்திரவல்லிக்குச் செங்கி, கமலி, திருமாலை, செவ்வந்தி, மங்கி, கனகி, மதுமாலை, அரங்கமுத்து, மாணிக்கம், கனகவல்லி, சிவக்கொழுந்து, சாந்தி, காமவல்லி, கத்தூரி, செங்கமுத்து, சோமவல்லி, அபரஞ்சி, கறுப்பி ஆகிய பதினெட்டுப் பெண்கள் தோழிகளாக இருந்து பல பணிகளைச் செய்கின்றனர் (165-169). இப்பெண்கள் சித்திரவல்லிக்கு, ''சந்தவகை கூட்டித் தடவுவர்; அந்தரங்க மேடை அலங்கரித்து விந்தை பெற அமைப்பர்; கூடவருவார்க்குச் சமைப்பர்; வருவாரைப் போய் அழைப்பர்; முத்துமணி கோப்பர்; பொய்யையே நாள்தோறும் புகலுவர்'' என்றிப்படிப் பலவகையில் உறு துணையாக இருக்கின்றனர் (170-177).

வாகுபட்டர் சித்திரவல்லியின் இல்லத்திற்கு வந்த பொழுது அவரை இப்பெண்கள் முதலில் வரவேற்கின்றனர். சித்திரவல்லியைக் காண்பதற்கு வேண்டிய பொற்காசுகளைக் கூறி அவரிடமிருந்து எவ்வளவு பெறமுடியுமோ அவ்வளவை-

யும் பெற்றபின்னரே பள்ளியறையைப் பின்வருமாறு ஒப்பனை செய்கின்றனர் (264-269).

1. நன்றாக மஞ்சத்தில் மெத்தை விரித்தனர்.

2. பஞ்சொத்த பட்டுத் தலையணையை வைத்தனர்.

3. மலர் தூவினர்.

4. செண்பகத் தார் (தொங்கல்) மேற் கட்டினர்.

5. குங்குமம், ஈழக்களிப்பிளகு, கருப்பூரம், வெற்றிலை, விளக்கு முதலானவற்றை வைத்தனர்.

இவ்வாறு பள்ளியறையை ஒப்பனை செய்து முடித்த பின்னர் வாகுபட்டரிடம் வந்து அவர் காலை மெல்லப் பிடித்து, முகத்தில் அரும்பிய வியர்வையைத் துடைத்து, உடம்பைப் பிடித்து, விசிறி கொண்டு வீசுகின்றனர் (270).

சித்திரவல்லியும் வாகுபட்டரும் :- திருவாரூருக்கு வந்த வாகுபட்டர் கோயில் வாசலில்சித்திரவல்லியைக் காண்கிறார். அவளுடைய குயில் மொழியைக் கேட்கிறார்; தேனொழுகும் செம்பவள வாயைக் காண்கிறார்; சிறு நகையையும் அம்புலவு கண்களையும் நெற்றியிலிட்ட கத்தூரிப் பொட்டின் அழகையும் அவள் பாடும் பாட்டையும் தண்ணுலவும் வாழைத் தொடையையும் மதி முகத்தையும் நடையழகையும் தோகை மயிற்சாயலையும் கண்டு நெஞ்சு வெதும்புகிறார். அவரைக் கண்ட அவளும் விரும்பியதுபோல் கடைக்கண் காட்டுகிறாள். அதனைக் கண்ட வாகுபட்டர் அவளில்லத்திற்குச் செல்கிறார்.

சித்திரவல்லியின் தோழியர் அவரைச் சூழ்ந்து வரவேற்கின்றனர். அப்பொழுது அங்கு வந்த தாய்க் கிழவியும் பட்டரைப் பலவாறாகப் புகழ்ந்து வரவேற்கிறாள். அவர்கள் கேட்ட பொன்னைத் தருகின்றார் பட்டர்.

அதன் பின்னர்ப் பள்ளியறையை அலங்கரித்துப் பட்டருக்குப் பணிவிடைகள் பலவற்றைப் புரிகின்றனர் பாங்கியர். அதன் பின்னர்ச் சித்திரவல்லி வருகின்றாள். அவள் நடந்து வந்த

அழகையும் உடுத்தி இருக்கும் புடவையையும், வேல்விழிப் பார்வையையும் கண்டு மயங்குகிறார் படடர்.

சித்திரவல்லி பட்டரிடம் கலவிச் செயல் ஆசிரியர் கூறுவன வருமாறு (277-310) :

1. மெத்தையின் மேல் கூட இருந்தாள்
2. குழைத்த சந்தனம் பூசினாள்
3. மலர் முடித்தாள்
4. இலையும் கற்பூரமும் கரத்தினால் கைக்களித்தாள்
5. மடியில் விழுந்தாள்
6. கந்தரத்தின் பண் காட்டி இராகம் ஒன்று பாடினாள்
7. தண் காட்டும் வட்ட முகத்தை மதிமுகத்தோடு ஒற்றினாள்
8. பட்டாடை தன்னை நெகிழ்த்தாள்
9. சரசமிட்டாள்
10. கூசாமல் செவ்விதழைக் கவ்வித் தெவிட்டாது போல் உருஞ்சிச் செவ்விதழை உண்டு தெவிட்டினாள்
11. செவ்விதழைத் தானும் கொடுத்தாள்
12. சலியாமல் ஊறிய செந்தேனும் கொடுத்தாள்
13. சின்னச் சிறுக்கி எனச் செப்பினாள்
14. சொன்னதைச் சொல்லுவாள்
15. கூடச் சுகிப்பாள்
16. போகம் விளைத்திடுவாள்
17. சல்லாப மாரன் என்பாள்
18. காமுகரில் வீரன் என்பாள்
19. இவ்வுலகில் உன்போல் கிடையாது; உன் கலவிக் கேற்ற பெண்கள் என்போல் கிடையாது என்பாள்

20. வாழைத் தொடையால் வலியநெருக்கிடுவாள்

21. வஞ்சிக் கொடி இடையை வாட்டுவாள்

22. பஞ்சணையில் கிடத்தி மேலேறி ஊஞ்சலெனத் தள்ளி அசைத்துத் தனுக் கொள்வாள்

23. முத்துவடம் சிதற, முத்த நகை புலர, முத்து வியர்வும் சிதறி, முத்துதிரத் தான் பயின்ற 64 கலைகளையும் காட்டுவாள்

24. இதனைப் போல வேறு சமயம் எதுவும் வரப் போவதில்லை என்பாள்

25. என்னுடைய சோகத்தைத் தொலைத்தாயே என்பாள்

26. திரண்ட தோள்களை உடையவனே! காளை போன்றவனே! உன்னைப் போல இனி வேறு யாரைக் காணவல்லேன் என்பாள்

27. கனி இதழில் பல் குறியைப் பறித்தறிவாள்

28. நில்லாமல் ஓடுவாள்

29. முற்றத்து உலவுவாள்

சித்திரவல்லியின் வலையில் சிக்கிய பட்டர் அவள் குணத்தை நம்பித் தாம் கொண்டு வந்த பொருளையெல்லாம் இழக்கின்றார். பொன்னைக் கவர்ந்த வல்லி பொய் முயக்கம் கொண்டு நயமாகப் பேசி, மயக்கிச் சூதுடன் சொக்கட்டான் ஆடிக் கையில் இருந்த பொருள் முழுவதையும் பறித்து விடுகிறாள். கையில் காசு, பணம் இல்லாததைக் கண்ட அவளும் அவள் தோழியரும் தாய்க்கிழவியும் சேர்ந்து பட்டரை விரட்டி விடுகின்றனர்.

2 தாய்க்கிழவி :- இந்நூலில் இத் தாய்க்கிழவியே பெரும் பகுதியில் வருகின்றாள். தன் மகள் சித்திரவல்லி மங்கைப் பருவ வயதடைந்த பொழுது அவளுக்குக் கூறுகின்ற அறிவுரையில் பரத்தையர்களின் செயல் எப்படி இருக்கவேண்டுமென்பதைக் காணமுடிகிறது. அவள் கூறிய அறிவுரை (121-164) வருமாறு :

1. பொன் பத்துத் தந்தாலும் நட்டுவனைத் தள்ளிவிடு; நட்டுவனார் நட்பைக் கொள்ளாதே

2. கொக்கோகர் வந்தால் அவ்வாசல் வழி வாராதே

3. தாருலவு கூந்தல் முடித்துக் குவளை விழி மை யெழுதிச் சாந்து புழுகும் தரித்திடாய்

4. சந்தனக் கிளியும் பஞ்சவர்ணக் கிளியும் கூடி வளர்ப்பாய்

5. வாளொத்த கண்ணால் மயக்கு; மணக்கும் மூலைத் தாளத்தைக் காட்டிச் சரசமிடு

6. கேளிக்கை ஆடும்பொழுதும் சுடிகை நுதற்குறிகள் தீட்டும் பொழுதும்செழுமுலையைக் காட்டும் பொழுதும் தெருவில் வரும்பொழுதும் இனிய மொழியால் பேசி உன் மோகவலைக்கு ஆட்படுத்து

7. தூய மடல் தீட்டுவித்துத் தேன் மொழியால் சிக்குவிப்பாய்

8. முல்லைப் பற்கரையைக் காட்டிப் பசப்பிச் சிரித்து மனக்கற்கரையக் காமுகரைக் கைக்கொள்ளாய்

9. காசற்ற வீம்பர், விரகற்ற லோபர், தீம்பர், திருடர், சோம்பர் முதலானோரைச் சேராதே

10. தத்துவங்கள் தேர்ந்தவரைப் பின்திரும்பிப் பாராதே

11. நிலைபெற்ற துட்டிக் கணக்கனையும் தோய்ந்துவிடு

12. மெய்யும் நயவும் அவிநயமும் தேட்டரவும் பொய்யும் அறிந்து பொருந்தி நட

13. நீரில் குளிக்கும் நெட்டூரர், மாரில் மயிர் முளைத்த மல்லர், தேரைக் கவி பாராட்டும் வயபர், பச்சிலையில் உண்டைபண்ணிச் சீராட்டும் திருடர், நேராகச் சல்லி விரைக்கும் சகசண்டி மாண்பர், புல்வர் இவர்களைப் பொருந்தாதே

14. மருத்துவரை நம்பாதே

15. மோகனங்கள் சற்றும் மொழியாதே
16. தானே தருவாரைத் 'தா' வென்று கேளாதே
17. 'நானே நான்' என்பாரை நம்பாதே
18. அந்திக் குளியை மறவாதே
19. சந்தைச் செலவைத் தவிராதே
20. முந்த வந்து பேசிக் கழுத்தறுத்துப் பித்தாகப் பண்ணு விக்கும் தேசத் திருடரையும் தீண்டாதே
21. பேசி வந்து செட்டிப்பசங்கள் திரட்டிக் கொடுத்தாலும் மட்டிப் பசங்களுடன் வாழாதே
22. தொட்டியர், சேணியர், பள்ளியர், சிற்பியர், சோணகர், வாணியர் முதலியோர் தந்தால் மருவுவாய்
23. பேச்சிலே சீர்தூக்கிப் பார்த்துத் தெரிந்து நடந்து கொள்வாய்

தாய்க்கிழவியும் வாகுபட்டரும் :- சித்திரவல்லியைக் காணவந்த வாகுபட்டரைத் தாய்க்கிழவி கண்டு மிகவும் புன்சிரிப்புடன் அவரை வரவேற்கிறாள். பலவாறாக அவரைப் புகழ்ந்து பேசி அவரிடமிருந்த பொன்னைப் பறிக்கிறாள். பட்டரிடம் பொன் இருக்கும் வரை நயமாகப்பேசிய கிழவி, பொன்முழுவதும் தீர்ந்த நிலையில் அவரை வாய்க்கு வந்த வார்த்தைகள் பல கூறி அவரை வீட்டை விட்டுத் துரத்துவதற்கு முற்படுகிறாள் இறுதியில் பட்டரை ஊர்ச் சபையாரிடம் அழைத்துச் சென்று பின்வருமாறு (450-469) முறையிடுகிறாள்.

"என் குடி கெட்டது, இம் மறையோன் என்
வீட்டில் வந்து பத்து நாட்கள் வரை இருந்
தான். வருவாரைப் போவாரை வந்து திரிய
மனம் பொருந்தான். அந்தி சந்தி இரு
வேளைகளிலும் வீட்டை விட்டுப் போகான்.
மின் போன்ற என் மகளைப் 'பாடு' என்பான்.

பாட்டைவிட ஒட்டான் பழிகாரன். 'சாட்டை இல்லாத பம்பரம் போல' ஆட்டுவிப்பான். பஞ்சமா பாதகங்கள் கொண்ட இவன் எங் களை அம்பலத்தில் ஏத்தி விட்டானே! இவன் வந்த நாளிலிருந்து அவள்; அந்திக் குளியலை மறந்து விட்டாள் பந்து முதல் பாவை கழங்கு முதலானவற்றை விளையாட வில்லை; நாவில் உறும் பாட்டை மறந்தாள்; அநியாயம். வீட்டில் இவன் பண்ணுகிற 'லூட்டி' பலவுண்டு. இவன் பண்ணியதை நான் எப்படி எவ்விதம் சொல்லுவேன்? உதைத்தான்; என் மங்கையின் மயிர் பிடித் தான் சங்கரா! பெற்ற வயிறு பெருந் தீயாகக் கொழுந்து விடுகிறதே! ஒற்றை நரை இட்டும் இந்த ஊழ்வினையேன் இப்ப டிச் செய்து விட்டானே! இனி நாங்கள் எங்கே செல்வோம்? எவ்விடத்தே காதலிப் போம்? எங்கே இருப்போம்? இடம் காட்டீர்!''

இவ்வாறு கிழவி முறையிட்டதைக் கேட்ட சபையார் பட்டர் கூறுவதனையும் கேட்கின்றனர். பட்டர் ''மன்னரே! ஆதிநாள் வந்தேன். அரிவை தனக்கு அன்றே செம்பொன் கொடுத்து விட்டேன். பாதகி. தாய், 'இன்னும் கொடுப்பான்' என்று நினைத்து மருந்து கொடுத்து என்னைப் பசப்பி இத மாகப் பேசிப் பொன்னை யெல்லாம் கொள்ளை இட்டுக்கொண் டாள். இவ்வளவும் செய்துவிட்டு என்மீது குற்றம் வேறு கூறி என்னை இங்கழைத்து வந்தாள். இனி உங்கள் சித்தம்'' என்று கூறியதைக் (470-474) கேட்ட கிழவி சினந்து மேலும் ''கள்ளன்; திருடன். என்ன மருந்து இட்டானோ? எங்கள் குலவிளக்குக்கு அன்னம் இல்லை. பொன்னை முடிந்த துணி அறியான். மூடன்; வறடன்; சுடுமூஞ்சி; வெள்ளாட்டுக் கள்ளன். இவன் பேச்சைக் கேளாதீர் முழுப் பொய்யன், முழுச் சோம்பல்கள்ளன். நடம் புரியும் வேசியரும் கண்டு விரும்பி அழைப்பாரோ?

வேசியர் தாம் கூசாமல் மேவுவரோ? வேசியர்க்குச் செய்பவன் என்றும் தெரியாதோ? வையகத்தில் வாய்க்கரிசி நோண்டி மடிப்பிச்சை வாங்கும் இவன், தாய்க்குரிய கஞ்சி முதல் தான் வாரான். மெள்ளத்தான் பேசுவனோ? தத்தி விழுவான். சமத்தன் போல் எத்தனைதான் சொன்னாலும் சற்றே சுனையுண்டோ? குறைதான் இனியுண்டோ?' 'என்று பட்டரைப் பழித்துரைக்கிறாள் (475-486).

மருந்து

சித்திரவல்லியைக் காண வருபவர்களை வசியப்படுத்துவதற்காக மருந்து ஒன்றைத் தயார் செய்து வைத்திருப்பதை இந்நூலாசிரியர் நவில்கின்றார். அவர்கள் எவ்வாறு எந்த எந்தப் பொருளைக் கொண்டு அம்மருந்தினைத் தயார் செய்தனர் என்பதைப் பின்வருமாறு (179 - 194) கூறுகின்றார்.

அய்யனார் கோயிலில் எடுத்த நத்தை வேர், கொம்மிடிக்காய், பீர்க்கங்காய், தூய பருத்தி, துளசி வேர், நாயுருவி, பூனை, சிறு தும்பை, பொன் முசுட்டை, வெள்ளருகு, சடைச்சி விஷம் (மூங்கில்), வாழைக்கிழங்கு, மரமஞ்சள், வெங்காயம், தாழைக் கிழங்கு ஆகிய இவற்றுடன் சாராயம்;

ஆழத்தில் வைத்த குருவிமுட்டை, வண்ணான் கழுதை மயிர், தைத்த செருப்பில் சரித்த தோல், சிறு வாரகத்திப் பிஞ்சு, மருக்காரை, செம்முள்ளி, நெட்டிவேர், சீரகம், கருப்பூரம், உப்பிலிக்காய், சாதிக்காய், காடை இறகு, ஓணான், முருங்கை வேர், செம்பரத்தை, வெண்சாரை, வெண்கடுகு, பைய்யாவின் வாயில் உமிழ்ந்த நீர், வண்ணான் துறை அழுக்குப் பாயில் உதிர்ந்த பசுமஞ்சள், தவளைகள், பல்லி, கருஞ்சாரை, மாதளங்காய், கொல்லிமலைக் குறிஞ்சித் தேன், நெல்லியின் வேர், பன்றிமலைப் பச்சை, பருமலையில் கோங்கின் காய், குன்றமலையில் கொடுவேலி முதலான இந்த வகை (மருந்து) எல்லாவற்றையும் பறித்தெடுத்து அதில் முலைப்பால் விட்டு மூடி வைக்கவேண்டும். பின்னர் இவற்றைக் காய்ச்சி வைத்து அந்தி சந்திகளில் வருவோர்க்கு இதனைப் பாலில் கலந்து கொடுக்க வேண்டும்.

இம் மருந்து உட்கொண்டவர் சித்திரவல்லியின் அழகைப் பலவாறாகப் புகழ்ந்து கூறுவர். தாம் கொண்டு வந்த பொன்னையும் பொருளையும் அவளிடம் பறிகொடுத்துச் செல்வர்.

ஊர்ச்சபையார்

திருவாரூரில் உள்ள ஊர்ச்சபையாரைப் பற்றியும் அச்சபையார் அறமுரைத்ததைப் பற்றியும் இந்நூலில் (487-489) காணமுடிகிறது.

தானத்தார், கோயில் தலத்தார், இனத்தார், பழைமை உடையோர், வேதியர், அந்தணர் ஆகியோரே அவ்வூர்ச் சபையாராவார்.

தாய்க்கிழவி பட்டர்மீது வழக்குத் தொடர்ந்ததைக் கேட்ட சபையார், 'இது வேசி வழக்கு; அதனால் இது வழக்கன்று' (487-488) என்று கூறித் தாய்க்கிழவியை அனுப்பிவிட்டனர். அதன் பின்னர்ப் பட்டருக்குக் 'காசிக்குப் போனாலும் வேசி புணர்ந்த பாவம் போகாதே' (491) என்றும் வேசியின் தொடர்பால் விளைந்த பல செயல்களையும் எடுத்துச் சொல்லி அவரை நல்வழிப்படுத்தி அவருடைய சொந்த ஊருக்குத் திரும்பிச் செல்லுமாறு கூறுகின்றனர்.

வேசியின் தொடர்பால் விளைந்த செயல்களாகப் பட்டரிடம் ஊர்ச்சபையார் பின்வருமாறு கூறுகின்றனர்.

1. சுத்தன் எனும் சாரங்கன் கைகால் தறித்தது
2. சீரங்க விப்பிர நாராயணன் செய்த மெய்த்தவத்தை வீழ்த்தியது
3. கொந்தி அரசன் குடிகெட்டுப் போனது
4. அருணகிரிநாதர் கெட்டுப் போனது
5. சுந்தரருக்காக இறைவன் பரவையாரிடம் தூது சென்றது
6. புட்ப அரசன் புதுநகையை மாற்றியது
7. மாதவியின் தொடர்பால் கோவலன் கொல்லப் பட்டது

8. காளிதாசன் உயிர் மாய்ந்தது

இவர்கள் தவிரப் பல மன்னர் கோடி புவி இழந்து கட்டழிந்து சேமநிதி இழந்து அல்லல்பட்ட கதை எவ்வளவோ இவ்வுலகிலுண்டு (490 - 511).

பட்டர் பொன் இழந்தமை

சித்திரவல்லியின் பொருட்டுப் பட்டர் தாம் கொண்டு சென்ற பொன் பலவற்றை இழக்கின்றார். பணிப்பெண்களும் தாய்க்கிழவியும் பட்டரிடமிருந்து பொன்னைக் கேட்டுப் பெறு கின்றனர். அவர்கள் அவ்வாறு கேட்டுப் பெற்றபொன் விவரம்

1.	தாய்க்கு	—	100	பொன்
2.	பணிப்பெண்களுக்கு	—	40	,,
3.	குங்குமம், சந்தனம், கத்தூரி, சாந்து, கருப்பூரம் முதலான வற்றிற்கு ஒரு நாளைக்கு	—	30	,,
4.	அந்தரங்கமேடை அலங்கரிப்பதற்கு	—	10	,,
5.	சித்திரவல்லியை அலங்கரிப்பதற்கு	—	10	,,
6.	பாக்கு வாங்குவதற்கு	—	10	,,
7.	சேலை வாங்குவதற்கு	—	10	,,
8.	இலை, பிளகு வாங்குவதற்கு	—	10	,,
9.	நட்டுவனாருக்குக் கூலி	—	10	,,
10.	பொன் அடகு போகாமல் மீட்டு வருவதற்கு	—	40	,,
11.	முக்குறுணிப்பாலில் முறட்டெருமைக்கு	—	50	,,
12.	பொன் மோதிரம், பொற்கடுக்கன் வாங்குவதற்கு	—	50	,,

13.	பாலுக்கு	— 60	பொன்
14.	மூக்குக்கு மூக்குத்தி வாங்குவதற்கு	— 30	,,
15.	பாடகத்துக்கு	— 50	,,
16.	பட்டுக்கு	— 60	,,
17.	சூடகத்துக்கு	— 80	,,
18.	வண்ணச் சேலைக்கு	— 30	,,
19.	சிந்தாக்குக்கு	— 50	,,
20.	நெய்யளந்த நெட்டூர நெட்டைச்சிக்கு	— 50	,,

இவை தவிரச் சித்திரவல்லிக்குப் பண்முறைப்படிப் பாடல் சொல்லிக் கொடுத்த பாடகன், வளையல் போடுவதற்குக் கையளந்த பதுமினி, மோரளந்த நாச்சி, முத்தளந்த பேச்சி, தாரளந்த கூந்தற்சகியர் முதலானோர்க்கும் பாரளந்த வேங்கடனாருக்கு விளக்கிடுவதற்கும் பொன் பலவற்றைக் கொடுத்து இழக்கின்றார் பட்டர்.

தாய்க்கிழவி, நரசப்பையன் கடனுக்கு 40 பொன்னும் தாசமனாயக்கன் கடனுக்கு 80 பொன்னும் இராசன நாயக்கன் ராகவன் காசிபதி அய்யன் கடனுக்கு 50 பொன்னும் தர வேண்டுமென்று கூறிப் பெறுகின்றாள்.

இவர்களைத் தவிரச் சித்திரவல்லி அவருடன் நயமாகப் பேசி மயக்கியும் சொக்கட்டான் ஆடியும் 400 பொன் வாங்குகிறாள்; அதன் பின்னரும் செந்தேன் இதழ் கொடுத்தும் பாராட்டியும் ஆறும் பதினைந்தும் ஐம்பதுவும் நூறும் இருநூறும் நோகாமல் கேட்டு வாங்கி விடுகிறாள்.

பட்டர் சென்ற தலங்கள்

ஊர்ச்சபையார் அறிவுரையைக் கேட்ட பட்டர்,

காசி, கேதாரம், காஞ்சிபுரம், காளத்தி, திருவோத்தூர், தென்கானை, சேடகிரி, தில்லை, திருப்பாதிரியூர், திருவதிகை, நாரசிங்கம், கங்கபுரம், திருத்தணி, ஆலங்காடு, கண்ணபுரம், காழி,

கடலூர், கலசை, திருவையாறு, பாழி, திருப்பனந்தாள், பன்றியூர், சோழபுரம், சேறை, திருப்புகலூர், தென்நாகை, கீழ்வேளூர், ஆனைக்கா, கோட்டூர், திருக்களர், கும்பகோணம், துறைசை, கரவீரம், வேதாரணியம், விசலூர், இடைமருதூர், கண்டி, துருத்தி, காதூர், நள்ளாறு, இலுப்பையூர், நாவலூர், மாயூரம், புள்ளூர், குடவாசல், புன்கூர், பந்தணைநல்லூர், பனையூர், திருமருகல், ஈங்கோய்மலை, பழநி, எட்டியளூர், வேதிகுடி, தேங்கூர், சிராப்பள்ளி, திண்டுக்கல், வேங்கைபுரம், பரங்குன்றம், மதுரை, நாகமலை சீவிலிபுத்தூர், கோவல், குற்றாலம், பாவவிநாசம், சங்கரனார் தனிக்கோயில், கோடிகா, திருவாங்கோடு, தனுக்கோடி, பொன்னகர்

ஆகிய 69 தலங்களுக்குச் செல்கின்றார் (514-530).

தூது செல்லும் விறலி

பட்டருக்காக அவர் மனைவியிடம் விறலி தூது செல்கிறாள். ''குயிலைப் போல் வென்றிசை யாழ்வல்ல விறலி'' (91) என்பதனால் யாழ் மீட்டுவதில் சிறந்தவளாகவும் 'பாடும் விறலி' (558) என்பதனால் பாடும் திறமுடையவளாக (வும் 'செந்தேன் மொழியே' (37) என்பதனால் தேனொழுகப் பேசுபவளாகவும் இவ் விறலி இருக்கின்றாள்.

மேலும் அவள் சிறந்த அழகி என்பதனைக் 'கட்டழகி' 552) என்றும் அன்னம் போன்ற நடையுடையவள் என்பதனை 'அன்னமே' (93) என்றும் நூலாசிரியர் கூறியிருக்கின்றார். ஓரிடத்தில் 'வேசி விறலி' (556) என்றதனால் இவ்விறலி வேசியாகவும் இருந்திருக்கிறாள் என்பது தெரிகிறது.

பட்டரையும் அவர்தம் மனைவியரையும் இணைத்து வைத்த விறலிக்குப் பணியும் முகில் இந்திர நீலத்துகில், செக்கச் சிவந்ததொரு செம்பட்டு, செம்பொற்றோடு, சரப்பளி, சுட்டி, தாழ்வடம் ஆகிய பொருள்களைப் பரிசாகக் கொடுக்கின்றனர் அத் தம்பதிகள்.

திருமால் பெருமை

விஷ்ணு, நாராயணன், வாசவன், கண்ணன், திருமால், மாயவன் என்று பலவாறாகத் திருமாலின் பெயர்களைக் கூறிய ஆசிரியர்[20] திருமாலின் வாமன அவதாரத்தைக் 'காத்துலகை யன்றளந்த காலினான்' (72) என்றும் கூறியிருக்கின்றார்.

பல தலங்கட்குச் சென்ற பட்டர் இறுதியில் திருமாலை வழிபடுவதற்காக வருகின்றார். இதனைப்,

''பூதலத்தை
யுண்டுமிழ்ந்த தூய வுதரப் பெருமானைச்
செண்டழக னான திருமாலைப்-புண்டரீகக்
கண்ணனைக் கண்ணபுரக் காவலனைக் காயாம்பூ
வண்ணனைப் பண்ணனையெம் மாயவனை-நன்னுதுள
பத்தா ரினானைப் பரனைப் பராபரனைச்
சத்தா வரணத்தோர் சம்பிரனைப்-பத்தாழ்வார்
பாடப் பரகதியைப் பாவித்த பாலகனைத்
தேடக் கிடையாத சிற்பரனைப் - பாடுதமிழ்ப்
பாவலர் போற்றும் பதத்தான் பாவரசு
தேவனையே கண்டு'' (532-536)

வழிபட்டார் வாகுபட்டர் என்று ஆசிரியர் கூறுகின்றார்.

உவமைகள்

உவமைகள் மிக எளிமையானவைகளாக இருக்கின்றன.

செண்டலங்காரனின் வள்ளல் தன்மையைக்,

''கன்னனைப் போல் தேடிக் கொடுக்கும் திகழும்
தளிர்க் கரத்தான்'' (8)

''பூதலத்தி லுண்டோ அப்புண்ணியன் போல்'' (551)

என்று கூறுகிறார் ஆசிரியர்.

---

20. விஷ்ணு-70, நாராயணன்-59, கண்ணன்-78, 533. திருமால்-532, மாயவன்-534.

"சாட்டை இல்லாப் பம்பரம்போல் ஆட்டிவிட்டான்" (462) என்று பட்டரைப் பற்றித் தாய்க்கிழவி ஊர்ச்சபை யாரிடம் முறையிடும்பொழுது கூறுகிறாள்.

"வண்டிசைபோற் பாடுமந்த மாமியார்" (436)

"நெஞ்சங் குழைந்து நெகிழ்ந்ததுபோற் பாவித்து
வஞ்சம் வெளிவிடா மாமியார்" (437)

"மெல்லியர் போல்
சொம்புத் தனமும் சொகுசும் விடுவாளோ
வம்புத் தனமிகுந்த மாமியார்" (443)

என்று பட்டர் தாய்க்கிழவியைப் பற்றிக் கூறுகின்றார்.

பட்டர் தம் மனைவியருடன் இறுதியில் மகிழ்ச்சியாக இல்லறம் நடத்துகின்றார் என்று கூறவந்த ஆசிரியர்,

"கண்பத்து
நூறுடையான் போலும் நுவ்விந் திரைபோலும்
நீறுடையான் பார்பதியி னோர்போலும் - ஆறு
முகத்தானைப் போலும் முனிந்தவள்ளி போலும்"
(560-562)

வாழ்கின்றனர் என்கின்றார்.

சித்திரவல்லியின் அழகைக் கூறவந்த ஆசிரியர் மின், மான், மீன், மலர், கொம்பு, மாம்பழம், கரும்பு, அன்னம் ஆகிய இயற்கைப் பொருள்கள் மூலம் ஒப்புமைப்படுத்துகின்றார்.

மின் : மின்னனையே (144, 231)

மான் : மானனையே (150, 202, 317)

மீன் : கெண்டையெனக் காட்டும் விழி (178)

மலர் : பங்கயப் பூ மாமுகம் (195)
முல்லை நகை மங்கை (210)

கொம்பு : கொம்பனையை (206)

மாம்பழம் : மாம்பழம் போல் கன்னம் (213)

கரும்பு : வேழக் கரும்பனைய மென்கை (222)
கரும்பன்னாள் (308)

அன்னம் : அன்ன மடவீர் (234)

சொற்கள்

இந்நூலில் அக்காலத்தில் வழக்கிலிருந்த பல்வேறு வகையான வசைச் சொற்கள், பேச்சுவழக்குச் சொற்கள், பிறமொழிச் சொற்கள், அடுக்குமொழிச் சொற்கள் போன்றவற்றை ஆசிரியர் பயன்படுத்தி இருக்கின்றார்.

கோபமாக இருக்கும் பொழுதும் மற்றொருவருடன் சண்டை போடும்பொழுதும் என்ன பேசுகின்றோம் என்று தெரியாமலே பேசிவிடுவது உலக வழக்கு. இவ்வாறு பேசும்பொழுது சில சொற்கள் கொச்சையாக வருவதுகூட உண்டு. பட்டரை விரட்டுவதற்காகத் தாய்க்கிழவி அவரிடம் பேசும்பொழுதும் பட்டர் அவளைப் பார்த்துக் கோபமாக மறுமொழி கூறும்பொழுதும் 'கசுமாலி, கசுமாலன், மொசுமாட்டி, லூட்டி, வாய்க்கரிசி, லொடலொடத்த வெள்ளாட்டி' ஆகிய கொச்சைச் சொற்கள்[21] வசையாக இடம்பெற்றிருக்கின்றன.

சாதாரணமாக அன்றாடம் பேசுகின்ற சொற்களாக அடகு, அன்னேரம், இருக்குது, ஏசினாள், கடன்காரி, சந்தோஷம், சாடை, சிணுக்குவாள், சிறுக்கி, தயவு, தெண்டனிட்டு, பசங்கள், பசப்பி, போச்சே, முந்தியொரு நாள், ரா முழுக்கும், வேணும், வைப்பு ஆகியன இடம்பெற்றிருக்கின்றன.[22]

---

21. செண்டலங்காரன் விறலிவிடு தூது, 352, 429, 480, 447, 466, 484, 418.

22. மேலது, 365, 243, 215, 98, 232, 122, 559, 171, 351, 287, 64, 27, 153, 442, 135, 553, 94, 563, 241, 446.

துரை, லோபர் ஆகிய பிறமொழிச் சொற்களும்[23] ஆசிரியரால் கையாளப்பட்டிருக்கின்றன.

உன்னியுன்னி, எண்ணியெண்ணி, ஒண்டிஒண்டி, கடகடென, கலகலென, சறசறென, தளதளென, நறநறென, நன்றுநன்று, படபடப்பாள், பத்தி பத்தி, பரபரப்பு, மிஞ்சமிஞ்ச, முட்டமுட்ட, முறை முறை, மொறமொறென ஆகிய அடுக்கு மொழிச் சொற்கள்[24] நூலில் இடம்பெற்றிருக்கின்றன.

இவை தவிர இரவு பகல், அந்தி சந்தி ஆகிய சொற்களும்[25] இடம் பெற்றிருக்கின்றன.

பிற செய்திகள்

பசுந்தமிழ், தெள்ளுதமிழ், பன்னுதமிழ், பாடு தமிழ், என்று தமிழைப் பற்றிக் குறிப்பிடுகின்றார் ஆசிரியர்.[26]

''காசிக்குப் போனாலும் வேசி புணர்ந்த பாவம் போகாதே'' (491) எனும் பழமொழியை ஊர்ச் சபையார் பட்டனிடம் அறிவுரை கூறும் பொழுது கூறுகின்றனர்.

சில இலக்கியச் செய்திகளையும் ஆசிரியர் தம் நூலில் ஏற்ற விடங்களில் மொழிந்திருக்கின்றார்.

1. வள்ளுவனார் சொன்ன வழிநூல் (248)
2. அருணகிரிநாதர் திருப்புகழில் சொல்லலையோ (496)
3. பன்னுதமிழ்ச் சுந்தரனைக் கொண்டரனைத் தூது நடப்பித்ததுவும் பைந்தொடியான பரவையன்றோ (497)

---

23. செண்டலங்காரன் விறலிவிடு தூது, 255, 137,
24. மேலது, 5, 466, 396, 451, 228, 283, 97, 230, 97, 312, 293, 44, 356, 438, 506, 245. 97.
25. மேலது, 349, 398, 460.
26. மேலது, 17, 247, 348, 497, 536.

4. கோதிலாக் கோவலனைக் கொன்றதுவும்
வென்றதுவும் மாதவியால் அல்லவோ (499)

5. ஓய்ந்து கவி சொல்லாத ஓர் காளிதாசன் உயிர்
மாய்ந்தது (500)

இவைதவிரக் கன்னன் (7), தருமன் (10), அரிச்சந்திரன் (13), விக்கிரமாதித்தன் (28, 360) ஆகியோரையும் பாக்களில் குறித்திருக்கின்றார்.

II

உலா இலக்கியம்

சிற்றிலக்கிய மலர்களுள் உலாவெனும் மலருமொன்று.

''ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப''[1]

எனும் தொல்காப்பிய நூற்பாவிற்கு,

''தோற்ற மென்றது அக்காமம் தேவரிடத்தும்
மக்களிடத்தும் விளங்கும் விளக்கத்தை: அது
பின்னுள்ளோர் எழு பருவமாகப் பகுத்துக்
கலிவெண் பாட்டால் செய்யுள் உலாச் செய்யுளாய்''[2]

என்று நச்சினார்க்கினியர் உரை கூறுகின்றார். பிற்காலத்தில் எழுந்த உலா இலக்கியத்திற்குரிய விதியும் வித்தும் தொல்காப்பியத்திலேயே அமைந்திருக்கின்றன என்பதையே இவ்வுரை காட்டுகிறது.

சம்பந்தர், அப்பர் ஆகியோர்தம் பாக்களில் திருவிழாக் காலங்களில் இறைவன் திருவீதி உலா வந்த செய்திகள் இடம் பெற்றிருக்கின்றன.[3]

பெருங்கதை, சீவக சிந்தாமணி, கம்பராமாயணம், முத்தொள்ளாயிரம் போன்ற இலக்கியங்களில் தலைவன் உலா வந்த செய்தியும் அவ்வாறு உலா வரும்பொழுது அங்கங்கே அவனைக் கண்ட மடவார் மயங்கியது பற்றிய செய்திகளும் காணப்படுகின்றன.

இவ்வாறு உலாவின் இலக்கியக் கூறுகள் பல்வேறு இலக்கியங்களில் ஆங்காங்கே இடம் பெற்றிருக்கின்றன. கி.பி. எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சேரமான் பெருமாள் நாயனார் உலாச்

---

1. தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல் 30.
2. மேலது, நூற்பா உரை.
3. சம்பந்தர் தேவாரம் 1.27.7; 1.60.5
   அப்பர் தேவாரம் 4.21.8; 4 50.2; 6 96 7.

சிறப்பை மட்டும் வைத்துத் 'திருக்கைலாய ஞானவுலா' பாடி யிருக்கின்றார். இந்நூலே முதலில் தனியொரு உலா இலக்கியமாகத் தோன்றிய சிறப்பை உடையது. இவ்வுலா 'ஆதி உலா' என்றும் அழைக்கப்பெறுகிறது.

சேரமான் பெருமாள் நாயனாருக்குப் பின்னர், நம்பி யாண்டார் நம்பி, ஒட்டக்கூத்தர், காளமேகப் புலவர், சேனாதிராய கவிராசப் பிள்ளை, இரட்டையர், தத்துவராயர், புராணத் திருமலைநாதர், அந்தகக்கவி வீரராகவ முதலியார், வீரமாமுனிவர், திரிகூடராசப்பக் கவிராயர், சிவக்கொழுந்து தேசிகர் முதலான தமிழ்ப் புலவர்கள் தத்தமக்குத் தோற்றிய பலவகைக் கற்பனைகளை அமைத்துப் பல உலாக்களைப் பாடியிருக்கின்றனர்.

இவ்வுலாவிற்குரிய இலக்கணங்களைப் பாட்டியல் நூல்கள் குறிப்பிடுகின்றன.

> ''பேதை முதலா எழுவகை மகளிர் கண்டு
> ஓங்கிய வகை நிலைக்கு உரியான் ஒருவனைக்
> காதல் செய்தலின் வரும் கலிவெண் பாட்டே''

என்பது பன்னிரு பாட்டியல்.

பாட்டியல் நூல்கள் கூறுகின்ற விளக்கங்களைக் கொண்டு உலாவைப்பற்றிப் பின்வரும் முடிவுக்கு வரமுடிகிறது.

> ''இறைவனின் திருவுருவோ, உலகம் போற்றும் பெருமகனோ, அரசனோ, கரி, தேர், பரி ஆகியவற்றுள் யாதானும் ஒரு ஊர்தியில் ஏறி, உடன் வருவோர் சூழ, மங்கல இசைக் கருவிகள் ஒலிக்க வீதியில் உலா (பவனி) வருவதாகவும் அப்பொழுது பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் ஆகிய எழுபருவ மகளிரும் உலாவில் வரும் தலைவனைக் கண்டு காதல் கொண்டு வாடுவதாகவும் புலவர் பெருமக்களால்

4. பன்னிரு பாட்டியல் 48.

கற்பனைச் செறிவுடன் கலிவெண்பாவினால் பாடப்
பெற்ற ஒருவகைச் சிற்றிலக்கியம் ''

உலா இலக்கியங்களைப் பவனி, பவனியுலா, உலாப் புறம், உலாமாலை என வேறு பெயர்களாலும் அறிஞர் குறிப்பிடுகின்றனர்.[5]

ஒவ்வொரு பருவத்திற்குமுரிய வயது வரம்பினைப் பின் வருமாறு இலக்கண விளக்கப் பாட்டியல் சூத்திரங்களால் அறிய முடிகின்றது.[6]

1.	பேதை	5	முதல்	7	வயது வரை
2.	பெதும்பை	8	,,	11	,,
3.	மங்கை	12	,,	13	,,
4.	மடந்தை	14	,,	19	,,
5.	அரிவை	20	,,	25	,,
6.	தெரிவை	26	,,	31	,,
7.	பேரிளம்பெண்	32	,,	40	,,

தஞ்சை மராட்டிய மன்னர்களுள் ஒருவரான இரண்டாம் சரபோசியின் அவைக்களப் புலவர்களில் தலைசிறந்து விளங்கிய கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் தஞ்சைப் பெருவுடையாருலா, கொட்டையூருலா (கோடீச்சுர உலா) ஆகிய இரு உலா நூல்களை இயற்றியிருக்கின்றார். இவற்றுள் கொட்டையூருலா இதுவரை கிடைக்கப்பெறவில்லை எனவே தஞ்சைப்பெருவுடையாருலாவைப் பற்றி மட்டும் இப்பகுதியில் ஆய்வு செய்யப் படுகிறது.

---

5. ந. வீ. செயராமன், சிற்றிலக்கியச் செல்வம், மு. கா. நூல், ப. 89.
6. இலக்கண விளக்கப் பாட்டியல், சூத் 99 103.

— o —

2

தஞ்சைப் பெருவுடையாருலா

தஞ்சை இராசராசேச்சுரத்தில் எழுந்தருளியிருக்கின்ற பெருவுடையார் பிரகதீசுவரர்மீது பாடப்பெற்றது. முதலாம் இராசராசனால் திருப்பணி செய்து வழிபடப்பெற்றமையின் இத்தலம் இப்பெயர் பெற்றது. கருவூர்த் தேவர் அருளிய திருவிசைப்பாப் பதிகம் பெற்ற தலம் தஞ்சையாகும்.

நூற் பதிப்பு

உ. வே. சாமிநாதையர் 1932இல் இந்நூலைப் பதிப்பித்திருக்கிறார்.[7] நூல் முகவுரையில்.

> ''தஞ்சைப் பெருவுடையாருலாவிற் கடினமான சொற்களுக்குப் பொருளும் முடிபும் நயங்களும் எழுதப்பட்டுள்ளன.........உரிய ஏட்டுப் பிரதி(கள்) கிடைக்கவில்லை. கிடைத்த அச்சுப் பிரதி(களில்) வழுவென்று தெரிந்தவற்றைக் களைந்து திருத்தமான பாடங்கள ஊகித்து நிச்சயிக்கப்பட்டன''

என்று குறிப்பிட்டிருக்கின்றார்.[8]

நூலமைப்பு

இந்நூல் 311 கண்ணிகளைக் கொண்டிருக்கிறது. நூல் தொடக்கத்தில் இடம்பெறும் காப்புச் செய்யுளில் அருமொழி விநாயகர் பெருமை வெண்பாவால் பாடப்பட்டிருக்கிறது அதன் பிறகு தொடங்கப்பெறும் நூல் இருபது தலைப்புகளைக் கொண்டிருக்கிறது.

---

7. உ வே. சாமிநாதையர் (ப. ஆ.), 'தஞ்சைப் பெருவுடையாருலா', கொட்டையூர் ஸ்ரீ சிவக்கொழுந்து தேசிகர் இயற்றிய பிரபந்தங்கள், கேசரி அச்சுக்கூடம், சென்னபட்டணம், 1932, பக். 213 276.

8. மேலது ப. ii.

சிவக்கொழுந்து தேசிகரின் இரண்டாம் புதல்வர் சாமிநாத தேசிகர் பாடிய சிறப்புப் பாயிரம் ஒன்று நூலினிறுதியில் இடம் பெற்றிருக்கிறது. இப் பாடல் அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தில் அமைந்திருக்கிறது.

பாட்டியல் நூலார் உலாவை முன்னெழுநிலை. பின்னெழு நிலை என இரண்டு கூறாக வகுத்திருக்கின்றனர்.

இந்நூலில் கூறப்படும் தலைவன் சிவபெருமான். இப் பெருமான் சிறப்பு, வரலாறு, பெருமை போன்றவற்றைக் கூறி, உலாச் செல்வதற்கு அவரை நீராட்டி, அணிகள் ஆபரணங்கள் ஆகியவற்றை அணிவித்து, தேவர்கள் முதலானோர் சூழ்ந்துவர, மங்கல இசைக் கருவிகள் ஒலிக்க, மாணிக்கத் தேரில் திருவீதி உலாச் செல்கின்ற பகுதிகள் வரை (1-103 கண்ணிகள்) அமைந் தவை முன்னெழு நிலையாகும்.

எழுபருவ மகளிர் உலா வரும் தலைவனைக் கண்டு காதல் கொண்டு வாடுவதாகக் கூறப்படும் பகுதிகள் பின்னெழு நிலையாகும்.

நூல் நுதலிய பொருள்

கரிகாலச் சோழன் நருமதை ஆற்றுக்குச் சென்று, அங்கே உயர்ந்த முத்துக்கள் இலங்கும் ஓங்கார குண்டத்தி லிருந்து பாணலிங்கத்தைக் கொணர்ந்து தஞ்சையில் பிரதிட்டை செய்வித்திருக்கிறார். 'உத்தமதேவன்' எனும் உருத்திரனுக்கு 'உத்தம விமானத்'தையும் அமைத்திருக்கிறார்.

இளவேனிற் பருவத்துச் சித்திரைத் திங்கள் நன்னாளில் இடபக் கொடியை ஏற்றித் திருவிழா நடத்தப்பெறுகிறது. கனக மண்டபத்தில் வெண்ணிற முத்து மாலைகள் விளங்கும் மலர்ப் படுக்கையில் பெருவுடையார், தம் துணைவி பெரிய நாயகியுடன் துயில் கொள்கின்றார். கதிரோன் உதயமாவதற்கு முன்னர்த் திருப்பள்ளியெழுச்சி பாடி அவரைத் துயிலினின்றும் நீக்கி, பால், தயிர், பழவகைகள், கருப்பஞ்சாறு, குளிர்ந்த சந்தனம் ஆகியவற்றால் திருமுழுக்காட்டுச் (அபிடேகம்) செய் வித்து, சிவகங்கைத் தீர்த்தத்தினால் திருமஞ்சனம் ஆட்டு கின்றனர்.

மகுடாகமத்தின்படிச் சைவர்கள் வழிபாடு செய்கின்றனர். அதன் பின்னர்ப் பெருமானுக்குப் பொன்னாடை, கிரீடம், மாணிக்கத் தோடுகள், கண்டசரம், மூத்தாரம், கங்கையாற்றின் நீர்ப்பூணூல், மல்லிகை முல்லை மருக்கொழுந்து ஆகிய மலர்களால் தொடுக்கப்பட்ட பூ மாலைகள், செம்பொன்னாலான அரைநாண் கயிறு, முத்து வச்சிரம் நீலம் ஆகியவற்றாலான கச்சு, காற்சிலம்பு ஆகியவற்றை ஆடை, அணிகலன்களாக அணிவித்து விடுகின்றனர்.

திருநந்தி தேவர், சண்டேசர், சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், வரகுணதேவர், குலோத்துங்கச் சோழர், சேரமான் பெருமாள், வேதமோதும் வேதியர், தேவாரம் பாடும் ஓதுவார், தானிகர், திருத்தொண்டு செய்யும் பலவகைக் கூட்டத்தார் போன்றோர் புடைசூழ்ந்து வருகின்றனர்.

கல்லவடம், தக்கை, குழல், பேரி, முருடு, கல்லலகு, யாழ், குடமுழா, சங்கு, பொற்றாளம், தகுணிச்சம், துடி, படகம் ஆகிய இசைக் கருவிகள முழங்குகின்றன.

பெருவுடையாரைப் பொற்பலகையில் ஏற்றி, வெண்ணிற முத்தக்குடையை மேலே பிடித்து அக்குடைமேல முத்துப் பந்தரைப் பிடித்து வானோர் வழிபட வாயிலைக் கடந்து வெளியில் கொண்டு வருகின்றனர்.

விநாயகர், முருகன், நான்முகன், திருமால், சூரியன், திங்கள், ஏகாதச உருத்திரர், இந்திரன், வைரவர், ஐயனார், மன்மதன் ஆகியோர் தங்களுக்குரிய வாகனங்களில் ஏறிப் பெருமானுடன் வருகின்றனர். இவர்கள் தவிரப் பூதப்படை, எண் வசுக்கள், ஏழு முனிவர்கள், வித்தியாதரர், நாகலோகத்தர், பதஞ்சலி முனிவர், வியாக்கிரபாதர், சனகாதி முனிவர்கள், சாரணர், சித்தர்கள், கின்னரர், கங்கை ஆதித்தீர்த்தக்கன்னியர், ஏழு மங்கையர் போன்றவர்களும் உடன் வருகின்றனர். இமையோர் மலர் மாரி பொழியத் துயபுருவும் நாரதரும் இசை பாடுகின்றனர்.

தஞ்சைப் பெருவுடையார், நடைக்காவணத்தூடே சென்று முருகப் பெருமானுடனும் உமையவளுடனும் அழகிய மாணிக்கத் தேரில் வீற்றிருந்து வேதக் குதிரைகள் துணைவர வீதியில் உலா வருகின்றனன்.

கின்னரரின் கன்னியர், கிம்புருடரின் வஞ்சியர், பொன்னுலகில் வாழ்கின்ற பூவையர், பூமியிலுள்ள மங்கையர், நான்முகன் உலகத்து மகளிர், நாகலோகத்து மங்கையர், வைகுந்தத்திலிருக்கும் தையலர், பலவகையான அணிகலன்களை அணிந்த மகளிர் ஆகியோர் மாளிகை மண்டபம், தெற்றி அம்பலம், பொன் மலைகள் ஆகிய இடங்களில் இருந்து வீதியுலா வருகின்ற பெருமானைக் காண்கின்றனர். ''பெருமானின் பேரழகைக் காணாத கண் நல்ல கண் அல்ல; கொன்றை மாலை தருவர்; சிறுமுறுவல் கண்டோம்; அவர் தோள்களில் சேர்ந்தோம்; கருணைத் தியாகரே! 'அஞ்சலிர்' என்று ஒரு சொல் சொன்னால் உன் வாய்முத்தம் உதிர்ந்திடுமோ?'' என்றிவ்வாறு பெருமானழகில் மயங்கி உரைக்கின்றனர்.

பெருமானை வழிபட வந்தவர்களுள் எழுபருவ மகளிர் தம் செயல்களைத் தனித்தனியாகப் பிரித்து ஆராயப்படுகின்றன.

பேதை :- பெருவுடையாரை அன்னையர்கள் வணங்குவதைக் கண்ட பேதைப்பெண் தானும் வணங்குகிறாள். பெருமானிடம் இருக்கின்ற வெண்பிறை, மழு, மான் ஆகியவற்றைக் குறித்து வினவுகிறாள். பின்னர் இறுதியில் பெருமானிடம் இருக்கின்ற கலைமானைப் பாவையொடு விளையாடுவதற்கு வாங்கித் தரும்படி அப்பேதை கேட்கிறாள். அத்தாயர், ''பெண்ணே! இம் மான் வனத்திலிருக்கும் மான் அல்ல; தாருகவனத்து முனிவர்கள் ஓமத்தில் தோன்றிச் சிவபெருமானைப் பாய்வதற்கு வந்தது; இறைவன் கையில் அடங்கி நிற்பது போல உன் கையில் அடங்கி நிற்காது; உன்மீதும் உன்பாவை மீதும் பாய்ந்துவிடும்; உனக்கு வானிலிருக்கும் கலைமானைப் பிடித்துத் தருவோம்'' என்று தேறுதல் கூறுகின்றனர். இறைவனும் அத் தெருவை விட்டு அகன்றனன்.

பெதும்பை :- தன் தோழியருடன் நிலாமுற்றத்தில் அம்மானை ஆடிக்கொண்டிருந்த பெதும்பைப் பெண்ணைக் காண்பதற்குச் சித்திரமெழுதுவோன் வருகின்றான். இப்பெண் அவனிடம் இறைவன் திருவுருவத்தை ஓவியமாக எழுதித்தர வேண்டுகிறாள் ஓவியனும் 'சோமாசுகந்தர்' திருவுருவத்தை ஓவிய நூல் முறைப்படிஎழுதிக் கொடுக்கிறான். இததிருவுருவத்தில் பெருமானுடன் இருக்கின்ற உமை, முருகன் ஆகியவர்களைப்பற்றி ஓவியன் விளக்கிக் கூறுகிறான். பெதும்பை, 'பெருமானின் வலப்பக்கத்தே என்னையும் வரைந்து தா' என்கிறாள் ஓவியன், அவனருகில் உன்னை வரைந்தால், 'பழைய நூல்களில் இல்லாத விதியை மீறி இவன் வரைந்தான்' என்று எல்லோரும் இகழ்ந்து கூறுவர். ஆனால், தஞ்சைப் பெருமான் உலா வரும்பொழுது உன்னை நான் அவனது வலப்பக்கத்தில் கண்டேனேயானால் உடனே உன்னுருவை வரைந்து தருவேன் என்று சொல்கிறான். அந்நேரத்தில் பெருவுடையாரும் மணித்தேரில் உலா வருகின்றனன். தோழியருடன் சென்று பெருமானை வழிபட்ட இவள், தோழியரிடம் 'நான் இப்பெருமானின் வலப்புறத்தே இருந்தால் என்ன குற்றம்?' என்கிறாள். அதற்கு அத்தோழியர்கள், பெண்ணே! இவர் அணிந்திருக்கும் பாம்பு, எலும்பு மாலை, எருக்க மாலை, புலித்தோலாடை, இடபம், நஞ்சு ஆகியவற்றுள் எதனைக் கண்டு காதல் கொண்டாய்? எனக் கேட்கின்றனர். அதற்கு அப்பெதும்பை மறுமொழி ஒன்றும் சொல்லாதவளாகி வேறு திசையைப் பார்த்துக்கொண்டு நிற்கிறாள். பெருவுடையாரும் அந்த வீதியை விட்டகன்றனன்.

மங்கை :- பெரிய சடை, கொன்றை மாலை, நாகம், நீறு, எலும்பு, சூலம் ஆகியவற்றை உடைய பெருவுடையார் நள்ளிரவில் மங்கைப் பருவப்பெண் கனவில் தோன்றிக் 'காலைவருதும்' என்று கூறுகின்றனன். பொழுது புலர்ந்தபின் பெருவுடையாரும் தேரிலேறி வீதியுலா வருகின்றார். மங்கைப் பெண்ணும் அவரைக் கண்டு கைகுவித்து வணங்கி, 'நாதனே! உன் அழகிய தோள்களில் பொருந்திய மாலையை அருள்வாய்!' என்கிறாள். அந்நேரத்தில் மாரனும் மலர்க்கணைகளை அவள்மீது தொடுக்கிறான். மங்கையும் கைவளைகள்சோர நிற்கிறாள். அவள் நிலையைக் கண்ட செவிலித்தாய், "இயற்பகை நாயனாரின் மனைவி

யைக் கவர்ந்த தூர்த்தரே! மோகினி உருவில் வந்த மாலின் மேல் மயங்கிய மத்தரே! இவளுடைய வளைகளைக் கழலச் செய்தீரே! இவ் வளையில்லாமல் உமது ஆபரணப்பெட்டி குறை யாக இருந்ததோ? இவளின் மேகலையைத் தவிர வேறுமக்குக் கிட்டவில்லையோ? மகளிருடைய மாமையையும் நாணத்தை-யும் கவர்ந்து கொள்வதுதான் உமக்கு இங்கு வேலையோ? இதற்குத்தான் தஞ்சைக்கு வந்தீரோ?'' எனக் கடிந்து கூறித் தன் மகளை வீட்டிற்குள் அழைத்துச் சென்று விடுகிறாள்.

மடந்தை :- மலைக்குறத்தி, மடந்தைப் பருவப்பெண்ணைக் கண்டு, ''மன்னரை மணந்து நான்கு பெண்களையும் ஒரு ஆணையும்பெற்றெடுப்பாய்; வேண்டுவார்க்குப் பொற்குவியல்-களை நல்குவாய்; மன்மதன் விடும் மலர்க் கணைகளினால் ஏற்பட்ட ஆபத்திலிருந்து தஞ்சைப் பெருவுடையார் உன்னைப் பாதுகாப்பார்'' என்று குறி சொல்லிப் பொன், துகில் போன்ற-வற்றைப் பரிசிலாகப் பெற்றுச் சென்று விடுகிறாள். அப்-பொழுது பெருமான் வீதியுலா வருகின்றார். அவரைக் காணச் சென்ற அம்மடந்தைமீது மன்மதன் ஐவகை மலரம்புகளை எய்கின்றான். இதனால் பெருமை பெற்ற நாணம், கை வளையல், அறிவு ஆகியவற்றை இழக்கின்றாள். தோழியர்கள் அவளை இல்லத்தில் சேர்த்து மயக்கத்தை நீக்க முயல்கின்றனர். பின்னர்த் தஞ்சைப் பெருமானருளால் மயக்கம் சிறிது நீங்கு கிறாள்.

அரிவை :- அரிவைப்பெண் 'கல்யாணி' எனும் கிளியைக் கையில் வைத்திருக்கிறாள். தஞ்சைப் பெருவுடையாரிடம் சென்று தன் நிலையை எடுத்துச் சொல்லி அவரை அழைத்து வருமாறு அக்கிளியைத் தூது விடுக்கிறாள். அவர் ஒருவேளை வராவிடில் தன மயக்கத்தை நீக்குவதற்குரிய நல்மருந்தினை வாங்கிவரப் பணிக்கிறாள். அக் கிளி புறப்படும் நேரத்தில் பெருவுடையார் அவ்வீதியில் உலா வருகின்றார். இச்செய்தி-யை அரிவையிடம் கிளி வந்து கூறுகிறது. அரிவையும் வீதிக்கு வந்து தலைவனைக் காண்கிறாள். ''மன்னவனே! என்னை மறந்தனையோ? மார்பின்மீது ஆதிசேடனை ஆபரணமாக அணிந்தவனே! நீ நினைத்தால் மன்மதன் மலரம்புகளை நாணில் வைத்தவுடனே அந்த நாணாகிய வண்டின் கூட்டம்

அந்த மலர்களை உண்டு விடாதோ? தக்கன் யாகத்தில் மதியைத் தோய்த்த உன் அழகிய திருவடி இப்பொழுது அம் மதியைத் தோய்க்காதோ? இந்திரனின் குயிற்சிறகினை வெட்டியது போல இன்று இம் மாங்குயிலை அழிக்க முடியாதோ? அகத்திய முனிவருக்கு நீர் கட்டளையிட்டால் ஓசையால் என்னை வருத்தும் கடலைக் குடிக்க மாட்டாரோ? உன் சடைப் பாம்பிற்கு ஒரு வார்த்தை சொன்னால் அது என்னைத் துன்புறுத்தும் தென்றற் காற்றைத் தனக்கு உணவாகச் செய்யாதோ?'' என்று பலவாறாக முறையிட்டுப் புலம்புகிறாள். கங்கையைச் சடைக்கரந்த பெருமான் அவ் வீதியை விட்டு அகல்கின்றனன்.

தெரிவை :- தெரிவைப்பெண் வீணையைச் சுருதி கூட்டிப் பெருமான் புகழ் பாடுகின்றாள். அப்பொழுது அவள் தோழி ஒருத்தி பெருவுடையார் பொற்றேரிலேறி வீதியுலா வருவதைத் தெரிவிக்கிறாள். தெரிவையும் வீதிக்கு வந்து பெருமானின் திருமேனி அழகினைக் கண்குளிரக் கண்டு பணிந்து வணங்குகிறாள். அங்கு வந்த மன்மதன் அவள்மீது பூங்கணைகளைத் தொடுக்கிறான். தெரிவை, ''சிவக்கொழுந்தே! என் மனத்தில் எப்பொழுதும் எழுந்தருளித் தங்குவீராக! மன்மதன் என்மீது போர் புரியாமல் இருக்கக் கட்டளை இடுவீராக! இன்றேல் அம் மதனுக்கு என்னுருவம் புலப்படாதபடி ஒரு மந்திரத்தை எனக்கு உபதேசித்துச் செல்வீராக! அன்றேல் உம்மைப் போகவிடேன்'' என்கிறாள். பெருமான், உமையை நோக்கி அமைதியாகப் புன்முறுவல் செய்து அவ் வீதியை விட்டகல்கின்றனன். தெரிவை மருட்சியுடன் அவ் வீதியில் நிற்கிறாள்.

பேரிளம்பெண் :- பேரிளம்பெண்ணொருத்தி, சிவகங்கைத் தீர்த்தக்குளத்தில் நீராடிக் கரையிலிருக்கின்ற விசுவநாதரைப பணிந்து, பெருவுடையார் கோயிலுக்குச் செல்கிறாள். அங்கு நூற்றெட்டுச் சிவலிங்கங்களையும் பெருவுடையாரின் இணையடிகளையும் பெரியநாயகியின் பொற்றாளையும் பணிந்து வணங்குகிறாள். தன்னுடன் வந்த மகளிர் கீதம், பதம், வர்ணம் போன்றவற்றைப் பாடுகின்றனர். அவர்களிடம் தேவாரம் பாடுமாறு கேட்கிறாள். அப் பெண்கள் அத் தேவாரத்தைப் பேரிளம் பெண் பாடுமாறு வேண்ட அப் பேரிளம்பெண்ணும் கடலில்

மிதந்த பதிகம்,[9] எலும்பைப் பெண்ணுருவாக்கிய பதிகம்,[10] தொண்டர் நாதனை 'நள்ளிரவில் தூது விட்ட பதிகம்,[11] செங்கல்லைப் பொன்னாக்கிய பதிகம்,[12] வையை யாற்றில் ஏடு எதிர்த்துச் சென்ற பதிகம்,[13] முதலை உண்ட குழந்தையை மீட்ட பதிகம்[14] ஆகியவற்றை இசையுடன் பாடுகின்றாள். அவ்வமயம், பெருமான் திருவீதியுலா வருகின்றனன். பேரிளம் பெண்ணும் தெருவிற் சென்று அவரை வணங்குகிறாள். "தஞ்சை ஊரானே! கருவூர்த்தேவர் அருளிய திருவிசைப் பாவினை உகந்த தேவனே! கொன்றை மாலையோனே! வேலவனைத் தந்தவனே! முப்புரத்தை வென்றவனே! யானைத் தோல் போர்த்தியவனே! உருத்திராக்கம், திரு வெண்ணீறு, நின் பாதமலரை நாடுதற்குக் காரணமாகிய ஐந் தெழுத்து ஆகிய இம் மூன்றையும் அடியேன் எப்பொழுதும் கை விடாமல் உன்னையே நினைத்திருக்கும்படிச் செய்ய வரம் தந் தருள்வாய்!" என்று வேண்டித் தேர்முட்டி வரை சென்று அருள் பெற்றுத் திரும்புகிறாள். மன்மதன் அவள் ஞான நிலை யைக் கண்டு வியப்புற்று எதுவும் செய்வதறியாது நிற்கிறான்.

இவ்வாறு பேதை முதல் பேரிளம்பெண் ஈறாக அனை வர்க்கும் காட்சியளித்த பெருவுடையார், தேரினின்றும் இறங்கி, இன்னிசைக் கருவிகள் முழங்க, உருத்திர கணிகையர் நடன மாட, வேத வாழ்த்தொலி முழங்க, வானோர் பூமாரி பொழிய மண்ணோர் பொன்மழை சொரியப் பெரியநாயகியுடனும் முருக னுடனும் பொற்பலகையிலேறிப் பூங்கோயிலை அடைகின்ற னன். அன்புடன் அனைவரும் உளமகிழ்கின்றனர்.

—இதுவே இந்நூலினுள் கூறப்படும் செய்திகளாகும்.

---

9. அப்பர் தேவாரம், 4. 11. (சொற்றுணை வேதியன்)
10. சம்பந்தர் தேவாரம், 2. 47. (மட்டிட்ட புன்னையங்-கானல்)
11. சுந்தரர் தேவாரம், 7.
12. மேலது, 7. 34. (தம்மையே புகழ்ந்து)
13. சம்பந்தர் தேவாரம், 3 54. (வாழ்க அந்தணர்)
14. சுந்தரர் தேவாரம், 7.92. (எற்றான் மறக்கேன்)

இறைவன் பெருமை

இறைவனைப் பற்றியும் அவன் உயிர்களுக்கு அருளிய பேரருட்கருணைத் திறத்தையும் அளவிலாற்றலுடைமையையும் ஆசிரியர் கூறியிருக்கின்றார்.

சிவபெருமான் :- ஈசன், உருத்திரன், சங்கரன், சம்பு, சிவன், சிவக்கொழுந்து, பரமன் ஆகிய பெயர்களால் சிவபெருமான் அழைக்கப்பெறுகின்றனன்.[15] இவ்வாறு வழங்கப்படுகின்ற பெயர்கள், தஞ்சையில் கோயில் கொண்டுள்ள பெருமானைக் குறித்து வருவனவாகவும்[16] ஊர்ப்பெயருடன் இணைந்து வருவனவாகவும்[17] இறைவன் உடலுறுப்புக்களைக் கொண்டு வருவனவாகவும்[18] இறைவன் புரிந்த வீரச்செயல்களால் வழங்கி வருவனவாகவும்[19] முருகன் தந்தை என்பதாகவும்[20] பொதுப்படையாக வழங்கி வருவதாகவும்[21] அமைந்திருக்கின்றன.

---

15. தஞ்சைப் பெருவுடையாருலா, ஈசன் : 43, 45, 126, 131, 142; உருத்திரன் : 14, 218; சங்கரன் : 40, 267; சம்பு : 95, 169; சிவன் : 173, 290; சிவக்கொழுந்து : 274; பரமன் : 144, 215. (எண்கள் உலாவின் கண்ணிகளைக் குறிக்கின்றன)

16. மேலது. உத்தமதேவன் 14; பெருவுடையான் 165, 313; மேருவிடங்கர் 97.

17. மேலது, தஞ்சை 233, 123, 221, 273, 313, 224, 200, 214; அளகை 240, 142, 242, 258, 106, 131, 243, 307.

18. மேலது, சடை 159, 251, 165, 207; கண் 4, 40-41; கழுத்து 275, 170-171, 27, 131; கை 216; இடப்பாகம் 33.

19. மேலது, காமன் 90, 207; முப்புரம் 239, 302; யானைத்தோல் 302.

20. மேலது. 302.

21. மேலது, 112, 171, 279; 298; 275; 251-252; 96-97; 218; 97; 274; 301; 149; 169; 96; 172; 243; 233, 299; 275.

சிவபெருமான் தம் சடையினில் கங்கை, பிறை ஆகிய வற்றை அணிந்திருக்கிறார்.[22] கையில் கலைமான்,[23] தோளில் பொன் வளையல் மாலை ஆகியவற்றையும்[24] அணிந் திருக்கிறார். தவிர வலக்கையில் மழு, சூலம் ஆகியவற்றையும் இடக்கையில் மான் கன்றையும் பிடித்திருக்கிறார்.[25] நெற்றியில் நீற்றையும் இடையினில் புலித் தோலாடையையும் தரித்திருக் கிறார்.[26] மார்பில் வெண்டரள மாலையையும்[27] பாம்பு மாலை யையும்[28] எலும்பு, எருக்கம், கொன்றை ஆகியவற்றையும் மாலையாகவும்[29] பூண்டிருக்கிறார்.

திருமால், நான்முகன், இந்திரன், வானோர், மானிடர் போன்றவர்கள் போற்றும் மலர்ப் பாதங்களைக் கொண்டிருக்-கிறார்; வஞ்சகம் இல்லாதவர்களைத் தடுத்து ஆட்கொள்கிறார்; வேதச்சிலம்பை அணிந்து வெண்கயிலை மலையினைக் கொண் டிருக்கிறார்; திருவாதிரை நட்சத்திரத்திற்குரிய பெருமான் மெய்த்தொண்டர்களின் அழைப்பிற்குச் சிறிதும் தாமதிக்காமல் வருகின்றார்; கண்டோர் இடரனைத்தும் தீர்க்கின்ற திருமுகத் தைக் கொண்டிருக்கிறார்; இருபத்தைந்து திருவுருவங்களை உடையவராகக் காணப்படுகிறார்.

இறைவனுடைய பெருமையையும் வடிவத்தையும் அள விட்டுக் கூறுதல் இயலாது; இப்படித்தான் இருப்பான்; இன்ன

---

22 தஞ்சைப் பெருவுடையாருலா, கங்கை 89, 290, 217, 251; பிறை 53, 79; 60, 113, 146, 247, 268; 113; 182; 224.

23. மேலது, 121.

24. மேலது, 85, 169-170.

25. மேலது, 114, 160, 115.

26. மேலது, 160, 147.

27. மேலது, 270.

28. மேலது, 98, 147, 160.

29. மேலது, 147, 163; 90, 112, 118, 125, 169, 221, 167, 223-224, 257-258, 262, 302.

வடிவத்தில்தான் இருப்பான் என்று யாவராலும் கூறுதற்கு இயலாத தன்மையை உடையவன்; அவனை யாராலும் எழுத இயலாது எனுமிக்கருத்தில்

"........ ... மெய்ச் சோதிதனை
இந்த வடிவுடையா னிக்குணத்தான் சந்தமிது
பெற்றவனென் றொண்ஞானம் பெற்றோர்க்கு முன் குறிக்க
உற்றுரைக்க வுள்ளவா றொண்ணாதே-மற்றவனை
யாரெழுத வல்லார்கள்" (132-134)

எனும் கண்ணிகளில் சிவக்கொழுந்து தேசிகர் குறிப்பிடுகின்றார். இக் கண்ணிகள்,

"மைப்படிந்த கண்ணாளுந் தானுங் கச்சி
மயானத்தான் வார்சடையான் என்னி னல்லான்
ஒப்புடைய னல்லன் ஒருவ னல்லன்
ஒரூர னல்லன்ஒ ருவம னில்லி
அப்படியும் அந்நிறமும் அவ் வண்ணமும்
அவனருளே கண்ணாகக் காணின் அல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ் வண்ணத்தன்
இவனிறைவன் என்றெழுதிக் காட்டொ ணாதே"[30]

எனும் அப்பர் தேவாரப் பாவை ஒட்டி ஆசிரியர் இயற்றியிருக்கின்றமையைக் காணமுடிகிறது.

தெரிவைப் பெண்ணின் தோழியொருத்தி, தஞ்சைப் பெருவுடையாரின் தசாங்கத்தினைக் கூறுகின்றாள்.

வானவர்கள் சூழ்ந்த வெள்ளிமலையான கயிலையை உடையவன்; தன்னிடம் வருகின்றவர்களின் பெரிய தீவினைகளைப் போக்கும் காவிரி ஆற்றினை உடையவன; இவ்வுலகத்திலுள்ள தேசங்கள் எல்லாவற்றிலும் மேலான புகழை நாட்டு

30. அப்பர் தேவாரம், 6.97.10.

கின்ற சோழவள நாட்டை உடையவன்; அழகிய சோழவள நாடாகிய மங்கையின் அழகிய முகப் போன்று விளங்கும் தஞ்சை எனும் ஊரினன்; மடம் பொருந்திய பெண்களின் கண்கள் என்று சொல்லத்தக்க வண்டுக் கூட்டங்கள் சூழ்ந்த கொன்றை மாலையை உடையவன்; நான்முகன் கழுத்தில் தோன்றிய வேதக் குதிரையினன்; மதம் மிக்க இரண்டாயிரம் கொம்புகளை உடைய ஐராவணம் எனும் யானையை உடையவன்; ஒளி பொருந்திய சக்கரத்தைத் திருக்கையிலே தாங்கிய திருமாலாகிய விடைக் கொடியினன்; பெருமை பெற்ற இசை முரசினன்; இவ்வுலகத்தை முத்தேவர்களைக் கொண்டு உருவாக்கிப் பாது காத்து அழிக்கும் ஆணையை உடையவன் (259-266).

வீதியில் உலா வருகின்ற பெருவுடையாரின் உருவ அழகை முடிமுதல் அடிவரை காண்கிறாள் தெரிவை. பொது வாக இறைவனைக் காண்கின்றபொழுது அடிமுதல் முடிவரை (பாதாதிகேசம்) காண்பதாகப் பாடப்படுவது மரபு. மக்களை வருணிக்கின்றபொழுதே முடிமுதல் அடிவரை (கேசாதிபாதம்) காண்பதாகப் பாடப்படுவது மரபு. ஆனால் இவ்வுலாவில் ஆசிரியர் இறைவனைக் 'கேசாதிபாத'மாக வருணித்திருக்கிறார். இதற்குரிய காரணம் ஆய்வுக்குரியது.

பெருவுடையாரின் முடியில் வானில் உலவும் பிறை மகுடம் போன்று ஒளி வீசுகிறது; முகம், கண்டோர் போற்றும் கருணை பொழியும் முகமாகத் திகழ்கிறது; காதில் விலை மதிப்பற்ற ஆகாயம், பூமி ஆகிய இவையே அழகிய குண்டலமாகக் காட்சி யளிக்கிறது; மேகம் போன்ற நிறமுடைய விடமுண்ட கண்ட மாகக் கழுத்து விளங்குகிறது; ஆலங்கட்டிகள் போன்ற வெண் ணிறங் கொண்ட முத்துமாலை மார்பில் காணப்படுகிறது; கூர்மை பொருந்திய வெவ்விய கொம்புகளை உடைய மான், கொலை மழு ஆகியன கைகளில் காணப்படுகின்றன; இடை யினில் பொன்னாடை மின்னுகிறது; இசை கொண்ட வேதக் குதிரையைச் சிலம்பாக அணிந்த குளிர்ந்த திருவடித் தாமரையை உடையவராகத் திகழ்கிறார்.

உமையவள் :- 'இமவானின் மகளா'கத் திகழும் (74, 136) உமையவள் சத்தி (237), மங்கை (89), உமை (136),

உமையாள் (279), தேவி (102, 236, 311) என்று அழைக்கப் பெறுகின்றனள். இறைவன் திருவுருவத்தை எழுதித் தந்த ஓவியனிடம், பெருமான் இடப்பக்கத்திலிருக்கும் உமையவள் 'மடந்தை' (138) என அழைக்கப்படுகிறார். தஞ்சையில் எழுந்தருளியிருக்கின்ற உமையவளின் திருப்பெயர் 'பெரியநாயகி' யாகும் (18-19,291). பெருமான் இடப்பக்கத்திலிருக்கின்ற காரணத்தால் 'உமையொருபாகன்' (83, 276) என அழைக்கப் படுகிறார்.

உமையவள், சிவந்த வாயையும் மதி போன்ற வதனத்தையும் உடையவள் (102); தேன் போன்று அழகாகப் பேசுபவள் (311); பூப்போன்ற மெல்லிய கைகளை உடையவள், கையினில் கிளியை வைத்திருப்பவள் (237); வரிகளை உடைய நெடிய கண்களை உடையவள் (18); மலர்களைக் கூந்தலில் சூடிக் கருங் குவளைப் பூவையும் உடையவள் (19); பொன்னாலான திருவடிகளை உடையவள் (276).

உடன்வரும் தேவர்கள் :- தஞ்சைப் பெருவுடையார் திருவீதியுலா செல்கின்றபொழுது அவருடன் சில தேவர்கள் தம்முடைய வாகனங்களில் எழுந்தருளி உடன்வருகின்றனர்.

	தேவர்கள்	வாகனம்	
1	திருநந்திதேவர்	—	(38)
2.	விநாயகர்	ஆகு	(58)
3.	முருகன்	மயில்	(58)
4.	நான்முகன்	அன்னம்	(59)
5.	திருமால்	கருடன்	(59)
6.	பன்னிரு சூரியர்	பன்னிரண்டு தேர்	(60)
7.	வெண்டிங்கள்	முத்து விமானம்	(60)
8.	ஏகாதச உருத்திரர்	பதினோருஇடபம்	(61)
9.	இந்திரன்	ஐராவதம்	(61)

தேவர்கள்	வாகனம்	
10. வைரவக்கடவுள்	நாய்	(62)
11. ஐயனார்	களிறு	(63)
12. மன்மதன்	கிளி	(64)

திருமால் :- திருமாலின் பெருமை நான்கிடங்களில்[31] ஆசிரியர் குறிப்பிட்டிருக்கின்றார். பெருவுடையாரின் திருவடியைக் காணச்சென்ற வரலாற்றினை இரு கண்ணிகள் புலப்படுத்துகின்றன. ஒரு கண்ணியில் திருமால் மோகினி வடிவமெடுத்த செய்தியும் மற்றொரு கண்ணியில் பெருவுடையார் திருவீதி உலா வந்த காட்சியைக் காண்பதற்குத் திருமால் உலகத்தில் இருக்கின்ற மகளிர் வந்தனர் என்ற செய்தியும் கூறப்பட்டிருக்கின்றன. மால், அச்சுதன், கூர்வாளி எனும் பெயர்கள் திருமாலைக் குறிப்பனவாக அமைந்திருக்கின்றன.

நான்முகன் :- பங்கயன், நால் ஆனைத்தான், தேர்ப் பாகன், கஞ்சன், புண்டரிகன் எனும் பெயர்கள் நான் முகனைக் குறிப்பனவாக இடம் பெற்றிருக்கின்றன. பெருவுடையாரின் பெருமைதனைப் போற்றுகின்ற நான்முகன் ஊரிலிருக்கும் பெண்கள் அப்பெருமான் உலாவனைக் காணச் செல்கின்றனர் (1. 77). மங்கைப் பருவப்பெண், நான்முகன் ஊர்ந்து வருகின்ற அன்னப் பறவையின் நடையைப் போன்ற நடையினள் (154). நான்முகன் கழுத்தில் தோன்றிய வேதக் குதிரையைப் பெருவுடையார் வைத்திருக்கின்றார் (262).

இந்திரன் :- பெருவுடையாரின் பெருமைதனைப் போற்றுகின்றார் இந்திரன் (1). மகவான், புரந்தரன், இந்திரன் எனும் பெயர்களைப் பெற்ற இவருடைய குயிலின் சிறகைத் தக்கன் யாகத்தில் வெட்டிய பெருமான், இப்பொழுது எனக்குத்

---

31. தஞ்சைப் பெருவுடையாருலா, 35, 274, 175, 78.

துயரத்தைச் செய்கின்ற இக் குயிலை அழிக்க மாட்டாரோ? என்று அரிவைப்பெண் ஏங்குகிறாள் (248).

விநாயகர் :- 'ஆகுவான்' எனும் பெயரால் அழைக்கப் பெறும் விநாயகரின் தந்தை சிவபெருமான் (7) என்ற அளவிலேயே இவ்வுலாவில் ஆசிரியரால் கூறப்படுகின்றார்.

முருகன் :- வேலன், வேலவன், வேல் வல்லான், வேல் வலத்தான், குழவி, சேய், காங்கேயன், குமரன் எனும் பெயர்களால் முருகன் அழைக்கப்படுகின்றார்.[32] பெருவுடையார் திருவீதி உலாச் செல்கையில் குமரனும் பெருமானின் அருகில் அமர்ந்து எழுந்தருளுகின்றார் (74). உலாவைக் கண்ட பெதும்பைப் பருவப்பெண், ஓவியனிடம் முருகனைப்பற்றி வினவுகிறாள் (136 138). பேரிளம்பெண் 'வேலவனைத் தந்தவனே' (302) என்று போற்றி வணங்குகிறாள்.

கூற்றுவன் :- கூற்றுவன், தருமன் எனும் பெயர்களைக் கொண்ட இவன் எப்பொழுதும் கொலைத் தொழிலைச் செய்வதனால் கண்கள் மிகக் கொடியனவாகக் காட்சி அளிக்கின்றன. இக்கண்களைவிடக் கொடிய கண்களை உடைய வளாக மடந்தைப்பெண் கூறப்படுகின்றாள் (183).

விச்சுவநாதர் :- சிவகங்கைத் தீர்த்தக் குளத்தில் நீராடிய பேரிளம்பெண் கரையின்மீது கோயில் கொண்டுள்ள விசுவ நாதரையும் பணிந்து வணங்குகிறாள் (289).

மன்மதன் :- மதவேள், காமன், சித்தசன், மதனன், அநங்கன், வேள் ஆகிய பெயர்கள்[33] மன்மதனைக் குறிப்பன

32. தஞ்சைப்பெருவுடையாருலா, 58, 302, 74, 136, 137, 311, 137, 138.

33. மேலது, மதவேள் 64, 199; காமன் 84, 207; சித்தசன் 125 225; மதனன் 170, 207, 209, 253; அநங்கன் 276; வேள் 278, 306.

வாக இடம்பெற்றிருக்கின்றன. மன்மதனுடைய கரும்பு வில், மலரம்புகள், வாகனம், தேர், கொடி ஆகியவைபற்றிய குறிப்பும் காணப்படுகின்றன.[34]

அரிவைப் பருவப்பெண்ணின் கன்னத்தைக் கூறவந்த ஆசிரியர், ''சித்தத்தில் தோன்றுகின்றவனாகிய மன்மதன் மனைவி இரதி அழகு பார்க்கும் கண்ணாடி போன்ற கன்னத்தை உடையவள்'' (226) என்று மதனின் மனைவி இரதியைப் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

மன்மதன் தொடர்பான செய்திகளில் பொதுவாக வருவன என்றும் சிறப்பாக வருவன என்றும் இரு பிரிவுகளாகப் பிரித்து ஆய்வு செய்யப்படுகின்றது.

மங்கைப் பருவமுடைய மகளிரை எப்பொழுதும் விரும்புகிற (158) இம் மன்மதன், பொதுவாக மகளிர்மீது மலரம்புகளை எய்து கலகம் விளைவிப்பதை விரும்பிச் செய்கிறான் (84). பெருவுடையார் உலா வரும்பொழுது இவனும் தன் கிளி வாகனத்தில் அமர்ந்து உடன் செல்கிறான் (64). இவனுடைய பகைவராகச் சிவபெருமான் கூறப்படுகின்றார் (90).

மன்மதன் ஒவ்வொரு பருவப் பெண்ணிடமும் நெருங்கிக் கலகம் விளைவிப்பதன் மூலம் அவன் குணநலன்களை அறிய முடிகின்றன. பெருமானின் கையிலிருக்கும் மானைக் கேட்ட பேதைப் பெண்ணின் அருகே மன்மதன் தன் கரும்பு வில்லையும் ஐந்து மலரம்புகளையும் எடுத்து வருகிறான் (123). உலாக் காண்கின்ற பெதும்பைப் பெண்ணின் செயலைக் கண்ட மதன் அவளை மதிக்காமல் அவ்விடத்தை விட்டு அகன்று விடுகிறான் (149). மன்மதனுக்குரிய நூலான 'கந்தற்பத்'தில் (157) திறமையுள்ள மங்கைப் பெண் உலா வருகின்ற பெருமானைக் கண்டு வணங்குகின்றபொழுது மதன் மலரம்புகளை அவள்மீது எய்து மயக்கத்தை விளைவிக்கிறான் (170). மடந்தைப் பெண்ணின்

34. தஞ்சைப் பெருவுடையாருலா கரும்புவில் 95, 127, 277; மலரம்புகள் 125, 246, 149, 207, 170, 214, 229, 306; வாகனம் 64; தேர் 158; கொடி 246.

கையைப் பார்த்த குறப்பெண், மன்மதன் விடும் மலர்க்கணை களினால் ஏற்படும் விளைவுகளைச் சொல்கிறாள் (199). அதே போன்று உலா வருகின்ற பெருமானைக் காணச்சென்ற இப் பெண்ணின் நெஞ்சில் தாமரை மலரையும் நகிலில் மாம்பூவை யும் விழிகளில் அசோக மலரையும் தலையில் முல்லையையும் எய்கிறான் (207-208). 'இவனின் அம்புக்கு இரையாவதற்கா என்னை என் தாய் வளர்த்தாள்' (209) என்று இவள் பெருமா-னிடம் புலம்பிப் பின் அவனருளால் சிறிது மயக்கம் நீங்குகிறாள். அரிவைப் பெண் தான் வளர்த்த கிளியை மன்மதனை வென்ற பெருமானிடம் தூது விடுக்கிறாள் (233). மதனின் மலர்க்-கணைகளுக்கு ஆற்றாத இவள், ''மன்மதன் மலர்களைத் தன் வில்லில் ஏற்றும்பொழுதே வண்டுக்கூட்டங்கள் அதனை உண்டு விடாதோ? தக்கன் யாகத்தில் வெண்மதியைத் தேய்த்த பெருமானே! இன்று நீ இம் மதியை அழிக்க மாட்டாயோ அதே யாகத்தில் இந்திரனின் குயிற்சிறகுகளை வெட்டிய நீ இன்று இந்த மாங்குயிலைக் கொல்ல மாட்டாயோ? அகத்திய முனிவருக்குக் கட்டளையிட்டு இக் கடலைக் குடிக்கச் செய்ய மாட்டாயோ? உன் சடைமுடியில் இருக்கின்ற பாம்பிற்குச் சொல்லித் தென்றல் காற்றை உண்ணச் செய்யமாட்டாயோ?'' (246 250) என்று பலவாறு இறைவனிடம் முறையிட்டுப் புலம்புகிறாள் உலா வருகுன்ற இறைவனை வணங்கும் வேளைதனில் மதனன் வழக்கம்போல் தெரிவைப் பெண்மீதும் மலரம்புகளைத் தொடுக்கிறான். அவன் செயலுக்கு ஆற்றாத இத் தலைவி, 'மன்மதனுக்குக் கட்டளையிட்டு இச்செயலைத் தடுக்க வேண்டும் அல்லது அவனுக்கு என்னுருவம் புலப்-படாதபடி ஒரு மந்திரத்தை எனக்காவது சொல்வீர்' (277-278) என்று பெருவுடையாரிடம் வேண்டுகிறாள். பேரிளம்பெண்ணின் ஞானநிலையைக் கண்ட மதன் வியப்புற்று ஒன்றும் செய்ய முடியாமல் நிற்கிறான் (306).

இமையோர் :- சுரர், வானோர், இமையோர், விண்ணோர் ஆகிய பெயர்கள் வானிலிருக்கின்றவர்களைக் குறிப்பனவாக வந்திருக்கின்றன.[35] இவர்கள் பெருமானைப் போற்றி வணங்கி,

---

35. தஞ்சைப பெருவுடையாருலா, சுரர் 1, 26; வானோர் 38, 52, 311; இமையோர் 69, 279; விண்ணோர் 71, 266.

உலாச் செல்லும் பெருமானுடன் வந்து, அப் பெருவுடையார் மீது மலர் மாரி பொழிந்து, தக்கன் செய்த யாகத்தில் உடனிருந்து செயல் புரிந்திருக்கின்றனர். பெருவுடையார், இவ்விமையோர்களைக் காப்பதற்காகவே ஆலகால நஞ்சை உண்டிருக்கிறார் (26).

உலாச் செல்கின்ற பெருவுடையாருடன் ஏகாதச உருத்திரர் (61), பூதப்படை (62), எண்வசுக்கள் (65), ஏழு முனிவர்கள் (65), இசை பாடும் வித்தியாதரர் (65), பன்னகர் (நாகலோகத்தர்) (65), பதஞ்சலி முனிவர் (66), வியாக்கிரபாதர் (66), சனகாதி நான் முனிவர் (66), சாரணர் (67), சித்தர் (67), கின்னரர் (67), தும்புரு (69), நாரதர் (69) ஆகிய இமையோர்களைச் சார்ந்தவர்கள் செல்கின்றனர். இவர்களுடன் கங்கை ஆதித்தீர்த்தக் கன்னியர், சப்த மாதர்கள் ஆகிய விண்ணுலக மகளிர்களும் (68) செல்கின்றனர். திருவீதியுலா முடிந்தபின்னர்ப் பெருவுடையார் கோயிலுக்குள் எழுந்தருளும்பொழுதுநாரியர்கள் (உருத்திர கணிகையர்) நடனமாடுகின்றனர் (309).

புராணக் கதைகள் :- இறைவன் பெருமையை விளக்குவதற்காகக் காலனை உதைத்தது, நஞ்சுண்டது, அடிமுடி தேடியது, முப்புரத்தை எரித்தது, யானைத்தோல் போர்த்தியது, நால்வர்க்கு அறமுரைத்தது, தக்கன் யாகத்தை அழித்தது ஆகிய புராணக் கதைகளைச் சிவக்கொழுந்து தேசிகர் கூறியிருக்கின்றார். இவற்றுள் சில கதைகளில் 'காலனை உதைத்தவன்' (8)என்றும் 'கழுத்தில் விடத்தை உடையவன்' (9) என்றும் 'நால்வர்க்கு அறமுரைத்தவன்' (9) என்றும் பெருவுடையார் பொதுப்படையாகக் கூறப்பட்டிருக்கின்றார்.

மேலும் 'பண்டுதேடு அச்சுதன் வேதனறியாச் சிவக்கொழுந்தே!' (274), 'நேரார் புரத்தை வென்ற நித்தரே!' (96), 'முப்புரத்தின் போராானே!' (302), 'யானையுரி போர்த்தவனே!' (302) என்று பெருமானை விளிக்கும் நிலையில் சில கதைத் தொடர்கள் காணப்படுகின்றன.

தக்கன் யாகசாலை வரை போய் வந்தவர் வந்தார் (71), தக்கன் யாக சங்கார காலத்தில் மதியைத் தேய்த்த

அழகிய மலர்த்தாளினன் (247) என்று தக்கன் யாகம் தொடர்பாகக் கூறியிருக்கின்றார் தேசிகர்.

உலாச் செல்லும் பெருமானுக்குப் பலவகை ஆபரணங்களை அணிவிக்கின்றனர். இதைக் கூறுகின்றபொழுது அன்னப் பறவை வடிவங்கொண்டு பல காலம் தேடிக் காண இயலாத பெருமான் திருமுடிமீது கிரீடம் சாத்துகின்றனர் (25) என்றும் பெருமை பெற்ற திருமால் முன்னர்ப் பன்றி உருவெடுத்து நிலத்தைப் பிளந்து பல ஊழிக் காலங்களில் தேடியும் காணாத பெருமான் திருவடிமேல் சிலம்பை அணிவிக்கின்றனர் (35) என்றும் வருணிக்கின்றார் ஆசிரியர்.

அடியார்கள்

திருவீதியுலாச் செல்கின்ற பெருமானுடன் சண்டேசர், திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர், வரகுணதேவர், குலோத்துங்கச்சோழர், சேரமான் பெருமாள் ஆகிய அடியார்களும் செல்கின்றனர்.[36] மங்கை நல்லாளின் தாய் ஈகையில் சிறந்தவர் இயற்பகை நாயனார் (174) என்று கூறுகிறாள்.

அரசர்கள்

பெருவுடையாரை எழுந்தருளச் செய்த கரிகாலச் சோழன்.[37] தஞ்சையைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி செய்த சரபோசி மன்னன்[38] ஆகியோரைப்பற்றி ஆசிரியர் கூறியிருக்கின்றார்.

தஞ்சை மாநகர்

தஞ்சகாசுரன் எனும் அசுரனை வென்றபொழுது தன் பெயரால் அவ்வூர் வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கேற்பத் 'தஞ்சாவூர்' என வழங்கலாயிற்று என்கிறார் தேசிகர் (300). இறைவன் பெயரைத் 'தஞ்சை'யுடன் இணைத்

36. தஞ்சைப் பெருவுடையாருலா, 39-46.
37. மேலது, 10, 69-70.
38. மேலது, 57.

தும்[39] 'அளகை'யுடன் இணைத்தும்[40] ஆசிரியர் பயன்படுத்தியிருக்கின்றார். 'ஏர்வளரும் தஞ்சை யிராசராசேச்சுரம்' (13) என்று கோயிற் பெயருடன் இணைத்தும் 'வன்மதில்சூழ் தஞ்சை' (72), 'எழிற்றஞ்சை மாநகர்' (57) என்று பொதுவாகவும் தஞ்சை பற்றிய செய்திகள் இந்நூலில் இடம் பெற்றிருக்கின்றன.

நாடும் ஊரும்

வளமை பொருந்திய நாடாகவும் மங்கைக்கு உவமையாகவும் சோழ நாட்டில் உள்ளோர் என்று பொதுவாகவும் சோழநாடு கூறப்பட்டிருக்கிறது.[41]

ஆரூர், பெருந்துறை, மதுரை, மயிலை, கயிலை ஆகிய பிற ஊர்களைப் பற்றியும் ஆசிரியர் குறிப்பிட்டிருக்கின்றார்.[42] இவ்வூர்களில் 'கயிலை' மட்டும் பெருமானைக் குறித்து வந்திருக்கிறது. ஏனையவை வரலாற்றோடு தொடர்புபடுத்திக் கூறப்பட்டிருக்கின்றன.

ஏனைய இலக்கியங்களை ஆளுதல்

சிவக்கொழுந்து தேசிகர் பல்வேறு இலக்கியங்களின் தொடர்களையும் கருத்துக்களையும் இந்நூலில் ஏற்றவிடங்களில் எடுத்தாண்டிருக்கிறார்.

திருக்குறள் :- செய்யும் முறை அறியாத அறிவில்லாதவன், ஒரு செயலைச் செய்வானாயின், அச்செயலும் நிறைவேறாது; தானும் குற்றவாளியாகி விலங்கு பூணுவான. அதனைப் போலக் 'கூட்டி முடிக்கப்படாத கூந்தலினை உடையவள்' என்று பேதைப் பெண்ணை அறிமுகப்படுத்துகின்றார் ஆசிரியர்,

---

39. தஞ்சைப் பெருவுடையாருலா 123, 144, 149, 165, 200 214, 221, 233, 261, 273, 313.

40. மேலது, 96, 240, 242, 243. 258, 307.

41. மேலது, 260, 261, 88.

42. மேலது, ஆரூர் - சுந்தரர் (42), பெருந்துறை - மாணிக்க வாசகர் (43), மதுரை-வரகுண தேவர் (44), மயிலை-பூம்பாவை (107), கயிலை 46, 3.

"திண்கருத்தை
நாட்டலின்றிக் கையறியாப் பேதையர்செய் நற்-
றொழில்போல்
கட்டி முடித்திடாக் கூந்தலாள்" (105)

எனும் இக் கண்ணி,

"பொய்படு மொன்றோ புனைபூணுங் கையறியாப்
பேதை வினைமேற் கொளின்"[43]

எனும் குறட்கருத்தைப் பெற்று வந்திருக்கிறது.

திருமுருகாற்றுப்படை :— ஆசிரியர், 'பார்கொண்ட பாற்கடல்' (1) என்று நூலைத்தொடங்குகின்றார் 'பார்முதிர் பனிக்கடல்'[44] எனும் நக்கீரர்தம் முருகாற்றுப்படையுடன் ஒத்திருக்கிறது.

தேவாரம் :— மூவரருளிய தேவாரத்தில் சிலவற்றைப் பேரிளம்பெண் இசையுடன் பாடுகின்றாள். இதனை ஆசிரியர்,

"மென்பரவை யிற்கல் மிதந்துவரக் கண்டதுவும்
என்பினைப்பெண் ணாகவியற்றியதும் — இன்புதவு
சங்கரனை நள்ளிரவிற் றூதுசெலச் சாற்றியதும்
செங்கலைப்பொன்னாக்குந் திறமுளதும் — சங்கமொடு
செம்மலுறு வையையினி லேடெதிர்க்கச் செய்ததுவும்
வெம்முதலை யுண்மகவை மீட்டதுவும்" (294-296)

பாடினாள் என்று கூறுகின்றார். இதில் தேவாரப் பாடல் தொடரைக் கூறாமல் தேவாரப் பதிகம் தோன்றக் காரணமா யிருந்த நிகழ்ச்சியைக் கூறியிருக்கின்றார்.

"ஈசர்மெய்த் தொண்டரெண்ணத் தின்படியே
கூட்டுதல் போல்" (136)

எனும் தொடர்

---

43. திருக்குறள் 836.

44. திருமுருகாற்றுப்படை 45.

''வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்''[45]

எனும் தேவாரத்தையும் நினைவூட்டுகிறது

திருவிசைப்பா :— உலாவந்த பெருவுடையாரைக் கண்டு வழிபட்ட பேரிளம்பெண்,

''பாரிற்
கருவிசையை நீத்த கருவூரர் போற்றும்
திருவிசைப் பாவுகந்த தேவே''

என்று போற்றுகின்றாள்.

திருநாகைக்காரோணப் புராணம் :- பெருவுடையார் உலாவைக் காணவந்த மகளிர், 'இவனழகைக் காணாத கண்ணல்ல கண்ணல்ல' (88) என்கின்றனர். இப்பகுதி,

''காரோண னுருநோக்காக் கண்ணென்ன கண்ணே''[46]

எனும் திருநாகைக்காரோணப் புராணத்தோடு ஒத்திருக்கிறது.

பிறநூல்கள்:- உலாக் காணும் மகளிர்கூட்டத்துளொருத்தி,

''ஆதிநா கப்பணியீ ரஞ்சலி ரென்றொருசொல்
ஓதினால் வாய்முத் துதிர்ந்திடுமோ'' (98)

என்று பெருவுடையாரைப் பார்த்துக் கூறுகிறாள். இப்பகுதி,

''மெல்ல மெல்லச் சொன்னால்
வாய்முத்தஞ் சிந்தி விடுமோநெல் வேலிவடி
வம்மையே''[47]

எனும் தனிப்பாடலோடும்

---

45. அப்பர் தேவாரம், 6.23.1.

46. திருநாகைக்காரோணப் புராணம் அகத்தீசப்படலம் 25, திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, 1970, ப 275.

47. தனிப்பாடல்

"சரத முடையர்மணிவாய் திறக்கிற் சலக்கென்பவே"[48]

எனும் திருக்கோவையாரோடும் ஒப்பிடத்தக்கனவாய் அமைந்திருக்கிறது.

சரபேந்திர பூபாலக் குறவஞ்சி :- மடந்தைப் பெண்ணின் உருவ அழகை வருணிக்கின்ற ஆசிரியர். தாமியற்றிய சரபேந்திர பூபாலக் குறவஞ்சிப் பாடற் பகுதிகளோடு ஒப்பிடத்தக்கவகையில் பாடியிருக்கின்றார். இதனைப் பின்வரும் அட்டவணைப் பகுதியில் ஒப்பிட்டு விளக்கப்பட்டுள்ளது.

வ.எ.	தஞ்சைப் பெருவுடையாருலா	சரபேந்திர பூபாலக் குறவஞ்சி
1.	பீடுபெறு சந்திரற்குத் தன்னேர் சிறிதுந் தராதவனை அந்தரத்திற் போகச்செய் யானனத்தாள் (182)	அதன்ம மெவர்க்காகு மதுநின்னிடத்துள தால் சசியே-தெய்வம் அந்தரத்தில் விட்ட துன்னையிந்தவா றலைந்திடென்று (19)
2	சந்ததமும் கூற்றுவனை யாருங் குலவுந் தருமனெனச் சாற்றிடச் செய்யுந் தடங் கண்ணாள் (183)	தருமனெனக்கூற்றை யெவருஞ் சொல்லக் கூர்த்த நயனத்தாள்) (11)
3.	ஆற்றலொடும் நீண்டகொடுஞ் சாப நிலவி யிடுநெடுநாண் பூண்டிடத் தோற்றும் புருவத்தாள் (184)	அந்த மதனவல்லி வண்டைநாண் கொண்டிடச் செய் யோதியாள் (11)
4.	வேண்டும் இனத்தினு[illegible] னாம்பலெழிற் போது[illegible] ற்று	மருவுற்றி டுங்குமிழை வனத்தி லொதுக்கு வித்த மூக்கினாள் (11)

48. திருக்கோ[illegible] பார் 57.

வ. எ.	தஞ்சைப் பெருவுடையாருலா	சரபேந்திர பூபாலக் குறவஞ்சி
	வனத்திருக்க மன்னியசெவ் வாயாள் (185)	
5	தனக்குவமை யென்றுரைக்குந் தண்காந்தட் பூவைக் கனத்தகிரி வைத்தவெழிற் கையாள் (187)	கந்தமலர்க்காந்தளினை முந்துமலை யேவைத்த கையினாள் (11)

உவமைகள்

இந்நூலினுள் காணப்படும் உவமைகளை,

1. இறைவனைப்பற்றி வருவன
2. அடியார்களைப்பற்றி வருவன
3. எழுபருவ மகளிரின் உருவத்தைப்பற்றி வருவன
4. பொதுவாக வருவன

என்று நான்கு வகைகளில் பிரித்து ஆய்வு செய்யப்படுகிறது.

1 இறைவனைப்பற்றி வருவன : உலாவிற்கு எழுந்தருளும் பெருவுடையாரைப் பாற்கடல்போன்ற முத்தாரத்தையும் மாணிக்கப் பதக்கம் போன்ற சூரியனையும் புனைந்து அழகுபடுத்துகின்றனர் (28); பெருவுடையாருக்குப் பூணுகின்ற நூலுக்குக் கங்கைத் தாரையை உவமையாக்குகிறார் (29); தாருகவனத்து முனிபத்தினிப் பெண்களின் அழகிய காதற் பார்வை போன்ற நீலமணிகளில் செய்யப்பட்ட ஆபரணங்களை அணிவிக்கின்றனர் (30); கொடிய புலித்தோலாடையின் மேல் அரவைக் கட்டியிருத்தல் போலச் செம்பொன்னாலான அரைஞாண் கயிற்றைத்தரிக் கின்றனர் (33); அழகு மிகுந்த 'திருவாசிகை' எனும் மாலையை வளைத்து நிலைக்கண்ணாடி போன்ற சூரியனில் திருமுகத்தைக் காட்டுகின்றனர் (36)

மடம் பொருந்திய பெண்களின் கண்கள் என்று சொலத்தக்க வண்டுக் கூட்டங்கள் சூழ்ந்த கொன்றை மாலையையும்

(262) கழுத்தில் விடமாகிய மேகம் சொரிந்த ஆலங்கட்டிகள் போல வெண்மை நிறங்கொண்ட முத்து மாலையையும் (270) அணிந்து பெருவுடையார் வீதியுலா செல்கின்றார்.

உமையவளைத் 'தாமரைப் பூவை ஒத்த கைகளை உடையவள்' என்று அரிவைப் பெண் கூறுகிறாள் (236).

2. அடியார்களைப்பற்றி வருவன :- திருநாவுக்கரசரைக் கூறுகின்றபொழுது, "முன்னர் நெற்றிக்கண்ணனை உடைய சிவபெருமான் ஆலகால விடத்தை உண்டு விண்ணோரைக் காத்ததைப் போலச் சமணர்கள் மயக்கமடையச் செய்வதற்-காகக் கொடுத்த நஞ்சினை உண்ட ஐயன்" என்கின்றார் ஆசிரியர் (41)

பெருமானுடன் உடன்வரும் அடியவர்களைக் கூறுகின்ற-பொழுது, "உண்மையைத் தரும் மேலான வாழ்த்தொலியால் உடணிலனியும் வெண்ணீற்றொளியானது பாற்கடல் போலப் பரந்து விளங்க வருகின்றனர்" என்கிறார் (49).

3. எழுபருவ மகளிரின் உருவத்தைப்பற்றி வருவன: செய்யும் முறை அறியாத அறிவிலியானவன் ஒரு செயலைச் செய்வானாயின் அச்செயலும் நிறைவேறாமல் கெட்டுத் தானும் குற்றவாளியாகி விலங்கு பூணுவான்; அதனைப் போலக் கூட்டி முடிக்கப்படாத கூந்தலை உடையவளாகவும் தொகுதியுடன் உலகத்தவர் அனைவரும் போற்றி வணங்கும் தஞ்சைப் பெருமானின் அழகிய கழுத்தினிலிருக்கும் நஞ்சு செயலற்றிருத்தல் போல இருக்கும் கண்களை உடையவளாக-வும் மயிலைப் பூம்பாவை மீண்டும் பிறந்ததைப் போன்று விழுந்து முளைத்த சிறிய பற்களை உடையவளாகவும் தேன் போல இனிமையாகப் பேசுபவளாகவும் பாதுகாப்பில்லாத யானைக் கன்றின் வாயில் கொம்பு அடங்கி இருத்தல்போல அழகை அணிந்த உடம்பில் அடங்கி இருக்கும் பெரிய முலை-களை உடையவளாகவும் பேதைப் பெண்ணின் உருவம் வருணிக்கப்படுகிறது (105-108).

ஈசனின் மெய்த்தொண்டரின் விருப்பத்தின்படிக் கொன்-றை மலரைக் கூந்தலில் சூடியவரைப் போன்ற முடித்த

கொண்டையை உடையவளாகவும் நாணைப் பூட்டிய வில்லை ஒத்த நெற்றியை உடையவளாகவும் வெங்கொலையும் வஞ்சனையும் கற்கும் பருவக் கயல் விழியினளாகவும் பொன்னொளி நிரம்பிய தஞ்சையிலுள்ள வம்புலாஞ் சோலையில் செறிந்த பாக்கு மரத்தின் மிகவும் இளைய காய்களைப் போன்ற தனத்தினளாகவும் பெதும்பைப் பெண் வருணிக்கப்படுகிறாள் (126 128).

மன்மதன் விரும்பும் பருவப்பெண்ணான மங்கை நல்லாள், குற்றமில்லாத புகழ்பெற்ற வாசனை பரவுகின்ற சோலையைப் போன்ற கூந்தலினை உடையவளாகவும் நல்ல செண்பக மலரைப் போன்ற அழகிய மூக்கினளாகவும் கொடுமையில் பெரிய விடம் போன்ற கண்களை உடையவளாகவும் முல்லையரும்பு வாயில் பொருந்தியது என்று சொல்லுதற்குக் காரணமான பற்களை உடையவளாகவும் பெருமை பெற்ற குறிய ஆலிலை என்று சொல்லப்படும் வயிற்றினளாகவும் மயிலின் சாயல் எனச் சொல்லும் மென்மையினளாகவும் வஞ்சிக்கொடி போன்ற இடையினளாகவும் நான்முகன் ஊர்ந்துவரும் அன்னப் பறவையின் நடையைப் போன்ற நடையினளாகவும் மேகத்தை விட்டு மின்னல் நீங்கிப் பூமியின்கண் வந்தாற் போன்ற தோற்றத்தை உடையவளாகவும் வருணிக்கப்படுகிறாள் (151 153).

உறுதிபடைத்த உள்ளங்கொண்ட ஆடவர்களின் மனத்தைப் பம்பரம்போலச் சுழன்றாட வைக்கும் நற்குழலினளாகவும் ஆகாயத்தில் அந்தரத்தில் தொங்கும் நிலவைப் போன்ற முகத்தினளாகவும் எப்பொழுதும் கொலைத் தொழில் புரியும் கூற்றுவனைவிடக் கொடிய கண்களை உடையவளாகவும் ஆற்றல்மிக்க வில்லைப்போன்ற புருவமுடையவளாகவும் நீரிலிருக்கும் அழகிய செவ்வல்லிப் பூவைப்போன்ற சிவந்த வாயினளாகவும தாமரை அரும்பு அழகுற மலர்ந்து வளரும் குவிந்த முலையினளாகவும் தனக்குவமை என்று சொல்லும் மலையில் தோன்றி வளரும் குளிர்ந்த காந்தட்பூவைப் போன்ற அழகிய கையினளாகவும் கோபத்தால் எழுகின்ற பூமியிலுள்ள பாம்பானது காற்றை உண்டு புற்றில் அதன் ஆரவாரமெல்லாம் அடங்கி மறைந்து நிற்றல் போல இருக்கும் அல்குலை உடையவளாகவும்

வாழை மரம் குழை ஈனும் வரையில் தலை வளைந்து தோன்ற இருத்தலைப் போன்ற அழகிய துடையினளாகவும் அழகும் மென்மையும் கொண்டு வளர்கின்ற மாந்தளிரின நிறத்தை மாற்றுகின்ற காலினை உடையவளாகவும் மடந்தைப்பெண கேசாதி பாதமாக வருணிக்கப்படுகிறாள். (181-190).

மேகத்திலிருக்கின்ற முகிற்கூட்டமும் சிவஞானமில்லாதவர்களின் நெஞ்சும் என்று சொல்லத்தக்க இருண்ட நீண்ட கூந்திலினைக் கொண்டும் கொன்றை மாலையைசி சுபக்கும் பெருவுடையாரின் நீண்டு வளர்ந்த சடைமேலுள்ள பிறை போன்ற வளைந்த நெற்றியினளாகவும் போர்க்களத்தில் இருக்கும் வீரர்களின் கையிலுள்ள கூர்மையான வேற்படையை வன்மை இல்லாதது எனச் சொல்லத்தக்க கண்களை உடையவளாகவும் இரதி அழகு பார்க்கும் கண்ணாடி போன்ற கன்னத்தை உடையவளாகவும் விண்ணோர் விரும்பி மகிழ்ந்து உண்ணும் கடலிற்றோன்றிய அமுதத்தைப் போன்ற இனிய சொல்லினளாகவும் சிறந்த புலவரை அவமதித்தோரது வாழ்வைப் போலத் தேய்ந்திருக்கும் இடையை உடையவளாகவும் அரிவைப்பெண் வருணிக்கப்படுகிறாள் (223 227).

''இருள் போன்ற மலர்க்குழலாள்; தாமரைப் பூப்போன்ற முகத்தாள்; புதிய மலர் போன்ற கையாள்; கரும்பு வில்லின வடிவத்தை ஒத்த நெற்றியை உடையாள்; கடல் போன்ற விழியினாள்; முற்றிய கிளைகளை உடைய மா மரத்திலிருக்கும் குயில் போன்ற மொழியாள்; மான் போன்ற நடையினாள்; பெரிய கிரீடம் போன்ற அழகிய முலைகளை உடையவள்'' என்று தெரிவைப்பெண்ணைப் பற்றி வருணிக்கிறார் (253-255). மன்மதன் வைத்திருக்கின்ற பொருள்களை இங்கு உவமைகளாக ஆசிரியர் பயன்படுத்தி இருக்கிறார்.

பேரிளம்பெண் வயது முதிர்ந்தவள்; மேலும் செயற்கை அழகை விடுத்தவள்; ஆதலின் அதற்கேற்ப ஆசிரியர், ''காண் போகுடைய கண்ணறிவிற்கு மாந்தளிர் வண்ணத்தைச் செம்பஞ்சுக் குழம்பு மறைக்குமென எண்ணி அறியாமலிருக்கும் அழகிய கால்களை உடையவள்; நூற்களை ஆராய்ந்தறிந்த சொற் கவிஞர் நல்ல உவமை சொல்வதற்குத் தோன்றாமலிருக்

கும் நண்டு எனச் சொல்லத்தக்க முழங்காலினாள்; வளம் மிக்க மேருமலையில் வாழும் யானையின் வளர் துதிக்கை என்று எவரும் சொல்லத்தக்க துடையினாள்; நல்லறிஞர்கள் நினைக்கின்ற நெஞ்சைத் திறைகொள்ள உந்தி மேலிருக்கும் உரோமங்களை உடைய மணிவல்லியாள்; இந்நாளும் நானிழைத்த குற்றத்தைப் பொறுத்திடு என்று தாழ்ந்து வணங்குதலைப் போன்ற தனங்களை உடையவள்'' என்று பல உவமைகள் மூலம் வருணிக்கின்றார் (282-286).

4. பொதுவாக வருவன : உலாக் காணும் மகளிர், பெருவுடையாரின் அழகில் மயங்கி, ''மேருமலையில் கை வைத்தீர்; அதனைப்போல் எங்கள் சூதாடு கருவியான முலையினில் ஒரு பொழுதேனும் கையை வைத்திடீர்'' (92) எனப் புலம்புகின்றனர்.

தேரினில் பெருவுடையாரின் அருகிலிருக்கும் உமையவளைக் கண்ட மகளிர் கூட்டத்துள் உள்ள 'முத்துக்களை அணிந்த வட்டம் போன்ற முலையை உடைய ஒருத்தி' (103) இவள் எவ்வாறு அங்குச் சென்றாள்? எனத் தன்னை அறியாது மயங்குகிறாள்.

'யாழோசையைப் போல அழகாகப் பேசுபவர்கள்' (145 146) என்று தோழியரின் பேச்சிற்கு யாழின் ஓசையை உவமையாகக் கூறுகிறாள் பெதும்பைப்பெண்.

''வேற்படையை ஒத்த கண்ணை உடைய பெண்களைச் சூழ்ந்து அவர்களுடைய நாணினைக் கவர்ந்து கொள்வதுதான் உமது வேலையோ?'' (178) எனச் செவிலி இறைவனைப் பார்த்துக் கேட்கிறாள்.

மன்மதனின் மலர்க்கணைகளுக்கு ஆற்றாத தலைவி, ''தக்கன் யாகத்தை அழித்தபொழுது இந்திரனின் குயிற்சிறகை வெட்டினாய்; அதனைப் போல உன்னால் இந்த மாங்குயிலை அழிக்க முடியாதோ?'' (248) எனப் பெருவுடையாரிடம் முறையிடுகிறாள்.

காமன் மலர்க்கணைகளுக்கு ஆற்றாத தலைவியைத் தோழியர் இல்லத்தில் கொண்டு செல்கின்றனர். அவளுக்குப்

பலவகையான பணிவிடை புரிகின்றனர். அவையெல்லாம் துன்பத்தைப் போக்குவதற்குப் பதிலாகத், 'தீப்பற்றி விறகில் நெய் சொரிந்ததைப் போல' (213) இருந்தனவேயன்றி ஒரு போதும் துயரை நீக்கவில்லை.

பேரிளம்பெண் பாடிய தேவாரப் பண்ணின் இசையைக் கேட்பதற்காக விரும்பி வருவது போலப் பெருவுடையாரும் அழகிய வீதியினில் உலா வருகின்றார் (298).

ஆசிரியர் பயன்படுத்திய உவமைகளில்,

1. பேதையின் முடிக்கப்படாத கூந்தலுக்குக்கையறியாப் பேதையர் செய்கின்ற தொழிலை உவமை கூறுவதன் வாயிலாக ஒரு நீதியை அறியமுடிகிறது.

2. விழுந்து முளைத்த பேதைப் பெண்ணின் பல்லிற்கு இறந்து மீண்டும் உயிர்பெற்ற பூம்பாவையை உவமை கூறுவதன் வாயிலாகத் திருஞானசம்பந்தர் செய்த அற்புதச் செயல்கள் பலவற்றில் ஒன்றினைக் குறிப்பதனைக் காணமுடிகிறது.

3. பெதும்பைப் பெண்ணின் கொண்டை கூட்டி முடிக் கப்பெற்றமைக்குத் தொண்டர்கள் எண்ணியவற்றை எண்ணியவாறே இறைவன் கூட்டி முடிப்பதனை உவமையாகக் கூறியதைக் காணமுடிகிறது.

4. அரிவையின் தேய்ந்த இடைக்கு நல்லறிஞர்களை அவமதித்தோர் வாழ்வினை ஒப்புமைப்படுத்தியிருப் பதை அறிய முடிகிறது.

5. தெரிவையின் உருவ வருணனையில் கூறப்படும் உவமைகள் எல்லாம் மன்மதனுக்குரிய பொருள்களா கவே இருக்கின்றன.

6. புலவர்கள் நல்ல உவமையாகச் சொல்வதற்குத் தோன்றாமலிருக்கும் நண்டைப் பேரிளம்பெண்ணின் முழங்காலுக்குக் கூறுவதைக் காணமுடிகிறது.

தொனி

சிவக்கொழுந்து தேசிகர் மங்கையின் உருவ அழகைக் கூறும்பொழுது சில சிவத்தலங்களின் பெயர்களைத் தொனிப் பொருளில் அமைத்துப் பாடுகின்றார். அதனைப் பின்வரும் அட்டவணை காட்டுகிறது.

வ எண்	கண்ணி	பொருள்	தொனிப்பொருள்
1	நற்சண்பகவன நாசியாள் (151)	சண்பக மலரைப் போன்ற அழகை உடைய மூக்கை உடையவள்	சண்பகவனம் — திருநாகேசுவரம்
2	விற்செறிந்த வல்ல மெனுங் கொங்கை யாள் (152)	ஒளிபொருந்திய சூதாடு கருவியின் அழகையுடையன என்று சொல்லப் படும் கொங்கை யை உடையவள்	வல்லம் - திருவல்லம்
3	மாகாளம் போற் கண்ணாள் (152)	கொடுமையில் பெரியவிடம் போன்ற கண்களை உடையவள்	மாகாளம் - உஞ்சைமாகாளம், அம்பர் மாகாளம் ஆகியன
4	முல்லைவாயுற் றதெனு மூரலாள் (152)	முல்லையரும்பு வாயிற் பொருந் தியது என்று சொல்லுதற்குக் காரணமான பற் களை உடையவள்	முல்லைவாய் - திருமுல்லை வாயில்
5	சொல்லியசீர் ஏற்றிடு குற்றா லந்தானென் னும் வயிறுடை யாள் (153)	பெருமைபெற்ற குறிய ஆலிலை என்று சொல்லப் படும் வயிற்றை உடையவள்	குற்றாலம் - திருக்குற்றாலம்

வ. எண்.	கண்ணி	பொருள்	தொனிப்பொருள்
6	சாற்றிடு மாயூர மெனும் சாயலால் (153)	மயிலின் சாயல் என்று சொல்லும் மென்மையள்	மாயூரம் - திருமயிலாடுதுறை
7	போற்றலுறும் வஞ்சி இடையாள் (154)	வஞ்சிக்கொடி போன்ற இடையினள்	வஞ்சி - திருவஞ்சைக் களம்
8	வலஞ்சுழி நல்லுந்தியாள் (154)	வலமாகச் சுழித்த நல்ல கொப்பூழை உடையவள்	வலஞ்சுழி - திருவலஞ்சுழி
9	கஞ்சனூ ரன்ன கதி நடையாள் (154)	நான்முகன் ஊர்ந்து வரும் அன்னப் பறவையின் நடையைப் போன்ற நடையினள்	கஞ்சனூர்

இயற்கை இன்பம்

எந்த ஒரு காலத்தைச் சேர்ந்த புலவர்களாக இருந்தாலும் அவர்களால் இயற்கை இன்பத்தை நுகராமல் இருக்க இயலாது. அதற்குச் சிவக்கொழுந்து தேசிகரும் விதிவிலக்கல்லர். இந்நூலில் அவர் நுகர்ந்த இயற்கை இன்பத்தைப் பின்வரும் உட்டலைப்புக்களில் விளக்கப்பட்டிருக்கிறது.

மலர்கள் :- மல்லிகை, முல்லை, மருக்கொழுந்து, காந்தள், தாமரை, சண்பகம், செவ்வல்லி, கருங்குவளை ஆகிய மலர்களை ஆசிரியர் இறைவன், மன்மதன், மகளிர் ஆகியோர் தொடர்பாகப் பயன்படுத்தி இருக்கிறார்.

மல்லிகை, முல்லை, மருக்கொழுந்து ஆகிய மலர்களால் தொடுக்கப்பட்ட பூமாலையை இறைவனுக்கு அணிவிக்கின்றார் (31). இறைவன் உலாச் செல்லும் தேரில் நெருங்கிய வாசனையை உடைய சோலையிலுள்ள அழகிய பொலிவுமிக்க மலர்களா-

லாகிய மாலைகளைத் தொங்கக்கட்டிய பந்தலாக அமைக்கின்றனர் (73). இறைவன் திருவடியைத் தாமரை மலருக்கும் (272), திருக்கையை மலருக்கும்(32) ஒப்பிட்டிருக்கிறார். தேன் நிரம்பிய மலர்கள் நிறைந்த சடையினை உடையவராகப் பெருவுடையார் (207, 250) திகழ்கிறார். பூ அனைய சத்தியாக உமையவளும் (237) தாமரை மலரில் இருக்கின்ற திருமகளாக இலக்குமியும் (193) கூறப்படுகின்றனர்.

அரவிந்தம், அசோகம், மா, முல்லை, நீலம் ஆகிய ஐந்து மலர்களை அம்பாகக் கொண்டு மன்மதன் மகளிர்மீது எய்கிறான்.[49]

தெரிவைப் பெண்ணின் கண், கருங்குவளைப் பூவைப் போன்றும் (276); மங்கையின் மூக்கு, சண்பகம் போன்றும் (151); பற்கள், முல்லை போன்றும் (152); மடந்தையின் சிவந்த வாய், செவ்வல்லி போன்றும் (185); குவிந்தமுலை, தாமரை அரும்பு போன்றும் (186); கைகள், காந்தள் போன்றும் இருக்கின்றன.

மரங்கள் :- குருந்து, கமுகு, கதலி, மா ஆகிய மரங்கள் கூறப்பட்டிருக்கின்றன.[50] மாணிக்கவாசகர் குருந்த மரத்தின் கீழிருந்து உபதேசம் பெறுகிறார் (43); பெதும்பைப் பெண் கமுகு மரத்தின் இளைய காய்களைப் போன்ற தனங்களை உடையவளாக இருக்கிறாள் (128); மடந்தைப் பெண் வாழை (கதலி) மரம் குலை ஈனும் வரையில் தலை வளைந்து தோன்ற இருத்தலைப் போன்ற அழகிய துடையினை உடையவளாகவும் மாந்தளிர் நிறங்கொண்ட கால்களைப் பெற்றவளாகவும் (189); இருக்கிறாள்.

விலங்குகள் :- மான், யானை, குதிரை ஆகிய விலங்குகள் கூறப்பட்டிருக்கின்றன. வெவ்விய கொம்புகளை உடைய மானைப் பெருவுடையார் தம் கையில் ஏந்தியிருக்கிறார்.[51]

---

49. தஞ்சைப் பெருவுடையாருலா, 125, 170, 214, 246.
50. மேலது, 43, 128, 189, 190, 212, 282
51. மேலது, 3, 6, 14, 271.

பெதும்பை, மடந்தை ஆகிய இருவரும் மான் போன்ற சாயலைப் பெற்றிருக்கிறார்கள்.[52]

பாதுகாப்பில்லாத யானைக் கன்றின் வாயில் கொம்பானது எவ்வாறு அடங்கி இருக்கிறதோ அதேபோலப் பேதைப் பெண்ணின் உடம்பில் முலைகள் அடங்கியிருக்கின்றன (108). சிவபெருமான் மதம் மிக்க இரண்டாயிரம் கொம்புகளை உடைய அயிராவணம் எனும் யானையைப் பெற்றிருக்கிறார் (263).

நான்முகன் கழுத்தில் தோன்றிய வேதமாகிய குதிரையை உடைய சிவபெருமான் (263) குதிரை மீதேறி உலா வருகின்றார் (232).

பறவைகள் :- மயில், நாகணவாய், குயில், அன்னம், கிளி ஆகிய பறவைகளில் கிளி தவிர ஏனைய பறவைகள் மகளிரை வருணித்து ஒப்பிடுவதற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

மங்கை, மயிலின் சாயலுக்கும் (153) மடந்தை, மயிலின் நடைக்கும் (180) ஒப்பிடப்படுகின்றனர். பேதைப்பெண், நாகணவாய்ப் பறவைக்குப் போதித்தலைச் செய்கிறாள் (111). தெரிவைப்பெண் குயில் போலப் பேசுகிறாள் (255). குறத்தியின் நடை அன்னம் போன்றிருக்கிறது (192). உமையவள் கையில் கிளி இருக்கிறது (237). அரிவைப்பெண் 'கல்யாணி' எனும் பெயருடைய கிளியை வளர்த்துத் தனக்காகப் பெருவுடையாரிடம் தூது செல்ல விடுக்கிறாள். தலைவனைக் காணாது வருந்திய இத் தலைவிக்கு இக்கிளி ஆறுதல் மொழிகளைக் கூறுகிறது.[53]

நீர்வளம் :- சுந்தரர் பற்றிக் கூறுகின்ற பகுதியில் தேசிகர், மணிமுத்தாற்றில் இட்ட பொன்னை ஆரூர்க்குளத்தில் எடுத்த வரலாற்று நிகழ்ச்சியினை எடுத்துக் கூறுகின்றார் (42). கரிகாலச் சோழனைப் 'பொன்னி நதியான்' என்றும் தீவினை

---

52. தஞ்சைப்பெருவடையாருலா, 143, 210.

53. மேலது, 231 240.

களைப் போக்கும் காவிரி ஆற்றினைப் பெருமான் பெற்றிருக்கிறார் என்றும் கூறுகின்றார்.[54]

மிக்க அலைகளை உடைய கடலின் உச்சியில் கதிரவன் எழுகிறான் (20). மணிமுத்தாறு கடல் போன்ற நீரைப் பெற்றிருக்கிறது (41). பெருவுடையாரைப் பரந்துபட்ட கடலுக்கு ஒப்பிட்டுக் கூறித் தெரிவைப்பெண் வணங்குகிறாள் (275)

பிற இயற்கைப் பொருள்கள் - பெண்களின் விழிகள், கண்கள் ஆகியவற்றிற்குச் சேல் மீன்கள் உவமையாகக் கூறப்படுகின்றன.[55] மகளிரின் இடைக்கு மின்னல் கூறப்படுகிறது.[56] பூக்களில் சேர்ந்து தேனை உண்கின்ற வண்டுகள் கூறப்படுகின்றன.[57]

ஆடை வகைகள்

உலாச்செல்லும் பெருவுடையார் பொன்னாடையையும் உலாக்காணும் மகளிர் பூத்தொழில் வேலைப்பாடு கொண்ட ஆடைகளையும் அணிந்திருக்கின்றனர்.[58] மடந்தைப் பெண் தனக்குக் குறி சொல்லிய குறத்திக்குப் பொன்னும் துகிலும் பரிசளித்து மகிழ்கிறாள் (201).

ஆபரணங்கள்

வெண்ணிறமுள்ள முத்து மாலைகள், மகுடம், செந்நிறமுள்ள மாணிக்கத்தோடு, கண்டசரம், தவளமுத்துவடம், முத்தாரம் நீலமணிகளாலானவை, கேயூரம், பைம்பொற் கடகம், செம்பொன் கடிசூத்திரம், முத்து, வச்சிரம், நீலம், சிலம்பு, திருவாசிகை, பொற்றொடிக்கை, வேதப்பரிபுரம்

---

54. தஞ்சைப் பெருவுடையாருலா, 69-70, 259.
55. மேலது, 79, 110, 210
56. மேலது, 81, 111.
57. மேலது, 106, 246.
58. மேலது, 24, 271, 80.

ஆகிய ஆபரணங்கள் பெருவுடையாருக்கு அணிவிக்கப்படு-கின்றன.[59]

முத்து, பொன் ஆகியவற்றாலானவை, வரிவளையல்கள், மணிகள் இழைத்த வளையல்கள், கனத்த மேகலை, காஞ்சி, சிலம்பு, வெண்ணிற முத்து மாலை ஆகிய ஆபரணங்களை மகளிர் அணிந்திருக்கின்றனர்.[60]

இசைக் கருவிகள்

கல்லவடம், தக்கை, குழல், பேரி, நடத்திற்குரிய முருடு, கல்லலகு, யாழ், குடமுழவு, சங்கம், பொற்றாளம், தகுணிச்சம், துடி, படகம் ஆகிய இசைக்கருவிகள் பெருவுடையார் திருவீதி-யுலாச் செல்வதற்கு முன்னர் இசைக்கப்படுகின்றன.[61]

அதேபோன்று பெருமான் திருவீதியுலாச் செல்லும்போது பொற்சின்னமெனும் வாத்திய ஒலி, இசைப் பாட்டொலி, வாத்திய ஒலி, வேத ஒலி ஆகிய இசை ஒலிகளை மகளிர் கேட்கின்றனர்.[62]

திருவீதியுலா முடிந்த பின்னர் இறைவன் இன்னிசைக் கருவிகள் முழங்கக் கோயிலினுள் எழுந்தருளுகின்றார் (308).

தெரிவைப் பெண் வீணையை எடுத்துச் சுருதி கூட்டி, சுவரப்படுத்தித் தன் அழகிய விரல்களால் மீட்டி இசை பாடு-கிறாள்.[63]

---

59. தஞ்சைப் பெருவுடையாருலா, 20, 25, 26, 27, 28, 30, 32, 33, 34, 35, 36, 37, 272.

60. மேலது, 80, 90, 203, 210, 220, 176, 1 9, 177, 204, 228.

61. மேலது, 50-51.

62. மேலது, 72, 202.

63 மேலது, 256, 267

குறத்தியும் குறியும்

மலைக்குறவஞ்சி, மடந்தைப் பெண்ணின் இடக்கையைப் பார்த்துப் பின்வருமாறு குறி சொல்கிறாள்.

''மீன இரேகையினாலும் இடப இரேகையினாலும் பெருமையும் வெற்றியும் பெற்ற ஒரு மன்னரை மணம் புரிவாய்; குற்றமற்ற சூலரேகை தோன்றுவதனால் பொற்குவியல்களை விரும்பிக் கேட்கின்ற உலக மக்களுக்கு நல்குவாய்; அழகிய சிவந்த நிறமுடைய தழும்பு ஒன்று உன் வலது முலையின் கண் இருப்பதனால் நான்கு பெண்களையும் ஒரு ஆணையும் பெற்றெடுப்பாய்; உன் முதுகின் வலப்பக்கத்திலும் மார்பின் வலப்பக்கத்திலும் உள்ள வலமாகச் சுழித்திருக்கும் சுழிகள் உனக்கு எப்பொழுதும் நன்மையையே தரும்; இன்றைக்கு உன்மீது மன்மதன் மலரம்புகளை விட்டு மயக்கமடையச் செய்வான். இதிலிருந்து பெருவுடையார் உன்னைப் பாதுகாப்பார்'' (195-200).

ஏனையவை

இந்நூலில் இடம்பெற்றுள்ள பிறவற்றைப் பின்வரும் பிரிவுகளாகப் பிரித்து ஆய்வு செய்யப்படுகிறது.

விழா :- இளவேனிற் காலத்தில் சித்திரைத் திங்களில் தஞ்சைக் கோயிலில் விழா நடைபெறுகிறது (15).

தீர்த்தம் :- இக் கோயிலின் தீர்த்தமாகச் சிவகங்கைப் புனல் கூறப்படுகிறது (22, 288).

தமிழ் :- பேரிளம்பெண் முத்தமிழையும் விருப்பத்துடன் கற்றுத் தெரிந்து கொண்டிருக்கிறாள் (281).

இராசிகள் :- சிவக்கொழுந்து தேசிகர்,

''கொத்தலர்கள்
மண்டும் வசந்தத்து மேட மதியதனிற்
கொண்ட விடபக் கொடியேற்றி'' (15)

விழா நடந்ததாகக் குறிப்பிடுகின்றார். இதில் மேடராசி, இடப ராசிகளின் பெயர்கள் தொனிக்கின்றன.

பழமொழி :- உலாக்காணும் மகளிருள் ஒருத்தி,

''ஆதிநா கப்பணியீ ரஞ்சலீ ரென்றொருசொல்
ஓதினால் வாய்முத் துதிர்த்திடுமோ'' 98)

இது நீதிதானா? எனக் கேட்கிறாள்.

அம்மானை :- பெதும்பைப் பெண் தன் தோழியருடன் நிலா முற்றத்தில் அம்மானை ஆடுகிறாள் (129).

சொற்கள்:- அஞ்சு (ஐந்து), இரா (இரவு), நாலு (நான்கு), பாங்கா (அழகாக) போன்ற வழக்குச் சொற்களும்[64] பற்பல, என்றென்று ஆகிய அடுக்குச் சொற்களும்[65] எல்லும் இரவும் எனும் எதிர்ச்சொல்லும்[66] வம்மின், மொழிந்திடுமின், காணீர்' பணியீர், பாரீர், பாவையீர், பூங்கோதையீர் போன்ற விளிச் சொற்களும்[67] காண் எனும் முன்னிலைச்சொல்லும்[68] ததி(தயிர்), தானிகர், நாரி (அன்பு), பானு (கதிரவன்) ஆகிய வட சொற்களும்[69] நூலின் பல்வேறிடங்களில் ஆசிரியர் பயன்படுத்தியிருக்கின்றார்.

---

64. தஞ்சைப் பெருவுடையாருலா, 214, 218, 197, 11.
65. மேலது, 157, 244.
66. மேலது, 93.
67. மேலது, 100, 297, 87, 98, 85, 297, 84.
68. மேலது, 118, 120, 137, 199.
69. மேலது, 21, 48, 168, 28.

— ● —

III

நாடக இலக்கியம்

தமிழ் நாட்டில் பண்டைக் காலத்திலிருந்தே நாடக அரங்குகள், நடிகர் குழுக்கள், நாடகங்கள் இருந்து வந்திருக்கின்றன. நாடகக்கலை, நாட்டியக் கலையுடன் நெருங்கித் தொடர்பு கொண்டு வளர்ந்து வந்திருக்கிறது. சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய காப்பியங்களில் பலவகை நாட்டியங்களைப்பற்றியும் கதை தழுவி வரும் கூத்துக்களைப் பற்றியும் பற்பல குறிப்புக்கள் இருக்கின்றன. எனவே இதை வைத்துப் பார்க்கும்பொழுது பழந்தமிழ் நாட்டில் நாடகங்கள் பல இருந்து பின்னர் அவை அழிந்திருக்கவேண்டும் என்ற முடிவுக்கு வர முடிகின்றன.

அரசர் போற்றும் அரங்குகளுக்குரிய நாடகங்கள் வேத்தியல் என்றும் மக்களின் மகிழ்ச்சிக்குரியவை பொதுவியல் என்றும் பாகுபாடு செய்யப்பட்டிருக்கின்றன. சிலப்பதிகாரத்துக்கு உரையெழுதிய அடியார்க்கு நல்லார் (கி. பி. 12ஆம் நூற்றாண்டு) சயந்தம், செயிற்றியம், முறுவல், மதிவாணர் நாடகத்தமிழ், குணநூல், கூத்தநூல் போன்ற நாடக, நாட்டிய இலக்கண நூல்கள் பற்றிக் குறிப்பிடுகின்றார். நாடகக்கலை அரங்குகள், நடிக்கப் பெற்ற நாடகங்கள், நடிகர்கள், அரங்க அமைப்புகள் முதலான நாடகத்திற்குத் தேவையான பல குறிப்புக்கள் இந்த நூல்களில் இடம்பெற்றிருக்கின்றன.

சீவகசிந்தாமணி, தேவாரம், நாலாயிர திவ்வியப் பிரபந்தம், பெரியபுராணம், கம்பராமாயணம் போன்ற பல நூல்களில் நாடகம் தொடர்பான பல குறிப்புக்களைக் காணமுடிகின்றன. இசையுடன் கலந்து நிகழ்ந்த இன்னிசைக் கூத்து, ஒருவருடைய வரலாற்றை நாடகமாக நடித்துக் காட்டிய சரிதைக்கூத்து ஆகிய இருவகைக் கூத்துக்களையும் சீவகசிந்தாமணி குறிப்பிடுகின்றது. நாடக அரங்குகள் 'கூத்தப்பள்ளிகள்' என்றழைக்கப்பட்டு இருக்கின்றன. நாடக அரங்குகளில் பயன் பட்ட திரைகளில் ஓவியங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன.

தமிழ் நாட்டின் எல்லாப் புகழ்மிக்க கோயில்களிலும் ஆண்டுதோறும் விழாக் காலங்களில், தமிழ்க்கூத்து, ஆரியக் கூத்து, சாக்கைக்கூத்து, சாந்திக் கூத்து என்ற பெயர்களில் நாடகங்கள் நடைபெற்றன.[1] இவை நிகழ்த்தப் பெற்ற அரங்குகள் நாடக சாலைகள் எனப்பட்டன.[2] இவ்வரங்குகள் நாடக சாலை மண்டபங்கள் என்றும் அழைக்கப்பெற்றன. இவையெல்லாம் சோழர்காலக் கல்வெட்டுக்களால் அறியமுடிகின்றன.

கி பி. பதினேழாம் நூற்றாண்டிலிருந்துதான் எழுத்து வடிவில் நாடக இலக்கியங்கள் கிடைக்கின்றன. சோழர்கள் காலத்தில் அரசர்கள் ஆதரவில் அரண்மனைகளிலும் கோயில்களிலும் நடைபெற்ற நாடகங்கள் இப் பதினேழாம் நூற்றாண்டில் மக்கள் மன்றங்களில் மலர்ச்சி பெறத்தொடங்கின. உழவர்களின் வாழ்க்கை முறையைக் கருவாகக் கொண்டு பளுநாடகங்களும் குறவன் குறத்தியரின் வாழ்க்கையைக் கருவாகக் கொண்டு குறவஞ்சி நாடகங்களும் திருடர்களின் வாழ்க்கைச் சிக்கல்களை மையமாகக் கொண்டு நொண்டி நாடகங்களும் இசைப் பாக்களாலான கீர்த்தனை நாடகங்களும் இக்காலத்தில் தோன்றியிருக்கின்றன.

தஞ்சை மராட்டிய மன்னர்கள் காலத்தில் (1676-1855) குறவஞ்சி, விலாசம், நொண்டி, கீர்த்தனை போன்ற நாடக வகைகளில் பல நாடக இலக்கிய நூல்கள் புலவர்களால் இயற்றப்பட்டு மேடைகளில் அரங்கேற்றம் செய்யப்பட்டிருக்கின்றன. சில நாடகங்கள் மன்னர்முன்னிலையில் நடிக்கப் பட்டிருக்கின்றன.

இவர்கள் காலத்தில் வளர்ச்சி பெற்ற இந் நாடகங்களின் போக்கினை

---

1. கல்வெட்டு எண் : 125 (1925); 250(1926); 154 (1895); 254 (1914) A.R.E. of 1924-1925. p.82.

2. திருவாவடுதுறைக் கல்வெட்டு எண் : 126 S.I.I.vol.III.

அ) குறவஞ்சி நாடகங்கள் 4

ஆ) விலாச நாடகங்கள் 7

இ) நொண்டி நாடகங்கள் 2

ஈ) கீர்த்தனை நாடகங்கள் 2

உ) பிற நாடகங்கள் 5

என்று ஐந்து பிரிவுகளாகப் பிரித்து ஆய்வு செய்யப்படுகிறது.

— 0 —

அ) குறவஞ்சி நாடகங்கள்

'குறவஞ்சி' என்ற சொல்லுக்குக் 'குறவர் குலத்தில் பிறந்த வஞ்சிக்கொடி போன்ற இடையையுடைய பெண்' என்று பொருள். அஃது ஆகுபெயராய் அவளால் கூறப்படும் குறிக்காயிற்று. உலா வருகின்ற தலைவன் (அல்லது தெய்வம்) ஒருவனைக் கண்ட பெண்ணொருத்தி மயங்கிக் காதற்கடலில் மூழ்கித் தத்தளிப்பாள். அப்போது குறவஞ்சி ஆங்கு வந்து அப் பெண்ணின் இடக்கை பார்த்துப் பல குறிகளைச் சொல்லிப் பரிசு பெறுவாள். இது இவ்வகை நாடகத்தின் முதற்பகுதியாக அமைகிறது. பிற்பகுதியில் குறவன் குறத்தியைத் தேடித் திரிதலும் குறத்தியைக் கண்டு உரையாடுதலும் இருவரும கடவுளைப் போற்றிப் பணிதலும் கொண்டு நாடகம் முடிவடைகிறது.

இக் குறவஞ்சி நாடகங்களில் குறவஞ்சியானவள் குறி கூறும் பகுதி சுவை மிகுந்து விளங்குவதனால் 'குறவஞ்சி' என்று பெயர் வழங்கலாயிற்று. 'குறம்' என்றதொரு இலக்கிய வகையும் இருக்கிறது. ''இக் 'குறம்' என்பதில் குறத்தியின் கூற்று மட்டும் இருப்பக் 'குறவஞ்சி'யில் வேறு பலர் கூற்றுக்களும் இருக்கும்'' என்று இவ்விரண்டிற்குமுள்ள நுட்பமான வேறுபாட்டை அறிஞர் குறிப்பிடுகின்றார்.[3]

குறத்தி குறி சொல்லுதல் என்பது தொல்காப்பியர் காலம் முதல் இருந்திருக்கிறது. குறி சொல்லும் இக் குறவஞ்சியைக் 'கட்டுவிச்சி' என்றும் 'அகவன்மகள்' என்றும் அழைத்திருக்கின்றனர். 'கட்டுப்' (குறி) பார்த்தலின் 'கட்டுவிச்சி' என்றும் தெய்வங்களை அகவி (அழைத்து)க் கூறலின் 'அகவன் மகள்' என்றும் அழைத்தனர் போலும்! களவொழுக்கத்தில் ஈடுபட்ட தலைவியின் வேறுபாட்டிற்குரிய காரணத்தை அறிய

---

3. ச. சாம்பசிவன், 'மதுரை மீனாட்சியம்மை குறம்', சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள், மூன்றாவது மாநாடு, கழகம், சென்னை, 1960, ப. 296.

விரும்பிய செவிலித்தாய், கட்டுவிச்சியை அழைத்துக் குறி பார்த்தும் வேலனை அழைத்து வெறியாடல் நிகழ்த்தியும் உண்மையை உணர்கிறாள். இதனைத் தொல்காப்பியர்,

> "கட்டினுங் கழங்கினும் வெறியென இருவரும்
> ஒட்டிய திறத்தாற் செய்திக் கண்ணும்"[4]

என்ற பகுதியில் கூறுகின்றார். "கட்டினும் என்பது கட்டு வைப்பித்த வழியும் அவர் சொற்கேட்டுத் தோழியை வினாவும்; கழங்கினும் என்பது கழங்கு வைத்துழியும் அவர் சொற் கேட்டுத் தோழியை வினாவும்" என்று விளக்குகிறார் இளம் பூரணர். இவற்றுள் 'கட்டு' என்பது நெல்லை வைத்துக் கொண்டும் 'கழங்கு' என்பது கழங்காடும் காய்களை வைத்துக் கொண்டும் தெய்வங்களைப் பாடி, கட்டுவிச்சி கூறும் குறி வகைகளாகும். இம் மகளிர் தம் கையில் 'மாத்திரைக்கோல்' ஏந்தி வருவதனால் 'வெண்கடைச் சிறு கோல் அகவன் மகளிர்'[5] என்றும் 'நுண் கோல் அகவுநர்'[6] என்றும் அழைக்கப்படுகின்றனர். இவர்கள் பற்றிய செய்தி களையும் விளக்கங்களையும் நற்றிணை, குறுந்தொகை, அக நானூறு, குறிஞ்சிப்பாட்டுப் போன்ற சங்க இலக்கியங்களிலும் பெருங்கதை போன்ற காப்பியங்களிலும் திருக்கோவையார், திவ்வியப்பிரபந்தம் போன்ற பத்தி இலக்கியங்களிலும் அறிந்து கொள்ள முடிகின்றன.[7]

அகப்பாக்களில் சிறு செய்தியாக இடம்பெற்ற குறத்தி குறி பார்த்தல் என்பது ஒன்பதாம் நூற்றாண்டளவில் ஓர்

---

4. தொல்காப்பியம், பொருளதிகாரம், களவியல் 24.
5. குறுந்தொகை 298.
6. அகநானூறு 208.
7. நற்றிணை 288; குறுந்தொகை 23, 298; அகநானூறு 97, 154, 208; குறிஞ்சிப்பாட்டு 7; பெருங்கதை 37:235-237; திருக்கோவையார் 283-286; நாலாயிரத் திவ்வியப் பிர பந்தம் : சிறிய திருமடல் 20 22; திருவாய்மொழி 4, 6, 8.

இலக்கிய வகையாக—தனியொரு சிற்றிலக்கியமாக விரிவடைகிறது. பன்னிருபாட்டியல் எனும் நூலில்,

''இறப்பு நிகழ்வெதிர் வென்னுமுக் காலமும்
திறப்பட வுரைப்பது குறத்திப் பாட்டே''[8]

என்று 'குறத்திப்பாட்டு' என்பதற்குரிய இலக்கணம் கூறப்பட்டிருக்கிறது

குறவஞ்சி நாடகங்கள் இசையுடன் பாடி மேடையில் நடிக்கப்பெற்ற காரணத்தால் இவ்வகை நாடகங்களில் இசைப் பாக்கள் எல்லாவற்றிற்கும் பெரும்பாலும் ஆசிரியரே பண் அமைத்து விடுகின்றனர். ஆசிரிய விருத்தம், கொச்சகக் கலிப்பா, கட்டளைக் கலித்துறை, கண்ணி போன்ற பல்வேறு யாப்பு வகைகளில் பாடல்கள் அமைந்திருக்கின்றன. இடையிடையே உரையாடல்களும் இடம்பெற்றிருக்கின்றன.

சகசிராசன் குறவஞ்சி, தியாகேசர் குறவஞ்சி, சரபேந்திர பூபாலக் குறவஞ்சி, சரபோசிராசன் குறவஞ்சி ஆகிய நான்கு குறவஞ்சி நாடகங்கள் தஞ்சை மராட்டியர் ஆதரவில் மலர்ந்திருக்கின்றன. இவற்றுள் கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் பாடிய நூல்களாகச் சரபேந்திர பூபாலக் குறவஞ்சியும் சரபோசிராசன் குறவஞ்சியும் ஆகிய இரு நூல்கள் இடம்பெற்றிருக்கின்றன. இரு நூல்களின் பாட்டுடைத் தலைவன் இரண்டாம் சரபோசியாவர். இவற்றுள் சரபேந்திர பூபாலக் குறவஞ்சி மட்டும் கிடைத்திருக்கிறது. மற்றொரு நூல் கிடைக்கவில்லை. ஒரே பாட்டுடைத் தலைவன்மீது ஒரே ஆசிரியரால் இருவேறு பெயர்களால் 'குறவஞ்சி' பாடியிருக்க முடியுமா என்பது ஆய்வுக்குரியது. எனவே இவ் ஆய்வாளர் கருத்துப்படி இரண்டும் இருவேறு நூல்களாக இல்லாமல் ஒரே நூலையே குறிக்கும் என்பதாகும். ஒரே நூலுக்கு இருவேறு பெயர்கள் வழங்கி வந்திருத்தல் கூடும். சரபேந்திரரும் சரபோசியும் ஒருவரே. எனவே இப்பகுதியில்

---

8. பன்னிருபாட்டியல் 217.

1. சகசிராசன் குறவஞ்சி
2. தியாகேசர் குறவஞ்சி
3. சரபேந்திர பூபாலக் குறவஞ்சி

ஆகிய மூன்று நூல்கள்பற்றி மட்டும் ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது.

— 0 —

3

சகசிராசன் குறவஞ்சி

இரண்டாம் சகசி மன்னர்மீது (1684-1712) பாடப் பெற்ற பல நூல்களுள் இக் குறவஞ்சியும் ஒன்று. இந்நூலைப் பாடியவர் முத்துக் கவிராயராவர்.

நூற் பதிப்பு

தஞ்சைச் சரசுவதி மகால் நூல் நிலையத்தில் இக் குறவஞ்சியின் ஓலைச்சுவடிகள் தெலுங்கு எழுத்தில் டி எடுக்கப் பெற்ற தமிழ் நாடகமாக இருக்கின்றன.[9] 'யட்சகானம்' எனும் பெயரில் 'தமிழிசை நாட்டிய நாடக'மாகப் போற்றப்படும் இக்குறவஞ்சி நூலினை வ. வேணுகோபாலன் பதிப்பித்திருக் கிறார்.[10]

நூலமைப்பு

விநாயகர் தருவு	1
கதாசங்கிரக அகவல்	1
உள் தருவு	1
வெளி தருவு	1
தருவுப் பாக்கள்	43
மங்கள தருவு	1

ஆக 50 பாடல்களைக் கொண்டிருக்கிறது.

---

9. சுவடி எண் 66/527 ( ); சுவடி எண் 67/528 ( ).

10. வ. வேணுகோபாலன் (ப ஆ), 'குறவஞ்சி', ஐந்து தமிழிசை நாட்டிய நாடகங்கள். சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர், 1980, பக். 83 155.

நூல் தொடங்குவதற்கு முன்னர்த் தோடய மங்களம், மங்கள தருவு, அகவல் ஆகிய தலைப்பில் மூன்று பாடல்கள் இருக்கின்றன. தோடய மங்களம் வடமொழியிலும் மங்களதருவு தெலுங்கு மொழியிலும் இருக்கின்றன. இதனைப் பதிப்பித்த ஆசிரியர் அப்படியே தமிழ் எழுத்துக்களில் பதிப்பித்திருக்கின்றார். 'அகவ'லில் குறவஞ்சிக் கதையின் சுருக்கமும் நூலாசிரியர் பெயரும் இடம்பெறுகின்றன.

இசை நாட்டிய நாடக மரபுக்குரிய இசைப் பாக்களும் இடையிடையே உரைநடைப் பேச்சும் அமைந்திருக்கின்றன.

பொதுவாகக் குறவஞ்சி நாடகங்களில் தலைவிக்குக் குறத்தி குறி கூறிப் பரிசுகள் பெறுவதுவரை ஒரு பகுதியாகவும் சிங்கன் சிங்கியைத் தேடி வருவதும் பின்னர் இருவரும் உரையாடி மகிழ்வது மற்றொரு பகுதியாகவும் அமைந்திருப்பது வழக்கம். முற்பகுதியில் தலைவியும் அவளைச் சார்ந்தோரும் மேடையிலிருந்து மறைந்து விடுவர். பிற்பகுதியில் அவர்கள் மேடைக்கு வருவதில்லை.

ஆனால் இக்குறவஞ்சி நாடகத்தில் இறுதிவரை தலைவியும் அவளைச் சார்ந்தோரும் வருகின்றனர். குறவனும் குறத்தியும் மகிழ்ச்சியாக உரையாடிக் கொண்டிருக்கும் நேரத்தில் தலைவி அவ்விடத்திற்கு வருகின்றாள். 'நீ சொன்ன குறிப்படித் தலைவன் இன்னும் வரவில்லையே' என்கிறாள். பின்னர்த் தலைவன் வர அவனை மணப்பதற்கு ஒப்புதல் கேட்க - அவனும் ஒப்புதல் அளிக்க - அனைவரும் வாழ்த்தக் கதை முடிவுறுகிறது.

குறவஞ்சி நாடகங்களில் சிங்கனின் நண்பனாகக் குளுவன் வருவது வழக்கம். அவனிடம் பறவைகளைப் பிடிக்கும் முறை, சிங்கியைக் காணாமல் தேடிய இடங்கள், பிரிவாற்றாமையால் புலம்புதல், சிங்கி இருக்குமிடத்தைத் தெரிவிப்பவர்களுக்குப் பரிசு அளித்தல் ஆகியவற்றைக் கூறுகின்ற நிகழ்ச்சிகள் நடைபெறுவது வழக்கம். மாறாக இக்குறவஞ்சியில் சூத்திரதாரனே குளுவனுக்குப் பதில் அந்தப் பாத்திரத்தையும் தானே ஏற்றுச் செய்கிறான்.

நூல் நுதலிய பொருள்

வீதியுலா வந்த தஞ்சைச் சகசி மன்னனைக் கண்டு காதல் கொள்கிறாள் இராசகன்னிகை. காதல் மிகுந்து, மனம் பொறுக்கமாட்டாமல் மன்மதன், திங்கள், தென்றல் ஆகியவற்றைப் பழித்துரைக்கின்றாள். கிளி, குயில், வண்டு, அன்னம் ஆகிய பறவைகளைத் தலைவனிடம் தூது விடுக்கின்றாள், தோழி கூறிய உபாயத்தின்படிக் குறத்தியிடம் குறி கேட்கிறாள்.

குறத்தி பூகோள இயற்கை, பூமியின் உற்பத்தி, மலைகளின் தோற்றம், மர வகைகள், விலங்குகள், பறவைகள், மூலிகை வகைகள், இரத்தினங்கள், நதி வளம், தெய்வத் தலங்கள் ஆகியவற்றை முதலில் கூறிய பின்னர்த் தன் சாதி, தான் குறி சொல்லிப் பரிசு பெற்ற விவரம் ஆகியவற்றையும் சொல்லிப் பூசை செய்வதற்கு வேண்டிய பொருள்களைப் பெற்றுத் தன்குல தெய்வத்தையும் பிற தெய்வங்களையும் வழிபட்ட பிறகே குறி சொல்கின்றாள்.

குறத்தியிடம் குறி கேட்ட இராசகன்னிகை பல பரிசுகளைக் கொடுக்கின்றாள். அதன் பின்னர்த் தன் தோழியைத் தலைவனிடம் தூது அனுப்புகின்றாள்.

இந்நேரத்தில் குறத்தியைக் காணாத குறவன் அவளைத் தேடி வருகிறான். பறவைகளை வேட்டையாடிக் கொண்டு வரும் சிங்கனைச் சூத்திரதாரன் விசாரணை செய்கிறான். சிங்கனுடைய திறமைகள் பலவற்றை அறிந்த சூத்திரதாரன் சிங்கி இருக்குமிடத்தைக் காட்டுகிறான்.

சிங்கியைக் கண்ட சிங்கன், அவள் அணிந்திருக்கின்ற அணி, ஆடைகளைப் பற்றிச் சந்தேகம் கொண்டு அவளிடமே கேட்டுத் தெளிவடைகிறான்.

இருவரும் மகிழ்ச்சியுடன் பேசிக்கொண்டு இருக்கின்ற நேரத்தில் இராசகன்னிகை அங்கு வருகின்றாள். 'குறத்தி சொன்ன சொற்படி தலைவன் சகசி மன்னன் தன்னை மண முடிக்க வரவில்லையே' என்று குறத்தியிடம் இராசகன்னிகை வருந்திக் கொண்டிருக்கின்ற நேரத்தில், மன்னன் பரிவாரத்

Ms. V. IND

துடன் வந்து கொண்டிருக்கின்ற செய்தியைத் தோழி வந்து சொல்கிறாள்.

பின்னர்த் தலைவி தலைவனைச் சந்தித்துத் தன்னை மணம் செய்துகொள்ள ஒப்புதல் கேட்க, தலைவனும் ஒப்புதல் அளிக்கி றான். தோழிகள் மங்கள வாழ்த்தொலி இசைக்க நாடகம் நிறைவுறுகிறது.

பாத்திரப் படைப்புக்கள்

சகசி மன்னன், இராசகன்னிகை, குறவஞ்சி ஆகிய மூவரும் முதன்மைப் பாத்திரங்களாகவும் சூத்திரதாரன், கட்டியக் காரன், சகி, சிங்கன் ஆகிய நால்வரும் துணைமைப் பாத்திரங் களாகவும் இடம்பெறுகின்றனர்,

சகசி மன்னன் :- இம்மன்னன் இந்நூலின் தலைவன். இவன் பெருமையைப் போற்றிப் புகழும் பொருட்டு ஆசிரியர் இக்குறவஞ்சியை ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொள்கின் றார். இந்நூலில்,

''சியாமள மேனியன் : கமலம் போன்றவன்;
பூ மன்னர் பணியும் தாளினன்; குளிர் சந்திர
முகத்தினன்; புருவம் வளைத்த வில்லினன்;
மாலை தவழும் மார்பினன் ''

என்று சகசியின் உருவம் வருணிக்கப்படுகிறது.

சகசியின் பெருமைகளையும் பண்பு நலன்களையும் நேரில் கண்டு வியந்த முத்துக்கவிராயர் தாம் எழுதிய இக்குறவஞ்சியில்,

''பகைவர்க்குப் பாஞ்சாலன்; போர்க்களத்தில்
வீமன், விக்கிரமாதித்தன் போன்றவன்; வில்லி
னில் விசயன்; பிற நாட்டு அரசர்கள் நாள்
தோறும் வந்து பணியும் சிறப்புடையவன்; சீவ
கனைப் போன்ற இசைப்புலமை பெற்றவன்;
கொடையினில் கர்ணன்; பூ மடந்தையைப்
போலவே பொறுமை உடையவன்; பொய்
சொல்லாத அரிச்சந்திரன்; குபேர வவ்மூடை

யவன்; காவிரி நாடன்; நயமுத்தமிழ்
நாவாணரே புகழேத்தும் நரபதி ''

என்று போற்றுகின்றார்.

இசாசகன்னிகை :- சகசி மன்னன்மீது காதல்கொண்ட இவள் இக்குறவஞ்சித் தலைவி. கிளி போலப் பேசுகிறாள்; அன்ன நடை பயில்கிறாள்; விழிகள் அம்பு போன்றிருக்கின்றன; அலையில் அமுதம் போன்ற இவள் இரதிபோன்ற அழகுடன் இருக்கிறாள்; வாச மலர்களைக் கூந்தலில் சூடுகிறாள்; மார்பினில் செம்பொன் மணிகள் தவழ்கின்றன; காலில் சிலம்பு, நெற்றியில் இரத்தினச்சுட்டியையும் வட்டப்பொட்டையும் அணிந்திருக்கிறாள்.

வீதியுலா வந்த தலைவனைக்கண்டு காதல் கொள்கிறாள். மன்மதன், திங்கள், தென்றல் ஆகியன தனக்குத் துன்பம் தருவதாக நினைந்து அவைகளைப் பழித்துப் பல சொல் சொல்கிறாள். குளிர்ச்சியைத் தரும் சந்தனம் சுடுகின்றது; சிவந்த தனங்கள் கொதிக்கின்றன; இத்தகைய செயல்கள் சகசி மன்னனைத் தழுவினால் நீங்கிவிடுமென்று கூறுகிறாள்.

தன் நிலையைத் தலைவனிடம் எடுத்துச் சொல்லி அவன் அன்பைப் பெறுவதற்காக அன்னம், கிளி, வண்டு, குயில் ஆகிய பறவைகளைத் தூது விடுக்கிறாள். ஒவ்வொரு பறவையின் நற்குணங்களைப் புகழ்ந்து பேசி அவற்றைத் தூது விடுக்கிறாள்.

தூது சென்ற பறவைகள் திரும்பி வராமல் இருந்ததைக் கண்ட தலைவிக்குக் காமம் மிகுந்து வேதனைப்பட்டுத் தோழியிடம், ''தோழியே ! பொருமுகின்ற தனங்களை இரவெல்லாம் உறக்கம் வராமல் பிசைந்தேன். தூய்மைப்படுத்தப்பட்ட மாணிக்க மணிகளை உடைய மேடை மீதில் வீற்றிருக்கும் சகசேந்திரனை வந்து என்னை அணையச் சொல்வாய்'' (ப.97) என்று கூறுகிறாள்.

தலைவி கேட்டுக்கொண்டதற்கிணங்கத் தோழி குறத்தியை அழைத்து வருகிறாள் பூகோளப் பிரமாணம்.தேசங்கள், மலைகள், மலைவளம், விலங்குகள், பறவைகள், மருந்து வகை

கள், நதிகள், தலங்கள், சாதிவளம் ஆகிய பல செய்திகளைக் குறத்தியிடம் கேட்டு அறிந்த பிறகு தனக்குரிய குறியினையும் கேட்கிறாள். அதன்பிறகு தோழியைத் தலைவனிடம் தூது விடுக்கிறாள்.

சகசி மன்னன் பரிவாரத்துடன் வந்திருக்கின்ற நிகழ்ச்சியைத் தோழி தலைவியிடம் கூறுகிறாள். தலைவி சகசி மன்னனைக் கண்டு பணிந்து வணங்கித் தன்னை மணம் செய்து கொள்வதற்கு ஒப்புதல் கேட்கிறாள். மன்னனும் தமது ஒப்புதல் அளிக்க அங்குக் கூடியிருந்தோர் வாழ்த்துகின்றனர்.

குறவஞ்சி :- பெண்கள் அனைவரும் கண்டு மகிழும் படியாகத் தன்னை ஒப்பனை செய்து வீதியில் நடந்து வருகின்ற அழகை ஆசிரியர் கூறுகின்றார். அஃதாவது, நீண்டு தொங்கிய கூந்தலை முடித்து. மலர்களைச் சூடி. தொங்கும் மாலை அணிந்து, பச்சைப் பொட்டும் வச்சிரச் சுட்டியும் நெற்றியில் இலங்க, நெடுவிழி சுழல, இளமையில் பயின்ற மழலைப் பேச்சுக்கள் கலகலவென்றொலிக்க, காதில் தந்த ஓலை இலங்க, தாமரை முகத்தில் ஒளி வீச, கழுத்தில் சங்குத் தாலி விளங்க, பொன்னின் மணியும் பூனைக் காய்ச்சியும் மின்ன, சிலம்பு மணிகள் ஒலிக்க, கிளி போலக் கொஞ்சி, குயில் போலக் கூவி, மயில் போல மெல்ல நடந்து, கண்ணிமைகளில் வண்ணப்பொடிகளை அழகுறப் பூசி, பெரிய முலைகள் குலுங்க, குறக்கூடை இடையினில் கொண்டு, சாத்திரங்கள் சொல்லவல்ல மாத்திரைக் கோல் கொண்டு இராசகன்னிகைக்குக் குறி சொல்வதற்காகவே வருகிறாள்.

தலைவியிடம் பல்வேறு வளங்களையும் தன்னைப் பற்றியும் தன் சாதியைப் பற்றியும் தான் குறி சொல்லிப் பரிசு பெற்ற பாங்கினையும் கூறிப் பின்னர்த் தலைவியின் கையைப் பார்த்துக் குறி சொல்லிப் பரிசுகள் பலவற்றைப் பெறுகிறாள்.

குறத்தியைக் காணாத சிங்கன் அவளைத் தேடி வருகிறான். இருவரும் ஓரிடத்தில் சந்தித்து மகிழ்ச்சியுடன் உரையாடிக்கொண்டு இருக்கின்றனர். இந்நேரத்தில் தலைவி அவர்களிடம் வந்து தலைவனுடன் தன்னையும் சேர்த்து வைக்கக் கோருகிறாள். இறுதியில் சகசி மன்னன் வருகின்ற நேரத்தைக் குறித்துச் சொல்லி அதன்படித் தலைவன் ஒப்புதல் அளிப்பதுடன் கதை முடிகிறது.

சூத்திரதாரன்:— நாடகத்தை அறிமுகம் செய்து விளக்கம் கொடுத்து நாடகத்தை நடத்துகின்றான். கட்டியக்காரனையும் ஏனைய பாத்திரங்களையும் கதை நிகழ்ச்சிகளையும் நடத்திச் செல்கின்றான் வசன நடையில் இவன் பேச்சுக்கள் அமைகின்றன. அக்கால வழக்கில் இருந்த சொற்கள், பிறமொழிச் சொற்கள் இவன் பேச்சில் இடம்பெறுகின்றன. ஆசிரியரே இவன் பாத்திரத்தை ஏற்றுச் செய்கிறார் என்று கூறலாம்.

கட்டியக்காரன் :— நாடகத்தை தொடங்கி வைப்பதோடு இவன் பங்கு முடிந்து விடுகிறது.

சகி ;— தலைவி இராசகன்னிகையின் உயிர்த்தோழியாக வருகின்றாள். குறத்தியைக் குறி சொல்வதற்கு அழைத்து வருகிறாள். தலைவிக்காகத் தலைவனிடம் தூது செல்கிறாள்.

சிங்கன் :— குறவஞ்சியின் கணவன், சிங்கியைக் காணாமல் அவளைத் தேடிச் சகசி மன்னன் வாழும் சோழ நாட்டிற்கு வருகிறான். அவன் வருகின்ற தோற்றத்தை ஆசிரியர், ''மேனி மினுக்கிக் கொண்டு, மீசையை முறுக்கிக் கொண்டு, புகையும் குடித்துக்கொண்டு, கூனிக்கூனிக் கொண்டு, குருவிக் கூட்டங்களைத் தேடிக்கொண்டு, சங்கினால் செய்த பாசி மணிகளை அணிந்து கொண்டு, தழையை ஒட்டிக்கொண்டு, பட்டை நாமம் தீட்டிக்கொண்டு வருகிறான்'' என்கிறார் பறவைகளை வேட்டையாடுகின்ற சிங்கன் சிங்கியைக் காணாமல் புலம்புகிறான். இறுதியில் சிங்கியைக் கண்டு மகிழ்ச்சியுடன் இருவரும் பேசிக் கொள்கின்றனர்.

இன்னிசை நாட்டியப் பனுவல்

இந்நூலினைப் பதிப்பித்த ஆசிரியர் இக்குறவஞ்சியைத் 'தமிழ் இசை நாட்டிய நாடகம்' (யட்சகானம்) என்று பதிப்பித்திருக்கின்றார். பாடல்கள் ஆகிரி, கண்டாரவம், காப்போதி, சங்கராபரணம், சாரங்கா, சௌராட்டிரம், தேவகுப்தி, தோடி, நாட்டை, பைரவி, இரேவகுப்தி, ஸ்ரீ ஆகிய பன்னிரு இராகங்களில் அட, அடதாள சாபு, ஆதி, சம்பை, சாபு ஆகிய ஐவகைத் தாளங்களில் பாடப்பெறுகின்றன.

நாடகநூல்

ஏழுவகைப் பாத்திரங்கள் இந்நாடகத்தில் இடம்பெறுகின்றனர். தஞ்சை, சிங்கார வனங்களில் இந்நாடகக் கதை நிகழ்கிறது. சகசி மன்னரின் ஆட்சிக் காலத்தில் அரண்மனை நாட்டிய சாலையில் இக்கதை நாடகமாக அரங்கேற்றி நடிக்கப்பெறுகிறது பாடல்கள் மூலமாகவும் உரைநடை கலந்த பேச்சுக்களின் மூலமாகவும் நாடகம் நடைபெறுகிறது. குறவஞ்சி—தலைவி; சூத்திரதாரன்—சிங்கன் ஆகியோர் பேசும் உரையாடல்களும் இடம்பெறுகின்றன. நாடகத்தைப் பார்ப்போரும் நாடகக்கதையைக் கேட்போரும் எளிதில் புரிந்து கொள்ளும் முறையில் ஆசிரியர் இக் குறவஞ்சியை இயற்றியிருக்கின்றார்.

இறைவன் பெருமை

சகசி மன்னனின் பெருமைதனைக் கூற எழுந்த நூலாக இந்நூல் இருப்பதனால் இறைவன் பெருமை குறைந்த அளவிலேயே காணப்படுகிறது. திருமாலின் மகன் நான்முகனிடமிருந்து உயிர் தோன்றுகின்றமையைக் குறத்தி இராசகன்னிகையிடம் கூறுகின்றாள்.

''பாற்கடலில் பள்ளி கொள்ளும்
பர வாசுதேவன்
உந்திமேல் கமலத்தில்
உதித்த வேதன்'' (பா: 19 ப 104)

என்பதே அப் பாடலில் வருகின்ற ஒரு பகுதியாகும்.

குறத்தி குறி சொல்வதற்கு முன்னர் வள்ளிநாயகி, மாணிக்க நாச்சி, சண்டிகாதேவி, கங்காளி, காளி, கௌரி, ஓங்காரி, பிடாரி, சரசுவதி, நீலி, மாதங்கி, நிட்களானந்தி, சூலி, பகவதி, துர்க்கை, மகேசுவரி, வீரன், ஐயனார், வீரப்பன், சாமுண்டி, காலபைரவன், காத்தாரண்ணன், முனி, கொல்லாபுரத்தம்மன், கணபதி ஆகிய தெய்வங்களின் பெயர்களைக் கூறுகின்றாள்.

உவமைகள்

'போல' எனும் பொருளிலேயே பல உவமைகள் இடம் பெறுகின்றன.

பெண்களின் முகத்திற்குத் தாமரையையும் மொழிக்குக் கிளி, கரும்பு ஆகியவற்றையும் நடைக்கு மயில், அன்னம் ஆகிய வற்றையும் இசைக்கு வண்டையும விழிக்கு அம்பையும் வேலையும் பல் வரிசைக்கு முல்லையையும் இடைக்கு மினலையும் உவமைகளாகக் கூறுகின்றார்.

சகசி மன்னனின் பொறுமைக்குப் பூ மடந்தையை ஒப்பிடுகின்றார்

உள்ளங்கையில் வைத்த நெல்லி போல உள்ளத்தில் எண்ணிய உளவையெல்லாம் குறத்தி சொல்லும் திறனுடையவளாக இருக்கிறாள்.

குறத்தியின் நெற்றியில் அணிந்திருக்கும் இரத்தினச்சுட்டி மின்மினிப் பூச்சி போலத் தொங்குகிறது; பொன்னு வண்டு போல மின்னுகின்ற பொற் சரிகைச் சேலையைக் குறத்தி அணிந்திருக்கின்றாள்.

இயற்கை வளம்

சோழ நாட்டில் தென்னை மரங்கள், செண்பக மரங்கள், மலர்ச் சோலைகள் அதிகம் காணப்படுகின்றன மலர்களை அம்பாக மன்மதன் பயன்படுத்தி மகளிர்மீது எய்கிறான். தாமரை மலர் மகளிர் முகத்திற்கு ஒப்பிட்டுக் கூறப்படுகிறது. காதல் வேதனையில் உள்ளம் வாடுகின்ற தலைவி, திங்கள், தென்றல் ஆகியன தனக்குத் துன்பம் தருவதாக நினைந்து அவற்றைப் பழித்துப் புலம்புகின்றாள்.

பறவைகள் :- கிளி, குயில் மகளிர் பேச்சுக்கும் மயில், அன்னம் மகளிர் நடைக்கும் வண்டு இசை இனிமைக்கும் உவமைகளாக ஆசிரியர் கூறுகின்றார். கிளி, அன்னம், குயில், வண்டு ஆகிய நான்கு பறவைகளையும் தலைவி தலைவனிடம் தூது விடுக்கின்றாள். ஒவ்வொரு பறவையின் பண்பு நலன்களைப் பாராட்டியதன் பின்னரே அவற்றைத் தூது விடுக்கின்றாள். பச்சைக்கிளி, பச்சை மயில், பச்சைப் புறா, பாரா, அசுணப், இசைக்குயில். இராசாளி, வல்லூறு, இனிய கேகயம், கண்ட பேரண்டம், சக்கரவாகம், வெள்ளைக்கிளி, தணலுண்ணும் பறவை, தழைத்த இருவி, கருங்கிளி, உமாபறவை, அன்னம்

ஆகிய பதினேழு பறவைகளைப் பல நாடுகளுக்குச் சென்ற குறத்தி பார்த்ததாகத் தலைவியிடம் கூறுகின்றாள் கொக்கு, மடையான், உள்ளான், நாப்பாமலார். நமறையான், வக்கா தண்ணீர்க்காக்கை, நாரை, தாரா முதலான பறவைகள் பல வற்றைச் சிங்கன் வேட்டையாடி வருகின்றான்.

விலங்குகள் :— சிங்கம், மதயானை, கரடி, கருங்குரங்கு, வரி வேங்கை, மான், பன்றி,முயல் ஆகிய விலங்குகளைக் குறத்தி பல நாடுகளில் கண்டதாகக் கூறுகின்றாள்.

மலைகள் :— சிங்கமலை, காந்தமலை, சின்னமலை,பன்றி மலை, தங்கமலை, வெள்ளிமலை, சதுரமலை, பொதியமலை, சக்கிரமலை, காந்தமலை, சையமலை, குடகுமலை,உக்கிரமலை, கோணமலை, இரத்தினம் ஒங்குமலை, விந்தியமலை, சுவாமி மலை ஆகிய பதினேழு மலைகளுக்குச் சென்றதாகக் குறத்தி கூறுகின்றாள்.

மலை உச்சிகளில் எல்லாம் மேகம் வந்து நாள்தோறும் தவழ்கின்றது;சுனை நிறைந்து திரண்டு அருவியும் பாய்கின்றது; அகில், நாவல், பலா, விளா, அருங்கமுகு, வாழை, ஆச்சா, மா, வன்னி, சுரபுன்னை, மூங்கில், செஞ்சந்தனம், தேக்கு, மரா, முதிர்தீபம், மிளகு, உரோம விருட்சம், வேங்கை, கருங்காலி, புன்னை, விருட்சவகை போன்ற பல மரங்கள் மலைகளில் விளை கின்றன.

நதிகள் :- மந்தாகினி, யமுனை, பம்பை, முகரி, சிந்து, தாமிரபரணி, சந்திரபடாகை, பிரயாகை, கோதாவரி, சரயு, பரத்துவாசி, கங்கை, கௌதமிவேணி, கௌசிகை, சங்க வாகினி, கோமதை, நர்மதை, பிங்களை, துங்கபத்திரை, கோணாத்திரி, கம்பை, பெண்ணை, பாஞ்சாலி, சூரினி, வைகை, மணிகர்ணிகை, ஞானம், வாணி, பாலி, நம்புகலை, நபிரஞ்சனி, கோணை, மந்தாகினி, குண்டலை ஆகிய பல நதிகளைக்கண்டு வருகிறாள் குறவஞ்சி.

ஏனையவை

பூகோளப் பிரமாணம் :- பாற்கடலில் பள்ளி கொண் டிருக்கும் திருமாலின் உந்தியில் நான்முகன் தோன்றுகின்

றனன்; நான்முகனே இவ்வுலக உயிர்களைத் தோற்றுவிக்கின்றனன்; உயிரிலிருந்து ஆகாயம், உப்பு, வாயு, தேயு, நீர், மண், பூமி போன்றவை ஒன்றிலிருந்து ஒன்றாகத் தோற்றம் பெறுகின்றன. இப்பூமியில் மேருமலை, பொன்மலை, பர்வத மலை, ஒன்பது கண்டங்கள் தோன்றுகின்றன. கிழக்கில் சம்புத் தீவும் தெற்கில் நாவலந்தீவும் மேற்கில் பசிபிக் கடலும் வடக்கில் மாலத்தீவும் தோன்றுகின்றன. நான்கு தீவுகளும் நான்கு வகையாகவும் இதைச் சூழ்ந்து ஏழு கடல்கள் ஏழு விதமாகவும் இதைச் சூழ்ந்து ஏழு தீவுகளும் காட்சியளிக்கின்றன. கடலுக்கு அப்பால் இருண்டதொரு உலகம் இருக்கிறது. இந்த இருளுக்கு அப்பால் சக்கரவாளகிரி இருக்கிறது. இப்படியே இப்பூவுலகம் காட்சியளிக்கிறது.

தேசங்கள் :- 56 தேசங்களுக்குச் சென்று குறி சொல்லிப் பரிசுகள் பெற்று வந்ததாகக் கூறுகிறாள் குறத்தி. ஆனால் 32 தேசங்களின் பெயர்கள் மட்டுமே காணப்படுகின்றன.[11]

அரசர்கள் :- சகசி மன்னன் பெருமையைக் கூற நினைந்த ஆசிரியர் ஏனைய புகழ்பெற்ற மன்னர்களோடு ஒப்பிட்டுக் கூறியமையைக் காண முடிகிறது அரிச்சந்திரன், அர்ச்சுனன், கர்ணன், குபேரன், சீவகன், விக்கிரமாதித்தன், வீமசேனன் ஆகிய எழுபெரு வேந்தர்களோடு ஒப்பிட்டுக் கூறுகின்றார்.

11. அங்கதம், அச்சம், ஆரியம், ஒட்டம், ஒட்டியம், கலிங்கம், கங்கம், கருநாடகம், குகுதம், குடகம், கூர்ச்சரம், கேகயம் கேரளம், கொல்லம், கோசலம், கௌடம், கௌந்திகம், சாவகம், சாளுவம், சிங்களம், திரிகூடம், திரிலிங்கம், துளுவம், பப்பரம், பாஞ்சாலம், மகதம், மச்சம், கல்யாணம், சீனம், மலையாளம், வங்கம், மாளுவம்.

தலங்கள் :- 34 தலங்களுக்குக் குறத்தி சென்று வந்ததாகத் தலைவியிடம் கூறுகிறாள்.[12]

குறிகளும் இரேகைகளும் :- இங்கிதக்குறி, உச்சிதக்குறி, கைக்குறி ஆகிய குறிகள் சொல்வதிலும் சோதிட சாத்திரம் பார்ப்பதிலும் சிறந்தவளாகக் குறவஞ்சி இருக்கிறாள். பதுமரேகை, சுவர்ணரேகை, மச்சரேகை, அங்குசரேகை, சங்கு சக்கரரேகை, தானியரேகை, புத்திரேகை, மச்சரேகை, வித்தியா ரேகை, ஐயரேகை ஆகிய இரேகைகள் இராசகன்னியின் கையில் இருக்கின்றன.

கருவிகள் : சாயும் திரிக்கை, தெள்ளி, கண்ணி, சாடி ஆகிய கருவிகளைக் கொண்டு சிங்கன் பறவைகளை வேட்டையாடிப் பிடிப்பதற்குப் பயன்படுத்துகிறான்.

அணிகலன்கள் :- மகளிர் அணிகின்ற பலவகை அணிகலன்களின் பெயர்கள் காணப்படுகின்றன. இவ் அணிகலன்களை மகளிர் அவரவர் தகுதிக்கும் வசதிக்கும் ஏற்ப அணிந்திருக்கின்றமையை முத்துக்கவிராயர் குறிப்பிடுகின்றார்[13]

---

12. தலங்கள் வருமாறு : அகோபிலம், மறைக்காடு, அனந்த சயனம், ஆரூர், இடைமருதூர், ஐயாறு, கதிர் காமம், கன்னியாகுமரி, காசி, காளத்தி, காஞ்சிபுரம், சகந்நாதம், சிதம்பரம், சிவாயம், சீர்காழி, செங்காடு, சேது, சேறை, திருவெண்காடு, திருக்குடந்தை, திருத்தணி, திருப்பதி, திருப்பனந்தாள், நாகை, பதரி, பரங்குன்று, பழனி, பனங்காடு, புகலூர், பூந்துருத்தி, மதுரை, மல்லிகார்ச்சுனம், வடமதுரை, ஸ்ரீரங்கம்.

13. அணிகலன்கள் : அரி, அட்டி (அட்டிகை), ஆரம், இரத்தினச் சுட்டி ஒட்டியாணம், ஓலை, காடு, கண்டசரம், கல், சிலம்பு, சுட்டி, செம்பொன், தங்கக்கட்டி, தண்டை, நவமணி, தங்கக்கெண்டை, பசுங்குழை, பல்லி முட்டை, பூனைக்காச்சி, பொன்னாபரணம், பொன்னின் மணி, மாடை, மாறாப்பு, முத்துக்குச்சு, முத்துக் கொண்டை, முத்துப் பவளம், முத்து மாலை, முத்து மூக்குத்தி, வச்சிர ஓலை, வச்சிரச்சுட்டி.

ஆடைகள் :- ஆடை, துகில் எனும் சொற்கள் ஆடையைக் குறிப்பனவாக இடம்பெறுகின்றன. சேலையில் தங்கச் சேலை, பூம்பட்டு நாறு, பொற்சரிகைச் சேலை ஆகியவற்றை மகளிர் அணிந்திருக்கின்றனர்.

இரத்தின வகைகள் :- மலைகளில் பலவகையான இரத்தினங்கள் விளைவதனைக் குறத்தி கூறுகிறாள். ஆனையில் முத்து, நவரத்தினத்தில் முத்து ஆகியன விளைகின்றன.

மருந்துகள் :- காயம், சமனகரணி, சந்தானகரணி, பாம்பு மருந்து, கருநெல்லி முதல் தூய வெள்ளைச்சாரணி, குண்டு விளங்காய், விளக்குக் குளகு, மோகனமரம் ஆகிய மருந்துகளைக் குறத்தி பல நாடுகளில் கண்டதாகக் கூறுகிறாள். பொட்டக்கண், செவிட்டுக்காது, வயிற்றுப்போக்கு, கூத்தி மருந்து ஆகிய மருந்து வகைகள் அறிந்தவனாகச் சிங்கன் வருகிறான்.

பூசை செய்யும் முறை :- குறி கேட்பதற்கு முன்னர் வழிபடுவதற்கு வேண்டிய பொருள்களைக்கூறி, எவ்வாறு வழிபட்டுக் குறி கேட்க வேண்டும் என்பதை யெல்லாம் குறத்தி தலைவியிடம்,

''பவளத்தால் கால் நிறுத்திப் பரந்த பந்தலிட்டுக் கட்டித் தூய மலர் மாலை தூக்கிக் கமுகும் வாழையும் நட்டுக் குலைத்த இளநீர் கட்டி, குமுகுமுவென்ன மணம் குலவி நாற்-காதம் வீசத் தரை மெழுகி நல்ல சந்தனத்தில் கோலமிட்டுப் பெருகத் திருமெழுகினால் பிள்ளையார் பிடித்து வைத்து, அருகம் புல்லைத் தலையில் சூட்டி, பிள்ளையாரை வணங்கி, வாசனை கொண்ட மலர்களையும் சந்தனத்தையும் சார்த்தி, நூறு தேங்காய் உடைத்து, மந்திரம் சொல்லிப் பேருடனே தூபதீபம் பெருகக் கொடுத்து, நல்ல தாம்பூலம் நிவேதித்துச் சாலிகை இரண்டு வைத்துப் பூம்பட்டு நூலும் வைத்துப் பொன்னாபரணம் வைத்து மனத்தில் குறி நினைத்து வணங்கிக் கைகட்டி நின்று குறி கேட்க வேண்டும்'' என்கிறாள்.

சாதிவளம் :- தேசக்குறச்சாதி, காட்டுக்குறச்சாதி, மலைக் குறச்சாதி, தேவக்குறச்சாதி எனும் நால்வகைக் குறச்சாதி-

களில் இந்நூலில் வருகின்ற குறவஞ்சி மலைக்குறச்சாதியைச் சேர்ந்தவன். இவன் கூற்றிலிருந்து அறியலாகும் குறச்சாதி வளம் வருமாறு :

ஆமை, அரவம், பூனை, முதலை, நண்டு, ஊமன், கூகை, அழுங்கு, ஓங்கு, காகம் முதலியவற்றைத் தின்னமாட்டார்கள்; ஆனைக் கொம்பால் தினை குத்தி அரிசியை அமுதாக்கித் தேனைக் கலந்து உண்கின்றனர்; வெள்ளி, பொன் முதலியவற்றைப் பரிசமாகவும் கொடுக்கமாட்டார்கள்; அதே நேரத்தில் அவற்றை அணியவும் மாட்டார்கள்; சங்குத் தாலியைக் கட்டுகின்றனர்; சங்கு ஓலை, சங்குப்பாசி, பூனைக்காச்சி, தாவடம் ஆகியவற்றை அணிகின்றனர்; குறத்தி பிள்ளை பெற்றால் குறவன் பெருங்காய மருந்தைக் குடிக்கிறான்; குறத்தி தேடி வந்திடக் குறவன் சாப்பிடுகிறான்; கொழுந்தன் மாருடன் கூடிக்குலவ இசைய மாட்டார்கள்.

சிங்கன் கூற்றிலிருந்து தெரியவரும் குறச்சாதி வளம் வருமாறு :

களரி சுற்றல், முறம் கட்டல், ஓட்டப்பானை கட்டல், ஓட்டைச் சட்டி கட்டல், காது கட்டல், ஆகியவற்றைச் செய்கின்றனர். ஆமை, ஆந்தை, கொக்கு, மான், பூனை, பறந்து போன பறவை ஆகியவற்றை வேட்டையாடுகின்றனர்.

சொற்கள் : அக்கால வழக்கில் இருந்த சொற்கள், அடுக்கு மொழிச் சொற்கள், பிறமொழிச் சொற்கள் ஆகியவற்றை ஆசிரியர் ஏற்ற விடங்களில் எடுத்தாண்டிருக்கின்றார். மொழியியல் அறிஞர்கட்கு இச்சொற்கள் மிகவும் பயன்படத்தக்க வகையில் அமைந்திருக்கின்றன.

அம்மே, அடா, அடி, ஆச்சுது, யக்கா, நாலு, மனிசர், யண்ணே, வயத்து, வவுத்து முதலான பல சொற்கள் குறவன், குறத்தி பேசுகின்றனவாகப் பாடல்களிலும் வசனங்களிலும் இடம்பெறுகின்றன.

கலகலப்பு, கூனிக்கூனி, கொஞ்சிக் கொஞ்சி, தத்தித்தத்தி, பாடிப்பாடி, மெள்ளமெள்ள, விக்கிவிக்கி போன்ற 27 சொற்கள் அடுக்குச் சொற்களாகக் கையாளப்படுகின்றன. என்னஎன்ன, கடகட, நல்லநல்ல, யார்யார் போன்ற 10 அடுக்குமொழிச் சொற்கள் வசன நடையில் இடம்பெறுகின்றன.

அஷ்டபர்வதம், சோமாஸ்கந்தர், திருஷ்டி, பூஷணம், லோகம், வஸ்து, விஸ்தாரம், இஷ்டதேவதை, சந்தோஷம், ஜாதி, பாஷை, ஸ்தலம் முதலான 101 வடசொற்களை ஆசிரியர் கையாண்டிருக்கிறார்.

சபாஷ், பேஷ், ஆகிய பிறமொழிச் சொற்களும் மூடே என்ற தெலுங்குச் சொல்லும் இடம்பெறுகின்றன.

பட்டப்பகல், பாலும் தேனும் ஆகிய சொற்களும் காணப் படுகின்றன.

★ — ★

4

தியாகேசர் குறவஞ்சி

திருவாரூரில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள தியாகேசப் பெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பெற்ற நூல் இத் 'தியாகேசர் குறவஞ்சி'. இந்நூலாசிரியர் பெயர் தெரியவில்லை. ஆனால் தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர்களில் இரண்டாம் சகசியைப் பற்றிய குறிப்புக்கள் இந்நூலில் காணப்படுகின்றன. எனவே இம்மன்னன் ஆட்சிபுரிந்த காலத்தில் (1684-1712) இந்நூலாசிரியர் வாழ்ந்திருக்கின்றார் என்று கூறுவது பொருந்தும்.

நூலமைப்பு

குறவஞ்சி நாடகங்களில் காப்பு தோடயம், மங்களம் ஆகிய பாடல்கள் முதலில் இடம்பெற்ற பின்னர், மேடையில் கட்டியக்காரன் தோன்றிக் கணபதியை வணங்கிய பின்னர் உலா வருகின்ற தலைவனை அவையோர்க்கு அறிமுகப்படுத்துவதே மரபாகும். ஆனால் தியாகேசர் குறவஞ்சியில் கட்டியக்காரன் தொடர்பான செய்திகள், தலைவன் உலா வந்த நிகழ்ச்சியைத் தலைவி பார்த்தல் ஆகியன இடம்பெறவில்லை. மாறாகத் தலைவியை நேரடியாகக் கூறி அவள் தலைவன்மீது காதல் கொண்டதைக் கூறுகின்றார் ஆசிரியர்.

அதேபோன்று சிங்கன் வருகை கூறும் நாடகப் பிற்பகுதியிலும் சில கூறுகளை விடுத்து விடுகின்றார். பொதுவாகச் சிங்கன், தன் நண்பன் நுளுவனிடம் பறவைகளை வேட்டையாடும்பொழுது தன் மனைவியின் நினைவுவரப் பலவிடங்களிலும் அவளைத் தேடிக் காணாமல் வருத்தம் அடைவான்; நுளுவனும அவனுடன் சேர்ந்து குறத்தியைத் தேடுவான்; இறுதியில் சிங்கனும்சிங்கியும் ஒருவரையொருவர் சந்தித்துத் தலைவனுக்கு வணக்கம் செலுத்துவர். இந்நிகழ்ச்சிகளே குறவஞ்சி நாடகங்களில் வழக்கமாக இடம்பெறும். ஆனால் இக்குறவஞ்சியில் சிங்கன் பறவைகளை வேட்டையாடுதல் கூறப்பெறவில்லை. ஏனைய நிகழ்ச்சிகளும் மிகச் சுருக்கமாகவே காணப்படுகின்றன.

67 பாக்களைக் கொண்ட இக்குறவஞ்சி 60 உள் தலைப்புக்களில் அமைகிறது.

காப்பு, தோடயம், மங்களம் ஆகிய பகுதிகளில் வாதாவி விநாயகர், விட்டவாசற்கணபதி, சகசி, வேலவன், கலைமகள்' முருகன், தியாகேசர், மாயவன், அயன். முசுகுந்த மன்னன், சுந்தரர், கவிஞர், அறுபதின்மூவர், தென்கமலைப்பதி, மந்திர வேதியர், பண்ணிசைப்புலவர். பாணிக்கூத்தர், உமை, இலக்குமி, கார், நதி, கற்றவர்கள், அரசர்கள், பதிகம், செந்தமிழ், வேளாளர் ஆகியோரை வாழ்த்துகின்றார்.

யாப்பு

விருத்தம், சந்த விருத்தம், கட்டளைக் கலிப்பா, அகவல், தாழிசை, தரவு கொச்சகக் கலிப்பா, கொச்சகக் கலிப்பா ஆகிய இயற்றமிழ்ச் செய்யுட்களில் பாக்கள் அமைகின்றன.

நூல் நுதலிய பொருள்

திருவாரூர்த் தியாகேசர் வீதியுலா வந்ததைக் கண்ட இராசமோகினி அவர் அழகில் மயங்கிக் காதல் கொள்கின்றாள். காதல் மயக்கத்தில் வெண்ணிலா, தென்றல், மன்மதன் ஆகியோரைப் பழித்துரைக்கின்றாள். அவள் தோழி மோகனரேகை அவளுக்குத் தேறுதல் மொழிகள் கூறிக் குறத்தியிடம் குறிகேட்க வேண்டுமென்கிறாள்.

குறி சொல்ல வந்த குறத்தி, பல்வேறு வளங்களையும் தன்னைப் பற்றியும் தன் சாதியைப் பற்றியும் கூறி இறுதியில் தலைவியின் உள்ளம் கவர்ந்த தியாகேசர் மெய்வனப்பைக் கூறுகிறாள். குறத்தி பல சகுனங்களைக் கூறித் தலைவன் தலைவியைச் சேரும் நாளையும் கூறிப் பரிசுகள் பலவற்றைப் பெற்றுச் சென்று விடுகிறாள்.

குறத்தியைக் காணாத சிங்கன், தன் நண்பன் குளுவனுடன் சேர்ந்து அவளைப் பல்வேறிடங்களிலும் தேடி வருகின்றான். இறுதியில் அவளைக் கண்டு, ஊடல் கொண்டு கலந்துரையாடுகின்றான். இறுதியில் ஊடல் நீங்கி மன-

மகிழ்ச்சியுடன் இருவரும் இருக்கின்றனர். இதனுடன் நாடகக் கதை முற்றுப்பெறுகிறது.

பாத்திரப் படைப்புக்கள்

திருவாரூர்த் தியாகேசர், இராசமோகினி, குறவஞ்சி, சகசிமன்னன் ஆகிய நால்வரும் முதன்மைப் பாத்திரங்களாக-வும் சிங்கன், குளுவன், சகி ஆகிய மூவரும் துணைமைப் பாத்திரங்களாகவும் இடம்பெறுகின்றனர்.

தியாகேசர் :- இந்நூலின் பாட்டுடைத் தலைவராகத் திருவாரூர்க் கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற தியாகேசர் கூறப்படுகின்றார். தியாகேசப் பெருமான் இந்நூலில் தலைவ-ராக இருக்கின்றமையினால் இறைவனுக்குரிய பல்வேறு பெயர்களைப் பாகளில் ஆசிரியர் பயன்படுத்தி இருக்கின்றார். இவ்வாறு பெயர் சுட்டி அழைக்கின்றதனைப் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகிறது.

1. 'தேவர்களுக்குத் தலைவன்' என அழைத்தல்[1]
2. 'உடலுறுப்பு'க்களைக் கொண்டு அழைத்தல்[2]
3. 'துரை' எனும் பெயருடன் தலைவன் பெயரை இணைத்து அழைத்தல்[3]
4. தலைவனுக்கு விருப்பமான மலர், மாலைகளைக் கூறி அழைத்தல்[4]
5. 'ஊர்'ப் பெயருடன் தலைவன் பெயரை இணைத்து அழைத்தல்[5]

---

1. தியாகேசர் குறவஞ்சி, வே. பிரேமலதா (ப ஆ), சரசுவதி மகால் நூலக வெளியீடு, தஞ்சாவூர், 1970. பாடல் எண்கள் : 3, 6, 7, 20, 43, 52.
2. மேலது, 34, 41, 52, 58.
3. மேலது, 22, 29.
4. மேலது, 2, 7, 23, 52
5. மேலது, 1, 3, 4, 11, 13, 30, 31, 33, 39, 44, 56, 60, 64.

6. 'நிற'த்தால் அழைத்தல்[6]

7. வீரச்செயல்களைக் கூறி அழைத்தல்[7]

8. பொதுவாகக் கூறி அழைத்தல்[8]

மேலும்

'கம்பிக் காதழகர்' (7,25)

'பைம்பொற் கம்பிக்காதர்' (35)

'கனக சிங்காதனக் கம்பிக் காதழகர்' (25)

என்றும்

'வீதி விடங்க த்யாகேசர்' (2)

'வீதி விடங்கேசர்' (7)

என்றும் அழைக்கின்றார்.

உமையவளை ஒரு பாகத்தே உடைய தியாகேசரை,

1.	அல்லியங்கோதை பங்காளர்	(47)
2.	இமயமலை மாதொரு பாதி	(23)
3.	சேல்விழியஞ் சொற்கிளியோர் பாகர்	(6)
4.	சேல்கொண்ட விழியுமைபாகர்	(63)
5	தோகைப் பாகர்	(45)
6.	மங்கையொரு பாகன்	(52)
7.	மழவிடைப்பாகர்	(20)

என்றழைக்கின்றார் ஆசிரியர்.

---

6. தியாகேசர் குறவஞ்சி 52, 58, 61.

7. மேலது. 10, 21, 52, 53, 62.

8. மேலது, 2, 7, 8, 9, 12, 13, 14, 15, 18, 20, 22, 23, 24, 25, 26, 28. 32, 35, 36, 38, 39, 42, 45, 46, 48, 52, 54, 56, 58, 59, 60, 61.

ஓரிடத்தில்[9] 'அந்திக்காப்பழகர்' எனக் கூறப்படுகின்றனன். பெருமான் இவ்வாறு அழைக்கப்பெறுகின்ற காரணத்தை ''முசுகுந்தன் என்னும் சோழ மன்னன் வானுலகத்திலிருந்து கொண்டுவந்த தியாகேசப் பெருமானுக்குத் திருஅந்திக்காப்பு (மாலை வேளைப் பூசை) தொன்றுதொட்டுத் தொடர்ந்து செய்யப்பெற்றதால் இறைவர் 'திருஅந்திக்காப்பழகர்' என்னும் பெயர் பெற்றார்''[10] என்று அறிஞர் காட்டுகின்றனர்.

திருவாரூரில் 'கமலாலயம்' எனும் சிறப்புப் பெற்ற குளத்துடன் தியாகேசர் பெயரை இணைத்துப் பல பாக்களில்[11] போற்றுகின்றார்.

தியாகராசருக்கு விருப்பமான பங்குனித்திங்களில் நடைபெறுகின்ற உத்திர விழாவைக் கண்ட ஆசிரியர்,

'பங்குனித் தியாகேசர்' (51)

என்றும்

'பங்குனி உத்திரபாதர்' (35)

என்றும் போற்றுகின்றார்.

பிறக்க முத்தியைத் தருகின்ற இவ்வூர்ப் பெருமானைப்

'பிறக்க முத்தியீன் றருளும் புனிதர்' (25)

என்கின்றார்.

அரவம், பொன்னாபரணம், செம்பொன் ஆசனம், தலையில் இளநிலா, கங்கை, கையில் திரிசூலம், இடையினில் புலித்தோல் ஆகியவற்றை அணிந்திருக்கின்ற தியாகேசர் என்று

---

9. தியாகேசர் குறவஞ்சி 64.

10. சிவப்பதிகள் வரலாறு, கழக வெளியீடு, சென்னை, 1977. ப. 80.

11. தியாகேசர் குறவஞ்சி 16, 17, 22, 27, 29, 31, 35, 40, 52, 53, 59, 61, 63, 65.

பல பாடல்களில்[12] கூறுகின்றார். மேலும் 'கயிலை'யோடு இணைத்தும் கூறுகின்றார்.[13]

சுந்தரருக்காக இறைவன் பரவை நாச்சியாரிடம் தூது சென்றமை,[14] இத்தலத்தில் சிறப்புடைய தென்றலுடன் இணைத்துக் கூறியமை[15] ஆகியவற்றைக் காணமுடிகின்றன.

இவைதவிர,

> ''அந்தணர் வேதாந்த வடிவானவன் (64); சுருதி மறை கடந்தவன் (52); மூவர் தமிழுக்கு உகந்தவன் (52); மூப்பு, இளமை கடந்தவன் (52); விருது இடபக்கொடியை உடையவன்(52); அடியவர்களுக்கு அருள் புரிபவன் (32); மணம் வீசும் குளிர்ந்தமலர்களை உடைய சோலை சூழ்ந்த ஆரூரில் வீற்றிருப்பவன் (5); குளிர்ந்த சந்தனத்தை அணிந்த நெற்றிக்கண்ணை உடையவன் (38); தீராத நெஞ்சுக்குத் துணையாய் இருப்பவன் (13); திருமால், இந்திரன், முனிவர்கள், வானிலுள்ளோர் போற்றி வணங்கத்தக்கவன்(46); குளிர்ந்த நிலவையும் கொன்றை மாலையையும் கங்கையையும் சிவந்த சடையினில் வைத்திருப்பவன் (26)''

என்று தலைவனைப் பற்றிக் கூறுகின்றார் ஆசிரியர்.

இராசமோகினி :— இந்நூலின் தலைவி, காப்புச் செய்யுள் முடிந்தவுடன் கடடியக்காரன் வருகைக்கு மாறாகஇவள்தோன்று

---

12. தியாகேசர்குறவஞ்சி, அரவம் : 52, 63;பொன்னாபரணம்: 5, 7, 19; திங்கள் : 1. 55; கங்கை : 52; திரிசூலம் : 52; புலித்தோல் : 52.
13. மேலது, 21, 52.
14. மேலது, 7, 35, 52.
15. மேலது, 7, 20.

கின்றாள். அன்னநடை நடந்து, மல்லிகை, முல்லை மலர்களைக் கூந்தலில் சூடி வருகின்றாள். வீதியுலா வருகின்ற தலைவனைக் கண்டு காதல் கொள்கின்றாள். காதல் வேதனையில் வெண்ணிலா, தென்றல், மன்மதன் ஆகியோரைப் பழித்துப் புலம்புகின்றாள். இப் புலம்பலில் ஒரு பலனும் காணாமல் இறுதியில்,

> ''திருமால், நான்முகன் தேடிய தியாகராசா!
> உன்னை நம்பி வந்த என்னை நட்டாற்றில் கை
> விடலாமோ?; நான் பெண் புத்தியாலே
> பிழை மோசம் போனேன்; நாள்தோறும்
> வாடும் பயிருக்கு இன்ப மழை போல வந்து
> எனக்கு அருள் செய்வாய்; உலகத்தில் அடுத்த
> வரைக் காப்பது உன் கடமை அல்லவா?;
> ஏசுகின்றவர்களுக்கு நான் இடம் தந்து விட்டேனே;
> மன்மதன் கணைக்கு எதிராக நின்றேனே; வாச
> மும் மலரும் போல, மதனும் இரதியும் போல
> என் மையல் தீர என்னை நீ வந்து மருவி அணைய
> வேணும்'' (13)

என்று தலைவனை நேரடியாக விளித்துப் புலம்புகிறாள்.

தலைவியைக் காண வந்த அவள் தோழி மோகன ரேகையிடம், காதல் நோயால் உடலும் உள்ளமும் சோர்ந்த தனது நிலையைக் கூறுகின்றாள். தோழியின் அறிவுரைக் கேற்ப அவள் அழைத்து வந்த குறத்தியிடம் தன் மனக் குறியைக் கேட்டு அறிகின்றாள். தன் உள்ளத்தைக் கவர்ந்த தலைவன் ஊர், பெயர், அடையாளம் ஆகியவற்றைக் குறத்தி சொல்லிய பின்னர்த் தலைவன் தலைவியை மருவ வரும் நாளையும் கூறிப் பரிசுகள் பலவற்றைத் தலைவியிடமிருந்து பெற்றுச் செல்கின்றாள் மலைக்குறவஞ்சி.

பல்வேறிடங்களில்[16] ஆசிரியர் தலைவியை, அன்னம், மயில், மான், தேன், கனி, மதி, முகில், மலர், கமலம்

16. தியாகேசர் குறவஞ்சி 47, 9; 41; 29, 31, 45, 47; 27, 31; 29; 54; 9, 11; 11; 26.

தாமரை ஆகிய இயற்கைப் பொருள்களுடன் ஒப்பிட்டுக் கூறு கின்றார்.

குறவஞ்சி :- குறவஞ்சி, குறத்தி, குறமகள், சிங்கி எனப் பல பெயர்களில்[17] குறி சொல்லும் குறத்தி அழைக்கப்படு கின்றாள். 'நாரதரே குறவஞ்சி'யாக வருகின்றார்[18] எனக் கூறிய ஆசிரியர்,

"கொங்குசேர் குழலாள் தெய்வக்குறவஞ்சி (3);
தெய்வ மலைக் குறவஞ்சி (20:107-108);
தெய்வ லோகக் குறவஞ்சி (27); தெய்வக்
குறத்தி (19); வண்ண மேகலை தெய்வக்
குறத்தி (26); பொன்னகர் மருவும் தெய்வப்
பூங்குறமகள் (48)"

என்று தெய்வத்தோடு குறத்தியை ஒப்பிட்டிருக்கிறார்.

குறத்தியை ஐந்து பாக்களில்[19] அறிமுகப்படுத்துகின்றார். வாசனை மிக்க மலர்களைச் சூடி, பருமணிச் சுட்டி, பட்டம் அணிந்து, நெற்றியில் திலகம் தீட்டி, விழிகளில் அஞ்சனம் தீட்டி, யானை வெண்கோட்டுத் தோடணிந்து, கைகளில் பவள வளைகள் அணிந்து வருகிறாள்; கால்களில் சிலம்பு, தண்டை, சதங்கை அணிந்து 'கலின்கலின்' என்றொலி முழங்க நடந்து வருகிறாள்; பொன் முலைமேல் குங்குமக் கதம்பம் பூசி, செம் பொற் குறப் பெட்டி ஏந்தி, மலர்க்கரத்தில் மாத்திரைக் கோல் கொண்டு வருகிறாள்; வானுலக அரம்பையர் போல - பிடி போல - அன்னப்பேடை போல நடந்து, கொடியிடை துவள, குவிமுலை குலுங்க நடந்து வருகிறாள்.

திருவாரூர்த் தியாகேசரின் 'வாசல் வளம்' கூறிக்கொண்டு நடந்து வருகின்ற குறத்தியின் வருகையைக் கூறும் இப்

---

17. தியாகேசர் குறவஞ்சி 1, 2, 3, 4, 5, 6, 20; 19, 26, 32, 55;24.48; 62, 64.

18. மேலது, 20:103.

19. மேலது, 20, 21, 22, 23, 24.

பாக்களில் அவள் ஒப்பனை செய்து நடந்து வருகின்ற அழகைக் காணமுடிகிறது.

''மலர்மகள், கலைமகள் ஆகியோர் வளர்ந்தோங்கும் வாசல்; சகசிராசன் நாளும் பணியும் வாசல்; இந்திரன், திரு-மால், நான்முகன் ஆகியோர் வணங்கும் வாசல்; முசுகுந்த மன்னன் நாளும் துதிக்கும் வாசல்; நான்மறைகளும் கோபுர மாய் வான் கிழிக்கும் வாசல்; ஆறு சாத்திரப் புராணங்கள் நிறைந்த வாசல்; சைவநெறி ஆகமங்கள் தழைத்தோங்கும் வாசல்; மூவர் தமிழ் விளங்க நிற்கும் வாசல்; அரன் நாளும் 'அஞ்சல்' எனும் வாசல்; தும்புரு, நாரதர் துதி செய்யும் வாசல்; அரம்பை, ஊர்வசி ஆகியோர் நடனமிடும் வாசல்; பிறக்க முத்தி அளிக்கும் புனித வாசல்; அறுபத்து மூவர் வந்தமர்ந்த வாசல்; நிலவு, கதிரோன் நாள்தோறும் தவழ்ந்து ஓங்கும் வாசல்; விட்டவாசல் விநாயகரின் வாசல்; சங்கீத இசை சிறந்த தென்றல் வாசல்; மகளிர் நடனம் செய்யும் வாசல்; கனக சிங்காதனக் கம்பிக் காதழகர் வாசல்; தியாகேசர் செம்பொன் வாசல்'' என்று வாசல வளத்தைக் குறத்தி கூறுகிறாள்.[20]

குறத்தியின் உருவத்தைக் குயில், கிளி, மலர், பிடி, அன்னம், கொடி, மதி, பவளம் ஆகிய இயற்கைப் பொருள்களு டன் ஒப்பிட்டுக் கூறுகின்றார் ஆசிரியர்.[21]

''தாமரை முகத்தினள்; இரதி போலவும் திங்கள் போல வும் திகழும் முகத்தினள்; பவள இதழினள்; குயில் போலப் பேசும் மொழியினள்; குவளை மலர் விழியினள்; முல்லை நகையினள்; அரம்பை போன்று நடந்து வருகிறாள்; நவமணிகள் கலகல வென்று ஒலிக்க வருகிறாள்; குளிர் சந்தனம், குங்குமம் ஆகிய வற்றை உடலில் பூசுகிறாள்''[22] என்று குறத்தியின் அழகை வருணிக்கின்றார்.

---

20. தியாகேசர் குறவஞ்சி 25.

21. மேலது, 21, 22; 59; 20 : 102, 43, 22, 23, 59; 20 : 104 - 105; 20 : 106, 65; 22; 22.

22. மேலது, 22, 23, 24.

''மனத்திலுள்ள தாபம் தீர்வதற்குரிய குறி சொல்கிறவள்; மூவுலகச் செய்தி, முக்காலச் செய்தி, மூவர் தேவாரச் செய்தி ஆகியவற்றைக் கேட்டார்க்குச் சொல்லும் திறமை உடையவள்; பல தேசம், பல புண்ணியத் தலங்கள். மலைகள் ஆகியவற்றைக் கண்டு வருகிறாள்; கைக்குறி பார்த்து உடம்பிலுள்ள பிற குறிகளையும் கற்பனை கலவாமல் உள்ளதை உள்ளவாறு சொல்லும் திறத்தினள்''[23] என்று குறத்தியின் செயல்திறனைக் கூறுகின்றார்.

அஞ்சன மோகனதம் பவுச்சாடனம் அறிவேன்; அக்கினிக்குள் சில தாமரை மலர்களை உண்டாகச் செய்வேன்; தாமரை மலர் போன்ற செங்கையில் வைகுந்தம் காணச் செய்வேன்; அரிய இளமேகத்தைக் கையில் பிடித்து அதனை ஒரு கன்னிகை ஆக்குவேன்; எட்டு யானைகளை ஒரு கையினில் பிடித்து அம்மானை ஆடி வருவேன்; அச்சம் ஒரு சிறிதுமில்லாமல் விண்ணில் திரியும் இந்திரவில்லைப் பிடித்து அம்பு தொடுப்பேன்; பட்டப் பகலை இரவாகவும் இரவைப் பகலாகவும் செய்வேன்; பச்சிலை மூலிகையால் உயர்ந்த மேருமலையைப் பிடித்தெடுத்துப் பந்தாக்கி ஆடுவேன்; மோதுகின்ற ஏழு கடல் நீரைக் கடுகாக்கி மூடி அடைப்பேன்; மயக்கத்தைத் தரும் குமரனின் வாகனம் மயில் மீதேறி என்முன் வரச்செய்வேன்; பெண்களை வசப்படுத்தும் மந்தரவாத இரசவாதம் அறிவேன்; மன்னரை வசப்படுத்தும் மகேந்திரசாலம் அறிவேன்; ஊமைகளைப் பேச வைப்பேன்; மலடிகளைக் கர்ப்பம் உண்டாகச் செய்வேன்; வேதம் ஓதிப் பெரிய தவம் புரிவோர் செய்யும் அட்டாங்க யோகம் அறிவேன்; பூமியில் மிக்க புரந்தரசால புராணம் அறிவேன்; போரைச் செய்யும் மன்மதன் ஆசை கொள்ளச் சிறு பிள்ளைகள் ஆக்குவேன்; சித்த வித்தை, மாய சித்தியுடன் காயசித்தி அறிவேன்; தேவர் சிங்காசனத்தியாகர் மருவிய செந்தமிழ் சேரும் நன்னாட்டில் சுத்தவித்தை, கசகர்ணம், கோகர்ணம், சோதிடம் அறிவேன்''[24] என்று குறத்தி

---

23. தியாகேசர் குறவஞ்சி 26, 27.

24. மேலது, 42, 43.

தன் தொழில் திறனைத் தலைவியிடம் கூறுகிறாள். இத் தொழில் திறன் முழுவதையும் குமரன் தனக்குத் தந்ததாகவும் கூறுகிறாள்.

சாதிவளம், தேசவளம், மலைகளின் வகைகள், மலை வளம், நதிவளம், தெய்வத் தலங்கள், அண்டகோளங்களின் மகத்துவம் ஆகியவற்றின் பெருமைகளைத் தலைவியிடம் கூறு கிறாள் குறத்தி.

குறத்தி குறி சொல்லிப் பரிசுகள் பெற்ற பாங்கினைத் தலைவியிடம் கூறுகின்றதாவது[25]:

1. கலைமகள், இந்திராணி, திரிவேணி ஆகியோர்க்குக் குறி சொன்னதற்காகப் பொன், செம்பொன், வச்சிரம், மாணிக்கங்கள் ஆகிய பொருள்களைத் தந்தனர்.
2. சத்தியபாமா, வள்ளி மாமி உமை ஆகியோர்க்குக் குறி சொன்னதற்காக முலைக்கு இன்பம் தரும் கச்சு, முத்துத்தாமக்கு, சுமிருநாமக்குச்சிலி (நெற்றிப் பொட்டு) ஆகியவற்றைத் தந்தனர்.
3. சந்திரமதி, சரசுவதி ஆகியோர் குறிகேட்டு நிதிப் பாரம், அந்திக் கோர்வை அளித்தனர்.
4. குந்தி, தமயந்தி, மச்சகெந்தி ஆகியோர் குறிகேட்டுக் கம்பிக் கந்தச் சேறையும், விந்தைக் காறையும், செம்பொற் கூறையும் தந்தனர்.
5. கங்கை, மலர் மங்கை, நிலா நங்கை ஆகியோர் குறிகேட்டுத் தங்கப் பாரமும் கொங்கைத் தாரமும் தந்தனர்.
6. கொங்கிற் குடகு மன்னர் மங்கைப் பருவம் வாய்ந்த பெண்டிர் குறிகேட்டுச் செம்பொற்பத முன்கைச் சீராவும் முன்கைக் கடகம் இரண்டும் தந்தனர்.

---

25. தியாகேசர் குறவஞ்சி 45.

7. பைம்பொற் கலிங்கத்துக் கும்பமுலைப் பெண்டிர் பலர் குறிகேட்டு வெள்ளைத் தும்பிக்கோடும் இரு செம்பொற்றோடும் சிலம்புகள் இரண்டும் தந்தனர்.

8. மேனகை, அரம்பை ஆகியோர் பாவனையால் குறி கேட்டு நவரத்தினமாலை, பதக்கம் தந்தனர்.

இறுதியில் தலைவிக்குக் கைக்குறியும் மனக்குறியும் சகுனங்களையும் கூறி அளவில்லாத நிதிகள், செம்பொன்னாடை ஆகியவற்றைப் பரிசாகப் பெறுகிறாள்.

சிங்கியைக் காணாத சிங்கன் அவள் உருவம், செயல் ஆகியவற்றை நினைந்து புலம்புகிறான். 'செறுக்கி', 'பொங்கக் காரி', 'சாலக்கள்ளி'[26] எனச் சிங்கனால் அழைக்கப்பெறும் சிங்கி, ''முகத்தில் மஞ்சள் பூசி, நல்ல வாசனையும் பூசி இருக் கிறாள்; செம்பொன் வளைகளைக் கைகளில் அணிந்திருக் கிறாள்; எந்நேரமும் கொஞ்சியே பேசுகிறாள்; அவள் காது வரை விழிகள் நீண்டிருக்கின்றன; முலைகள் மலர்ச்செண்டு போன்றிருக்கின்றன; தங்கக்காறை முத்துத் தொங்கல் தோடு ஆகியவற்றை அணிந்திருக்கிறாள்; கிள்ளை மொழி பேசு கிறாள்; கொடி இடையினள்''[27] என்று அவளழகினைக் கூறு கிறான்.

சகசி மன்னன் :- தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர் களுள் இரண்டாம் சகசி மன்னனைப்பற்றிய குறிப்புக்கள் நான்கிடங்களில்[28] இடம் பெறுகின்றன. ஆசிரியர் நூலைத் தொடங்குமுன் காப்புச் செய்யுளில் 'தங்கமா மகுடம் சூடும் சகசி ராசேந்திரன்'[29] என்று போற்றுகின்றார்.

''ராஜ ராஜர் பணியேக
ராஜ னுதவிய சகஜி'' (15)

---

26. தியாகேசர் குறவஞ்சி 58, 59.

27. மேலது, 59, 65.

28. மேலது, 3, 15, 25, 31.

29. மேலது, 3.

இராசன் நாட்டில் வாழ்கின்ற தலைவி இராசமோகினியைக் காண்பதற்கு அவள் தோழி மோகனரேகை வருகிறாள்.

தியாகேசரின் கோயில் வாசல் வளத்தைக் கூறும் பகுதியில், 'சிலை மதவேள் சகஜிராஜன் நாள்தோறும் பணியும் வாசல் இது''[30] என்று குறத்தி கூறுகிறாள்.

பல்வேறு தேச வளங்களைக் கண்டு வந்த குறமகள் தலைவியிடம் கூறுகின்றபொழுது,

''மண்டலாதிபதி சகஜி ராஜேந்திரன்
வாழும் சோழதேச வளம்''

முதலானவற்றைப் பார்ப்பதற்கு இறுதியில் வந்ததாகக் கூறுகிறாள்.

ஆசிரியர் கூற்றிலும் பாத்திரத்தின் கூற்றிலும் சகசி மன்னன் பெருமையை அறிய முடிகிறது.

சிங்கன் :- நூலின் இறுதிப் பகுதியில் இச்சிங்கன்வருகிறான். குறத்தியின் வருகையைக் கூறும் பகுதியில் 'நாரத'ரே குறத்தி வடிவம் தாங்கி வந்தார் எனக் கூறுகின்றார் ஆசிரியர். சிங்கன் வருகை கூறும் பகுதியில், அந்த நாரதரைக் காணாத தும்புரு. சிங்கன் உருவில் அவரைத் தேடி வந்ததாகக் கூறுகிறார். [31]

கொத்து மணித்திரள், முத்து வடத்தொடு வைத்த பதக்கத்தை முகத்தில் தாங்கி, நெற்றியில் திருநீற்றைத் தரித்து. நகைக்கப் பேசி, வெறிக்க விழித்து, மீசையை முறுக்கி நடந்து வருகிறான்.

மச்சம், திராவிடம், சிந்து, விதேகம், மக்கம், துளுவம், கர்நாடகம், கொச்சி, குடகு, கொல்லம், மல்லாபுரம், அச்சம், டில்லி, மலையாளம் ஆகிய நாடுகளிலும் தீவுகள் பலவற்றிலும் சென்று சிங்கியைத் தேடிக் காண முடியாமல் இறுதியாகத் தியாகேசர் வாழும் திருவாரூருக்கு வந்து சேர்கிறான்.

தன் நண்பன் குளுவனிடம், சிங்கி இருக்குமிடத்தைக் கூறினால்,

---

30. தியாகேசர் குறவஞ்சி 25.
31. மேலது, 56.

மோகன ரசக்குளிகை
நல்ல மோகமாம் நரிக்கொம்பு
வாகுள்ள புனுகு
சவ்வாது
கத்தூரி
வாடைப்பொடி
அண்டர் தலையில் வைக்கும் அமுதக்குளிகை
ஐராவதக் கொம்பு
மண்டலம் புகழ் இந்திரவனத்தில் கற்பகத்தருவளர்
சிந்தாமணிமாலை
மயக்கங் கொண்டு பெண்கள் தொடர்ந்து வருவதற்குரிய
முகவசீகரத் திலகம்

ஆகிய பொருள்களைத் திரள்திரளாகப் பரிசளிப்பதாகச் சொல்கிறான்.[32]

இப் பரிசுப் பொருள்களைக் கேட்ட குளுவன். 'இராச மோகினிக்குக் குறி சொல்லிப் பரிசுகள், பல பெற்றுச் சிங்கனைத் தேடி வருகிறாள்' எனக் கூறுகிறான். அதன்பின்னர், இருவரும் சந்தித்து உரையாடிமகிழ்கின்றனர்.

ஏனைய குறவஞ்சி நாடகங்களில் சிங்கன், குளுவனுடன் சேர்ந்து பறவைகளை வேட்டையாடும்பொழுது சிங்கியின் நினைவு தோன்ற, அவளை நினைத்துப் புலம்பிய பின்னர் இறுதியில் சிங்கியைக் காண்பதாகப் பாக்கள் அமைந்திருக் கின்றன. ஆனால் இக்குறவஞ்சியில் பறவைகளை வேட்டை யாடாமல் நேரடியாகவே சிங்கியைத் தேடுகின்ற அமைப்பில் ஆசிரியர் பாடுகின்றார்.

குளுவன் :— சிங்கன் நண்பன். இவன் தொடர்பான செய்திகள் மிகக் குறைவு. சிங்கன். சிங்கியைத் தேடி அலைந்த இடங்களைக் கேட்டுப் பின்னர், பிறரை வசியப்படுத்தும் மருந்து கள் தருவதாகச் சிங்கன் உறுதியளித்த பின்னரே அவனுக்குச் சிங்கி இருக்குமிடத்தைக் கூறுகிறான்.

---

32. தியாகேசர் குறவஞ்சி 63.

சகி :— மோகனரேகை எனும் பெண் தலைவிக்கு உற்ற தோழியாக வருகிறாள். இவள் மேடையில் அல்லது அரங்கில் தோன்றும் பொழுது பாடப்பெறும் திரைத்தரு அல்லது பிரவேச தருவில், ''முல்லை நகை வல்லியாள்; கூந்தலில் மலர்களைச் சூடியுள்ளாள்; சந்திரனுக்கு இசைந்த முகத்தில் சிறிய நெற்றியில் சிவந்த பொடியைப் பூசியுள்ளாள்; சந்தனச் சுகந்தம் உடம்பில் பூசியுள்ளாள்; கைகளில் தங்க வளையல், இரத்தின வளையல்களை அணிந்துள்ளாள்; மங்கையர்க்கு அரசியாவாள்'' என்று இவளுடைய அழகு, ஒப்பனை, நடந்து வருகின்ற தோற்றம் ஆகியவற்றைக் கூறுகின்றார்.[33]

தலைவனைக் கண்டு காதல் கொண்டு விரக வேதனையால் வாடும் தலைவியின் முகவாட்டத்தைப் போக்குவதற்காகக் குறி சொல்லும் குறத்தியை அழைத்து வருகிறாள்.

இன்னிசை நாட்டியப் பனுவல்

இக் குறவஞ்சிப் பாக்கள் 'எந்த இராகத்தில், எந்தத் தாளத்தில் பாடவேண்டும்' என்பதனை நூலாசிரியரே வகுத்துக் கூறுகின்றார். 'இராகமாலிகை' எனுந் தலைப்பில் காணப்படும் இரண்டு பாடல்கள்[34] ஒன்றுக்கு மேற்பட்ட இராகங்களில் பாடப்பெறுகின்றன. பைரவி, ஹமீர் கல்யாணி, அடாணா. நாட்டக்குறிஞ்சி, ஹம்சநாதம், இந்தோளம், காபி ஆகிய இராகங்களில் மற்றொரு பாடலும் பாடப்பெறுகின்றன.

அடாணா, அம்ருதவர்சிணி, ஆபோகி, ஆனந்த பைரவி, கமாசு, கரகரப்பிரியா, கல்யாணி. கன்னட, காம்போசி, கீரவாணி, குந்தலவராளி, கேதாரம், கேதார கௌளை, கௌரி மனோகரி, சரசுவதி, சங்கராபரணம், சாமா, சாரங்கா (பந்துவராளி), சாருகேசி, சாவேரி, சுரடி, சுத்த சாவேரி, சுத்ததன்யாசி, செஞ்சுருட்டி, தன்யாசி, தேவகாந்தாரி, தோடி, நாகஸ்வராவளி, நாதநாமக்கிரியை, நாட்டக்குறிஞ்சி, நாட்டை, நீலாம்பரி, பரசு, பந்துவராளி, பசுதாரி, பிலகரி, புன்னாகவராளி, பூரணசந்திரிகா, பூர்விகல்யாணி, பெகாக், பேகட, பௌளி,

33. தியாகேசர் குறவஞ்சி 15.

34. மேலது, 18, 43.

மத்தியமாவதி, முகாரி, மோகனம், யதுகுலகாம்போதி, வசந்தா, வாசஸ்பதி, சகானா, சிம்மேந்திர மதியமம், சௌராட்டிரம். சண்முகப்பிரியா, அரிகாம்போதி, சூசேனி, கேமவதி, ஸ்ரீரஞ்சனி ஆகிய 56 இராகங்களில் ஏனைய பாக்கள் அமைகின்றன.

'செஞ்சுருட்டி' இராகத்தில் உள்ள இருபாக்கள் காவடிச் சிந்து, கும்மி மெட்டுக்களில் இருக்கின்றன.

ஆதி, கண்ட சதித கண்டசாபுற கண்ட நடை, சதுரசுரஅட, சாபு.சம்பை, மிசிரசாபு, ரூபகம் ஆகிய ஒன்பது தாளங்களில் இப்பாக்கள் பாடப்பெறுகின்றன. பல பாடல்கள் 'ஆதி' தாளத்திலேயே பாடப்படுகின்றன.

> ''இக்குறவஞ்சியில் பாடல்கள் பிரசித்தமாக இருந்தன என்பதற்குச் சான்றாக, 'வாசலிது வாசலிது' என்கிற நாதநாமக்கிரியை ராகத்தில் அமைந்துள்ள 25-வது பாடல், தியாகராஜ ஸ்வாமியின் கர்ப்ப க்ருஹத்தின் தென்புறத்திலுள்ளபல கணியின் அருகில் நிதியோத்சவத்தின் போதும் விசேஷ காலங்களிலும் தேவரடியார்கள் நின்று பாடுவது வழக்கமாம். இது காரணம் பற்றியே இந்தப் பலகணிக்குத் தென்னவாசல் என்ற பெயர் நிலைத்துவிட்டது''[35]

என்று அறிஞர் கூறுவது இவண் நினைவுகூரத்தக்கது.

பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற முறையில் குறவஞ்சிப் பாக்கள் அமைகின்றன. சிறந்ததொரு இசை நாட்டியமாக ஆசிரியர் படைத்திருக்கின்றார். தலைவியின் வருகையை,

> ''வாசவன் பணியும் தியாக ராஜர்தம் கமலை நாட்டில்
> மத்தள தாளவி தத்துடனே கதி ததிமி
> திதிமி தளாங்கு திங்ணிதோ மென'' (9)

---

35. வே. பிரேமலதா (ப. ஆ.), தியாகேசர் குறவஞ்சி, முன்னுரை, ப. 34.

இராசமோகினி வருகிறாள் என்கிறார் ஆசிரியர்.

தியாகேசரின் பெருமையைக் கூறுகின்றபொழுது,

''பண்களுக் கிசைந்த பைம்பொன் னாடரவக்
கிண்கிணி யரவம் கிளர்ந்த பொற்பாதர்'' (20:25-26)

என்கிறார். இதில் பண்ணோடிசைந்த ஆடலைக் கூறுகின்ற பாங்கினைக் காணமுடிகின்றது.

தும்புருவைக 'கீதத் தும்புரு'[36] என்று கூறுகின்றார். அதே போன்று மங்கல வாழ்த்தொலியில் இசையையும் நாட்டியத்தையும் இணைத்துப் போற்றிப் புகழ்கின்றார் ஆசிரியர்.[37]

இக்குறவஞ்சிப் பாக்களின் மெட்டுக்கள் அழிந்து போகாமல் காப்பாற்றி வந்த திருவாரூர்க் கோயிலைச் சார்ந்த நாட்டிய மகளிரின் குடும்பத்தைச் சேர்ந்த பி.ஆர். திலகம் என்கிற அம்மையார் மூலமாகப் பல செய்திகளைத் திரட்டி இக்குறவஞ்சிப் பாக்களைச் சுவர சாகித்தியத்துடனும் நாட்டியத்திற்கு வேண்டிய 'சதிக்' கோர்வையுடனும் பதிப்பித்திருக்கின்றார் பதிப்பாசிரியர்.[38]

நாடகநூல்

இந்நாடகத்தின் முடிவு மகிழ்ச்சியில் முடிவதனால் 'இன்பியல் நாடக'மாக இக்குறவஞ்சியைக் கூறுவது பொருந்தும்.

இந்நாடகத்தில் கட்டியக்காரனுக்குப் பதிலாக நூலாசிரியரே ஒவ்வொரு கதாபாத்திரத்தையும் அறிமுகப்படுத்துகின்றார். இந்த அறிமுகம் 'தனிப்பாட'லாக இடம்பெறுகின்றது. குறத்தி மட்டும் தன்னைத் தானே தலைவியிடம் அறிமுகம் செய்து கொள்கிறாள். தலைவனை நினைந்து வாடும் தலைவி, சிங்கியைப் பிரிந்து வாடும் சிங்கன் ஆகிய இவ்விருவரும்

---

36. தியாகேசர் குறவஞ்சி 56.
37. மேலது, 66.
38. வே. பிரேமலதா (ப.ஆ.), தியாகேசர் குறவஞ்சி, முன்னுரை, ப. 34.

தனித்தனியாகப் புலம்புகின்ற தனிமொழிப் பாடல்களும் (Monologue) இடம்பெறுகின்றன.

திருவாரூர்த் தியாகராசர் வீதியுலா வந்ததைக் கண்ட இராச மோகினி, அவர்மேல் தீராக்காதல் கொள்கிறாள். அவள் உள்ளத்தில் காதலால் எழுந்த இச்சிக்கலிலிருந்தே கதை தொடங்குகிறது.

தலைவன்மீது காதல் கொண்ட தலைவி, விரக வேதனையைத் தாங்க இயலாமல் வெண்ணிலா, தென்றல், மன்மதன் ஆகியவற்றைப் பழித்துரைக்கின்றாள். இங்ஙனம் காதலின் வளர்ச்சிநிலை படிப்படியாக இராசமோகினி புலம்புதல் மூலம் விளக்கப்படுகிறது. தன் காதல் எண்ணம் நிறைவேறாமல் திண்டாடிய இராசமோகினியின் புலம்பலைக் கேட்ட அவள் தோழி மோகனரேகை, 'குறத்தியை அழைத்துக் குறிகேட்டால் மனக்குறை தீரும்' என ஆறுதல் கூறுகிறாள். இதுவே காதலின் வளர்ச்சிநிலையில் உச்சநிலையாகும். குறத்தி பல வளங்களைக் கூறித் தலைவியின் உள்ளத்தைக் கவர்ந்த தலைவன் ஊர், பெயர், பிற அடையாளங்களைக் கூறுகிறாள். இறுதியாகப் பல சகுனங்களைக் கூறித் தலைவன் தலைவியைச் சேரும் நாளையும் கூறுகிறாள். குறத்தி வந்து நற்பலன்களைச் சொல்லத் தொடங்கிய உடனேயே இந்நாடகம் இன்ப முடிவை நோக்கி வீழ்ச்சி அடையத் தொடங்குகிறது.

கதைக் கோப்பின் சிக்கல் தீர்க்கப்பெறுவது முடிவுநிலையாகும். தலைவனைச் சேரும் நாளைக் குறத்தி சொல்லியதைக் கேட்ட இராசமோகினி மனமுவந்து நிதிகள், பொன்னாடைகள் ஆகியவற்றைப் பரிசாகக் கொடுக்கிறாள். இவ்வாறு இந்நாடகத்தில் காதலில் தோன்றிய சிக்கல் நீங்குவதாகக் காட்டப் பெறுகிறது.

இந்நாடகத்தில் அறிமுகம், வளர்ச்சி, உச்சம், வீழ்ச்சி, முடிவு ஆகிய ஐந்து பகுதிகளும் அமைகின்றன. மேலும் நாடகத்திற்குத் தேவையான கதைப் பாத்திரங்களாகத் தியாகேசர், இராசமோகினி, குறவஞ்சி, சகசி மன்னன், சிங்கன், குளுவன், சகி ஆகியோரும் இடம் பெறுகின்றனர்.

சகி-தலைவி; தலைவி-குறத்தி; சிங்கன்-குளுவன்; சிங்கன்-சிங்கி ஆகியோர் பேசுகின்ற உரையாடல்கள் அவரவர் தகுதிக்கும் நிலைக்கும் ஏற்ப அமைகின்றன.

பிற குறவஞ்சி நாடகங்களைப் போல இத்தியாகேசர் குறவஞ்சி நாடகமும் மேடையில் நடிப்பதற்கேற்ற முறையில் அமைந்திருக்கின்றது என்பதனைப் பின்வரும் அறிஞர் கூற்று மெய்ப்பிக்கும்.

> ''தியாகேசர் குறவஞ்சியும் திருவாரூரில் ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமி ஆலயத்தில். கீழைக் கோபுரத்திற்கருகில் உள்ள தேவாசிரிய மண்டபத்தில் பங்குனி மாதத்தில் நிகழும் ப்ரம்மோற்சவத்தின் போது நடத்தப்பட்டு வந்ததாக ஆதாரபூர்வமாகக் கிடைத்துள்ள செய்தி கூறுகிறது. இந் நாடகம் இரவின் பிற்பகுதியில் ஆரம்பித்து விடியும் வரை நிகழ்ந்து, மூன்று நாட்கள் தொடர்ந்து நடை பெற்று வந்ததாகத் தெரிகிறது.''[39]

தமிழின் பெருமை

தமிழின் பெருமையைப் பலவிடங்களில் ஆசிரியர்போற்றிக் கூறுகின்றார்.

''நிறைந்த செந்தமிழ் சேர்ந்த ஆரூர்ப்பதி (8); செந்தமிழ் மேவிய தென்மலையைத் தந்து அருள்கின்ற தென்றல் (11); தேவர் சிங்காசனத் தியாகர் மருவிய செந்தமிழ் சேரும் நல்லநாடு (43); அருள்தரும் தமிழ் நன்னாடு (30); தியாகேசர் இருக்கும் தமிழ்நாடு (61); மெய்யுரைசெய் மூவர்தமிழ் விளங்கநிற்கும் வாசல் (25); மூவர் அருளிய தேவாரத் தமிழை விரும்பிக் கேட்பவன் (2); சுந்தரர் செந்தமிழ் (41); சுந்தரர் சொன்னபன்னு தமிழ்க்கு ஒரு தூதர் (36); துதிபெறும் முத்தமிழுக்கு அரசராகிய சுந்தரர் (36); சுந்தரர் முத்தமிழ் வாழி! (66); செட்டிபல பட்டடையும் செந்தமிழோர் வாழி!

---

39. வே.பிரேமலதா (ப.ஆ.), தியாகேசர் குறவஞ்சி, முன்னுரை, பக். 33-34.

(67)'' என்று தம் கூற்றிலும் கதைப்பாத்திரங்களின் கூற்றிலும் போற்றிக் கூறுகின்றார்.

கடவுளர் பெருமை

இந்நூலின் பாட்டுடைத் தலைவனாகக் கூறப்பெறும் தியாகேசப் பெருமானைத் தவிர ஏனைய கடவுளர்களின் பெருமைகள் ஆசிரியரால் கூறப்படுகின்றன.

திருமால் :— தாமரைப் பூவில் வீற்றிருக்கின்றனன் (1); துளசி மாலை அணிந்திருக்கின்றனன் (46); எப்பொழுதும் மாய மே புரிகின்றனன் (4); வடிக்கின்ற சுடரினை உடைய சிவந்த சக்கரத்தை உடைய சோதி வடிவாகத் திகழ்கின்றனன் (5) தியாகராசனை நாள்தோறும் தேடுகின்றனன் (13); சிவந்த கண் களை உடையவன் (20:1); தியாகேசர், வீரம் மிக்க திருமால் மார்பில் குடிபுகுந்து அவர் செய்த பூசனையை விரும்புகின்றனன் (20:31); தியாகேசர் இருக்கும் வாசலினை வணங்குகின்றனன் (25).

நான்முகன் :— நாளும் தியாகராசனைத் தேடுகின்றனன் (13); எப்பொழுதும் வரம் தந்து தாமரை மலரில் வீற்றிருக்கின் றனன் (20:4); தியாகேசர் வாழும் அழகிய வாசலில் சென்று வணங்குகின்றனன்(25); சத்தியலோகத்தில் வாழ்கின்றனன்(41).

இந்திரன் :— ஆரூர்த் தியாகேசரைப் போற்றுகின்றனன் (4, 9); பொன்னுலகைக் காத்து ஆள்கின்றனன் (20:3, 35); தியாகேசர் உறையும் அழகிய வாசலில சென்று வணங்குகின் றனன் (25); இந்திரன் வாழும் உலகில் தியாகேசர் விருப்ப முடன் சென்று அவர் கொடுக்கும் பூசனையை ஏற்றுக் கொள் கின்றனன் (67).

விநாயகர் :- ஒரு செயலைச் செய்யத் தொடங்குகின்ற பொழுது விநாயகரை முதலில் வணங்கித் தொடங்குவது மரபு. அம்மரபுப்படியே இந்நூலாசிரியரும் விநாயகரை வணங்கித் தொடங்குகின்றார். குறி சொல்வதற்கு முன் குறத்தியும் முதலில் விநாயகரை வழிபட்ட பின்னரே பிற செயலில் ஈடுபடுகின்றாள். வாதாவி வாரணம், விட்டவாசற்கணபதி, தும்பிமுகன், தநத

முகன் எனும் பெயர்களால்[40] விநாயகர் அழைக்கப்படுகின்றனன்.

முருகன் :- சிவந்த கைகளை உடையவன் (3); அவனது சிவந்த பொற்பாதம் எந்நாளும் அன்பையே தரும் (5, 6); வள்ளியின் கணவன் (29); முருகனின் வாகனம் மயில் மயக்கத்தையே தரும் (43); தேனையும் தினைமாவையும் விரும்பி உண்ணுகின்றனன் (47).

உமையவள் :— வள்ளி மாமி (45) : சேல்மீன் விழி உடைய உமையவளை ஒரு பாகமாகக் கொண்டிருக்கின்றனன் தியாகேசர் (63).

பராசத்தி :— ஆரூர்ப்பதியில் பராசத்தி வானோர் துதிக்க யோகாசனத்தில் வீற்றிருக்கின்றனன்; அவள் உள்ளம் கனிவானது; அவள் அருளைப் பெறவேண்டிப் பூவுலகிலுள்ளோர் எப்பொழுதும் துதித்துக்கொண்டிருக்கின்றனர்; கொடிய மானின் மதத்தை அடக்கித் தமது வலது பாகத்தில் வைத்திருக்கின்றனள் (20 : 6-9).

கலைமகள் :— வரந்தரும் தெய்வக் கலைமகள் மலர்ப் பாதத்தினள் (4); பல்கலைகள் நல்கினள் (23); கலைமகள் வளர்ந்தோங்கும் வாசல் (25); வெண்டாமரை மலரில் வீற்றிருக்கின்றனள் (49 : 7).

திருமகள் :— கொடி இடையினள் (5); திருமகள் வாழும் வன்மீகத் தியாகர் நாடு (14): திருமாலின் மார்பில் வீற்றிருக்கின்றனள் (20 : 1) ; மலரில் வீற்றிருக்கின்றனள் (25).

வள்ளி :— முருகனுக்கு வள்ளியைக் குறச்சாதியினர் கொடுக்கின்றனர் (29); வள்ளியின் காதில் ஓலை முத்துமாலை திகழும் (47); மைவிழிக் குயிலாள் (49).

ஏனையோர் :— இந்திராணி, திரிவேணி, சத்தியபாமா, சந்திரமதி, கங்கை, மலர்மங்கை ஆகியோர் குறத்தியிடம் குறி கேட்டோர் பட்டியலில் (45) இடம் பெறுகின்றனர். குறத்தி குறி சொன்ன கடவுளர்களாக மதுரை மீனாட்சி, கடினத்திரிசூலி

40. தியாகேசர் குறவஞ்சி, 1, 2, 25, 47.

பர்வத வேதாளி, பலபத்திரகாளி, கெர்விதி கௌமாரி, கேச சத்தமணி, பூம கல்யாணி, கொல்லாபுரத்தம்மன், எல்லம்மைத் தாய், எக்கலாதேவி, பாதாள மகமாயி, பகவதிதாய், தெய்வ நாயகி, சிந்துரமுகி ஆகியோர் இடம்பெறுகின்றனர்.

இவர்களுள் பெண் தெய்வங்களின் பெயர்கள் மட்டுமே இடம்பெறுகின்றன. ஒரே தெய்வம் பல்வேறு ஊர்களில், இடங்களில் பல பெயர்களைக் கொண்டிருப்பதைக் காணமுடி கிறது. குறத்தி கூற்றில் இடம் பெறும் இப்பெயர்களுள் ஆண் தெய்வங்களின் பெயர்கள் இடம்பெறவில்லை என்பது இவண் குறிப்பிடத்தக்கது.

வானுலகத்து வாழ்வோர்

இயமன் :- மனுநீதிச் சோழன் வரலாறு கூறும் பகுதியில் இயமன், அந்தகனாகக் கூறப்பெறுகின்றான். சிவபெருமான் அச்சோழனின் நீதியைச் சோதிக்கக் கருதிப் பசுவாகவும் அப் பசுவின் கன்றாக இயமனும் வருகின்றனர் (20 40).

தும்புருவும் நாரதரும் :- தும்புருவும் நாரதரும் வந்து துதி செய்யும் வாசல் எனக் குறத்தி கூறுகிறாள் (25). மலை யில் தும்புருவும் நாரதரும் இசைத்த இசை வெள்ளம் கண் ணுக்கும் காட்சிக்கும் விருந்தாக அமைகின்றன. நாரதர் குற வஞ்சியாகவும் தும்புரு சிங்கனாகவும் வருகின்றனர்.[41] ஏனைய குறவஞ்சி நூல்கள் இங்ஙனம் கூறப்பெற்றதாகத் தெரியவில் லை.

மன்மதனும் இரதியும் :- இராசமோகினி தனக்குத் துன்பம் செய்யும் மன்மதனை இகழ்ந்து கூறுகின்ற சொற்கள் அவள் பிரிவுத் துயரைப் புலம்பலாக வெளிப்படுத்துவனவாக வருகின்றன. பேச்சுக்குப் பேச்சு மன்மதனை விளித்து வசை பாடுகிறாள்.

"மன்மதன் போற்றும் இராசமோகினி (8); அழகிய இரதியை விடச் சிறந்த அழகுடை-வள் தலைவி (9); கரும்பு வில்லினால் மன்மதன் மலர்க்கணைகளைத் தொடுக்கிறான்

41. தியாகேசர் குறவஞ்சி 20:103; 56.

(18); மீன் கொடியை வைத்திருக்கிறான் (22)'' என்று ஏனைய பகுதிகளில் மன்மதன், இரதி தொடர்பான செய்திகளைக் கூறு கின்றார்.

தேவலோக மாதர்கள் :- வானுலக மகளிர் பலரை இப் பூவுலகில் வாழ்கின்ற பெண்களோடு ஒப்பிட்டுக் கூறுகின்றார் ஆசிரியர். துதி பெறும் அரம்பை போலத் தலைவி வருகிறாள் (8). திருவாரூர்க் கோயில் வாசலில் அரம்பை, ஊர்வசி ஆகி யோர் நடனம் ஆடுகின்றனர் (25). வானுலகத்து அரம்பையர் போலப் பிடிநடை அன்னப்பேடு போலக் குறத்தி நடந்து வருகின்றாள் (20:104). அவள் நடந்து வந்த களைப்பினால் நெற்றியிலணிந்த பொட்டில் அரும்பிய வியர்வைத் துளிகளின் அழகைக் கண்ட தெய்வ அரம்பையர் உள்ளம் நாணுகின்ற னர் (23). தேவர் உலகத்தில் வாழ்கின்ற மேனகை, அரம்பை, அண்டர் உலகத்தில் வாழ்கின்ற பெண்கள், நாகர் உலகத்தில் இருக்கின்ற பெண்கள் ஆகியோருக்குப் பாவனையாலும், பிற வற்றாலும் குறத்தி குறி சொல்கின்றாள் (45).

இறை தொடர்பான செய்திகள்

இந் நூலில் காணப்படும் இறை தொடர்பான செய்திகள் வருமாறு :—

1. சோழ மன்னன் 'சிவாயநம' வென்று அஞ்செழுத்தோதி உள்ளம் தளர்ந்து உருகுகின்றான் (20:55-56)
2. மால்விடை மேல் குளிர்ந்த நிலவைத் தலையிலணிந்த சிவபெருமான் (20:65)
3. பொங்கரவம் திகழ்கின்ற கங்கணர் (23)
4. நான்கு மறைகளும் கோபுரமாய் வான்கிழிக்கும் வாசல் (25)
5. ஆறு சாத்திர புராணங்கள் நிறைந்த வாசல் (25)
6. சைவநெறி ஆகமங்கள் தழைத்தோங்கும் வாசல் (25)
7. சிவபெருமானின் குலம் நல்ல மேன்மை என அறிந் தோம் (29)

8. மேருச்சிலைவளம் பொருந்தும் செங்கைத் தியாகேசர் (34)

9. தாமரைமலர் போன்றசெங்கையில் வைகுந்தம் காணச் செய்வேன் (43)

10. படமெடுத்தாடும் பாம்புமாலை அணிந்தவன் சிவபெருமான (51)

11. சிங்கன் நெற்றியில் திருநீற்றை அணிந்துள்ளான் (58)

12. தேவதீர்த்தத்தில் நீராடித் திருவெண்ணீற்றை நெற்றியில் பூசி, சன்னதி முன்னர் எல்லாப் பொருள்களையும் படைத்துக் குறி கேட்க வேண்டுமென்று குறத்தி கூறுகின்றாள் (47)

அடியார்கள்

சிவனடியார்களாகப் பெரியபுராணத்தில் குறிக்கப்பெறும் அறுபத்துமூன்று நாயன்மார்களைப்பற்றிய குறிப்பினை ஆசிரியர் கூறுகின்றார் (25, 66).

சுந்தரர் :— சமய குரவர்களுள் ஒருவரான சுந்தரர் திருவாரூரில் திருத்தொண்டத் தொகையைப் பாடியருளினார்; சுந்தரர் பொருட்டு இறைவன் நள்ளிருளில் பரவை நாச்சியாரிடம் தூது சென்றார். இந்நிகழ்ச்சியை அறிந்த ஆசிரியர் இக்குறவஞ்சியில்,

'கவிமழை பொழியும் நம்பிக்காகத் தூது சென்றவர்'
(20:29-30)

'சுந்தரர் சொன்ன பண்ணுதமிழ்க் கொருதூதர்' (35.3)

எனத் தியாகேசரையும்

'துதிபெறும் முத்தமிழுக் கரசராகிய சுந்தரர்
புகழும் ஆரூர்' (36)

என ஆரூர்ப் பெருமையையும்

'சுந்தரர் செந்தமிழ்க் கவியார்' (41)

'சுந்தரர் முத்தமிழ் வாழி' (66)

எனச் சுந்தரர்தம் தமிழ்ப்பற்றையும் எடுத்துக் கூறுகின்றார்.

முசுகுந்தச் சக்கரவர்த்தி :— முசுகுந்தன் என்னும் சோழ மன்னன் அளவில்லாத நிதியை உடையவன்; பொன்னுலகமான வானுலகத்திலிருந்து இப் பூவுலகத்திற்கு வருகின்றான்; தியாகேசப் பெருமான் உறையும் கோயில் வாசலுக்கு வருகின்றான்; பெருமானைப் போற்றி வணங்குகின்றான்; பெருமானுக்குத் 'திருஅந்திக்காப்பு' எனும் 'மாலை வேளைப் பூசை'யினை நடத்துகின்றான்; தெய்வநிலை பெற்ற அம் மன்னன் தினமும் வாழி! என வாழ்த்துகின்றார் ஆசிரியர் [42]

மனுநீதிச் சோழன் :— மிக விரிவாக இந்நூலில் காணப்படும்[43] இம்மன்னன் வரலாறு பின்வருமாறு :—

அறநெறி தழைக்கவும், உலகைக் காப்பதற்கும் சூரிய குலத்தில் சோழ மன்னன் ஒருவன் தோன்றுகின்றான். இச் சோழ மன்னனின் உண்மை அன்பை உலகவர் உணரும் பொருட்டுச் சிவபெருமான் பசுவாகவும். இயமன் அப் பசுவின் கன்றாகவும் வருகின்றனர். சோழ மன்னனின் மகன், மணிமுடி மன்னர் வருகின்ற தெருவில் தேரினை ஓட்டி வருகின்றான். அவன் தேர்க்காலில் ஆவின் கன்று அரைபட்டு இறக்கின்றது. அதனைக் கண்ட தாய்ப்பசு கதறித் துடித்து அழுகிறது. சோழன் அவைக்கள வாயிலில் கட்டப்பட்டு இருந்த ஆராய்ச்சி மணியைத் தன் கொம்பினால் அசைத்துத் தனக்கு நீதி வழங்கக் கோருகிறது அத் தாய்ப்பசு. பசுவின் கதறலைக் கேட்ட மன்னன் நடுக்கமுற்று, 'முன்னை நாள் விதியோ? இதுதான் முறைமையோ? என்ன காரணமோ?' என்று தன் அமைச்சனிடம் வினவுகின்றான். அப் பசுவின் துயரத்தை அமைச்சன்வழிக் கேட்ட வேந்தன், 'பாவியேன் இந்தப் பழி கழுவுதற்கு இளவரசனைத் தேரின் காலில் ஊர்ந்திடுவதே வழக்கு' என்று கூறி அமைச்சனை அனுப்புகின்றான். அமைச்சன், வேந்தனிடம் 'எதனை எப்படிச் சொல்வோம்' என நினைத்துத் தன் உயிரைப் போக்கிக் கொள்கின்றான். இச் செய்தியைக் கேட்ட மன்னன் 'சிவாயநம' வென்று ஐந்தெழுத்தை ஓதி உள்ளம் தளர்ந்து உருகித் தன் மகன் செய்த

42. தியாகேசர் குறவஞ்சி 4, 20:35-36, 25, 66.
43. மேலது, 20:37-79.

தவறினால் இளம்பசு துயருற்றமைக்கும், அமைச்சன் செய்தமைக்கும் 'தானே காரணம்' என நினைக்கின்றான். தன் மகனைத்தானே தேர்க்காலில் கொல்கின்றான். அதன்பின்னர்த் தன் உயிரைப் போக்க நினைக்கின்றான். மன்னன் செயலைக் கண்ட பொன்னுலக அமரர் பூமழை பொழிகின்றனர். இப் பூவுலகினர் கண்ணீர் சொரிகின்றனர். குளிர் நிலவைத் தலையில் தாங்கிய சிவபெருமான், திருமால், நான்முகன், இந்திரன், முனிவர்கள் ஆகியோர் புடைசூழ்ந்துவர, மால்விடை மேல் ஏறி, சூரிய குலத்தில் தோன்றிய மன்னவன்முன் அனைவரும் காணுமாறு காட்சி கொடுக்கின்றனன். ஆவின் இளையகன்று, அமைச்சன், அரசன் மகன் ஆகியோர் உயிர்பெற்று எழுந்து மன்னனை வணங்குகின்றனர். மன்னனும் மகிழ்ந்து மழவிடைப் பாகர் பொன்னடி பணிந்து வணங்குகின்றார். கமலைத் தியாகேசர், ''அரசனே! உன்றன் அன்பு கண்டு மகிழ்ந்தோம்; இந்நிலவுலகத்தில் மனுநெறி நடத்தி உன் பெரும் புகழினை நிறுத்திப் பின்பு பேரின்பம் பெறுவைநீ'' எனத் திருவருள் புரிகின்றனன்.

நாடும் *ஊரும்*

கற்பகநாடு :— கற்பக நாட்டினை விட்டுவிட்டுப் பூவுலகத்திற்குக் குறத்தி வந்த காரணத்தைச் சிங்கன் கேட்கின்றான் (65).

திருவாரூர் :— திருமுதுகுன்றம் எனும் விருத்தாசலத்தில் ஓடுகின்ற மணிமுத்தாற்றில் இட்ட பொன்னை ஆரூரிலுள்ள கமலாலயக் குளத்திலிருந்து சுந்தரர் எடுத்துப் பரவை நாச்சியாருக்குக் கொடுத்த சிறப்புப் பெற்ற 'கமலை நாட்'டின் பெருமை வருமாறு :—

1. இந்திரன் பணியும் தியாகராசர்தம் கமலைநாடு (9)
2. நாகரிகத் தென்கமலை நாயகர்த் தியாகேசர் நாடு (15)
3. செஞ்சொற்கள் இருக்கும் தென்கமலைத் தியாகேசர் (17)

4. கமலைத் தியாகேசர் (20 : 13)
5. தென்னுலவும் தென் கமலைத் திருநாடு (35)
6. செந்தமிழ் சேரும் நன்னாடு (43)
7. தியாகராசர் குளிர்ந்த பொன்னாடு (59)
8. மேரு மலையை வில்லாக வளைத்த தியாகேசர் செழித்து அருள் செய்கின்ற நல்லநாடு (62)
9. சந்ததமும் தென்கமலைப் பதி (66)

கமலை நாட்டின் பெருமையைக் கூறுகின்ற ஆசிரியர் ஆரூரின் பெருமையையும் போற்றிக் கூறுகின்றார்.

1. தென்றல் இத்தலத்தில் சிறப்புடையது (7, 20, 25)
2. பங்குனி உத்திரச் சிறப்புப் பெற்றது (35, 51)
3. நிறைந்த செந்தமிழ் சேர்ந்த தலம் (8)
4. மூவர் தமிழ் விளங்க நிற்கும் பேறு பெற்றது (25)
5. முத்தமிழுக்கரசராகிய சுந்தரர் புகழும் சிறப்புடையது (36)
6. தேரணியும் மதிலணியும் சிறந்து விளங்கும் பெருமையுடையது (39)
7. குயில் கூவும் பெருமை பெற்றது (59)
8. நிதிவளம் நிறைந்த வீதியை உடையது (8)
9. மணம் வீசும் செந்தாமரையை உடைய அழகிய வீதிகளை உடையது (19)
10. அடிமுடி தேடிய திருவீதியினை உடையது (20)
11. கலி செலா நகரமென்றும் கந்தமாபுரியிதென்றும் தலமெலாம் புகழும் பேறு பெற்றது (42)
12. இயற்கை வளங்கள் நிறையத் திகழ்வது (28)

ஏனைய தேசங்கள் :- குறத்தி, தலைவியிடம் நாற்பத்து நான்கு தேசங்களுக்குச் சென்று வந்ததாகக் கூறுகின்றாள்.[44] இதேபோன்று சிங்கியைக் காணாத சிங்கன் அவளைப் பதினைந்து தேசங்களில் சென்று தேடியதைக் குளுவனிடம் கூறுகின்றான்.[45]

உவமை அணி

கொடி இடையளான திருமகளை ஒத்த குறவஞ்சி பாடுவதற்கு முருகனின் பாத கமலங்களைப் போற்றி நூலைத் தொடங்கிய ஆசிரியர், 'போல' எனும் உவம உருபிலேயே பெரும்பாலான உவமைகளைக் கையாள்கின்றார்.

மகளிர் பேச்சின் இனிமைக்குக் குயில், பஞ்சவண்ணக் கிளிகளும், நடைக்கு அன்னமும், விழிக்கு மானும் உவமைகளாகக் கூறப்படுகின்றன.

''நீயும்
பார்த்தால் பசுப்போல பாய்ந்தாற் புலியானாய்
— தென்றலே'' (11)

---

44. தியாகேசர் குறவஞ்சி 31.
தேசங்களாவன : கொங்கு, கலிங்கம், குலிங்கம், கலியாணம், கொந்தளம், இலாடம், விராடம், கர்னாடம், வங்கம், தெலுங்கம், மதங்கம், விதர்ப்பம், மாளுவம், சாளுவம், மக்கா, மலாக்காய், கொச்சி, உச்சயினி, குடாரம், கடாரம், கோசலம், கேரளம், கொல்லம், புளிந்தம், மச்சம், மராடம், திரிகூடம், மகேந்திரகூடம், மாகதம், கேகயம், மந்திரம், துளுவம், சீனம், துவாரகா, சிந்து, விதேகம், சிங்களம், வங்காளம், தெங்கணதேசம், சோனகம், பல்லவம், சாவக-தேசம், சூரசேனம், துலுக்கானம்.

45. மேலது, 61.
தேசங்களாவன : மச்சம், திராவிடம், சிந்து, விதேகம், மக்கம், துளுவம், கர்னாடம், கொச்சி, குடகு, கொல்லம், மல்லாபுரம், அச்சம், டில்லி, மலையாள தேசம், சத்தத்தீவு.

"கையில்வரு நெல்லிக்கனி போல" (51)

ஆகிய பழமொழி தொடர்பான உவமைகளும் இடம் பெறுகின்றன.

"நாளும் வாடும்பயிருக் கின்ப மழைபோல
வந்தருள் செய்குவாய் தியாகராஜா" (13)

என்று இராசமோகினி இறைவனிடம் வேண்டுகின்றாள்.

"திருமகள் வீற்றிருக்கும் சிவந்த கண்களை உடைய திருமாலின் மார்பு போல, அருள் தரும் புவிமடந்தை அழகிய பொன்மாமுடி போல, இந்திரன் காக்கும் பொன்னுலகத்தைப் போல, வரம் தரும் நான்முகன் வாழும் தாமரை மலர் போல"

ஆரூர்ப்பதி செல்வச் செழிப்புடன் விளங்குகிறது (20:1-5).

முள்ளுமுருங்கை மலர் போன்ற வாயிலிருந்து வருகின்ற சொற்களாகக் குறத்தியின் பேச்சு இருக்கின்றது (23).

இயற்கை வளம்

திங்கள்:- தியாகேசர் திங்களைத் தம் சடைமுடி மேல் தாங்கியிருக்கின்றார் (1,55). தியாகேசர் மேல் அளவு கடந்த காதல் கொண்ட இராசமோகினி வெண்ணிலவைப் பழித்துக் கூறுகின்றாள் (10). தலைவியின் மனநிலையை அறிவதற்கு வெண்ணிலவும் ஒன்றாக இருக்கின்றது குறிப்பிடத்தக்கது. இராசமோகினி, மோகனரேகை, குறவஞ்சி ஆகியோர் தம் முகத்துடன் திங்களும் ஒப்புமைப் படுத்தப்பட்டிருக்கிறது (29, 15, 22, 23). தியாகேசர் வாழும் கோயில் வாசலில் உள்ள பொன் மதிலில் நிலவு நாள்தோறும் தவழ்ந்து வருகின்றது (25). சந்திரன் ஒலிக்கதிர் புயல் போல விளங்குகிறது (41). குறத்தி நிலா நங்கைக்கும் குறி சொல்கின்றாள் (45).

சோலை வளம் :- அழகிய சோலை வளம் நிறைந்த பெருமை பெற்றது ஆரூர்ப்பதி. வயல்கள் நிரம்பிய சோலைகளில் குயில்கள் எப்பொழுதும் கூவிக்கொண்டிருக்கும் (30, 44. 59).

மலர்கள் :- பெண்களை வருணிப்பதற்கும் மலர்களோடு அவர்களை ஒப்பிடுவதற்கும் சில மலர்களை ஆசிரியர் பயன் படுத்துகின்றார்.

இராசமோகினியின் முகம் மலர் போன்றும் (16) கை தாமரை போன்றும் (26) இருக்கின்றன; இரண்டு காவி விழிகள் கமலமாகத் தெரிகின்றன (11); வாசனை மிக்க மலர்க்கூந்தல் சந்தனச் சோலையாகத் திகழ்கின்றன (11); கூந்தலில் மல்லி-கை, முல்லை மலர்களைச் சூடியிருக்கிறாள் (9).

மோகனரேகை முல்லை நகைவல்லியாக வருகின்றாள் (15).

குறவஞ்சியின் விழிகள் குவளை மலர் போன்றும் (22), கைகள் தாமரை போன்றும் (43) இருக்கின்றன; இவள் தன் மலர்க்கரத்தில் குறி சொல்லும் பாத்திரைக் கோல் வைத்-திருக்கின்றாள் (20 : 102); இவள் முலைகள் மலர்ச்செண்டு போன்றிருக்கின்றன (59).

சிங்கன் மலர்க்கணைகளை எய்கின்றான் (58).

தாமரை மலர்கள் முத்துக்கள் தவழும் தெளிந்த நீரை உடைய குளத்தில் பூக்கின்றன (60); தாமரை கோங்கலர் என்று சொல்லத்தக்க பொங்கமிக்க தங்க வளையல்களைத் தோழி தன் கைகளில் அணிந்திருக்கின்றாள் (15); தாமரை மலர்கள் பூத்துக் குலுங்குகின்ற குளங்களில் வண்டினங்களின் குரல்கள் ஒலித்துக் கொண்டிருக்கின்றன (24,28); வரம் தரும் நான்முகன் தாமரை மலரிலேயே வீற்றிருக்கிறான் (20:4); அக்கினிக்குள் சில தாமரை மலர்களைக் குறத்தி உண்டாக்கு வதாகக் கூறுகின்றாள் (43).

சிவபெருமான் தம்முடைய சிவந்த சடையினில் கொன்றை மலரை எப்பொழுதும் சூடியிருக்கின்றனன் (26).

குறத்திக்குத் தியாகேசரின் மெய்வனப்புக் கற்பக மாமலர் சொரிவது போல் காட்சியளிக்கிறது (52).

தலைவன் அணிந்திருக்கும் மலர் மாலையைத் தலைவி வேண்டிப் பெறுவது அகஇலக்கிய மரபாகும். ஆனால் இக் குறவஞ்சியில் தலைவனே செங்கழுநீர் மாலையைத் தருவ தாகவும், அம் மாலையை அவனிடமிருந்து ஒரு பெண் பெற்றுத் தலைவியிடம் தருவதாகவும் ஆசிரியர் கூறுகின்றார்.[46]

விலங்குகள் :- தலைவிக்கு வாடை, புலி போலக் கொல்கின்றது (18). சீற்றம் மிகுந்த புலித்தோலினைத் தியாகேசர் இடையினில் உடுத்தியிருக்கின்றார் (52).

யானை வெண்கோட்டுத் தோட்டினைக் காதில் அணிந்து, பிடிநடை நடந்து வருகின்றாள் குறத்தி (20:92, 10ɔ).

குறத்தி தலைவியையும், தலைவி குறத்தியையும் விளித்து அழைக்கும் பொழுது 'மான் போன்றவளே !' என அழைத்துக் கொள்கின்றனர்.[47] குறவர்கள் கலைமானை வேட்டையாடிப் பிடிப்பது வழக்கம் (29).

இரண்டு ஆந்தைகள் சேர்ந்து மரப்பொந்திற்குள் செல்வதைப் பார்ப்பது நல்ல சகுனமாகும் என்று குறத்தி கூறுகின்றாள் (54).

ஆமை :- ஆமை, சேடனுடன் உடம்பைத் தாங்கும் (41); திருமால் வராக அவதாரத்தை எடுக்கின்றார் (53).

பறவைகள் :- தோகை விரித்தாடுகின்ற மயில்களின் நடனத்தைக் குயில்கள் பார்த்து அழகிய குரலில் பாடுகின்றன (14); மோகனரேகை குயிலைப் போன்று இனிமையாகப் பேசுகின்றாள் (15); குயில் கூவுகின்ற ஒலி தலைவிக்குத் துயரத்தை அதிகரிக்கின்றது (18); அழகிய சோலைகளில் குயில்கள் எப்பொழுதும் கூவிக்கொண்டிருக்கும் (59).

தலைவி, குறத்தி ஆகியோரின் நடை அன்னப்பறவை போன்று இருக்கின்றன; நான்முகன் அன்னப்பறவையின் வடிவ

---

46. தியாகேசர் குறவஞ்சி 52 53, 54.

47, மேலது, 29, 30, 31, 34, 39, 45, 46, 47, 67.

மெடுத்துச் சிவபெருமானின் முடியைக் காணச் செல்கின்றனன்; ஆரூரில் அன்னப்பறவைகளின் கூட்டம் அதிகமாகக் காணப்படுகின்றது.[48]

பெண்களின் பேச்சு இனிமைக்குக் கிளி உவமையாகக் கூறப்படுகின்றது.[49]

அடியவர்கள் வளமையுடன் பணி செய்வதற்கும், பெண்களின் சாயலுக்கும், தலைவியின் கூந்தலுக்கும் ஆரூரில் விந்தை நடனம் புரியும் மயில்கள் உவமைகளாகக் கூறப்பெற்றிருக்கின்றன.[50]

வண்டுகள் குளங்களில் மலர்ந்திருக்கின்ற தாமரை மலர் களில் கூட்டமாக அமர்ந்து இன்னிசை எழுப்புகின்றன. தூது செல்லும் தன்மை பெற்ற இவ் வண்டு சிங்கியின் காது விழி வரை நீண்டு இருக்கிறது.[51]

நீர்வளம் : சிவபெருமான் சடையினில் இருக்கின்ற கங்கை எனும் பெண்ணிற்குக் குறத்தி குறி சொல்கின்றாள்.[52] ஏழு கடல் நீரைக் கடுகாக்கி மூடி அடைக்கும் திறன் பெற்றவள் குறத்தி (43).

பலதேசங்களுக்குச் சென்ற குறத்தி தான் நேரில் கண்ட முப்பத்தேழு நதிகளின பெயர்களைத் தலைவியிடம் கூறுகின்றாள்[53]

48. தியாகேசர் குறவஞ்சி 9,20:105,24,47,53.
49. மேலது, 9.59.
50. மேலது, 22,41,49,44.24.
51. மேலது, 9,24,28,18,59.
52. மேலது, 26,52,45,50.
53. மேலது, 37
நதிகளாவன : கவுதமி, பாகீரதி, கொண்டகி, தீர்த்தவதி, கௌமோதகீ, பிரபலகபிலமாநதி, பாவநாசநீர், பஞ்சவடி தீர்த்தம், அவனி காளிந்தி நதி, அமுதவதி, ரூபவதி, அருணவதி, அனுமதி, கருடநதி, குமரி, யமுனைநதி, காவேரி, இந்திராணி, சொர்ணமுகி, சரசுவதி நதி, கமலை, சிந்துநதி, உபயநதி, கவுரி, சந்த்ரபாகை, விரசை, சரயுநதி, மந்தாகினி, நர்மதை, மணிகர்ணி, வேகவதி, நந்தினி, துங்க பத்திரைநதி, பதுமநதி, சங்கநதி, பம்பை நதி, கம்பைநதி.

மலைவளம் :- குறத்தி தான் அறிந்த இருபத்துமூன்று மலைகளின் பெயர்களைத் தலைவியிடம் கூறுகின்றாள்.[54] அதன்பின்னர்த் தானிருக்கும் மலையின் வளத்தைத் தலைவியிடம் பின்வருமாறு கூறுகின்றாள்.[55]

குங்குமப்பூ, அரிதாரம், கோதிலி, இலவங்கம், அகில், தேவதாரம், சந்தனம், கற்பூரம், பதுமராகம், மாணிக்கம், தரளம், ஏலம், பாரிசாதமலர், கத்தூரி, அன்னத்தூவி, சஞ்சீவி, கரும்பு, கதலி, மா, புன்னை, செண்பகம், அசோகம் ஆகிய பொருள்கள் குறத்தி வாழ்கின்ற மலையில் விளைகின்றன. செந்தேன் பொழியும் சோலை, கற்பகச் சோலை, நொந்து வருகின்றவர்களுக்கு அன்னசாலை, மலையருவி, ஐந்தலை நாகங்கள் ஆகியனவும் இம் மலையில் இருக்கின்றன.

ஏனையன :— ஆரூரின் இயற்கை வளத்தைக்

''கரியமேதி திருக்காவியம் பொய்கை
கலக்க வாளைகயல்விட்டு விண்மிசைத்
திரியு மீனினத் தோடுறவாய் மழைத்
திவலையோடு திரும்பி யுலாவும்'' (40)

என்று கூறுகின்றார் ஆசிரியர்.

தாமரைக் குளங்களில் செங்கயல் மீன்கள் துள்ளிக் குதித்து ஓடுகின்றன (28). சேல்மீன் போன்ற விழியினை உடையவள் உமையவள் (63).

---

54. தியாகேசர் குறவஞ்சி 33. '
மலைகளாவன : கனகமகாமேருகிரி, கருடாத்திரி, கைலைமலை, கந்தமாதனமிந்திரசயனம், பன்னககிரி, பவளகிரி, பலபத்திரிகிரி, தேவபாலகிரி, இந்திரநீலகிரி, சந்திரகிரி, விந்தியகிரி, சதுரகிரி, வேதகிரி, சதகேசவாசலமகேந்திரம், மந்திர சாலம், சுராசலம், சுதாச்சலமேகம், மல்லிகாசலம் (ஸ்ரீசைலம்), மாலியவந்தம். மலையகிரி (பொதியமலை)' பத்மகிரி (திண்டுக்கல்) மணிகூடகிரி, சக்கரவாளகிரி,
55. மேலது, 35.

புராணமும் வரலாறும்

இந் நாடகக் கதைத் தலைவன் தியாகேசரின் வீரச்செயல் களாகத் திங்களைத் தலையில் சூடிய வரலாறு (1, 55); கங்கையைச் சடைக்கரந்த வரலாறு (52), காமனை அழித்த வரலாறு (10), அடிமுடி தேடிய வரலாறு (13, 20, 53), உமையொரு பாகரான வரலாறு (47, 52, 63), முப்புரத்தை எரித்த வரலாறு (52, 62 , புலித்தோலாடை தரித்த வரலாறு (52) ஆகிய புராணக் கதைகளை ஆசிரியர் எடுத்துரைக்கிறார்.

இக் கதைகள் தவிரச் சிவபெருமான், பரவை நாச்சியார் பொருட்டுச் சுந்தரருக்காகத் தூது சென்ற வரலாற்றுச் செய்திகளும்[56] காணப்படுகின்றன. சுந்தரரின் பெருமையையும் இறைவன் அடியவர்களுக்கு மனமுவந்துதவிய அளப்பெருங் கருணைத் திறத்தையும் போற்றிக் கூறுவதன்பொருட்டு இந்த வரலாற்றுச் செய்தியை ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

ஏனையவை

தலங்கள் : வானோர் வணங்குகின்ற ஐம்பத்தெட்டு தெய்வத் தலங்களின் பெயர்களைத் தலைவியிடம் குறத்தி கூறுகின்றாள்.[57]

---

56. தியாகேசர் குறவஞ்சி 7, 20, 35, 41, 52.

57. மேலது, 39

தலங்களாவன : வர்ணபுரி, கேதாரம், வாஞ்சிபுரி, காசி, வருணபுரி, அருணபுரி, மதுராபுரி, சேது, சொர்ணபுரி, இந்திரபுரி, துளசிவனம், குமரி, சோணபுரி, நீலபுரி, சுவேதபுரி, தருமபுரி, சேசபுரி, ககுந்தம், சக்கிரபுரி, செகன்னாதம், அயோத்தி, பிரம்மபுரி, அவுணபுரி, பதரிகாச்சிரமம், பிரபலபுரி, கடல்நாகம், குருசேத்திரம், சிந்துமுகில், கதலிவனம், சென்னிமலை, வடதாரூர், தென்னரங்கம், மதுரை, கழுக்குன்றம், துவாரகை, வடமதுரை, அவநாசி, தென்காசி, அழகர் திருக்கோயில், ஆடுதுறை, பூந்துருத்தி, பாவநாசம், கதிர்காமம், முதுகுன்றம், பஞ்சநதம் (திருவையாறு), திருப்பழனம், பழனிமலை, திருப்புகலூர், திருநாகை, திருக்குருகூர், சேறை, திருக்குடந்தை, திருப்புவனம், திருவனந்தசயனம் திருக்கடவூர், திருக்குவளை (திருக்கோளிலி) திருமருகல், திருக்களம்பூர்.

அண்ட கோளங்கள் :- ஏனைய குறவஞ்சி நாடகங்களில் காணப்பெறாத 'அண்டகோளத்தரு' இக்குறவஞ்சியில் காணப் படுகின்றது. (41). அண்டங்களின் பெருமைகளைக் குறத்தி தலைவியிடம். ''நீங்காத மாயையுடன் நிலைமை பெற்ற மகத் துவமும் ஆங்காரமுடன் மூன்றும் அடைந்து நிற்கும் அண்டம் ஒன்றுண்டு. அண்ட முகட்டினில் பிரமர் முதற்கொண்டு இருக் கும் தேவர்கள் வாழும் சத்திய உலகமுண்டு. திருமால் வாழும் உலகுக்கு அப்பால் ஒருலகம் உண்டு. ஏழு உலகங்கள் உண்டு. சூரிய சந்திர மண்டலங்கள் உண்டு. நாவலந் தீவு நவகண்டன் உருவாகும் செம்பொன்மேரு ஒன்று குவலயத்தின் நடுவில் நிற்கும். எண்திசைப் பாலகர்கள் திசையில் இரு நான்கு மலைகள் நிற்கும். பொன் வரையை அடுத்த தரு நாலும் உண்டு. ஏழு பெருந்தீவுகள் உண்டு. தீவுகளைச் சூழ்ந்து ஏழு கடல்கள் உண்டு. ஏழு கடல்களுக்கும் அப்பால் செம்பொன் நிலம் உண்டு. அதற்கும் அப்பால் ஆழிநெடுமால் வீற்றிருக்கும் மலை உண்டு. பரந்த சக்கரவாளத்தைப் பற்றி இருள் மூடி நிற்கும். அந்த இருளுக்கு அப்பால் பெரிய புறக்கடல் சூழ்ந் திருக்கும். கடல் சூழ்ந்த உலகத்தின் அகலம் யோசனை ஐம்பது கோடியாகும். கீழுலகத்தைத் தாங்கும் அட்டமாகசங்கள் நிற்கும் மதகஜங்களை ஆகடமூர்த்தி பரித்து வளர்ப்பார். காலாக்கினி உருத்திரன் கூடிய கூர்மாண்டர்தமைச் சுமப்பார். இவ்உருத் திரன் மெய்க்களம் பொறுக்கச் சேடனுண்டு. இச் சேடனுடன் மெய்தாங்கும் ஆமை ஒன்றுண்டு. அந்தப் பெரிய ஆமை பதி னான்கு உலகங்களைத் தாங்குவதற்குத் திவ்விய வஸ்து ஒரு வனுண்டு, இவனருளால் அண்டம் அனேகங்களுண்டு'' என்று கூறுகின்றாள்.

பழமொழிகள் : தலைவி நிலவைப் பழித்துப் பேசுகின்ற பொழுது. ''வீணே காலம் போகும் வார்த்தைகள் நிற்கும் கண்ட கருமம் நான் சொன்னேன்; காக்கும் வேலியே பயிரழித்தால் விளையும் வாறெப்படிச் சொல்வாய்; பாரில் எளியாரை வலியார் கேட்டால் வலியாரைத் தெய்வம் கேளாதோ; நாளைத் தலை பிடித்த பின்பல்லோ தாழக் குனிவாய்'' என்று சில பழமொழி களைக் கூறுகின்றாள் (10).

''மடியில் கனமில்லார்க்கு வழியில் பயமேது?; குற்றமுள்ள நெஞ்சுனக்குக் குறுகுறுப்பாய்த் தோணும்; கள்ள நடை மனத்தில்

அச்சம் காடு கொள்ளாது; புலி பசித்தாலென்ன, புல்லைப் புசிப்ப துண்டோ?'' ஆகிய பழமொழிகளைச் சிங்கி கூறுகின்றாள் (65).

குறிவகைகள், நிமித்தங்கள் :— மனக்குறைகள் தீர்வதற் காக மகளிர் குறி கேட்பதும் மனத்தாபம் தீர்வதற்காகக் குறத்தி குறி சொல்வதும் மரபாக இந் நூலில் காணப்படுகின்றன. கைக் குறி, மெய்க்குறி, பாவனையால் குறி சொல்லல், முத்துக்குறி ஆகியவற்றில் குறத்தி தேர்ச்சி உடையவளாக இருக்கின்றாள். சாதாரணமாகப் பெண்களுக்கு இடக்கை பார்த்துக் குறி சொல் வது மரபு. ஆயின் வலக்கை பார்த்துக் குறி சொல்கின்றாள் இந் நூல் குறத்தி.

தலைவியின் கையில் சங்கு, சக்கரம், சமரம், தருமம் சந்தானம், சௌபாக்கியம், மங்களம், விமானம், நர வாகனம் ஆகிய இரேகைகள் காணப்படுகின்றன. ''மச்ச இரேகையினால் எட்டு ஆண் குழந்தைகளும், வச்சிரரேகையினால் ஐந்து பெண் குழந்தைகளும் பிறக்கும்; சந்திரரேகை மங்கிலியத்தையும், தனரேகை மகிழ்ச்சியையும், அங்குசரேகை அரியாசனத்தையும் கொடுக்கும்'' என்று இவற்றுக்குரிய விளைவுகளையும் கூறு கிறாள்.

கவுளி சொல்லும் பல்லியின் காதலும், இரு ஆந்தைகள் சேர்ந்து பொந்திற்குள் செல்வதும் நல்ல சகுனத்திற்குரிய பலன்களாகும் (54).

அணிகலன்களும் ஆபரணங்களும் :- பருபணிச் சுட்டி, பட்டம், சவடி, பொற்பதக்கம், சரப்பணி, பவள வளைகள், பன்மணிக்கடகம், காகம், கணங்கள், கனகம், நற்குலிசம், தமணியச் சிலம்பு, தண்டை, சதங்கை, சங்கு மாமணிகள், தவளவளை நவமணிகள் ஆகியவற்றைக் குறத்தி அணிகின் றாள்.[58]

குறத்தி, மகளிர் பலருக்குக் குறி சொல்லி வச்சிர மாணிக் கங்கள், முத்துத்தாமம், வெள்ளைத் தும்பிக்கோடு, இருசெம் பொற்றோடு, சிலம்புச்சோடு, செம்பொற்பத முன்கைச் சீர், முன்கைக்கடகம், நவரத்தின மாலை, மதாணி (பதக்கம்) ஆகிய

58. தியாகேசர் குறவஞ்சி 20:88-89, 22, 23.

பல பரிசுகளைப் பெறுகின்றாள். இவற்றில் அணி, ஆபரணங்களும் இருக்கின்றன.[59]

வள்ளி காதில் முத்து மாலையும்,[60] சூரி மல்லிகாபரணத்தையும்,[61] தியாகேசர் சங்குமணிகளையும்[62] அணிந்திருக்கின்றனர்.

சிங்கன், சங்கு, மாமணிகள், கொத்து மணித்திரள், முத்துவடம், பதக்கம் ஆகிய அணிகலன்களை அணிந்து 'நவமணிப் பெட்டி'யைத் தூக்கி வருகின்றான்.[63] செம்பொன்வளை, தங்கக்காரை, முத்துத் தொங்கல் தோடு ஆகியவற்றைக் குறத்தி அணிந்திருக்கின்றாள் என்று சிங்கன் தன் நண்பன் குளுவனிடம் கூறுகின்றான்.[64]

ஆடைகள் :- மகளிர், பைம்பொற் கலிங்கம், சொர்ண வர்ணப் பட்டு ஆகியவற்றை அணிந்திருக்கின்றனர்.[65] சந்திர காவியுடை, சரிகைக் கச்சம் ஆகியவற்றைச் சிங்கன் அணிந்திருக்கின்றான்.[66]

குறவர்களின் பழக்க வழக்கங்கள் :- குறவர்களின் பழக்க வழக்கங்களைக் குறத்தி தலைவியிடம் கூறுகின்றாள் குறவர்களின் சாதி வழக்கத்தையும் சேர்த்துக் கூறுகின்றவை வருமாறு :[67]

1. புவனக் குறவர் பூனை பொசிக்கையால் விடுக்கின்றனர்.
2. முருகனுக்கு வள்ளியை மணமுடித்துக் கொடுக்கின்றனர்.

---

59. தியாகேசர் குறவஞ்சி 45.
60. மேலது, 47.
61. மேலது, 49.
62. மேலது, 58.
63. மேலது, 56, 57, 58.
64. மேலது, 59.
65. மேலது, 45, 47
66. மேலது, 57.
67. மேலது, 29.

3. மங்கிலியத்தைச் சங்கின் மணியில் பதிக்கின்றனர்.
4. முருகன் செம்மலர்ப் பாதந்தனைத் துதிக்கின்றனர்.
5. தோகை வள்ளியின் பெருமைகளைச் சொல்லி மதிக்கின்றனர்.
6. செந்தேன், தினைமாவு ஆகியவற்றை நாளும் உண்டு களித்திருக்கின்றனர்.
7. வில் கொண்டு ஆண் மானை எய்வதற்காகச் செடிகளின் அடியில் ஒளிந்திருக்கின்றனர்.
8. முத்துக்களை வாரித் தளர்ந்தவர்கட்கெல்லாம் அளிக்கின்றனர்.

சொற்கள் :- ஆசிரியர், தலைவி, குறத்தி, சிங்கன் ஆகியோர் கூற்றுக்களில் பேச்சு மொழிச் சொற்கள் இடம் பெறுகின்றன.

எங்கெங்கு, தேடித்தேடி, வரவர, விந்தை விந்தையாய், பலபல போன்ற இருபத்தோரு அடுக்குச் சொற்கள் காணப்படுகின்றன. தோழி, குறத்தி ஆகியோரை அறிமுகப்படுத்துகின்ற பகுதியிலும், மங்களம் பாடுகின்ற பகுதியிலும் ஆசிரியர் கூற்றாகவும், ஏனைய பகுதிகளில் கதைப்பாத்திரங்களின் கூற்றாகவும் இச்சொற்கள் இடம்பெறுகின்றன.

தலைவி, குறத்தி. சிங்கன் ஆகியோர் கூற்றுக்களில் 'அஷ்டகஜம்', 'கெஜகர்ணம்', 'திவ்யவஸ்து' போன்ற வடமொழிச் சொற்களும் காணப்படுகின்றன.

'பட்டப்பகல்', 'ஓடியாடி', 'மானாப மானம்' ஆகிய சொற்களும் காணப்படுகின்றன.

இச் சொற்கள் அனைத்தும் அக்கால மக்களின் பேச்சு மொழிச் சொற்களை அறிவதற்கு உறுதுணை புரிகின்றன.

5

சரபேந்திர பூபாலக் குறவஞ்சி

தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர், இரண்டாம் சரபோசியின் புகழைப் பாடுவதற்காக எழுதப்பட்ட நூல் இக் குறவஞ்சி. இந்நூலாசிரியர் கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர். எளிய நடையில் அமைந்த இந்த நாடகம் தஞ்சைப் பிரகதீசுவரர் கோயிலில் சித்திரைத் திருவிழாவின்போது எட்டாம் நாளன்றும், அஷ்டக்கொடித் (எட்டுக் கொடித்) திருவிழாவின் போது ஒன்பதாம் நாளன்றும் நடத்தப்பட்டதாகத் தெரிகிறது.[1] அஷ்டக் கொடிக் குறவஞ்சி' என்று இந் நூலினை அழைப்பதுண்டு[2] இந் நாடகம் நடிக்கப்பட்ட இடம் 'குறவஞ்சி மேடை' என்று அழைக்கப்படுகிறது.[3]

நூலமைப்பு

இக் குறவஞ்சி 71 பாக்களைக் கொண்டு, 20 உட்பிரிவு களாகப் பிரிக்கப்படுகின்றன.

முதல் எட்டுப் பாக்களில் கடவுள் வாழ்த்து, மங்களம், கட்டியக்காரன் வருகை, கணபதி வருகை ஆகிய செய்திகள் சொல்லப்படுகின்றன. கடவுள் வாழ்த்தில் பிள்ளையார், சந்திர மௌலீசர், பிரகதீசர், பெரிய நாயகி, விநாயகர், கந்தவேள், வாணி ஆகியோருக்கு வாழ்த்துக் கூறுகிறார் ஆசிரியர். சர பேந்திரருக்கு மங்களம் பாடிய பகுதி நூலின் முற்பகுதியிலும், இறுதியிலும் இடம்பெறுகின்றது.

---

1. வே. பிரேமலதா (ப.ஆ.), தியாகேசர் குறவஞ்சி, சரசுவதி மகால் நூலக வெளியீடு, தஞ்சாவூர், 1970, முன்னுரை, ப.23.

2. உ. வே. சாமிநாதையர், சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகத்தின் நூன்முகம், 1932, ப. 280.

3. ஓா ஜான் அம்மையார் 'சரபேந்திர பூபால குறவஞ்சி', சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள் (மூன்றாவது மாநாடு), கழகம், சென்னை, 1967, ப. 276.

இக்குறவஞ்சியின் அமைப்பானது, நாடகம் பார்ப்போ-ருக்கு இயற்கையாகத்தோன்றுமாறுசெந்தமிழும்,சேரி மொழியும் விரவி வருமாறு அமைகிறது. ஆங்காங்கே நாடோடிப் பாடலின் சாயல் காணப்படுகின்றது தலைவி தோழி ஆகியோரின் பேச்சுக்கள் இலக்கியத் தமிழிலும் குறிஞ்சி நில மக்களாகிய குறத்தி சிங்கன், குளுவன் ஆகியோரது பேச்சுக்கள் சேரி மொழியிலும் காணப்படுகின்றன. நூலின் இடையிடையே உரைநடை கலந்த வசன நடையும் பாடல்களுக்கு இசைப்பாட்டுக்களின் மெட்டுக்களும் அமையப்பெறுகின்றன.

யாப்பு

இந்நூல், நேரிசை ஆசிரியப்பா, வெண்பா, கொச்சகக் கலிப்பா, ஆசிரிய விருத்தம் ஆகிய இயற்றமிழ்ச் செய்யுள்களால் ஆகியது. ஆசிரிய விருத்தத்தில் அறுசீர், எழுசீர், எண்சீர்களால் அமைந்த பாக்கள் இடம்பெறுகின்றன.

நூல் நுதலிய பொருள்

நால்வகைப் படைகள், படைத்தலைவர்கள், உற்றார், உறவினர்,சிற்றரசர்கள் புடைசூழ்ந்துவர, இன்னிசைக் கருவிகள் முழங்க மகளிர் நடனமாட, சரபோசி மன்னர் உலா வருகின்றார். உலா வந்த மன்னனைக் கண்ட மதனவல்லி என்பாள், மன்னனின் எழில் கண்டு காதல் கொள்கின்றாள். திங்கள், தென்றல், குயில், மாலை, மலர், கடல், மீன், கப்பல், அன்னம். காயா மரங்கள் ஆகியன தனக்குத் துன்பத்தைத் தருவதாகத் தலைவனிடம் தூதனுப்பிய தோழி திரும்பி வராததைக் கண்ட மதனவல்லி, தோழியையும் பழித்துப் பேசுகின்றாள்.

தெருவில் பல வளங்களைக் கூறிச் சென்று கொண்டிருந்த குறத்தியை அழைத்து அவள் ஆற்றலை உணர்வதற்காக முதலில் பல கேள்விகளைக் கேட்டுத் தெளிகிறாள் மதனவல்லி. இறுதியில் தனக்குக் குறி சொல்ல வேண்டுகிறாள். குறத்தியும், சரபோசி மன்னரைக் கண்டு அவள் மீது காதல் கொண்டதையும் தஞ்சைப் பெருவுடையார் அருளினால் அவளைச் சேர்வதையும் குறிசொல்லிப் பரிசில் பல பெறுகின்றாள்.

இந்நிலையில், குறத்தியைக் காணாத அவள் கணவன் சிங்கன், தன் தோழன் குளுவனுடன் வருகின்றான். பறவைகள் பலவற்றையும் பிடித்து வரும் வேளையில் சிங்கனுக்குக் குறத்தியின் நினைவு எழப் பலவாறு புலம்புகின்றான். இறுதி-யில் குறித்தியைக் காண்கிறான். இருவருக்குமிடையே உரையாடல் நிகழ்கிறது. இறுதியில் சரபோசி மன்னரை வாழ்த்து-வதுடன் நூல் முற்றுப்பெறுகிறது.

பாத்திரப் படைப்புகள்

சர்போசி, மதனவல்லி, குறவஞ்சி ஆகிய மூவரும் முதன்மைப் பாத்திரங்களாகவும் சிங்கன், குளுவன், பாங்கியர் ஆகியோர் துணைமைப் பாத்திரங்களாகவும் இடம்பெறுகின்றனர்.

சரபோசி :- பாட்டுடைத் தலைவனான சரபோசி மன்னர் போசல குலத்தில் பிறந்தவர்; ஆகமம், கலைகள், அருமறை, புராணம், மனுநூல் பலவும் நன்குணர்ந்தவர்; படை, குடி. கூழ், அமைச்சு, நீதி, நட்பு, அரண் இவற்றை நன்குணர்ந்தவர்; சிறந்த சிவபத்தர்; எல்லா உயிர்க்கும் தண்ணளி புரிபவர்; அரசு இருக்கையில் கவலை இல்லாமல் வீற்றிருப்பவர்; உலக மன்னர்கள் வந்து அடிபணியும் தன்மை உடையவர்; காசிக்குச் சென்று கங்கையாற்றில் நீராடி விசுவநாதனின் தாமரைப் பாதங்களை எதிர்பணிந்து வேண்டிய வரங்களை விருப்புடன் ஏற்றவர்; இவர் ஆட்சியில் மக்கள் எவ்விதக் கவலையுமின்றி வாழ்கின்றனர்; காட்சிக்கு எளியவராயும் கடுஞ்சொல் ஏதும் கூறாதவராயும் ஆண்டு வருகின்றார்; தம்மை நாடிவரும் இரவலர்க்கும், தம் புகழ் பாடி நிற்கும் புலவர்களுக்கும் வரையாது வழங்கும் வள்ளல் தன்மை உடையவர்.

மதனவல்லி :— இக் குறவஞ்சியின் தலைவி; 'மோகினி' எனவும் அழைக்கப்படுகிறாள்; உத்தபசாதிப்பெண்; தாமரை மலர் குற்றமுடையதோ என்று கூறத்தக்க ஒளிமுகத்தினாள்; வெண்பிறை போன்ற நகத்தினாள்; கரும்பன்ன தோளினாள்; கூற்றுவனைவிடக் கொடிய கண்களினாள்; பனிமதி நெற்றியில் கண்டார் கவரும்வண்ணம் திலகம் அணிகின்றவள்; இத்தகைய சிறப்பினைப் பெற்ற இம் மதனவல்லி, தன் தோழியர்களுடன் கை வளைகள் கலகலவென்றொலிக்க, அழகிய கூந்தலினை

அவிழ்த்து, ஆடை நெகிழ்த்து, மணிவடம் சிதறக் கொங்கை சேர்ந்து பந்தாடுகிறாள். அந்நிலையில் வீதி உலா வந்த தலைவனைக் கண்டு காதல் கொள்கின்றாள்.

காதல் கொண்ட தலைவி, மன்மதன், திங்கள், தென்றல், குயில், மாலைப்பொழுது ஆகியவற்றைப் பார்த்துப் புலம்பும் பாக்கள் அவளுடைய மனநிலையை நன்கு எடுத்துக்காட்டு கின்றன. இவற்றுள் திங்களைப் பழித்துரைத்த செயலைக் காண்பது பொருத்தமுடையதாகும்.

நீலவானில் விண்மீன் கூட்டம் சூழ்ந்துவர உலா வருகின் றான் திங்களஞ்செல்வன். குளிர்ச்சியைத் தரும் திங்களின் தோற்றம் மதனவல்லிக்கு இப்பொழுது அனலாக அள்ளி வீசுவ தாகத் தோன்றுகிறது. ''மன்மதனின் குடையாகிப் பெண்களை வாட்ட வந்த மதியே ! உனக்கு மதி இருந்தால் அல்லவோ அறி வாய் ! இப்போது நீ ! மதியே! உன்னை அழகிய வடிவமுடை-யவன் என்றும், பெண் என்றும் சொல்வார்கள்; ஆனால் இப் பொழுது உன்னைப் பார்த்தால் ஆணாகவும் தெரியவில்லை, பெண்ணாகவும் தெரியவில்லை. அலியாக இருக்கின்றாய் மதியே ! திருமகளோடு பிறந்தும் பெண் அருமை அறிந்தி லையே வெண்ணிலாவே ! எண்ணிப் பார்த்தால் அதுவுமல் லாது உனக்கு நான் பகை அல்லவே வெண்ணி லாவே ! என்றிவ்வாறு நிலவைப் பழித்துக் கூறிய தலைவி, தான் தனிமையில் நின்று வாடுவதைப் போலத் திங்களும் வாடுவதாக நினைக்கின்றாள் ''வானில் துணை யின்றித் தனிமையில் நிற்கின்ற நிலவே ! அறம் நீங்கிய கொடு மையின் காரணமாகவே உன்னை இறைவன் இவ்வாறு அந்தரத் தில் விட்டான் போலும் !'' என்று கூறிச்சிறிது ஆறுதல் அடை கின்றாள். தலைவி எப்பொழுதும் தனிமையில் இருப்பதில்லை. என்றாவது ஒருநாள் தலைவனுடன் சேர்ந்து விடுவாள். ஆனால் நிலா அப்படியல்லவே ! எப்பொழுதும வானில் தனியாகத்தான் இருத்தல் வேண்டும். இதனை எண்ணிப்பார்த்த மதனவல்லிக் குத் திங்கள் மீது இரக்கம் பிறந்தது. அத் திங்களுக்கு ஆதரவு காட்ட விரும்புகிறாள்.

''இருநிலம் போற்றுந் தஞ்சைச் சரபோசி மன்னருடன்
வெண்ணிலாவே - நாளை
இருந்திடுவே னங்கேவா விருந்திடு வேனுனக்கு
வெண்ணிலாவே'' (19.8)

ஆற்றாமை மிகுதியினால் தலைவி மனத்தினைத் தலைவனிடம் தூது விடுகின்றாள். ஆனால் தூது சென்ற மனமோ திரும்பி வராமல் தலைவனிடமே தங்கி விட்டது. இறுதியில் தன் தோழியையே தூது செல்ல விடுக்கின்றாள். அவளும் வராமற் போகவே அவளையும் வெறுத்துப் புலம்புகின்றாள்.

அப்பொழுது குறத்தி வருகின்றாள். அவள் தலைவிக்குக் குறிகள் பலவற்றைச் சொல்லி, இறுதியில் அவளது மனக்குறியைக் கூறித் 'தலைவனுடன் இனிது வாழ்வாய்' என்ற சொலலைக் கேட்ட அளவில்தான் மனமகிழ்வு கொள்கிறாள் தலைவி. குறி சொன்ன வஞ்சிக்குப் பரிசுகள் பல நல்கி அனுப்புகிறாள்.

குறவஞ்சி:- அஞ்சனம் படிந்திருக்கின்ற விழிகளை உடையவள்; பெண்களுக்குக் கைரேகை, கால் ரேகை, உடம்பிலுள்ள மச்சம், தழும்பு, சுழி ஆகியவற்றைச் சொல்லி உண்மைப்பலன் உரைப்பவள்; குறி சொன்னமைக்காக அவர்கள் கொடுக்கும் மணிகள், ஆடைகள், பெரும் நிதி ஆகியவற்றை வாங்கும் தன்மை உடையவள்; வில் போன்ற வளைந்த நெற்றியை உடையவள்; கருமையான கயல் மீன் போன்ற விழியை உடையவள்; காதில் பொன் குழைகள் மின்னும்படியாக அணிபவள்; அழகிய நறுமலர்களைக் கூந்தலில் சூடுபவள்; அன்னம் போன்ற நடையை உடையவள்.

இத்தகைய சிறப்புப்பெற்ற குறத்தி, தலைவியைக் கண்டு வாசல் வளம், சாதி வளம், மலை வளம், தான் வாழும் மலை, தான் கண்ட தலங்கள், நதி வளம், தேச வளம், சோழ நாட்டு வளம் ஆகிய வளங்களைக் கூறுகிறாள். பல தேசங்களுக்குச் சென்று பலருக்குக் குறி சொல்லிப் பெற்ற பரிசுகளையும் கூறுகின்றாள். தெலுங்கு, மராட்டி, கன்னடம், இந்துத்தானி, ஆங்கிலம் ஆகிய மொழிகளை அறிந்தவளாகவும் இருக்கின்றாள். அதன் பின்னர்த் தலைவிக்குக் கைக்குறியும், மனக்குறியும் சொல்லிப் பரிசு பெற்றுச் செல்கின்றாள்

குறத்தியைக் காணாத அவள் கணவன் சிங்கன், தன் தோழன் குளுவனுடன் அவளைத் தேடி வருகிறான். குறத்தியின் அடையாளத்தைத் தன் தலைவனிடம் கூறுகின்றான். பின்னர்ச் சிங்கனும், குறத்தியும் சந்தித்து உரையாடி மகிழ்ச்சியுடன் மங்களம் பாட நூல் முடிகிறது.

சிங்கன் :— தன் நண்பன் குளுவன் உடன்வரப் பறவைகளைப் பிடித்துக்கொண்டு, தன் மனைவி குறத்தியைத் தேடிக் கொண்டு வருகின்றான். சிங்கன் தோற்றம், பறவைகளைப் பிடிக்கும் விதம், சிங்கியைக் காணாது புலம்புதல் ஆகியன இந் நூலின் பிற்பகுதியில் இடம்பெறுகின்றன. சிங்கியைக் காணாது அவன் புலம்பும் சொற்களைப் பார்க்கும்பொழுது அவனுடைய மனநிலையை நன்கு அறியமுடிகிறது. சம்பங்கோழி, மயில், பச்சைப்புறா, மாடப்புறா, கருங்குயில், கவுதாரி, கொக்கு, நாரை, குருவி, அன்னம், காட்டுக்கிளிகள் போன்ற பல்வேறு வகைப்பட்ட பறவைகளைக் கண்ணி வைத்துப் பிடிககிறான. ஒவ்வொரு பறவையைப் பார்க்கும்பொழுதும் அவனுக்குச் சிங்கியின் நினைவே எழுகிறது. பந்துவராளி, புன்னாகவராளி, பைரவி, தோடி ஆகிய இராகங்களில் பாடும் திறன பெற்றவன். சிங்கியைக் காணாது புலம்பிய அவன் பின்னர் அவளைக் கண்ட பிறகு அவளணிந்திருக்கும அணிகலன்கள் ஒவ்வொன்றைப் பற்றியும் வினவுகிறான். பின்னர் இருவரும் சரபோசியையும், பிரகதீசரையும், மக்களையும் வாழ்த்துகின்றனர்.

குளுவன் :- சிங்கனின் தோழன். பறவைகளைப் பிடிக்கும் விதத்தைச் சிங்கனிடமிருந்து கற்றுக்கொண்டு அவ்வாறே பிடிக்கவும் செய்கிறான். சிங்கியின் அடையாளததைக் கேட்டு அவனுக்கு ஆறுதல் மொழிகளை உரைத்துச் சிங்கியைத் தேடுவதற்கு உதவி செய்கிறான். குளுவன் இடம் பெறும் பங்கு மிகக் குறைவே. இக் குளுவன் மூலம் பறவைகளைப் பிடிக்கும் விதமும, பலவகை மருந்து வகைகளும், சிங்கனின் மனநிலையும் நனகு விளக்கப்படுகின்றன.

பாங்கியர் :- கதைத் தலைவிக்கு உறுதுணையாக இப்பாங்கியர் வருகின்றனர். 'சகி' என்றும், 'பாங்கி' என்றும் இவர்கள் அழைக்கப்பெறுகின்றனர். வீதியுலா வந்த தலைவனைக் கண்டு

தலைவி மயங்கி விழுந்தபோது அவளை இல்லத்திற்குள் கொண்டு சென்று, பாய் மேல் அவளைப் படுக்க வைத்து, பனி நீர் தொட்டு முகத்தைத் துடைத்து, துகிலால் காற்று வருமாறு வீசிப் பணிவிடைகள் பல புரிகின்றனர். தலைவிக்காகத் தலைவனிடம் தூது செல்கின்றாள் ஒரு தோழி. வீதியில் வந்து கொண்டு இருந்த குறத்தியைத் தலைவியிடம் தெரிவிக்கின்றாள் ஒருத்தி.

இன்னிசைப் பனுவல்

இந்நூலில், இயற்றமிழ்ச் செய்யுள்கள், சிந்து, கண்ணிகள், கீர்த்தனை ஆகிய இசைப் பாக்கள் விரவி வந்திருக்கின்றன. இந்நாடகம் இசையுடன் பாடி அரங்கில் நடிக்கப்பெற்று வந்தமையினால் பல்வேறு இராகங்களில் பாக்கள் பாடப்பெறுகின்றன. இந் நூலாசிரியரே எந்தெந்த இராகங்களில் எந்தெந்தப் பாக்களைப் பாடவேண்டும் என்பதையும் குறிக்கின்றார். அடாணா, அமீர் கல்யாணி, ஆகிரி, ஆனந்தபைரவி, எதுகுல காம்போதி, கல்யாணி, கானடா, கேதார கௌளை, கௌரிபந்து, சங்கராபரணம், சாரங்கா, சாவேரி, சுருட்டி, சுத்த சாவேரி, சௌராட்டிரம், தன்யாசி, தோடி, நாதநாமக்கிரியை, நாட்டை, பரசு, பந்துவராளி, பியாகடை, பிலகரி, பூரி கல்யாணி, பைரவி, பௌளி, மத்தியமாவதி, முகாரி, மோகனம் ஆகிய 31 இராகங்களிலும்; அட, ஆதி, சாபு, திசிர, மிசிர, சம்பை ஆகிய 6 தாளங்களிலும் இந்நாடகப் பாக்கள் பாடி நடிக்கப்பெறுகின்றன.

நாடக நூல்

நூலாசிரியர் 'குறவஞ்சி' எனப் பெயர் கொடுக்காமல் 'குறவஞ்சி நாடகம்' எனப் பெயர் கொடுத்ததிலிருந்தே இந்நூல் ஒரு நாடக நூலாகும் என்பது போதரும். இந் நாடகத்தின் முடிவு மகிழ்ச்சியில் முடிவதனால் 'இன்பியல் நாடகம்' ஆகும்.

இந் நாடகத் தொடக்கத்தில் 'கட்டியக்காரன்' அவை முன் தோன்றுகிறான். இவனே கதை மாந்தர்களையும், கதை நிகழ்ச்சிகளையும் அவையோர்க்குக் கட்டியம் கூறி அறிமுகப் படுத்துகின்றான்.

சரபேந்திரரின் பெருமையைக் கேட்ட மதனவல்லி, அவன் உலா வரும்பொழுது கண்டு காதல் கொள்கின்றாள். அவள் உள்ளத்தில் காதலால் எழுந்த இச் சிக்கலிலிருந்தே கதை தொடங்குகிறது.

தலைவியின் மீது காதல் கொண்ட தலைவிக்குக் காம வேதனை மிகுந்த நிலையில் மன்மதன், திங்கள், தென்றல், கழிக்கரைக் குயில், மாலைப் பொழுது ஆகியவற்றைப் பழித் துரைக்கின்றாள். இங்ஙனம் காதலின் வளர்ச்சிநிலை படிப் படியாக மதனவல்லி புலம்புதல் மூலம் விளக்கப்படுகிறது. தன் காதல் எண்ணம் நிறைவேறாமல் திண்டாடிய மதனவல்லி, தன் தோழியைத் தலைவனிடம் தூது விடுக்கின்றாள். இதுவே காதலின் வளர்ச்சி நிலையில் உச்சநிலையாகும். தூது போன தோழி வரக்காணாததைச் சொல்லிக் கொண்டிக்கும் பொழுது மலைக்குறத்தி வருகின்றாள். பல்வேறு வளங்களைக் குறத்தி. அவளிடம் கூறுகிறாள். பின்னர்த் தலைவியின் கையைப் பார்த்துக் குறி சொல்கிறாள். இங்ஙனம் காதலின் உச்ச நிலையானது, குறத்தி வந்தவுடன் இன்ப முடிவை நோக்கி வீழச்சி அடையத் தொடங்குகிறது.

கதைக் கோப்பில் சிக்கல் தீர்க்கப்பெறுவது முடிவுநிலை யாகும். 'தஞ்சைப் பெருவுடையார் அருளினால் தலைவனைச் சேர்வாய்' என்று குறத்தி சொல்லிய குறியைக் கேட்ட மதன வல்லி உளம் மகிழ்ந்து பரிசுகள் பலவற்றைக் குறத்திக்குக் கொடுக்கிறாள். இவ்வாறு இந்நாடகத்தில் காதலில் தோன்றிய சிக்கல் நீங்குவதாகக் காட்டப்பெறுகிறது.

இந்நாடகத்தில் அறிமுகம், வளர்ச்சி, உச்சம், வீழ்ச்சி, முடிவு ஆகிய ஐந்து பகுதிகளும் அமைகின்றன. மேலும் நாடகத் திற்குத் தேவையான கதை மாந்தர்களாகச் சரபோசி, மதன வல்லி, குறவஞ்சி, சிங்கன், குளுவன், பாங்கியர், கட்டியக்காரன் ஆகியோர் இடம்பெறுகின்றனர்.

மதனவல்லி-குறத்தி ; சிங்கன்-சிங்கி ஆகியோரது உரை யாடல்கள் அவரவர் தகுதிக்கும் நிலைக்கும் ஏற்ப அமை கின்றன.

தமிழின் பெருமை

'சீர்கொண்ட தமிழில்' கணபதி வாழ்த்தைத் தொடங்கிய ஆசிரியர் நூலினிடையில் ஆங்காங்கே தமிழில் பெருமைதனைக் கூறுகின்றார்.

''சரபோசி மன்னர்மீது பாடப்பெறும் இக் 'குறவஞ்சித் தமிழை'க் காப்பதற்காக விநாயகப் பெருமான் பெருச்சாளி வாகனத்தில் ஏறி வந்தார்'' என்று கட்டியக்காரன் கட்டியங் கூறித் தொடங்குகிறான்.

மதனவல்லி, தென்றலை வெறுத்துக் கூறும்பொழுது,

''கந்தமிகு சந்தமலை யந்தனி விருந்துவந்தாய்
தென்றலே தமிழ்க்
காரிகையின் சீர்மையுறு நேர்மையறி யாததென்னே
தென்றலே'' (21.1)

என்று கூறுகிறாள். பொதிகை மலையில் அகத்திய முனிவர் இருந்தார். அங்கிருந்து வருகின்ற தென்றலே! உனக்குத் 'தமிழ்க் காரிகை' எனும் நூலின் சிறப்பைப் பற்றித் தெரியாதா? எனக்கு வியப்பாக இருக்கிறதே! எனும் பொருள்படும் படிப் பாடுகின்றார்.

சிங்கன், பறவைகளைப் பிடிக்கும்பொழுது ஒரு பறவை அவன் வலையில் சிக்கியதனைக் கூறவந்த ஆசிரியர்,

''செந்தமி ழிலக்கணந் தெரியார் கவிசொல்லிச்
சேரு மதன்குற்றந் தெரிந்தோர் வினவுங்கால்
சிந்தை மயங்கி விழித்தல்போற் கண்ணியில்
சிக்கிக்கொண் டிங்கொரு பக்கி விழிக்குது'' (59.2)

என்று தமிழின் இலக்கணப் பெருமையைப் போற்றுகின்றார்.

இறைவன் பெருமை

தஞ்சையில் ஆட்சிபுரிந்த மகாராட்டிரர்களுடைய குல தெய்வம் சந்திரமௌளீசர். எனவே அவ்வழியில் வந்த சரபோசி மன்னரும் சிறந்த சிவபத்தி உடையவராக விளங்கு

கிறார். சிவக்கொழுந்து தேசிகர் தாம் பாடிய இந்நாடக நூலில் பலவிடங்களில் சிவபெருமானைப் போற்றிப் புகழ்ந்துரைக்கின்றார்.

சிவபெருமானின் பெருமை நாடக மாந்தர் கூற்றாகப் பேசப்படுகின்றது.

1. மதனவல்லி கூற்றாக :
   ''நிலவுமதி புனைவேணிப் பிரகதீசர்'' (39)

2. தோழி கூற்றாக :
   ''ஈசர் மகிழ்பொடி பூசி'' (32.3)

3. குறத்தி கூற்றாக :
   ''பிரகதீ சுரர்தம் பேரரு ளாற்பெறு
   சரபோசி மன்னர்'' (30 : 39-40)
   ''திங்களணி சிவனெனக்குத் தமையன்முறை
   யம்மே'' (37.3)
   ''சங்கரனார் கைலைமலை'' (40.1)
   ''பிறை முடிமேல் வைத்திருக்கும் பிரான்மலை''(40.5)

சிவபெருமான் தவிர, விநாயகர், முருகன், நான்முகன், திருமால், இந்திரன், உமையவள், வள்ளி, கலைமகள், திருமகள், துர்க்கை, இந்திராணி, சப்தகன்னியர், எக்கலாதேவி ஆகிய பிற தெய்வங்களின் பெருமைகளும் நூலினிடையில் ஆங்காங்கே இடம்பெறுகின்றன.

இத் தெய்வங்களில் விநாயகர் தவிர ஏனையோரது பெயர்கள் மட்டும் குறத்தியின் கூற்றில் இடப்பெறுகின்றது. காப்புச் செய்யுளில் விநாயகரைக் கூறிய ஆசிரியர், கட்டியக்காரன் கூற்றிலும் சிங்கனின் கூற்றிலும், கூறியுள்ளார்.

தஞ்சையின் சிறப்பு

'அளகை' எனும் பெயர் கொண்ட தஞ்சை நகரின் சிறப்பைப் பல்வேறிடங்களில் ஆசிரியர் கூறுகிறார்.

திருமகள் செந்தாமரையில் வீற்றிருக்கின்றாள்; கலைமகள் வெண்டாமரையில் இருக்கின்றாள்; அளவில்லாத செல்வங்களை உடையது இந்திரனின் அளகாபுரி; உளம் நிறைந்த மகிழ்ச்சி பொருந்தியது உம்பர் நாடு; நான்முகன் வாழும் உலகத்தில் எப்பொழுதும் வேதமும் வேள்வியும் மிகுந்திருக்கும்; மால் உறையும் இடம் வைகுண்டமாகும்; சிவனுறையும் கைலையில் இடபக்கொடி இருக்கும். இவற்றை எல்லாம் பார்க்கும்பொழுது ஒவ்வொன்றிலும் ஏதோவொன்றுதான் சிறந்திருக்கக் காண்கிறோம். ஆனால் 'தஞ்சையில் மட்டும் இவ்வனைத்தும் உண்டு' என்று கூறும் நிலையில் ஆசிரியர்,

''பார்கொண்ட தென்றிசைப் பரதகண் டத்திற்
சீர்கொண்ட சோழத் திருநா டதனிற்
றிருமக ளிருக்குஞ் செந்தா மரையாய்
விரவுபா ரதிக்கு வெண்டா மரையாய்
அளவில்செல் வத்தா லளகைமா நகராய்
உளமகிழ் சிறப்பி னும்பர்நா டாகி
தேவமும் வேள்வியு மிகுந்தய னுலகாய்
மாதவ னுறைதலின் வளரவன் பதியாய்ச்
சேவுயர் கொடியோன் றிகழ்தலிற் கைலையாய்
யாவரு முறைதலி னெழிற்சிவ புரியாய்'' (9:1-10)

விளங்கியது தஞ்சைமா நகர் என்கிறார்.

சோலை, பொழில், மதில், அகழி ஆகியவை தஞ்சையைச் சூழ்ந்திருக்கும்.

அணிநலம்

அணிகளுள் தலையாயது 'உவமையணி'யாகும். இக்குறவஞ்சியில், ஆசிரியர்தம் கூற்றாகவும் பிறர் கூற்றாகவும் பல உவமைகளை அமைக்கின்றார்.

உவமையணி :- 'போல' எனும் உருபிலேயே பல உவமைகள் வருகின்றன. இவை ஆசிரியர் கூற்றிலும், பாத்திரங்களின் கூற்றிலும் இடம் பெறுகின்றன.

அ) ஆசிரியர் கூற்றாக அமைத்தல் :

1. ''ஒண்முகில் போ லுதவு சரபோசி மன்னன்'' (18)

2 "மதன்கொலு மண்டபம் வளைத்திடு திரை போல்
விதமுறு சித்திர மென்றுகி லுடுத்துப்
பிரியலென் றவ்வேள் பிடித்தகை விரல்கள் போல்
மருவிடு முன்கை மணிவளை வனைந்து
சந்திர னிரண்டெனத் தந்திவெண் கோட்டுச்
சுந்தரத் தோடு தொகுதிசெவி யணிந்து"
(30:5-10)

ஆ) மதனவல்லி கூற்றாக அமைத்தல் :-

"என்மேல், சித்திரபானுவைப்போன் மெத்தவுங்
காய்கிறாய், மன்மதா" (17.7)

இ) குறத்தி கூற்றாக அமைத்தல் :

1. "தாரகைகள் போல முத்தம்" (40.7)

2. "தண்மலர்ப்புன லகழிசூழ்ந்திடுந்
தஞ்சையாமிது தன்னில்
தாமரைத்திருக் கோயின்மேவிய
தையல்போல்வளர் மின்னே" (46.4)

ஈ) சிங்கனின் கூற்றிலேயே பல உவமைகளை ஆசிரியர் பயன்படுத்துகின்றார். சிங்கன், பறவைகளைப் பிடிப்பதற்குரிய 'கண்ணி'யைக்குளுவனிடம் குத்தச் சொல்கிறான். திருடர்களின் காலிலும், கையிலும் 'தொழுக்கட்டை'யை மாட்டி விடுவதைப் போலக் குத்தவேண்டுமென்பதை,

"சாலைத் திருடர்கள் காலினுங் கையினுஞ்
சாற்றுந் தொழுக்கட்டை மாட்டிவிட் டாற்
போலக்
காலினுங் கழுத்தினு மாட்டிக் கொள்ளும்படி
வகுதிக் குத்தடா குளுவா" (58.1)

என்று கூறுகிறான்.

அறிவுடைய சான்றோர் கயவர்களைப் பகைவர்களாகவும் கொள்வதில்லை ; நண்பர்களாகவும் கொள்வதில்லை ; அவர்களை நடுநிலையில் அளவோடு வைத்திருப்பர்.

அதுபோல வலையை விரியாமலும், குவியாமலும் நேராகப் பிடிக்க வேண்டும். இதனை,

''நாடுங் கயவரை யாளு மறிவினோர்
நடுத்தர மாகவிடுத்து வருதல்போல்
நீடுங்கண் ணியைமிக விரியாமற் குவியாமல்
நேராகக் குத்தடா குளுவா'' (58.2)

எனும் பாடலில் தெளிவுறுத்துகிறான்.

செந்தமிழ் இலக்கணம் தெரியாமல் கவிதை சொல்வோர் மயங்கி விழித்த நிலைக்குக் கண்ணியில் அகப்பட்ட பறவையின் நிலையோடு ஆசிரியர் ஒப்புமைப்படுத்துகிறார்.

''இளந்தென்றல் புலிபோலப் பாயுதே'' (64.3)
''வானில் திங்கள்செங் கதிர்போலக் காயுதே'' (64.3)
''வண்டினங்கள் போல் விழிகள் காதினள வோடும்''
(66.2)
''ஆவியன்ன சிங்கி'' (60)

சிங்கியின் நினைவினில் தவித்த சிங்கனின் புலம்பலில் இந்த உவமைகள் இடம்பெறுகின்றன.

சிலேடையணி :— ஒன்றுக்கு மேற்பட்ட பல பொருள் தருவதாகிய சிலேடையணியும் சிலவிடங்களில் இடம்பெறுகின்றன.

''ஏறிவட வேங்கடத்தி லிருக்கவிடம் பார்த்தோம்
இன்னதுமால் கொண்டமலை யென்றுரைத்தார்''(40.3)

எனும் இப் பாடலில் 'மால்' என்பது திருமாலையும், மயக்கத்தையும் குறிப்பதாக வருகின்றது.

''தஞ்சையைப் பாரென்று சகலருஞ் சொன்னார்கள் சிங்கி-
இங்கே
சாற்றுங் குறிசொல்லித் தனந்தேட வந்தேனடா சிங்கா''
(71.7)

இப் பாடலில் 'தனம்' எனும் சொல் இருபொருள்பட வருகிறது. இவைதவிரச் சிங்கன்-சிங்கி இருவரும் பேசும் உரையாடல் 'சிலேடை' நயத்தில் அமைகின்றது.

தற்குறிப்பேற்ற அணி :—மதனவல்லியின் இடையைக் கூற வந்த ஆசிரியர்.

''இடை
சாயலுறு நற்றுடியை வாயிலறை வித்திடுமோர்
சிங்கமே'' (11.3)

என்று கூறுகிறார். 'துடி அடிக்கப்படுவதற்குக் காரணம் இடை' என்றமையினால் தற்குறிப்பேற்றமாயிற்று.

இல்பொருளுவமை அணி:— கதிரவனைக் கண்டபொழுதே தாமரை மலரும். ஆனால் இக்காட்சியை ஆசிரியர்,

'கங்குற் கணுமொளிர் கஞ்சம்' (32.1)

என்று உலகில் காணாத காட்சியை உவமைப்படுத்திக் கூறுகிறார்.

இயற்கை வளம்

இயற்கைக் காட்சிகள் பலவற்றை இந்நூலில் காணமுடிகிறது. குறத்தி, மதனவல்லியிடம் சோழநாட்டிலுள்ள மாட, மாளிகை, கூட கோபுரங்களைக் கூறியவளுக்கு அந்நாட்டின் இயற்கை வளத்தையும் கூறாமல் அவளால் இருக்கமுடியவில்லை போலும்! மலர்ச் சோலைகள், தாமரைக் குளங்கள், நதிகள், வயல்களில் விளையும் செந்நெற் பயிற்கள், கரும்புகள் ஆகியவற்றைக் கூறுகிறாள். கதலி, மாந்தளிர், இளநீர் ஆகியவற்றைப் பெண்ணின் உருவத்திற்கு ஒப்பிடுகிறாள். அப்பாடல் வருமாறு :

''நன்னக ரின்புற மெங்கு மலர்க்காவும்
நளினத் தடாகமு நதியும் வயல்களிற்
கன்ன லெனச்செழுஞ் செந்நெல் பொலிந்திடும்
கன்னல்கள் யாவும் கமுகி னெழுந்திடும்
மின்னிடை யார்துடை காட்டுங் கதலியும்
மேனி யழகினைக் காட்டுந் தளிர்மாவும்
அன்னவர் கொங்கை யெழில்காட் டிளநீர்கள்
அன்னமு மதங்கமு மெங்கு நெருங்கிடும்'' (44-3)

திங்கள் :— மதனவல்லி காதல் நோயில் துன்புற்றகாலை திங்களைப் பழித்துரைக்கின்றாள். அவளது பழிச் சொல்லிலிருந்து திங்களைப் பற்றி அறிய வருவன : மன்மதனின் குடையானவன்; பெண்களை வாட்ட வந்தவன்; அழகிய வடிவமுடையவன்; 'பெண்' என்றும் சொல்லப்படுபவன்; சாமர்த்திய குணமுடையவன்; ஆகாயத்தில் துணையற்ற நிலையில் திரிபவன்; பிருகஸ்பதியின் மனைவி தாரையினால் வந்த குறையுடையவன்; திருமகளோடு பிறந்தும் பெண்ணருமை அறியாதவன்.

தென்றல் :- மதனவல்லி தென்றலையும் வெறுத்துத் தூற்றுகின்றாள். அவள் பார்வையில் தென்றல் நிலை வருமாறு : மணம் மிகுந்த சந்தன மரங்களை உடைய பொதியமலையில் தோன்றியவன்; பெண்ணின் நேர்மையை அறியாதவன்; மெல்லிய நடையுடைய காற்றாய் இருந்தவன்; இப்பொழுது பெருங்காற்றாய் வீசுகின்றவன்; கணவனைப் பிரிதல் இல்லாதவர்களுக்கு அமுதம் போன்றவன்; பிரிந்தோர்க்குப் பெருமயக்கத்தைத் தருபவன்; விரவுதழல் சொரிவதுதான் அவன் வேலை; மன்மதனின் வாகனமானவன்; தென்றலுக்கு ஆண், பெண் எனும் பேதம் இல்லை. ஏனெனில் சிங்கியைப் பிரிந்த சிங்கனுக்குத் தென்றல் புலிபோலப் பாய்கிறது. எனவே பிரிந்தவர் யாராயிருந்தாலும் அவர்களுக்குத் துன்பத்தைத் தருவதே தென்றலின் வேலை என்பதை ஆசிரியர் தெளிவுறுத்துகின்றார்.

மலர்கள் :- இலுப்பை. காந்தள், குரவம், தாமரை ஆகிய நால்வகை மலர்கள் இடம்பெறுகின்றன.

குறத்தி, தன் இரு தனங்களின் மேல் அணிந்திருக்கும் முத்துமாலை, சிங்கனுக்கு இலுப்பைப் பூப்போன்றிருக்கிறது (71 10).

குறிஞ்சி நிலத்தில் காந்தள் மலரும் (11.2)

குரவமலரைக் கூந்தலில் குறவஞ்சி சூடுகிறாள் (5).

'தாமரை மலர் போன்ற முகமுடையவள் மதனவல்லி' எனக் கூறிய ஆசிரியர், பிறிதோரிடத்தில் 'அத்தாமரையே குற்றமுடையது என்று கூறத்தக்க ஒளிமுகத்தை உடையவள் மதனவல்லி' என்றுரைக்கிறார். மதனவல்லியின் முலைகளுக்குத்

தாமரையின் மொட்டை உவமைப்படுத்துகிறார். செந்தாமரையில் திருமகளும், வெண்டாமரையில் கலைமகளும் வீற்றிருப்பர். குறவஞ்சியின் வதனம் செந்தாமரை போன்றிருக்கிறது.

'அலர்', 'மலர்' என்று பொதுவான மலர்களைப் பற்றிய குறிப்புகள் நூலில் காணப்படுகின்றன. அவை வருமாறு :-

1. மணம் மிக்க மலர்கள் நிரம்பிய சோலை சூழ்ந்த தஞ்சை (8 அனு)
2. வாச மலர்ச்சோலை சூழ்ந்த தஞ்சை (43 அனு.)
3. தண்மலர்ப்புனல் அகழி சூழ்ந்த தஞ்சை (46.4)
4. வரிவண்டுகள் சூழ்ந்த மலர்களைக் கூந்தலில் சூடிய மதனவல்லி (10)
5. மன்மதன் மலர்வாளியை மதனவல்லிமீது சொரிந்திட்டான் (15)
6. மதனன் விட்ட மலர்க்கணையால் துயரம் கொண்டாள் மதனவல்லி (16)
7. தேன் நிரம்பிய மலர் அம்பால் மகிழ்ச்சி அடைகின்றான் மன்மதன் (17.5)

மரங்கள் :- நெல்லி, மா, தென்னை, சந்தனம், வாழை ஆகிய மரங்கள் கூறப்படுகின்றன.

நெல்லிக் கனியை உண்டால் மூப்பைத் தடுக்கும்; மகளிரின் மேனி மாந்தளிர் போன்றிருக்கும்; சோழ நாட்டில் தென்னைகள் அதிகமாக வளர்ந்திருக்கும்; சோழ நாட்டிலுள்ள இல்லத்து முற்றங்களில் சந்தனமரத் தூண்கள் இருக்கும்; பொதிய மலைச் சந்தனமரக் காடுகளில் சந்தனமரத்தைச் சுற்றிப் பாம்புகள் சூழ்ந்திருக்கும்; காதல் மயக்க நிலையிலிருக்கும் மதனவல்லியைத் தோழிகள் இளவாழைக் குருத்தை விரித்த பாயில் படுக்க வைக்கின்றனர்; மகளிரின் தொடை வாழைத் தண்டு போன்றிருக்கும்.

விலங்குகள் :- ஆந்தை, குதிரை, சிங்கம், நரி, நாய், பசு, பன்றி, புலி, பூனை, மான், முயல், யானை ஆகிய விலங்குகள் கூறப்படுகின்றன.

யானையின் மேலேறித் தலைவன், குதிரை, யானைப் படைகள் சூழ்ந்துவர உலா வருகின்றான்; சிங்கன், பறவைகளைப் பிடிப்பதற்கு வேட்டைநாய்களைக் கொண்டு செல்கின்றான்; பன்றி, யானை, மான் ஆகிய விலங்குகளைக் குறவர் பிடித்துக் கொன்றனர்; தென்றல் புலி போலச் சிங்கனுக்குப் பாய்வதாகத் தெரிகிறது; மதனவல்லியின் இடை சிங்கஇடை போன்றிருக்கிறது; குறத்தி நெற்றிச்சுட்டியான வைடூரியச் சுட்டி பூனைக்கண் போன்றிருக்கிறது; மதனவல்லி மான் போன்றிருக்கிறாள்; குறவஞ்சி மான் போலக் குதித்து ஓடுகிறாள்; தாவிச் செல்லும் முயலைப் பிடிப்பதைவிட யானையைப் பிடிப்பதிலேயே குறவர்கள் அதிக அக்கறை காட்டுகின்றனர்; யானைக் கொம்பிற்காகப் பிடிக்கின்றனர்.

பறவைகள் :— அன்றில், அன்னம், கவுதாரி, காடை, கிளி, குயில், குருவி, கொக்கு, கோகிலம், சம்பங்கோழி, நாரை, நேமிப்புள், புறா, மயில், வண்டு ஆகிய பறவைகள் குறிப்பிடப்படுகின்றன.

பெண்களின் நடைக்கு அன்னமும் மயிலும் உவமையாகக் கூறப்படுகின்றன; குறத்தியின் சொல் பஞ்சவர்ணக்கிளி போன்றிருக்கிறது; மன்மதனின் ஊது கருவியாகக் குயில் கூறப்படுகிறது; பறவைகளைப் பிடிப்பதற்காகத் தீபகக் குருவிகள் பழக்கி வளர்க்கப்படுகின்றன; கௌரி மாயூரத்தில் உமையவள் மயிலாய்ப் பூசனை புரிகிறாள்; மயில் போலச் சுழன்று குறத்தி நடிக்கிறாள்; வண்டுகள் மொய்க்கின்ற மலர்களைக் கூந்தலில் மதனவல்லி சூடுகிறாள்; குறத்தியின் விழிகள் வண்டுகள் போலக் காதினளவு ஓடுகின்றன.

சிங்கன், தன் மனைவியைக் காணாமல் சக்கரவாகப் பறவைகள், அன்னப் பறவைகள், கிளிகள் ஆகிய பறவைகளை விளித்துப் புலம்புகிறான்; அன்றிற்பறவைகள் தன் பெடையுடன் இருக்கும் காட்சியைக் கண்டு மனம் வெதும்புகிறான்.

காடை, கவுதாரி, கருங்குயில், பலவகை ஒலி கூவும் குருவி கொக்கு, பெரிய சிறகுகளை உடைய சம்பங்கோழி, நாரை, பச்சைப்புறா, மாடப்புறா, மயில் ஆகிய பறவைகள் சிங்கன்விரித்த வலையில் சிக்கிக் கொள்கின்றன.

ஆறுகள் :- குறத்தி, மதனவல்லியிடம் தான் கண்ட நதிகள், ஆறுகள் ஆகியவற்றின் வளங்களைக் கூறும் பகுதியில் ஆறுகளின் பெயர்கள் மட்டுமே கூறப்படுகின்றன. அப் பெயர்கள் வருமாறு : கபிலம், காவிரி. கிருட்டிணை, கோதாவரி, சரசுவதி. சேயாறு. சொன்னமுகி. தாமிரபரணி. துங்கபத்திரை, நருமதை. பாலாறு, மணிமுத்தாறு, வைகை. குறத்தி, தான் பெற்ற வரிசைகளைக் கூறுகின்றபொழுது 'கங்கை'யைப் பெண்ணாக உருவகித்துக் கூறுகிறாள். தலமகிமை கூறும் பகுதியில் காசியைக் கூற வந்தவள் 'வரணை', 'அசி' எனும் இரு நதிகளைக் கூறுகின்றாள்.

மலைகள் :- குறத்தி, மலைவளம் கூறும் பகுதியில், கோவர்த்தன்கிரி, திருவண்ணாமலை, திருக்கழுக்குன்றம், தீர்த்தகிரி. பொதியம், மேரு, மல்லிகார்ச்சுனம் ஆகிய மலைகளின் பெயர்களைக் கூறுகின்றாள். பின்னர்த் தான் வாழும் நேரிமலையைக் கூறுகின்றபொழுது ஒவ்வொரு மலையாகக் கூறி இங்கெல்லாம் நாங்கள் இருக்கவில்லை என்றும், அதற்குரிய காரணத்தையும் சொல்கின்றாள். அவ்வாறு அவள் கூறிய மலைகளும் காரணங்களும் வருமாறு :

1. தங்கம் போன்ற மேருமலை, சபிக்கப்பட்ட மலையானதனால் அதனை விடுத்தோம்.

2. சிவபெருமான் வாழும் கயிலைமலையில் தவம் செய்கின்ற பூதகணங்கள் இருப்பதனால் அதனைத் தவிர்த்தோம்.

3. திங்களணிந்த காளத்திமலையில் கண்ணப்பனின் கண்ணைப் பறித்த செய்தியைக் கேட்டுப் பயந்தோம்.

4. குற்றாலமலையிலுள்ள அருவியில் மூழ்கி இறந்து விட மனம் இல்லாமல் நழுவி வரலானோம்.

5. மயக்கத்தைத் தரும் வடவேங்கடமலையை விட்டுச் சென்றோம்.

6. முருகனின் சேவகன் இடும்பன் வாழும் பழனிமலை அஞ்சுவிக்கும் தன்மை கொண்டதனால் அங்கிருந்து சென்றோம்.

7. தூங்குதலை உடைய ஆனைமலையையும் விட்டோம்.

8. சேரன் வாழும் சிறிய கொல்லிமலை கொல்லும் தன்மை உடையதனால் அதனையும் விடுத்து வந்தோம்.

9. விராலிமலை, சோலைமலை, சுவாமிமலை ஆகிய மலைகளை எங்கள் குல வள்ளிக்கு நாங்கள் விருப்பமுடன் பரிசாகக் கொடுத்ததனால் அவற்றையும் விடுத்தோம்.

10. பிரான்மலை, சிராமலை, பிராய்மலை, பராய்மலை ஆகிய இம் மலைகள் சிவபெருமானின் மலைகளான படியினால் அவற்றிலும் தங்குவதை விடுத்தோம்.

இறுதியாகப் பல பெருமைகளும், வளங்களும் பொருந்திய சரபோசி மன்னரின் ஆட்சிக்கு உட்பட்ட 'நேரிமலை'தான் குறவர்களுடைய சொந்த மலையாகும் என்று குறத்தி குறிப்பிடுகிறாள்.

புராணமும் வரலாறும்

குறத்தி, தானறிந்த தலங்களின் பெருமைகளைக் கூறும் பகுதியில் பல புராண வரலாறுகளை உரைக்கிறாள். அந்த வரலாறுகள் வருமாறு :-

1. திருவண்ணாமலையில், அடிமுடி தேடிய வரலாறு (41.1)

2. திருவதிகையில், முப்புரம் எரித்த வரலாறு (41.3)

3. திருக்கடவூரில், காலனை உதைத்த வரலாறு (41.5)

4. காஞ்சியில், உமை தவம் செய்த வரலாறு (41.1)

5. கோகரணத்தில், சிவலிங்கத்தை இராவணன் வலிதில் பறித்தெடுக்க முயன்றபோது சிவபெருமான் பசுவின் செவி வடிவான வரலாறு (41.2)

6. காளத்தியில், கண்ணப்பர் சிவபெருமான் கண்ணில் கண் இடந்து அப்பிய வரலாறு (40.2, 41.3)

7. சிதம்பரத்தில், நடராசர் பதஞ்சலி, வியாக்கிரபாதர் களின் பொருட்டுத் திருநடனம் ஆடிய வரலாறு (41.4)

8. சீர்காழி, பிரளய காலத்தில் தோணியாக மிதந்த வரலாறு (41.4)

9. மாயூரத்தில், உமை மயில் வடிவம்கொண்டு வழிபட்ட வரலாறு (41.6)

10. திருவாவடுதுறையில், சிவபெருமான் அரசமரத்தின் கீழ் எழுந்தருளிய வரலாறு (41.6)

11. திருவாரூரில், திருமகள் சிவனை வழிபட்ட வரலாறு (41.6)

12. இராமேசுவரத்தில், இராமர் வழிபட்ட வரலாறு (41.7)

ஒப்புமைக் கூறுகள்

1) சரபேந்திரரின் ஆட்சிச் சிறப்பைப்,

''படைகுடி கூழமைச்சுப் பகர்ந்திடு நீதி
நட்பர ணிவற்றி னயந்திடுஞ் சிறப்பினோன் (9: 5-26)

எனும் பாடலில் கூறுமிடத்து,

''படைகுடி கூழமைச்சு நட்பர ணாறும்
உடையா னரசரு ளேறு''[4]

எனும் குறள் கருத்தை அப்படியே எடுத்தாளுகிறார் தேசிகர்.

மலைக்குறப்பெண் தன் விழிகளில் அஞ்சனத்தைத் தீட்டி, கொல்லும் இயல்புடைய மதயானையின் மேல் அணிந்த முக படாம் போன்று தன் தனங்களின் மேல் ஆடை அணிவதனை,

''மும்மதக் களிற்றில் முகபடா மென்ன
வெம்முலைத் தடத்தின் மேற்கச் சணிந்து'' (30.3 4)

வருகின்றாள் எனறுரைக்கிறார் கவிஞர்.

---

4. திருக்குறள் 381.

''கடாஅக் களிற்றின்மேற் கட்படா மாதர்
படாஅ முலைமேற் றுகில்''[5]

எனும் வள்ளுவரின் கருத்தைத்தான் தேசிகர் கூறுகிறார்.

குறவஞ்சியின் கூற்றுக்களில் வருகின்ற சில கருத்துகள், குறள் கருத்தை வலியுறுத்துவனவாக வருகின்றன.

தன் சாதியின் பெருமையைத் தலைவியிடம் கூறும் பொழுது. ''துள்ளியோடும் முயலைக் கண்ணி வைத்துப் பிடிப்பது குறவர்களுக்கு அரிய செயலன்று; ஆனால் மதம் பொருந்திய யானையைப் பிடிப்பதில்தான் சிறப்புள்ளது'' என்கிறாள் குறத்தி. வள்ளுவர் கூறிய,

''கான முயலெய்த வம்பினில் யானை
பிழைத்தவே லேந்த லினிது''[6]

என்ற குறள் கருத்து அமைந்திருக்கிறது.

''மேன்மைதனக் கிழிவுவரின் மிகவதற்குத் துடிப்போம்'' (37.2)

என்று குறவஞ்சி கூறியதை நோக்குமிடத்து,

''மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னா
ருயிர் நீப்பர் மானம் வரின்''[7]

எனும் குறள் கருத்து வலியுறுத்தப்படுவதைக் காணமுடிகிறது.

சிங்கன், குறத்தியைத் துணையில்லாமல் தனியாக ஏன் வந்தாய்? என வினவுகிறான். அதற்கு அவள்,

''பிறைநுத லார்க்குத்தந் நிறைதானே துணை'' (71.9)

என் மறுமொழி கூறுகிறாள். ''பிறை போன்ற நெற்றியை உடைய பெண்களுக்குத் தம் நெஞ்சைக் கற்பு நெறியில் நிறுத்திக் காக்கும் காவல்தானே துணை; வேறு துணை தேவையில்லை'' எனக் கூறியதனைப் பார்க்கும் பொழுது, வள்ளுவர் கூறிய,

''சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை''[8]

எனும் குறள் கருத்துத்தான் நினைவிற்கு வருகிறதெனலாம்.

5. திருக்குறள் 1087.
6. மேலது 772.
7. மேலது 969.
8. மேலது 57.

(2) சிங்கன் விரித்த கண்ணியில் நாரை வந்து சிக்குகிறது. இதனை,

"ஆங்காரந் தன்னை யடக்கிப் புலனைவென்
றகத்தைப் பரத்தி னிடத்தி னிறுத்தியே
தூங்காமற் றூங்கிடு மாங்கவர் போலவே
தூய வொருநாரை யோய்வுற் றிருக்குது" (59.6)

எனும் பாடலானது,

"ஆங்கார மற்றுன் னறிவான வன்பருக்கே
தூங்காத தூக்கமது தூக்கும் பராபரமே"[9]

எனும் தாயுமானவரின் பாடலோடு பொருந்தி வருவதனை அறியமுடிகிறது.

(3) மதனவல்லி, கூற்றுவனைவிடக் கொடிய கண்களை உடையவள் இதனைத்,

"தரும னெனக்கூற்றை யெவருஞ்சொல் லக்கூர்த்த
நயனத்தாள்" (11.8)

என்று கூறுகிறார். இந்த அடியானது, இந்நூலாசிரியர் இயற்றிய 'தஞ்சைப் பெருவுடையாருலா'வில் வருகின்ற

"கூற்றுவனை யாருங் குலவுந் தருமனெனச்
சாற்றிடச் செய்யுந் தடங்கண்ணாள்"[10]

எனும் பாடல் கண்ணியோடு ஒத்தமைகிறது.

(4) மதனவல்லியின் அழகை,

"மகர மிலகிய துவச னிரதியெனும்
வடிவ வனிதையி னதிக மிவள்" (14.2)

என்று கூறுகிறார் ஆசிரியர். இப் பாடலடிகள்,

"மகர மெழுதிய துவச மதனுமது சரணமடி
முக கமல மலரவொரு முறுவல்செயு மெனமொழியும்"[11]

என்று 'கும்பேசர் குறவஞ்சியில்' வருகின்ற பாடலடிகளோடு ஒத்தமைகிறது.

---

9. தாயுமானவர், திருப்பாடல்கள், (பதிப்பு) கழகம், சென்னை, 1975 பராபரக்கண்ணி 74.
10. சிவக்கொழுந்து தேசிகர், தஞ்சைப் பெருவுடையாருலா 188
11. கும்பேசர் குறவஞ்சி 35.

(5) மதனவல்லி திங்களைப் பழித்துரைக்கிறாள்.

''அரிவையோ டுதித்தும்பெண் ணருமை யறிந்திலையே
வெண்ணிலாவே - எண்ணின்
அதுவுமல் லாதுனக் கெதிரல்ல வேநானும்
வெண்ணிலாவே'' (19.7)

''திருமகளுடன் பெண்ணாகப் பிறந்த நீ, 'நானும் ஒரு பெண்தான்' என்பதை அறியாமல் இருக்கிறாயே!'' என்று புலம்புகிறாள்.

''பெண்ணுடன் பிறந்த துண்டே வெண்ணிலாவே
யென்றன்
பெண்மைகண்டும் காயலாமோ வெண்ணிலாவே''[12]

எனும் 'குற்றாலக் குறவஞ்சி' யிலும்,

''மாதுடன்கூடப் பிறந்து மறந்தாயே திங்களே''[13]

எனும் 'திருமலையாண்டவர்குறவஞ்சி' யிலும் வருகின்ற பாடலடிகளுடன் ஒப்பிடத்தக்கனவாய் மதனவல்லியின் கூற்று அமைகிறது.

ஏனையவை

தலங்கள்:— குறத்தியின் கூற்றிலும், பிறவிடங்களிலும் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் ஆலங்குடி, தில்லை, வலஞ்சுழி, வல்லம், குற்றாலம், மாயூரம், காஞ்சி, நாகை, கூடலூர், காசி, மல்லிகார்ச்சுனம் (ஸ்ரீசைலம்), அருணை, கோகர்ணம், காளத்தி, திருவதிகை, சீர்காழி, திருக்கடவூர், திருவாவடுதுறை, திருவாரூர், திருவிடைமருதூர், குடந்தை, கொட்டையூர், திருவையாறு, சிரகிரி, திருவரங்கம், திருவானைக்கா, மதுரை, இராமேசுவரம், திருவெண்காடு ஆகிய தலங்களின் பெயர்கள் கூறப்படுகின்றன.

---

12. திரிகூடராசப்பக் கவிராயர், திருக்குற்றாலக் குறவஞ்சி, (உ. ஆ.) ச. சாம்பசிவனார், வளவன் வெளியீடு, மதுரை, இரண்டாம் பதிப்பு 1981, பாடல் 23, ப. 60.

13. திருமலையாண்டவர் குறவஞ்சி

பழமொழி —'அவலை நினைத்துக்கொண்டு உரலை இடிப்ப'தென்பது பழமொழி. 'ஒருவர்மீது கோபங்கொண்டு இன்னொருவர்மீது சாடுவது' எனும் பொருளில் இப் பழமொழி இக் காலத்தில் பயன்பட்டு வருகிறது. ஆனால், குறத்தி 'மேவுமவ லிடிப்பதுபோ லுரலதனை யிடிப்போம்' (37.2) என்று கூறுமிடத் துத் தங்கள் இல்லாமை புலப்படாமல் மகிழ்ச்சியுடன் வாழும் வாழ்க்கையைக் குறிப்பதாக இப் பழமொழி அமைகிறது.

அவத்தைகள் :— சிங்கனின் கண்ணியில் குஞ்சுடன் ஒரு பறவை வந்து சிக்குகிறது. இந்த நிலையைக் கூறவந்தஆசிரியர், உயிர் எப்படி சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் எனும் ஐந்து அவத்தைகளுடன் ஒன்றி இருக்கிறதோ அதுபோல இப் பறவையின் நிலையும் இருக்கிறது என்று கூறுகிறார் (59 5).

ஆண்டுகள் :- மதனவல்லி, மன்மதனைப் பழித்துரைக்கும் பொழுது கூறுகின்ற சில பெயர்கள் ஆண்டுகளின் பெயர்களாக அமைகின்றன. பிரபவ பிரசோற்பத்தி, மன்மதா, பரிதாபி, துந்துபி, விரோதி, துன்மதி, காலயுக்தி, விசயம், விகுருதி, சய, ஆனந்த, பிரமாதி, ஈசுவர, குரோதி, கீலக, சித்திரபானு, சருவசித், அட்சய எனும் இப் பத்தொன்பது ஆண்டுகளின் பெயர்கள் வருகின்றன. 'பிரபவ' என்று தொடங்கி 'அட்சய' என்று முடித்த ஆசிரியரின் புலமை நயம் பாராட்டத்தக்கதாக இருக்கிறது.

தேசங்கள் :- வங்கம், அரபி, குச்சரம், மகதம், விதேகம், கொங்கணம், துளுவம், சிங்களம் (ஈழம்), கலிங்கம், தெலுங்கம், மச்சம், மலையாளம், சாளுவம், துலுக்கானம், மராடம், சீனம், கொச்சி, கொங்கு, பாண்டி ஆகிய தேசங்களின் பெயர்கள் காணப்படுகின்றன.

ஆடைகள் : துகில், பணி, கலை ஆகிய பெயர்கள் ஆடையைக் குறிப்பனவாக வருகின்றன. சால்வை, பல வர்ணச் சேலைகளும் சுட்டிக் கூறப்படுகின்றன.

அணிகலன்களும் பிறவும் :— அணிகலன்களைப் பற்றி ஆசிரியர் பல்வேறிடங்களில் கூறுகின்றார்.

நெற்றியணி	— வைடூரியச்சுட்டி, சுடிகை;
மூக்கணி	— நாசிகாபரணம்;
காதணி	— தந்தி வெண்கோட்டுச் சுந்தரத்தோடு, குழை, ஓலை;
கழுத்தணி	— பொற்காறை;
மார்பணி	— மணிவடம், ஆரம், முத்து மாலை, மாலை, குன்றிமா மணி, குலச்சங்குமணி, கவடி;
இடுப்பணி	— மேகலை, மணிப்பட்டிகை;
கையணி	— மணிவளை, வச்சிரத்தொடி, கடகம்;
காலணி	— சிலம்பு

பொற்குடம், சிவிகை, பொன், கனகம், வெள்ளி, பவழம், வைரம், முத்து ஆகிய பொருள்கள் குறத்தி பெற்ற பரிசுகளாக வருகின்றன.

விழாவும் விண்மீனும் :— சோழ நாட்டில் நாள்தோறும் விழாக்கள், தேர்த் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. சரபோசி ஆதிரை நாளில் பிறக்கிறார்.

குறிவகைகள், நிமித்தங்கள் :— கைரேகை, கால்ரேகை, மறு, தழும்பு, சுழிகள், கவுளி, ஆந்தையின் சொல், மனக்குறி ஆகியவற்றைச் சொல்பவளாகக் குறத்தி வருகின்றாள். மகுட ரேகை, விசயரேகை, பாக்கிய ரேகை ஆகிய இரேகைகள் சரபோசி மன்னனின் கையிலிருந்ததாகக் கூறுகிறாள் மதனவல்லியின் கையில் இருக்கின்ற இரேகைகளும், அதற்குக் குறத்தி கூறிய பலன்களும் வருமாறு :

வச்சிர ரேகை - கணவன், இந்திரபோக முடையவன்;
மகுட ரேகை - கொழுநன், முருகன் போல இருப்பன்;
சூல ரேகை - தலைவன், உயர்ச்சி உடையவனாய் இருப்பன்;

சக்கர ரேகை - காதலன், உலகைப் பாதுகாப்பவனாவன்;

குலவி ரேகை - மணாளனுக்கு எப்பொழுதும்
வெற்றியே கிட்டும்;

கமல ரேகை — கேள்வன், என்றும் அன்புடையவனாய்
இருப்பன்;

சங்க ரேகை — தலைவியின் வீட்டில் எப்பொழுதும்
இன்னிசை முழங்கும்.

பழக்க வழக்கங்கள் :- அக்காலப் பழக்க வழக்கங்கள், வழிபாட்டு முறை, குறவர்களின் வாழ்க்கைமுறை ஆகியவற்றைப் பாக்களில் ஆசிரியர் கூறுகிறார்.

மகளிர் பந்தாடுதல், திருடர்களைச் சாலைவழி அழைத்துச் செல்லும்பொழுது கையிலும் காலிலும் தொழுக்கட்டை மாட்டி விடுதல், கண்கட்டு வித்தை செய்தல், புரவலர் புலவர்களுக்கு முத்துமாலை, களிறு, சிவிகை, பரி போன்றவற்றைப் பரிசிலாகக் கொடுத்தல் - ''காமம் அடங்காதிருக்க மருந்து, உலகை நொடிப் பொழுதில் சென்று திரும்பி வருவதற்குக் குளிகை, பெண்களைக் கவரும் வாடைப்பொடி, பேய், பூதங்களை ஏவுதற்கு மந்திரம், காற்றைக் கமண்டலத்தில் அடைத்தல், அக்கினிதம்பம் சலத்தம்பம் ஆகருடணம் வசியம், மூப்பை உடையோர் இளையோராக மூலிகை, ஒருவர் மனத்தில் எண்ணியதைத் தெரிந்து சொல்லும் வித்தை'' ஆகிய இவற்றைப் பயன்படுத்தல் - போன்ற பழக்கவழக்கங்கள் ஆங்காங்கே சொல்லப்படுகின்றன.

குறி சொல்வதற்கு முன் செய்யப்படும் வழிபாட்டுமுறையைக் குறத்தி கூறுகின்றாள். அஃதாவது, சாணத்தால் ஒரு முழ அளவிற்குச் சதுரமாக மெழுக வேண்டும்; விளக்கினை ஏற்றவேண்டும்; விநாயகரை வைக்க வேண்டும்; சந்தனம், பூ, அறுகு ஆகியவற்றை அந்த விநாயகருக்கு அணிவிக்க வேண்டும்; கனி வகைகள், எள், நெற்பொரி, தேங்காய் ஆகியவற்றைப் படைத்து நிவேதனம் செய்யவேண்டும்; வெற்றிலை, பாக்கு வைத்து ஒரு பொற்காசையும் வைத்தல் வேண்டும்; பின்னர்த் தூபம் காட்டி மந்திரத்தால் அர்ச்சனை செய்ய

வேண்டும். இவ் வழிபாட்டை நடத்தி முடித்த பின்னர்க் குறத்திக்குத் தரவேண்டிய "சிறுகையளவு கஞ்சி (பசி ஆறுவதற்கு), பிள்ளைக்கு ஒரு கரண்டி எண்ணெய், பிள்ளையார் முன் படைத்த அனைத்துப் பொருள்கள், தினை, மாவு, படி நிறைய த் தானியம்" ஆகியனவற்றைக் கொடுத்த பின்னர்தான் குறி சொல்லும் வழக்கமுண்டு.

மான், பன்றி, மரை போன்ற விலங்குகளைப் பிடித்துக் கொல்வர்; தந்தத்திற்காக யானையைப் பிடித்துக் கொல்வர்; தைலம் வடிப்பர்; மாமனை மணப்பர்; கொழுந்தனொடு படுப்பர்; மாமியைத் தாயென மதிப்பர்; நீதியைப்போற்றுவர்-இதுவே குறவர்களின் வாழ்க்கை முறையாகக் கூறப்படுகிறது. மானம் மிக்க சாதியைச் சேர்ந்த இவர்கள் பறவைகளைப் பிடிக்கும் வழக்கம் உடையவர்கள். ஒருவர் மனத்தில் நினைக்கும் குறிகளைச் சொல்வதற்குப் பல தெய்வங்களை வணங்கி வேண்டி, இறுதியில் தம் குலதெய்வம் எக்கலாதேவியை இறைஞ்சிய பின்னரே 'மனக்குறி' சொல்லும் வழக்கம் உடையவர்கள் இக் குறச்சாதியினர்.

சொற்கள் :- குறத்தி, சிங்கன், குளுவன் ஆகியோர் பேசும் பேச்சுகளில் 'சேரிமொழிச் சொற்கள்' ஆசிரியரால் பயன்படுத்தப் படுகின்றன.

'கலீர் கலீர்', 'சிலசில', 'பொறு பொறு' முதலான அடுக்குச் சொற்களையும் ஆசிரியர் கூறுகிறார்.

"குறவஞ்சி வந்தாள் மோகனக்
குறவஞ்சி வந்தாள்" (33 பல்லவி)

என்று பல்லவியில் தொடர் அடுக்கி வருமாறும் தேசிகர் பாடுகிறார். இசை அமைப்பில் உள்ள குறவஞ்சியில் பாடுவதற்கேற்ப இத் தொடர்கள் அமைகின்றன எனலாம்.

மராட்டிய மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் தமிழ் தவிர, வடமொழி, தெலுங்கு, கன்னடம், மராட்டி, இந்துத்தானி, ஆங்கிலம் ஆகிய மொழிகளின் செல்வாக்கு மக்களிடையே காணப்படுகிறது. இம் மொழிகள் இக்காலப் புலவர்களையும் பாதிக்கிறது. அதற்குச் சிவக்கொழுந்து தேசிகரும் விதிவிலக்

கன்று எனவே தாமெழுதிய இக் குறவஞ்சியில் குறத்தியின் கூற்றில் வடமொழி தவிர்த்துப் பிறமொழிச் சொற்களைக் கையாளுகிறார்.

குறத்தியிடம், தெலுங்குப்பெண் 'நதா செய் சூடு' என்றும், மராட்டிய மாது 'மஜ ஹாத் பஹாஆக' என்றும், கன்னடப் பெண் 'நன கையின நோடே' என்றும், இந்துத்தானி மொழி பேசும் துலுக்கவஞ்சி 'மை ஹாத் தேக்கர் பொலாம்' என்றும், ஆங்கிலமாது 'லுக் மை ஹாண்ட்' என்றும், கூறுகின்றனர். 'என் கையைப் பார்' எனும் பொருளிலேயே இச்சொற்கள் வருகின்றன. பல மொழி பேசும் மக்கள் இங்கிருந்தனர் என்ற பொருளும், குறத்தி ஓரிடத்தில் இல்லாமல் பல மொழி பேசும் மக்கள் இருக்குமிடத்திற்குச் சென்று வந்தவள் என்ற பொருளும் இதனால் பெறப்படுகிறது.

'சலாம்' எனும் இந்துத்தானிச் சொல்லையும் ஆசிரியர் பயன்படுத்துகிறார்.

'சிவபூஜை', 'நிவேதனம்', 'பக்ஷம்', 'ருத்ராக்ஷமணி' முதலான வடமொழிச் சொற்களையும் கையாள்கிறார். 'அக்கினி ஸ்தம்பம்' என்பதை 'அக்கினித் தம்பம்' என்றும். 'ஜலத்தம்பம்' என்பதைச் 'சலத்தம்பம்' என்றும் ஆசிரியர் கையாள்கிறார்.

வசன நடை :- நூலினிடையில் 'வசன நடை' இடம் பெறுகிறது. இவ்வசன நடையைப் பேசுகிறவன் கட்டியக்காரன். நாடகக் கதையின் தொடர்ச்சி விட்டுப்போகாமல் இருக்கும் பொருட்டு ஒவ்வொரு காட்சி தொடங்கும் பொழுதும் இவ் வசனத்தைப் பேசுகிறான். ''இப்படி, இந்தப்படி, அதன் பிறகு, இனி, இவள் இங்கே இப்படியிருக்கும்போது'' என்று கதையைத் தொடங்கிக் கூறி, இறுதியில் 'அப்படியே' என்று முடிக்கிறான். இவ்வசனத்தில், ''மகாராஜா' நாடக ரக்ஷணை, பவனி, மோகித்த, மன்மத பாளம், சீதளோப சாரம்'' ஆகிய வடசொற்களும், ''வருகிறது, சொல்லுகிறான்'' போன்ற பேச்சுத்தமிழ்ச் சொற்களும் கலந்து வருகின்றன.

(ஆ) விலாச நாடகங்கள்

பிற மொழியிலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட நாடகங்களுள் விலாச நாடகங்களும் அடங்கும். தஞ்சைமராட்டிய மன்னர் ஆட்சிக் காலத்தில் ஏழு விலாச நாடகங்கள் இருந்தன வாக அறியப்படுகின்றன. அவை வருமாறு :

1. சங்கர நாராயண விலாசம் — இரண்டாம் சகசி
2. சகசிராச விலாசம் — ?
3. பூலோக தேவேந்திர விலாசம் — ?
4. சந்திரிகாகாசை விலாசம் — ?
5. விஷ்ணு சாகராச விலாசம் — ?
6. மதனசுந்தரப் பிரசாத சந்தான விலாசம் — அருணாசலக்கவி
7. பாண்டிகேளீ விலாசம் — நாராயணகவி

இவற்றுள் மூன்று நூல்களின் ஓலைச்சுவடிகள் தஞ்சைச் சரசுவதி மகால் நூல்நிலையத்தில் இருக்கின்றன. இந்நூல்கள் தெலுங்கு எழுத்தில் டி எடுக்கப்பெற்ற தமிழ் நூல்களாகும். அந்தாதி அமைப்பில் இந் நாடகங்கள் அமைந்துள்ளன இசை நாட்டிய நாடகமாக மேடையில் பாடி நடிக்கப்பட்டதாக அறியமுடிகிறது. கட்டியக்காரன் அரங்கிற்கு வந்து நாடகத்தைத் தொடங்கி வைக்கிறான்.

இந்நாடகங்களுக்கு உரிய மூலக்கூறுகள் பற்றி எதுவும் தெரியவில்லை. 'விலாசம்' என்ற சொல்லுக்கு 'நாடகநூல்' என்பதே பொருளாகும். 'அரிச்சந்திர விலாசம்' என்ற நூல்கூட இருப்பாதகத் தெரிய வருகிறது. ஆனால் இந்நூலாசிரியர் மற்றும் காலம் போன்ற விவரங்கள் சரிவரத் தெரியவில்லை ஆதலால் இவ் விலாச நாடகங்கள் தோன்றிய காலம் மராட்டியர் ஆட்சிக் காலமாக இருக்கலாம். இது இன்னும் ஆய்வுக் குரியது.

6

பூலோக தேவேந்திர விலாசம்

தஞ்சையைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சிபுரிந்த சுகசி மன்னன் காலத்தில் (1684-1712) எழுந்த பல நூல் களுள் இப் 'பூலோக தேவேந்திர விலாச'மும் ஒன்று. இந் நூலாசிரியர் பெயர் தெரியவில்லை. தஞ்சைச் சரசுவதி மகால் நூல் நிலையத்தில் காணப்படும் இந் நூலின் ஓலைச்சுவடி தெலுங்கு எழுத்தில் டி எடுக்கப்பெற்ற தமிழ் நாடகமாக உள்ளது.[1] இந் நூலினை வ.வேணுகோபாலன் பதிப்பித்திருக் கின்றார்.[2]

நூலமைப்பு

இந்த நாடகம் பத்துக் கதாபாத்திரங்களைக் கொண்டி ருக்கிறது. இந் நாடகத் தலைவன், சகசி மன்னன். 'பூலோக தேவேந்திரன்' என்பது சகசி மன்னனைக் குறிப்பதனால் 'பூலோக தேவேந்திர விலாசம்' என இந்நாடகம் அழைக்கப் படுகிறது.

இசை நாட்டிய நாடக மரபின் வழியே. இசைப் பாக்க ளாலும் இடையிடையே உரைநடையாலும் அமைந்திருக் கிறது.

முதலில் தோடய மங்களம், மங்களம், விநாயகர் தருவு ஆகியன அமைந்திருக்கின்றன. அதன் பின்னர்க் காப்பு விருத் தம் 1, இசைப் பாக்களான தருவுப் பாடல்கள் 45, சோபன தருவு 1 ஆகியன நாடகப் பாக்களாக இருக்கின்றன.

---

1. சுவடி எண் 183/644.
2. வ.வேணுகோபாலன் (ப.ஆ.) 'பூலோக தேவேந்திர விலா சம்', ஐந்து தமிழிசை நாட்டிய நாடகங்கள், சரசுவதி மகால் நூலக வெளியீடு, தஞ்சாவூர், 1980, பக்.1-44.

சூத்திரதாரன், நாடகத்தைத் தொடங்கி வைப்பதற்காக முதலில் கட்டியக்காரனை அறிமுகம் செய்து வைக்கிறான். கட்டியக்காரன் அரங்கிற்கு வந்து நாடகத்தைத் தொடங்கி வைக்கிறான்.

நூல் நுதலிய பொருள்

மன்மதனிடம் ஊடல் கொண்ட இரதி, தன் தோழியுடன் சிங்கார வனத்திற்கு வருகின்றாள். இரதியைத் தேடிச் சிங்கார வனத்திற்கு வந்த மன்மதன் அவள்மீது மலரம்புகளை எய்து மயக்குகிறான். 'பெண்களை ஆண்கள் வெல்வது விந்தையில்லை; அதனால் தஞ்சை மன்னன் சகசியை வெல்ல முடியுமா?' என்று இரதி கேட்க, மன்மதன் அவனை வெல்ல முடியாது; ஆனால் அவனைக் காதலிக்கும் இராசகன்னிகை சுசீலையை வெற்றி கொள்ள முடியுமென்கிறான். 'அப்படியானால் முதலில் அவளை வெற்றி கொண்ட பின்னர் என்னை நீ அடையலாம்' என்கிறாள் இரதி.

தஞ்சையில் உலா வந்த சகசி மன்னனைக் கண்ட காம் போச நாட்டு மன்னன் மகள் சுசீலை காதல் கொள்கின்றாள் சகசியை அடைய முடியாமல் விரக வேதனையால் மனம் நொந்து சிங்காரவனத்திற்கு வருகின்றாள். அங்கமர்ந்து, காம மயக்கத்துடன் சகசியை அடைவதற்குரிய வழிமுறைகளைப் பற்றிப் பாங்கியுடன் பேசி வருந்துகிறாள். அந்நேரத்தில் அங்கு மன்மதன் வருகிறான்.

சுசீலை மீது மலரம்புகளைச் சொறிகிறான் மன்மதன். மலரம்புகளால் தாக்குண்ட சுசீலை மனம் மிகவும் நொந்து பலவாறு புலம்புகிறாள். இச்சமயத்தில் அங்குவந்த சித்த புருடன் எனும் முனிவரிடம் சுசீலையின் தோழி தன் தலைவி படும் துயரத்தைக் கூறித் தீர்ப்பதற்கு வழி கேட்கிறாள். முனிவர் கூறியதற்கேற்பச் சுசீலை, தோழியுடனும் முனிவருடனும் தஞ்சைக் கோயிலை அடைந்து சிவபெருமானை வணங்கி வேண்டி வழிபடுகிறாள். சிவபெருமான் அவள் முன் தோன்றி, 'சகசி மன்னனைக் கணவனாக அடைவாய்' என்றருள் புரிகிறார்.

தஞ்சைப் பெருமான் அருள் புரிந்ததை அறிந்த மன்மதன் தன் தோல்வியை ஒப்புக்கொண்டு மனம் வருந்தித் திரும்பிச் செல்கிறான்.

முனிவர் வேண்டிக் கொண்டதற்கு இணங்கிக் காம்போச ராசன், அவன் மனைவி காந்திமதி, சுசீலை முதலானோர் சகசி மன்னனிடம் செல்கின்றனர். முனிவர், மன்னனிடம் கேட்டுக் கொண்டதற்கேற்ப, சகசியும் சுசீலையை மணந்து கொள்ள ஒப்புதல் அளிக்கிறான். அனைவரது வாழ்த்துகளுடன் இருவர் திருமணமும் நடக்கிறது.

பாத்திரப் படைப்புகள்

பத்துக் கதாபாத்திரங்கள் கொண்ட இந்நாடகத்தில் சகசி மன்னன், சுசீலை ஆகிய இருவர் முதன்மைப் பாத்திரங்களாகவும் சூத்திரதாரன், கட்டியக்காரன், இரதி, மன்மதன், சகி, சித்தபுருடன், காம்போச மன்னன், காந்திமதி ஆகியோர் துணைப் பாத்திரங்களாகவும் இடம்பெறுகின்றனர்.

சகசி மன்னன் :- இவரே கதைத்தலைவன், இவர் கூற்றில் பாடல்கள் இல்லை. மாறாகப் பிற பாத்திரங்களின் கூற்றின் மூலமே இவர் பெருமையை அறிய முடிகிறது.

குளிர்ந்த சந்திர முகத்தினன் ; தசரதச் சக்கரவர்த்தி போல அனைவரையும் உறவினராகக் கருதும் தன்மையன் ; பல கலைகளில் சிறந்தவன்; தாமரைக் கண்ணினன்;மீன் கொடியினன்; போரில் அருச்சுனன்; கருணையில் கடல்; கொடையினில் கன்னன்; பரமனின் பத்தன்; எல்லோர்க்கும் உதவும் இதயன்; சிவாசிக்கு முதன்முதல் கூறப்பட்ட மராட்டிய மன்னர்களுக்குரிய 'சத்திரபதி'ப் பட்டத்தைப் பெற்றவன்.

மன்மதன், சகசி மன்னனைத் தேவேந்திரனோடு ஒப்பிட்டு இரதியிடம் கூறுகின்றதைப் பின்வரும் அட்டவணை விளக்குகிறது.

வ எ	இந்திரன்	சகசி மன்னன்
1	காமதேனு உண்டு.	கேட்டதைக் கொடுக்கும் தன்மை உடையவனாதலால் சகசியின் கை காமதேனுவாயிற்று.
2	தேவ விருட்சமான கற்பகத்தரு உண்டு.	தன்னை அடைந்தவர்களை ஆதரித்து வேண்டியதை அளிப்பவனாதலால் தேக கற்பகத்தரு இவனுக்குண்டு.
3	பெருமையுள்ள ஐராவத யானை உண்டு.	நல்ல வீரத்தன்மை கொண்ட சிறப்பினை உடைய யானை உண்டு.
4	மந்திர சக்தியால் செயலாற்றும் வாளுண்டு.	போர்க்களத்தில் வீரச் சிறப்புள்ள ஆற்றலைக் காட்டுவதில் உயர்ந்த வாளை உடையவன்.
5	அழகிய அரம்பை இவனிடம் இருக்கின்றாள்.	காமச்செயல் புரியும் அரம்பை இவனுக்கு உண்டு.
6	தேவர்களால் வழிபடப் பெறும் தகுதியை உடையவன்.	ஆலயவழிபாடு இவனுக்குண்டு
7	சிறந்த முரசினை உடையவன்.	கையில் கொட்டிய முரசினை உடையவன்.
8	இவன், கௌதம முனிவரின் மனைவி அகலிகையைத் தழுவியவன்.	ஆனால் இவன் இப்படி ஒருத்தன் மனைவியையும் கவர்ந்தவனில்லை; பிறர் மனை நயவாத உயர்வுடையவன்.

சுசீலை :— இந் நாடகக் கதைத்தலைவி; வீதியுலா வந்த சகசி மன்னனைக் கண்டு காதல் கொள்கிறாள்; காம்போசநாட்டு மன்னன் மகளான இவள், பவளக்கொடி இடையினையும் கோவை இதழையும் வெண்ணிலா முகத்தையும் மான் போன்ற நடையினையும் பெற்றிருக்கிறாள்.

பலவகை அலங்காரங்களுடன், அழகிய முத்துமாலை அணிந்து, மருக்கொழுந்து வேரினைத் தலையில் சூடி, இசைப் பாக்களைப் பாடிச் சிங்காரவனத்திற்கு வருகின்றாள்.

சகசி மன்னனைக் கண்டு காதல் கொண்டமையினால் தனமிரண்டும் விம்முகிறது; இரவு விடியவில்லை; கை வளைகள் நெகிழ்ந்து நழுவுகின்றன; உணவு செல்லவில்லை; ஆடை அணிவதற்கு விருப்பமில்லை.

மன்மதன் தொடுத்த மலர்க்கணைக்கு ஆற்றாத சுசீலை, தன் தோழியிடம், ''சகசேந்திரன் என்னைக் கல்யாணம் எப்பொழுது செய்வான்?; இந்திரன்-இந்திராணி போல கந்தவேள்-வள்ளி போல, மாதவன்-இலக்குமி போல, வேதவன்-வாணி போல எப்பொழுது நாங்கள் மகிழ்ந்திருப்போம்?'' என்று புலம்புகின்றாள்.

ஈசனருளால் சகசியை அடையப்போவதை நினைந்து மகிழ்ந்து மன்மதனைப் பல சொற்களால் வெறும் துச்சமாக மதித்து, ''அட! மன்மதா! ஐந்து மலரம்புகளையும் தொடுத்துப் பூச்சூடுவேன்; கரும்பு வில்லைப் பறித்துஒடிப்பேன் வெண்ணிலா விலிருந்து விளையாடுவேன்: தென்றல் திரையை விசிறச் செய்வேன்; சித்தம் மகிழ்ந்து கமலாம்பிகை அம்மையின் அருளினால் சகசேந்திரனைச் சேர்ந்து கொள்வேன்'' என்று கூறுகிறாள் சுசீலை.

இறுதியில் ஈசனருளால் சகசியை முனிவர் உதவியினால் மணம் செய்து கொள்கின்றாள்.

சூத்திரதாரன் :- நாடகத்தை அறிமுகம் செய்து விளக்கம் கொடுக்கின்றவனாகவும் நாடகத்தை நடத்துகின்றவனாகவும் வருகின்றான்; கதைப் பாத்திரஙகளையும் இவன்தான் அவ்வப் பொழுது அறிமுகப்படுத்துகின்றான்; இவன் பேசுகின்ற பேச்சுக் கள் அனைத்தும் உரைநடையிலேயே அமைந்திருக்கின்றன; கதைத் தொடர்ச்சியையும் அவ்வப்பொழுது சொல்கின்றான். 'நட்டுவாங்கம் தெரிந்த நாட்டியாசாரியனே சூத்திரதாரனாகச் சொல்லப்படுகின்றான்' என்று கூறுகின்றார் வ.வேணுகோபாலன்.[3]

3. பூலோக தேவேந்திர விலாசம், ப.288.

கட்டியக்காரன் :- சபையோர்க்கு முதலில் இக் கட்டியக் காரனைச் சூத்திரதாரன் அறிமுகம் செய்து வைக்கிறான். நாடகத்தைத் தொடங்கி வைப்பதுடன் இவன் பணி முற்றுப் பெற்று விடுகிறது.

இரதி :- தன் கணவன் மன்மதனுடன் ஊடல் கொண்டு, நெற்றியில் சந்தனத் திலகம் தீட்டி, விழிகளில் அஞ்சனம் இட்டு, கூந்தலைக் கோதி முடித்து, அதில் அலர்ந்த சுகந்தம் அணிந்து, சந்தனத்தை உடலில் பூசி, சரிகை இரவிக்கை, சந்திரகாவிச்சேலை, சந்திரகாவிக்கச்சு ஆகியவற்றை அணிந்து, கால்களில் சிலம்பு கொஞ்ச நடந்து தோழியுடன் சிங்கார வனத்திற்கு வருகின்றாள்.

வனத்தில் இருக்கின்ற கரும்பு, வண்டுகள், பூக்கள், கிளி ஆகியன தன் கணவனை நினைவூட்டுகின்றன. அதனால் வேறு இடம் செல்ல நினைக்கின்றாள். அந்நேரத்தில் மன்மதனே அங்கு அவளைத் தேடி வந்து விடுகின்றான் இரதிமீது மலர்க்கணைகளைத் தொடுத்து அவளைத் தன்வயப்படுத்து கின்றான்.

மன்மதன் :- கணவன் அல்லது தலைவன் அல்லது காதலன் ஆகிய இவர்களைப் பிரிந்து வாடும் பெண்கள்மீது மலர் அம்புகளை எய்து அவர்களை மேலும் காதல் நோயில் வாட்டமுறச்செய்வதுதான் மன்மதனின் தொழிலாகும். இதுவே இவன் குணமுமாகும். அவனைச் சிவபெருமான் ஒருவரைத் தவிர வேறு எவராலும் வெல்ல இயலாது.

சகி :- 'சகி' எனத் தோழி அழைக்கப்படுகின்றாள். இரு தோழிகள் இந் நூலில் இடம்பெறுகின்றனர். இரதியும், சுசீலையும் காதல் நோயினால் துன்பப்படும் பொழுது தத்தமது நிலைகளைத் தமது தோழிகளிடமே கூறுகின்றனர். சுசீலையின் தோழி தலைவியின் துயர் போக்குவதற்காகச் சித்தபுருடனிடம் வழி கேட்கிறாள். தலைவனையும் தலைவியையும் இணைத்து வைப்பதற்குரிய செயல்களுக்கு உறுதுணையாக இருக்கின்றாள்.

சித்தபுருடன் :— சிவபெருமானின் அடியவர். நெற்றியில் திருநீறணிந்து, உருத்திராக்கமாலை அணிந்து, சடையை விரித்துக் கொண்டு, புலித்தோலாடையைக் கட்டிக்கொண்டு, திடமான பத்தியுடன் சிங்கார வனத்திற்கு வருகின்றார். வாட்டமுடன் இருக்கின்ற சுசீலைக்கு ஆறுதல் சொல்லிச் சகசி மன்னனிடம் அழைத்துச் சென்று இருவருக்கும் திருமணத்தை நடத்தி வைக்கின்றார். தலைவனின சிவபத்தியை எடுத்துக் கூறுவதற்காகவே இப் பாத்திரம் படைக்கப்பட்டது போலத் தெரிகிறது.

காம்போச மன்னனும் காந்திமதியும் — சுசீலையின் தந்தையும் தாயுமாவர். இவர்களைப் பற்றிய செய்திகள் மிகக் குறைவே. தங்கள் மகள் திருமணத்தைக் காண்பதற்காகச் சுற்றத்தினருடன் சகசி மன்னன் அரண்மனைக்கு வருகின்றனர்.

இன்னிசை நாட்டியப் பனுவல்

இசை நாட்டியப் பாக்கள் 'தருவு' என்ற சொல்லால் குறிக்கப்படுகின்றன. விநாயகர் தருவு, உள் தருவு, வெளி தருவு, கைவார - தருவு ஆகிய ஐந்து தருவுகள் காணப்படுகின்றன.

நூல் தொடக்கத்தில் 'காப்பு'ப்பகுதி முடிந்தபின் விநாயகரைப் போற்றி வணங்கும் முறையில் மூன்று பாடல்கள் 'விநாயகர் தரு'வாக அமைந்திருக்கின்றன.

இரதியும் சுசீலையும் வரும்பொழுது உள், வெளித் தருவுகள் இடம்பெறுகின்றன.

மன்மதன், இரதி ஆகிய இருவரும் வினா விடையாகப் பேசுகின்ற சம்வாத தருவு' காணப்படுகின்றது.

இறைவனையும், சகசி மன்னனையும் புகழ்ந்து பாடும் இசைப்பாக்கள் மணிப்பிரவாள நடையில் இருக்கின்றன. இதனைக் 'கட்டியம் கூறும் இசைப்பா' என்றும் 'கைவார தருவு' என்றும் கூறுகின்றனர்[4] இந்தத் தருவையே 'சலாம் தருவு' என்றும் பிற்காலத்தில் வழங்குகின்றனர்.[5]

---

4. பூலோக தேவேந்திர விலாசம், ப.40
5. மேலது, ப.290.

நாட்டை, சௌராட்டிரம், ஆகிரி, தன்யாசி, சாரங்கா, பைரவி, கௌளிபந்து, சுரடி, கும்மகாம்போதி, மத்தியமாவதி, சங்கராபரணம், சுகபந்துவராளி, நாதநாமக்கிரியை, தோடி, பந்துவராளி, சாவேரி, இலலிதபஞ்சமம், காம்போதி, பூபாளம், கன்னடசாபு, தேவகாந்தாதி, காபி ஆகிய இருபத்திரண்டு இராகங்களில் பாக்கள் இசையுடன் பாடி நடிக்கப் பெற்றதாகத் தெரியவருகிறது.

நாடக நூல்

நாடகத்திற்கு 'உரையாடல்' மிகவும் இன்றியமையாத தொன்றாகும். மன்மதன்-இரதி ஆகிய இருவர் பேசும் உரையாடல்கள் சுவைபட அமைந்திருக்கின்றன. 'அந்தாதி' அமைப்பில் 'சிருங்கார'ச் சுவையில் இப் பாக்கள் காணப்படுகின்றன. மன்மதன் தாமரை, அசோகம், மா, முல்லை, நீலோற்பலம் ஆகிய ஐவகை மலர்களை அம்பாகத் தொடுக்கின்றான். இவற்றை இரதி, முல்லைப் பற்கள், மனம், சந்தனக்கை, கைவிரல் நகம், ஆழமான கண்சள் ஆகிய தன் உடலுறுப்புகள் மூலம் வெற்றி பெறுகின்றாள். இச்செய்தியே இந்த உரையாடல்களில் காணப்படுகின்றன.

பத்துக் கதாபாத்திரங்களைக் கொண்டு இந்நூல் ஒரு நாடக நூலாகத் திகழ்கிறது.

இறைவன் பெருமை

சிவன், பரமசிவன், பரமேசுவரன், தஞ்சைபுரியீசன், ஈசன், சகதீசன், நீலகண்டன், திரிலோசனன், சூலதரன், கங்காளன், அரன், சங்கரன், மதிசூடும் வேணியன், ஆனந்தவல்லி நாயகன் எனும் பெயர்களால் சிவபெருமான் அழைக்கப் படுகின்றனன்.

இந்திரன், திருமால், நான்முகன், முருகன், மலைமகள், இந்திராணி, வள்ளி, வாணி, இலக்குமி ஆகிய தெய்வங்களைப் பற்றிய குறிப்புகளும் இடம்பெறுகின்றன கமலைமாது, கமலாலயம்மை, கமலைநாயகி, கமலாலயம்மன் எனும் பெயர்களால் திருவாரூர்த் தியாகேசரின் துணைவி கமலாம்பிகை அழைத்துப் போற்றப்படுகின்றனள்.

உவமைகள்

'போல' எனும் பொருளிலேயே பல உவமைகள் இடம் பெற்று இருக்கின்றன.

சகசி மன்னனைத் தசரதராமன், சந்திரன், விட்ணு, முருகன், விசயன் ஆகியவர்களோடு ஒப்பிட்டுக் கூறியிருக் கின்றார் ஆசிரியர்.

இரதி 'இரவி லெழு சந்திரன் போல'ச் சிங்காரவனத் திற்கு வருகின்றாள்.

சுசீலையின் இடை பவளக்கொடி போலவும் இதழ் கோவை போலவும் காணப்படுகின்றன. மன்மதனிடம் 'மதுவை உண்ட வண்டு போல'ச் சுசீலை மயங்குகின்றாள். இந்திரன், முருகன், திருமால், நானமுகன் ஆகியோர் தம் துணைவியருடன் இருப்பதுபோலத் தானும் சகசி மன்னனுடன் இருக்க வேண்டும் என்று தன் தோழியிடம் தலைவி கூறுகின்றாள்.

இயற்கைவளம்

மலர்கள் :- தாமரை, மா. அசோகம், முல்லை, நீலோத் பலம் ஆகிய ஐவகை மலர்களை மன்மதன் அம்பாகப் பயன் படுத்தி மகளிர்மீது எய்கிறான். தலைவி, மல்லிகை முல்லை, அரவிந்தம், வில்வம் ஆகிய மலர்களைக் கொண்டு இறைவனை வழிபடுகின்றாள்.

பறவைகள் :- மன்மதனின் எக்காளமாகக் குயில், நாணாக வண்டு வாகனமாக அன்னம் ஆகிய பறவைகள் கூறப்படுகின்றன. கிளி, மயில், ஆகிய பறவவகளைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

விலங்குகள் ;- தேவேந்திரனின் 'ஐராவதம்' எனும் யானையோடு சகசி மன்னனின் வீரத்தன்மையுடைய யானை யோடு ஒப்பிட்டு 'யானை' கூறப்படுகின்றது. சுசீலையை 'மானே' என்று விளிக்கின்றபொழுதும் சிவபெருமான் கையிலி ருக்கின்ற 'மான்' என்றும் 'மான்' கூறப்படுகின்றது.

ஏனையவை

சிவபூசை :- தலைவி தஞ்சைப் பெருவுடையாரைப் பல மலர்களால் அர்ச்சனை செய்து துதி பாடி வழிபடுகின்றாள். சிவபெருமான் பெருமைகளைக் கூறி வழிபடுகின்றாள். அக்கால வழிபாட்டு முறையில் வடமொழிச் சொற்கள் பலவற்றைச் சர்வ சாதாரணமாகக் கலந்து போற்றியமையைக் காண முடிகிறது. சுந்தரர்பொருட்டுப் பரவை நாச்சியாரிடம் இறைவன் தூது சென்ற நிகழ்ச்சியையும் இறைவன் கையில் மான் ஏந்தியிருக்கின்றதையும் இறைவன் நஞ்சுண்டுக் கண்டம் கறுத்தமையையும் தலைவி கூறுகின்றாள்.

வசனங்கள் :- பாடல் அமைப்பில் இருக்கும் இந்நூலினிடையில் சூத்திரதாரன், சகி, சித்தபுருடன், பரமேசுவரன், இராசகன்னிகை ஆகியோர் வசனங்களைப் பேசுகின்றனர்.

நாடகப் பாத்திரங்களை அறிமுகப்படுத்துகின்றபோதும் கதை நிகழ்ச்சிகளின் தொடர்பு விடுபட்டுப் போகாமல்இருக்கின்ற இடத்திலும் சூத்திரதாரன் வசன நடையில் பேசுகின்றான்.

இவர்கள் பேசுகின்ற இந்த வசன நடையில் சாதாரணமாக வழங்கும் பேச்சுத் தமிழைக் காணமுடிகிறது. இப்பேச்சில் வடமொழிச் சொற்கள் கலந்திருக்கின்றன.

சொற்கள் :- 35 வடமொழிச் சொற்களைப் பாக்களிலும் வசனநடையிலும் ஆசிரியர் எடுத்தாண்டிருக்கின்றார். இவற்றுள் 'ஜலத்தம்பம்' என்ற சொல்லைச் 'சலத்தம்பம்' என்றும் 'ஜோதிமயம்' என்ற சொல்லைச் 'சோதிமயம்' என்றும் கையாண்டிருக்கின்றார்.

சாதாரணமாக அன்றாட வாழ்வில் பேசுகின்ற பேச்சு வழக்குச் சொற்களாக 114 சொற்கள் பாக்களிலும் வசனங்களிலும் இடம்பெற்றிருக்கின்றன. இதுதவிர 'என்னடி', 'போடி', 'வாடி' போன்ற 30 சொற்களும் 'பாரடா', 'யாரடா' போன்ற 27 சொற்களும் காணப்படுகின்றன.

'சலாம்', 'பராகு' ஆகிய பிறமொழிச் சொற்களையும் 'கலகலெென', 'சோபனம் சோபனமே' ஆகிய அடுக்குமொழிச் சொற்களையும் ஆசிரியர் கையாண்டிருக்கின்றார்.

7

சந்திரிகாகாசை விலாசம்

சகசி மன்னனைப் (1684-1712) பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு எழுந்த பல நூல்களுள் 'சந்திரிகாகாசை விலாச' மெனும் நூலும் அடங்கும். நூலாசிரியர் பெயர் தெரியவில்லை. தஞ்சைச் சரசுவதி மகால் நூல்நிலையத்தில் காணப்படும் இந்நூலின் ஓலைச்சுவடி தெலுங்கு எழுத்தில் டி எடுக்கப்பெற்ற தமிழ் 'நாடகமாகும்.[1] வ. வேணுகோபாலன் இந்நூலினைப் பதிப்பித்திருக்கின்றார்.[2]

நூலமைப்பு

எட்டுக் கதாபாத்திரங்களைக் கொண்ட இந் நாடகத்தின் தலைவி, மாளவநாட்டு மன்னனின் மகள் சந்திரிகாகாசையாவள். இவள் பெயரிலேயே 'சந்திரிகாகாசை விலாசம்' என இந் நாடகத்திற்குப் பெயராக ஆசிரியர் கொடுத்திருக்கின்றார்.

இசை நாட்டிய நாடக மரபின் வழியே இசைப் பாக்களாலும் இடையிடையே உரைநடை கலந்தும் வருமாறு அமைந்திருக்கின்றது. இந்நாடகம்,

தோடய மங்களம		1
மங்களம்	—	1
விநாயகர் தருவு	—	1
காப்பு விருத்தம்	—	1
தருவுப் பாடல்கள்	—	30
சோபன தருவு	—	1

எனும் அமைப்பில் பாக்கள் அமைந்திருக்கின்றது.

1. தஞ்சைச் சரசுவதி மகால் நூல்நிலையச் சுவடி எண் 220/681.
2. வ. வேணுகோபாலன் (ப. ஆ.), 'சந்திரிகாகாசை விலாசம்'' ஐந்து தமிழிசை நாட்டிய நாடகங்கள், சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர், 1980, பக். 45-82.

நூல் நுதலிய பொருள்

மாளவ நாட்டு மன்னன் மகள் சந்திரிகாகாசை. இவள், திருவாரூரில் கோயில் கொண்டுள்ள வன்மீகநாத சுவாமியை வழிபட்டுத் தனக்கு நல்ல கணவன் கிடைக்க வேண்டுகிறாள். அப்பொழுது பல நாடுகளுக்குச் சென்ற சிவயோகி சித்தன் எனும் முனிவர் அக்கோயிலுக்கு வருகின்றார். அம்முனிவர், சந்திரிகையிடம் தான் கண்ட பல நாட்டு மன்னர்களைப் பற்றியும் அவர்களுடைய குணச்சிறப்புகளைப் பற்றியும் கூறுகின்றார். இம் மன்னர்களுள் தஞ்சையை ஆளும் சகசி மன்னனின் குணங்களையும் அழகையும்குலப்பெருமையையும் கூறுகின்றார். சகசி மன்னனின் பெருமையைக் கேட்ட சந்திரிகைக்கு அம் மன்னன்மீது காதல் ஏற்படுகிறது. இச் செய்தியைத் தன் தோழி சுகவாணியிடம் கூறிக் காதல் வெற்றி பெறுவதற்கு வழி கேட்கிறாள். சுகவாணி, சந்திரிகையின் தந்தை மாளவ இராச னையும் தாய் மஞ்சுளபாசினியையும் அழைத்துக்கொண்டு சித்த புருடரிடம் சென்று வழி கேட்கின்றாள், சிவபத்தனான சகசியிடம், மாளவராசனின் வேண்டுகோட்படிச் சித்தபுருடன் செல்கிறார். மன்னனிடம் சந்திரிகையின் அழகையும் குலப்பெருமையையும் சிவபெருமான்மீது பற்றுக் கொண்டதையும் குணச்சிறப்பையும் கூறுகின்றார். முனிவர் கூறியதைக் கேட்ட மன்னன் மகிழ்ச்சி கொண்டு அப்பெண்ணை மணம்புரிய ஒப்புதல் தெரிவிக்கின்றார். பின்னர் முனிவர், அனைவரையும் அழைத்துக் கொண்டு மன்னன் மாளிகைக்கு வந்து சகசி மன்னனுக்கும் சந்திரிகைக்கும் திரு மணத்தை நடத்தி வைக்கின்றார். அனைவரும் இருவரையும் வாழ்த்துகின்றனர்.

பாத்திரப் படைப்புகள்

சகசி மன்னன், சந்திரிகாகாசை ஆகிய இருவரும் முதன் மைப் பாத்திரங்களாகவும் சூத்திரதாரன், கட்டியக்காரன், சுக வாணி, சித்தபுருடன், மாளவதேசாதிபதி, மஞ்சுபாசினி ஆகி யோர் துணைப் பாத்திரங்களாகவும் இடம்பெறுகின்றனர்.

சகசி மன்னன் .- இந் நாடகத்தின் பாட்டுடைக் தலை வன். சதயத் திருநாளில் பிறந்தவன் ; தீபாம்பிகை புதல்வன்; சூரிய குலத்தில் தோன்றியவன்.

சித்தபுருடன், மாளவ மன்னன் ஆகியோர், ''சத்தியத்தில் அரிச்சந்திரனாகவும் தர்மத்தில் கர்ணனாகவும் செல்வத்தில் குபேரனாகவும் வில்லினில் விசயனாகவும் பொறுமையில் தருமனாகவும் கல்வியில் கலைமகளாகவும் அழகினில் மன்மதனாகவும் திறமையுள்ளவனாகவும் இருக்கின்றான்'' என்று சகசி மன்னனின் பெருமைகளைக் கூறுகின்றனர்.

சந்திரிகாகாசை :— இந் நூலின் பாட்டுடைத்தலைவி. சந்திரகுலத்தில் தோன்றிய இவள், சந்திர முகத்தினையும் அமிர்த இதழ்களையும் கெண்டைமீன் விழிகளையும் குயில் மொழியினளாகவும் முல்லை நகையினளாகவும் செந்தாமரை மலர்க்கையினளாகவும் பவளக்கொடி இடையினளாகவும் பந்து போன்ற முலையினளாகவும் அன்ன நடையினளாகவும் இரதி போன்ற அழகினளாகவும் விளங்குகிறாள். சுவடு எள்ளளவும் இல்லாதவளாகவும் அன்பு வார்த்தைகளே பேசுகின்றவளாகவும் பொய் பேசி அறியாதவளாகவும் அஞ்சும் திறமில்லாதவளாகவும் இருக்கிறாள்.

''முத்துமாலை அணிந்த முலைகள் விம்முது; குளிர்ச்சி தரும் மதியும் சுடுது; முத்துமாலையும் நீராய் முனைந்து காணுது; மெத்த மனம் நோகுது; விழியில் நீர் ஆறாகுது; மன்மதனின் கணையினாலே தேகமும் மெலியுது; உணவு இறங்குதில்லை; உள்ளமும் தெரியவில்லை; செவி இரண்டும் அவர் சேதி கேட்க நினைக்குது; அவனுருவம் காண விழிகள் ஆசையாகுது; சிவந்த வாய் அவன் செவ்விதழை நாடுது; சிகரமுலை அவன் கைகள் தீண்ட நாடுது; மகிழ்ந்து சரசம் செய்ய மனது நாடுது; அணிந்த சரிகை ஆடை அவன் விடுவிக்க நாடுது'' என்று தோழியிடம் புலம்புகின்றாள் தலைவி. இப்புலம்பல் தலைவியின் உள்ளத்தை அறிவதற்கு உதவுகிறது. காதற்சுவையை மிகுதிப்படுத்தி ஆசிரியர் தலைவியின் கூற்றாக இதனைக் கூறுகின்றார்.

சூத்திரதாரன் :— நாடகத்தை அறிமுகம் செய்து வைக்கிறான். பார்வையாளர்களுக்குக் கட்டியக்காரனை முதலில் மேடையில் அறிமுகப்படுத்துகின்றான். வசனநடையில் பேசுகின்ற இச் சூத்திரதாரன் ஒவ்வொரு காட்சியிலும் விளக்கம் கொடுத்து நாடகத்தை நடத்திச் செல்கின்றான்.

கட்டியக்காரன் :— உடம்பில் துப்பட்டியை வலப்பக்கம் போட்டுக் கொண்டு, கரிய மீசையை முறுக்கிக் கொண்டு, நாமம் சாத்திக் கொண்டு மேடையில் தோன்றி நாடகத்தைத் தொடங்கி வைப்பதுடன் இவன் பணி முடிவடைந்து விடுகிறது.

சுகவாணி :— தலைவி சந்திரிகையின் தோழி; சந்தனம் பூசிச் சந்திரகாவிச் சேலை அணிந்து வருகின்றாள்; சோர்வுற்றுக் காணப்படும் தலைவியின் நிலைக்கு உரிய காரணத்தை வினவு கின்றாள்; சித்தபுருடனிடம் சென்று காதல் நோயைத் தீர்ப்பதற் குரிய வழியைக்கேட்டுத் தலைவியின் பெற்றோர்களை அழைத்து வருகின்றாள். சுகவாணி மேடையில் தோன்றும்பொழுது பாக்கள் மூலம் கூறுகின்றார் ஆசிரியர். அதன் பின்னர் அவள் பேசும் பேச்சுகளை உரைநடையிலேயே அமைத்திருக்கின்றார்.

சித்தபுருடன் :— சடையை விரித்து, நெற்றியில் விபூதி அணிந்து, சூலத்தைக் கையில் கொண்டு, புலித்தோலாடை அணிந்து, உருத்திராக்க மாலை பூண்டு, கையில் சபதாவடம் கொண்டு பல நாடுகளுக்கும் சென்று அங்குள்ள தலங்களில் இறைவனை வணங்கி இறுதியாகக் கமலாபுரத்திலுள்ள வன்மீக நாதசுவாமியை வழிபடுவதற்காக வருகின்றார்.

சந்திரிகையைக் கோயிலில் கண்ட முனிவர், தாம் பல நாடுகளில் கண்ட மன்னர்களின் பெருமைகளைக் கூறுகின்றார். இறுதியில் கூறிய சோழநாட்டு மன்னன் சகசியின் பெருமையைக் கேட்ட சந்திரிகை, அம் மன்னன் உருவ அழகை முனிவரிடமே கேட்டறிகின்றாள்.

சகசி மன்னனிடம் சந்திரிகையை அழைத்துச் சென்று மணம் பேசி மணமுடித்து வைக்கிறார்.

சிவபத்தனாக விளங்கும் சகசி மன்னன் பெருமையை ஒரு சிவமுனிவர் மூலமாக ஆசிரியர் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. அதே சிவமுனிவராலேயே அம் மன்னனுக்குத் திருமணத்தையும் நடத்தி வைக்கிறார்.

முனிவர் பேசும் பேச்சுகள் பல வடிவிலும் வசன நடையி லும் அமைந்திருக்கின்றன.

மாளவ தேசாதிபதி — மாளவ தேசத்தை ஆண்ட மன்னன் கதைத் தலைவியின் தந்தையாவன். இவன் பெயர் கூறப்படவில்லை. சித்தபுருடனைச் சந்தித்துத் தன் மகள் சந்திரிகையைச் சகசி மன்னனுக்கு மணமுடித்துக் கொடுப்பதற்கு வேண்டிய உதவி புரியுமாறு கேட்டுக் கொள்கிறான். இறுதியில் சகசி மன்னனின் பெருமைகளைச் சந்திரிகையிடம் கூறி வாழ்த்துகிறான்.

முனிவரைக் காண வரும்பொழுதும் சகசி மன்னனின் அவைக்கு வரும்பொழுதும் சகசி மன்னனின் பெருமைதனைச் சந்திரிகையிடம் கூறும்பொழுதும் பட்டுமே இவன் பேச்சுகள் பாக்களில் இடம்பெறுகின்றன. ஏனைய இடங்களில் வசனநடையில் அமைந்திருக்கின்றன.

மஞ்சுபாசினி :— மாளவநாட்டு மன்னன் மனைவி; சந்திரிகையின் தாய். இவள் தன் கணவனுடன் சேர்ந்தே வருகின்றாள். இவள் பெயரும் இவள் உடன்வரும் நிகழ்ச்சிகளும் மட்டுமே காணப்படுகின்றன. எந்த இடத்திலும் இவள் பேசியதாகக் குறிப்புகள் காணப்படவில்லை.

இன்னிசை நாட்டியப் பனுவல்

சந்திரிகை மேடையில் தோன்றும்பொழுது உள், வெளித் தருவுகள் பாடப்படுகின்றன. முனிவர், சகசி மன்னன் பெருமைகளைப் பாடுகின்ற பாக்கள் 'கைவார தரு'வாகக் கூறப்படுகிறது.

இந் நாடகத்திலுள்ள இசைப் பாக்களான தருவுகளுக்கு இராகமும் தாளமும் குறிக்கப்பெறவில்லை. நாடகத்தின் முதலிலுள்ள 'தோடய மங்களத்'திற்கு மட்டும் 'இராகம்—நாட்டை' என்றும் 'தாளம்—சம்பை' என்றும் குறிக்கப்படுகின்றது.

தஞ்சை மன்னன் சகசியின் திருவாரூர் அரண்மனையில் இந் நாடகம் அரங்கேற்றப்பட்டு நடிக்கப்பெற்ற குறிப்பு[3] காணப்படுவதனால் எல்லாப் பாடல்களும் இசையுடன் பாடியமையை அறியமுடிகிறது. சந்திரிகை மேடையில் தோன்றும்பொழுது சிந்து பதங்கள்' பிடித்து[4] வத்த பாடல் வரிகள் அகச்சான்றாகப் புலப்படுத்துகின்றன.

---

3. சந்திரிகாகாசை விலாசம், ப 46.

4. மேலது, ப. 50.

நாடக நூல்

எட்டுக் கதாபாத்திரங்களைக் கொண்ட இந் நூல் சிறந்த தொரு நாடக நூலாக அமைந்திருக்கின்றது. பாக்களும் உரை நடையும் கலந்து படிப்போரும் காண்போரும் எளிதில் புரிந்து கொள்ளத்தக்க வகையில் இந் நாடகம் அமைந்திருக்கின்றது.

இறைவன் பெருமை

திருவாரூரில் கோயில் கொண்டுள்ள வன்மீகநாதரின் பெருமைகளும் ஏனைய தெய்வங்களைப் பற்றிய குறிப்புகளும் காணப்படுகின்றன.

சிவபெருமான் :- சாமகானப் பிரியன்: பக்தரின் மனத்தில் உறைகின்றவன்; கையினில் மான், மழு, சூலம். கபாலம் ஏந்தியவன் சகசி மன்னன் மனத்தில் இருப்பவன். தலைவி, தலைவனைத் தன்னுடன் சேர்க்க வேண்டும் என்று சிவபெருமானிடம், ''தாமரை மலர் கொண்டு அர்ச்சனை செய்து, தேனினால் அபிடேகம் செய்து, சந்தனத்தைச் சாத்தி, சாம்பிராணி தூபங்கள் காட்டி, உணவினைப் படைத்து'' வழிபட்டு முறையிடுகின்றாள்.

இந்திரன் :- இந்திரனை ஒத்த கணவன் வேண்டுமென்று தலைவி இறைவனிடம் வேண்டி நிற்கிறாள். சகசி மன்னனைப் பலவிடங்களில்இந்திரனோடு ஒப்பிட்டுக் கூறுகின்றார் ஆசிரியர்.

கிருட்டிணன் :- சுரதத்தில் கிருட்டிணனுடன் சகசி மன்னனை ஒப்பிடுகின்றார் ஆசிரியர்.

கமலை மாது :- திருவாரூர்க் கோயிலில் உறையும் அம்மன் 'கமலை மாது' என அழைக்கப்படுகின்றனள். கமலை மாதைப் பணிந்து வாழ்த்துகிறார் சகசி மன்னன். தலைவி இக் கமலை நாயகியின் அருளினாலேயே சகசியை மணமுடிக்கின் றாள்.

கலைமகள் :- ஆண்மைத் தன்மையுள்ள கல்வியில் கலைமகள் போலவும் இசையினில் சரசுவதி போலவும் சகசி இருக்கின்றார்.

இறையுடன் தொடர்புடையன :- ஆதிசேடன், கோயில், கைலாசமலை, வடவேங்கடமலை, பிம்பம், (மூர்த்தி) ஆகியன இறையுடன் தொடர்புடையனவாகக் காணப்படுகின்றன.

இரதி-மன்மதன் :- தலைவியின் அழகை இரதியுடனும் மன்மதனுடனும் ஒப்பிட்டுக் கூறுகின்றார் ஆசிரியர். சகசியின் உருவ அழகை முனிவரும். மாளவராசனும் மன்தமனுடன் ஒப் பிட்டுக் கூறுகின்றார், சந்திரிகை, சகசி மன்னனைப் பார்த்துப் பேசும்பொழுது, மன்மதனுடைய குரோதம் தீரும் வகையில் என்னுடனிருப்பாய்' என்று கூறுகின்றாள்.

சிவபெருமானால் உருவமில்லாதவனாக இருந்த மன்மத னைப் பற்றி ஆசிரியர் இந்நூலில் சகசி மன்னனின் அழகைக் கண்டு நாணமடைந்து உருவமில்லாதவனாக ஆனான் என்று கூறுகின்றார்.

உவமைகள்

மலர்கள், பறவைகள், மீன் ஆகிய இயற்கைப் பொருள் களைத் தலைவன், தலைவி ஆகியோரை ஒப்பிடுவதற்குப் பயன் படுத்தி இருக்கின்றார் ஆசிரியர். இவர்கள் தவிர, மன்மதன், இரதி. இந்திரன், பரமேசுவரன் ஆகியோரோடும் ஒப்பிட்டுரைக் கின்றார்.

இந் நாடகத்தில் இடம்பெறுகின்ற உவமைகள் பெரும் பாலும் கதாபாத்திரங்களோடு போல, ஒத்த ஆகிய உவம உருபுகளைக் கொண்டு ஒப்பிடுகின்ற முறையிலேயே ஆசிரியர் கையாண்டிருக்கின்றார்.

இயற்கை வளம் :- சகசி, சந்திரிகை ஆகிய இருவர் முகத் திற்கும் திங்களை உவமையாகக் கூறியிருக்கின்றார் ஆசிரியர். சகசியின் முகத்தைக் கண்டு வெட்கப்பட்டுச் சந்திரன் களங்க மடைகின்றான். சந்திரனின் ஒளி புறப்படுகின்ற எட்டாம்பிறை போன்றிருக்கின்றாள் சந்திரிகை. காதல் நோயில் வாடுகின்ற தலைவிக்குக் குளிர்ச்சி தரும் மதி சுடுகின்றது.

மலர்கள் :- தாமரை, அரவிந்தம், கதம்பம், முல்லை ஆகிய மலர்கள் கூறப்படுகின்றன. சந்திரிகை முகம் தாமரை மலராகவும் அவள் கை செந்தாமரை மலராகவும் அவள் புன் சிரிப்பு முல்லை மலராகவும் இருக்கின்றன. தலைவி, சிவபெருமானை அரவிந்த மலர்களால் அர்ச்சனை செய்கின்றாள்; தலை யில் கதம்பச் சரங்களைக் சூடி இருக்கின்றாள்.

பறவைகள் :— வண்டு, அன்னம், கிளி, குயில் ஆகிய பறவைகள் கூறப்படுகின்றன. சந்திரிகையின் நடை அன்னப் பறவை போன்றும் மொழி கிளி. குயில் ஆகிய பறவைகள் போன்றும் இருக்கின்றன. அழகிய கிளிகளும் குயில்களும் தன்னை ஏசுகின்றதாகக் கூறுகின்றாள் தலைவி. வண்டு தாமரை மலரில் உறைகிறது.

பிற :— தலைவியின் விழிகள் கெண்டை மீன் போன்றிருக்கின்றன. தலைவியை 'மான்' என ஆசிரியரும் தலைவி, தன் தோழியை 'மானே!' என்றும் அழைக்கின்றனர்.

ஏனையவை

வசனங்கள் :— நாடகத் தலைவன் சகசி மன்னனைத் தவிர ஏனையோர் வசனநடையிலும் பேசுகின்றனர். இந்த வசனங்கள் சகசி மன்னன் ஆட்சிபுரிந்த காலத்தில் நாடகத் தமிழ்ப் பேச்சு எவ்வாறு இருந்தது என்பதை அறிவதற்குச் சான்றுகளாகத் திகழ்கின்றன.

அணிகலன்கள் :- அந்தை, கொத்து முத்துவடம், பொன்னாபரணம், வண்ண வளைகள் ஆகிய அணிகலன்களைத் தலைவியும் மாணிக்கத்தைத் தலைவனும் அணிந்திருக்கின்றனர்.

ஆடைகள் :- சந்திரிகை, செங்காவிச் சேலை, சரிகையாடை ஆகியவற்றை அணிகின்றாள். தோழி சுகவாணி, சந்திரகாவிச் சேலையை அணிகின்றாள்.

மன்னர்கள் :- அங்கம், வங்காளம், கொங்கம், மச்சம், குர்ச்சரம், கேரளம், கௌவ்வீரம், கொங்கணம், சாளுவம்,

கல்யாணம், மகதம் ஆகிய நாடுகளுக்கு முனிவர் சென்று அந்தந்த நாட்டு மன்னர்களைக் கண்டு வருகின்றார்.

அரிச்சந்திரன், கர்ணன், மார்க்கண்டேயன், குபேரன், பீமன், விசயன், தருமன், சமுத்திரராசன், தசரத ரகுராமன் ஆகிய மன்னர்களின் பெருமையோடு சகசி மன்னனை ஒப்பிட்டுக் கூறுகின்றார் ஆசிரியர்.

சொற்கள் :- இந்தப்படிக்கு, கேளடி, சமுகம், யோசனை, வேணும் ஆகிய வழக்குச் சொற்கள் வசனநடையில் காணப் படுகின்றன. அறுபது வடமொழிச் சொற்களை வசனநடையில் ஆசிரியர் கையாண்டிருக்கின்றார். இது தவிரச் சலாம், சல்லா முரே, துரை, பராகு ஆகிய பிறமொழிச் சொற்களும் காணப் படுகின்றன

94 வழக்குச் சொற்களையும் 58 வடமொழிச் சொற்க ளையும் 8 அடுக்குமொழிச் சொற்களையும் பாடல்களில் ஆசிரியர் பயன்படுத்தியிருக்கின்றார்.

8

விஷ்ணு சாகராச விலாசம்

தஞ்சை மராட்டிய மன்னர் சகசியைப் (1684-1712) புகழ்ந்து பாடிய பல நூல்களுள் இந்நூலும் ஒன்று. திருமாலின் அவதாரமாகச் சகசி மன்னன் இந்நூலில் கூறப்படுகின்றார். திருமாலின் மனைவியர்களான இலக்குமி, பூமகள் ஆகிய இருவரும் பூவுலகில் சகோதரிகளாகப் பிறந்து சகசி மன்னனின் மனைவியர்களாக ஆகின்றனர். இந் நூலாசிரியர் பெயர் தெரியவில்லை. தஞ்சைச் சரசுவதி மகால் நூல்நிலையத்தில் காணப்படும் இந்நூலின் ஓலைச்சுவடி தெலுங்கு எழுத்தில் டி எடுக்கப் பெற்ற தமிழ் நாடகமாக இருக்கிறது.[1] வ. வேணுகோபாலன் இந்நூலைப் பதிப்பித்திருக்கிறார்.[2]

நூலமைப்பு

பதினான்கு கதாபாத்திரங்களைக் கொண்ட இந்நூல் இசைப்பாக்களாலும் இடையிடையே உரைநடை விரவப் பெற்றும் பின்வருமாறு அமைந்திருக்கிறது.

1.	தோடய மங்களம்	—	1
2.	மங்கள தரு	—	1
3.	விருத்தம்	—	1
4.	விநாயகர் தருவு	—	1
5.	தருவுகள்	—	27
6.	சம்வாத தருவு	—	3
7.	சரண தரு	—	1
8.	ஆனந்தக் களிப்பு	—	1
9.	தெலுங்கு தருவு	—	1
10.	சோபனம்	—	1
			38

1. தஞ்சைச் சரசுவதி மகால் நூல்நிலையச் சுவடி எண் 178/639.
2. வ.வேணுகோபாலன் (ப.ஆ.), 'விஷ்ணு சாகராச விலாசம்', ஐந்து தமிழிசை நாட்டிய நாடகங்கள், சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர், 1980, பக். 156-202.

நூல் நுதலிய பொருள்

சோழநாட்டிலுள்ள திருவீழிமிழலைக் கோயிலுக்குத் திருமால் (விஷ்ணு), பூமகள், திருமகள் ஆகியோர் மகாலிங்கரை வழிபட வருகின்றனர். செந்தாமரை மலர்களில் ஒவ்வொன்றாக எடுத்துத் திருமகள் கொடுக்கப் பூமகள் அவற்றை எண்ணிக் கொள்ளத் திருமால் அம் மலர்களால் பெருமானை அர்ச்சனை செய்கிறார். முடிவில் ஆயிரம் மலர்களில் ஒருமலர் குறைகிறது. அதற்காக வருந்திய திருமால் தம் கண்மலரைப் பெயர்த்து அர்ச்சனை செய்ய முற்படுகிறார். இந் நிகழ்ச்சியைக் கண்ட பெருமான் அவர்கள் பக்தியைப் புகழ்ந்து காட்சி கொடுத்து வேண்டிய வரங்களைக் கேட்கின்றார். அதற்குத் திருமால் 'சுவாமி! எப்போதும் தங்கள் பாதங்களை வழிபட்டுக் கொண்டிருக்கும் பேற்றை வரமாக அருளுங்கள்' என்று கேட்கிறார். மகிழ்ச்சியடைந்த மகாலிங்கர்,

> ''ஸ்ரீ மகா விஷ்ணுவே, நீர் கேட்டுக்கொண்டபடி வரம் தந்தோம். ஆனால் இந்தக் கலியுகத்திலே, நீர் ஸ்ரீ மகாவிஷ்ணு ரூபமாயிருந்து அருச்சித்தால் மட்டும் போதாது. தலங்கள் பலவற்றிலும் சிறந்தது சோழ நாட்டுத் தஞ்சைத்தலம். அத்தலத்திலே போசல குலத்தில் பிறந்த மன்னனான ஏகமகா ராசன் இருக்கிறான். அம் மன்னனுக்குப் புதல்வனாகப் பிறந்து முடி சூட்டிக்கொண்டு, பல சிவத்தலங்களுக்கும சென்று என்னை வழிபட்டு நலம் பெறுவீராக''[3]

என்று திருமாலுக்கும்

> ''ஸ்ரீ விஷ்ணு பத்னிகளே, சூரியவம்சத்தில் போசல குலத்திலே ஸ்ரீ மகாவிஷ்ணு அவதரிப்பார், நீங்கள் இருவரும் சந்திரவம்சத்திலே கலிங்க மன்னனுக்கும் புதல்வியராகப் பிறக்க வேண்டும். ஸ்ரீ மகாவிஷ்ணு அவதாரமான பின்பு உங்களுக்கும் அவருக்கும் திருமணம் செய்து வைக்கிறேன்''[4]

என்று திருமகள், பூமகள் ஆகிய இருவருக்கும் திருவருள் புரிகின்றார்.

---

3. விஷ்ணு சாகராச விலாசம், பக். 173–174.
4. மேலது, ப.176.

இதன்படித் திருமால் ஏகோசியின் புதல்வாராகச் சகசி மன்னராகவும், திருமகள். பூமகள். ஆகிய இருவரும் கலிங்க மன்னரின் புதல்வியராகவும் பிறந்து வளர்கின்றார்கள். சகசி மன்னர் பல சிவத்தலங்களுக்கும் சென்று பெருமானைப் போற்றி வணங்குகின்றார். கலிங்க மன்னரின் புதல்வியர்கள் இருவரும் திருமண வயதடைகின்றனர். அவ்வேளையில் திரிகால முனிவர் ஒருவர் கலிங்க மன்னரைச் சந்தித்து உமது புதல்வியரைத் தஞ்சைச் சகசி மன்னருக்கு விரைவில் மணம் செய்து வைக்க வேண்டுமென்று கூறுகிறார். அதற்கேற்ப அனைவரும் சகசி மன்னர் அரண்மனைக்குச் சென்று மன்னர் அனுமதி பெற்று மணம் செய்து வைக்கின்றனர். சகசி மன்னன் இருவருக்கும் மாலை இடுகின்றார். கலிங்கராசனின் புதல்வியர், சகசி மன்னனை வணங்கி மகிழ்ந்து பாடுகின்றார்கள். திருமணம் முடிந்து 'சோபனம்' பாடப்படுவதுடன் 'விஷ்ணு சாகராஜ விலாச கல்யாணம்' நிறைவுறுகிறது.

பாத்திரப் படைப்புகள்

பதினான்கு கதாபாத்திரங்கள் கொண்ட இந் நாடகத்தில் மகாவிஷ்ணு, திருமகள், பூமகள், சகசி மன்னன், கலிங்க குமாரிகள் இருவர் ஆகியோர் முதன்மைப் பாத்திரங்களாகவும் சூத்திரதாரன், கட்டியக்காரன், மகாலிங்க சுவாமி, கலிங்கராசன், சாரசாட்சி, திரிகாலஞானி, சின்னப்பண்டாரம், சகி ஆகியோர் துணைப் பாத்திரங்களாகவும் இடம்பெறுகின்றனர்.

மகாவிஷ்ணு :- விஷ்ணுதேவன், மாதவன், பெருமாள், பங்கயப்புயன் என அழைக்கப்பெறுகின்ற இவர் தம் வாகனமான கருடன்மீது ஏறித் துளசிமாலையைத் தோளிலணிந்து திருமகள், பூமகள் ஆகிய இருவருடன் மிழலையில் வீற்றிருக்கின்ற மகாலிங்கரை வழிபட வருகின்றார். ''ஆதியான சிவ சங்கரா! சுயம்புலிங்கமான சங்கரா! உலகமெங்கும் நிறைந்து வளர் சங்கரா!'' என்று போற்றிச் சிவபூசைக்கு வேண்டிய ஆயிரம் தாமரை மலர்களைப் பறித்து வரும்படித் தம் தேவியர்க்குக் கட்டளையிடுகிறார். அதற்கேற்ப இருவரும் மிழலை நீலகண்டரை வழிபடுவதற்கேற்ற மலர்களைப் பறித்து வருகின்றனர். ஒருவர் பூக்களை எடுத்துத் திருமாலிடம் கொடுக்கிறார்;

மற்றவர் அவற்றை ஒவ்வொன்றாக எண்ணிக்கொண்டு வருகிறார். இறுதியில் ஒருமலர் குறைகிறது. இதைக்கண்டு திருமால் தம்முடைய கண்மலரைப் பறித்து அர்ச்சிக்க நினைந்து பறிக்க முற்படும் வேளையில் சிவபெருமான் தம் தேவி பார்வதியுடன் எழுந்தருளி, ''விஷ்ணு தேவா! நீ வேண்டும் வரங்களைக் கேள்'' என்கிறார். அதற்கு, ''எந் நேரமும் உங்களுடைய பாதாரவிந்த அருச்சனை செய்துகொண்டு இருக்க வேண்டியதைத்தவிர வேறொன்றுமில்லை'' எனக் கேட்கிறார் திருமால். அவர் கேட்டபடி அருளிய சிவபெருமான் ''இந்தக் கலியுகத்தில் பூலோகத்திலே விஷ்ணு வடிவிலிருந்து அருச்சித்தால் மட்டும் போதாது; போசலக்குலத்தில் தஞ்சை ஏகராசாவின் பட்டத்தரசி தீபாம்பிகை குமரனாக அவதரித்துச் சங்கு சக்கரங்களைக் கைக்கொண்டு துட்ட நிக்கிரக சிட்ட பரிபாலனம் செய்துவர வேண்டும்'' என்று கூறுகின்றார். அதன்படித் திருமால் இரண்டாம் சகசி மன்னராகப் பிறப்பெடுத்து வளர்ந்து வருகிறார்.

திருமகளும் பூமகளும் :- இவர்கள் இருவரும் சேர்ந்தே வருகின்றனர். நூலின் தொடக்கத்தில் திருமால் இவ்விருவருடன் வீழிநாதரை வழிபட வருகின்றார். சிவபூசை செய்வதற்கு வேண்டிய மலர்களை இவர்கள் இருவரும் பறித்துவருகின்றனர். இருவரும் தங்களுக்குள் உரையாடிக் கொண்டு வண்டு கோதின பூவைத் தள்ளிப் பார்த்து மலரப்படாத அலர்ந்த மலர்க்காம்பைக் கிள்ளியெடுத்து நன்மலர்களைப் பறித்து வருகின்றனர். பூ ஒன்று குறைந்ததைக் கண்டதும் இருவரும், ''உலகளந்த பெருமாளே! எமைப் பொறுத்தருள வேண்டும். செந்தாமரைப் பூக்கள் ஆயிரத்தில் குறையாமல் எடுத்தோம். எந்த வகையாய் மோசம் வந்ததோ தெரியவில்லை. எங்களை அறிந்து வந்ததல்ல. எனவே குறைந்த செந்தாமரை மலர்க்கு மெய்விழி மலர் தருகிறோம்; அதை வாங்கி அர்ச்சனை செய்வீர்'' என்கின்றனர்.

சிவபெருமான் தம் தேவியுடன் எழுந்தருளித் திருமாலுக்கு வரம் அருளிய பின்னர் இவர்களைப் பார்த்து ''நீங்கள் இருவரும் சந்திரகுலத்தில் கலிங்கராசனிடத்தில் மகள்களாகப் பிறவி எடுங்கள். அதன்பிறகு உரிய பருவம் வருப்பொழுது அங்கே

பிறந்திருக்கிற விஷ்ணுவுக்கும் உங்களுக்கும் கல்யாணம்பண்ணி விடுகிறோம் சுகமாக இருங்கள்'' என்று கூறுகின்றார்.

சகசி மன்னன் :- இம் மன்னன் கூற்றில் எவ்விதப் பாடல்களும் உரைநடையும் காணப்படவில்லை மற்றவர்களின் கூற்றிலேயே இம் மன்னன் தொடர்பான செய்திகளை அறிய முடிகின்றன.

சூரியகுலத்தில் போசலகுலத்திலே ஏகமகாராசாவின் பட்டத்தரசி தீபாம்பிகையின் மகன். திருமாலின் அவதாரமாகச் சகசி மகாராசா பிறந்திருக்கிறார். பல சிவத்தலங்களுக்குச் சென்று வழிபாடு செய்திருக்கிறார். எட்டுத்திசை போற்ற அரசாட்சி நடத்தியிருக்கின்றார். கொடையினில் கர்ணன் போன்றவராக இருக்கின்றார்.

கலிங்ககுமாரிகள் :- சந்திரகுலத்தைச் சார்ந்த கலிங்க நாட்டு அரசன் மகள்களாகத் திருமகளும் பூமகளும் பிறக்கின்றனர். கிளி போல வளர்ந்த இவர்கள் உரிய மணப்பருவம் அடைந்தபொழுது கலிங்கராசன் இவர்களுக்குரிய அரசனைத் தேர்வு செய்வதற்காக அரசவையைக் கூட்டியிருக்கிற பொழுது திரிகாலஞானி வந்து. ''இத் தோகைமார்கள் இருவரும் திருமகள், பூமகள் ஆகியோரின் அவதாரமாவர் எனவே விஷ்ணுவின் அவதாரமாசத் தோன்றியிருக்கிற சகசிராசனுக்கே இவர்களைத் திருமணம் செய்து கொடுக்க வேண்டும்'' என்று கூறுகிறார். அதன்படி அனைவரும் சகசிராசனைச் சந்திக்கின்றனர். பெற்றோர்கள் இவர்களைப் பற்றிச் சகசி மன்னரிடம் எடுத்துக் கூறுகின்றனர்.

இப் பெண்கள் சகசி மன்னரை வணங்கி, ''மங்கைப் பருவமடைந்த எங்களை மணந்து கொள்வீர்;நாங்கள் இத்தனை நாள்வரை பூசனை புரிந்து வந்தோம்; சங்கரனை நினைந்து சிவ பூசை செய்தோம்; உன்னைக் கூடித்தழுவவும் உன் மெல்லிய பாதம் பிடிக்கவும் வெற்றிலைச்சுருள் மடிக்கவும் விரும்புகிறோம்; உன்மீது கொண்ட மோகத்தால் எங்கள் குரும்பைத்தனமும் இளநீர் போல் ஆச்சுது; இளந்தையலராகிய எங்கள் உடம்பு இளைத்தது; உம்முடன் மஞ்சத்தில் இரவுபகல் விளையாடவே

மனது விரும்புது; இரதி மன்மதனைப் போலவே சுகமாய் எங்கள் ஆசையைத் தீர்த்து வைப்பாய்; எங்கள் இதழை விண்டு மதுவை உண்டு களித்து முலையிரண்டையும் வருடி வண்டு போல துவளச் செய்வாய்'' என்று தாங்கள் அடைந்திருக்கின்ற காமத்தை வெளிப்படுத்துகின்றனர்.

இந் நாடகத்தின் முதற்பகுதியில் ஆசிரியர் திருமால், திருமகள், பூமகள் ஆகியவர்களைப் பற்றிக் கூறியிருக்கின்றார். பிற்பகுதியில் இம் மூவருடைய அவதாரங்களாகச் சகசி மன்னர். கலிங்ககுமாரிகள் இருவர் ஆகியோரைக் குறிப்பிடுகின்றார். சகசி மன்னர் காலத்தில் எழுதப்பட்ட இந் நாடகத்தில் மன்னரை இறைவனுடைய நிலைக்கு உயர்த்திக் கூறுவதற்காகத் திருமாலின் அவதாரமாகச் சகசியைக் கூறியிருக்கின்றார். இப்பூவுலகில் சகசி மன்னராகப் பிறப்பெடுத்த திருமாலைத் திருமகள், பூமகள் ஆகிய இருவரும் கலிங்ககுமாரிகளாகப் பிறப்பெடுத்துச் சகசி மன்னரை மணமுடித்து வைப்பதாகக் கற்பனை செய்து பாடியிருக்கிறார்.

சூத்திரதாரன் :- நாடகத்தை அவையோர்க்கு அறிமுகம் செய்து விளக்கம் கொடுத்து இந் நாடகத்தை நடத்துகின்றவனாக வருகிறான். இவன் பேச்சுகள் முழுவதும் உரைநடையிலேயே அமைந்திருக்கின்றன. திரிகாலஞானி, சின்னப் பண்டாரம் ஆகிய இருவருடனும் 'நாடகப்பாணி'யில் வசனம் பேசுகிறான் நாடகத்தைத் தொடர்ச்சி விட்டுப் போகாமல் இருத்தற்பொருட்டு இடையிடையே வசன நடையில் கதையை விவரித்துச் சொல்கிறான்.

கட்டியக்காரன் :- அவையோர்க்கு முதலில் இக் கட்டியக்காரனைச் சூத்திரதாரன் அறிமுகம் செய்து வைக்கிறான். நாடகத்தைத் தொடங்கி வைப்பதுடன் இவன் பணி முற்றுப்பெற்று விடுகிறது.

மகாலிங்க சுவாமி :- திருவீழிமிழலைத் தலத்தில் கோயில் கொண்ட சிவபெருமான் திருப்பெயர் 'வீழிநாத மகாலிங்கசுவாமி' யாகும். நாடகத்தின் முற்பகுதியில் இடம்பெற்றிருக்கின்றார். சிவசங்கரன், சுயம்புலிங்கம், மிழலை நீலகண்டன், பரமேசுவரன், ஈசன், மகாதேவன், மிழலைநாதன், புலித்தோலுடுத்திய

மூர்த்தி, கங்கை மணவாளன், திரிசூலன் ஆகிய பெயர்களால் அழைக்கப்படுகின்றார்.

சுயம்புலிங்க மூர்த்தியாக விளங்கும் இப் பெருமானைத் திருமால், பூமகள் ஆகிய இருவருடனும் வந்து ஆயிரம் செந்தாமரை மலர்களால் அர்ச்சித்து வழிபடுகின்றார். வஞ்சனை பண்ணாமல் கருத்தில் ஒரே சிந்தனையுடன் ஒவ்வொரு மலராக எடுத்துத் திருமால் வழிபடுகின்றார். ''ஓம் சிவாய நம :, பினாகினே நம;, விஷ்ணு வல்லபாய நம;, கைலாச வாஸினே நம:, சாம்ப சிவாய நம:'' என்று சொல்லிப் பூசனை புரிகிறார். சிவ பெருமான் இவர் பக்தியைச் சோதிக்கக் கருதி ஆயிரம் மலர்களில் ஒருமலரை மறைத்து விடுகின்றார். ஆயிரத்தில் ஒரு மலர் குறைந்தது கண்டு திருமாலும் மிகவும் மனம் வருந்தி அம் மலருக்கு ஈடாகத் தம் கண்மலர் ஒன்றைப் பறித்து அர்ச்சிக்கவிருக்கும் வேளையில் பெருமான், பார்வதிதேவியுடன் சேர்ந்து எழுந்தருளிக் காட்சி கொடுத்து அவருக்கு வேண்டிய வரங்களைக் கேட்கிறார். இதைக் கேட்ட திருமால்

''சரணம் என் சுவாமி
 சங்கரா தேவ சரணமென் — சுவாமி
சரணம் சரணம் சுவாமி
 சவுந்தரி சிவகாமி
மருவ மகிழ் விநோதா மகாதேவா
 மிழலை தாதா (1)

நினைத்த நியம மீடேற்றி
 நிறுத்த வந்தீர் மெய்தோற்றிப்
புனைந்தீர் சடையி லகத்தி
 புலித்தோ லுடுத்திய மூர்த்தி''[5]

என்று போற்றி வணங்கி ''எந்நேரமும் உங்களுடைய பாதாரவிந்த அருச்சனை செய்துகொண்டு இருக்கவேண்டும்'' என்கின்றார். இவ் வரத்தை அருளிய பெருமான் தஞ்சைப் போசலக் குலத்தில் சகசி மன்னராகப் பிறப்பெடுத்துப் பல சிவத்தலங்களுக்குச் சென்று வழிபட வேண்டும் எனக் கட்டளையிடுகின்

5. விஷ்ணு சாகராச விலாசம், பக். 171-172.

றார். அதே போன்று திருமகள், பூமகள் ஆகிய இருவரையும் கலிங்கராசனின் மகள்களாகப் பிறந்து சகசி மன்னரைத் திரு மணம் செய்யவேண்டுமென்று வரங்கள் கொடுக்கிறார்.

கலிங்கராசன் :— கலிங்கநாட்டு மன்னன் சூத்திரதாரன், ''முன் சொன்னபடிக்கு இலக்குமி தேவி-பூமி தேவி இருவரும், சந்திரவமிசனான கலிங்கராசனிடத்திலே கன்னிகை ரூபமாய்ப் பிறந்தாள். அவள் பிரவுடையானாள் என்று கல்யாணம் பண்ண வேண்டி ஆலோசனை பண்ணுவதற்குக் கலிங்கராசன் தன்னு டைய ஸ்ரீ சமேதனாகத் தன சபைக்கு வருகிற மார்க்கம பராக்கு!'' என்று இம் மன்னனை அவையோர்க்கு அறிமுகப் படுத்துகிறான். கலிங்கராசனும் தன் மனைவியுடன் அவைக்கு வருகிறார்.

இம் மன்னனைக் கருநாடகர், பாஞ்சாலர், தெலுங்கர், கூடகர், வங்கர், சீனர் ஆகியோர் போற்றுகின்றனர். தம் பெண்களுக்கு மணம் முடிக்க வேண்டித் தன் மனைவியிடம் ஆலோசனை கேட்கிறார். இந்நேரததில் திரிகாலஞானி வரு கிறார். அவரிடமும் எந்த நாட்டு மனனனுக்குத் தம் பெண் களைத் திருமணம் செய்து கொடுக்கலாம் என்று ஆலோசனை கேட்கிறார். இருவருககும் இடையில் நீண்ட உரையாடல் நடக்கிறது. இவ்வுரையாடல வசனநடையில் இருக்கிறது. முனிவர், திருமால் சகசியாகப் பிறப்பெடுத்திருப்பதையும் திருமகள், பூமகள் ஆகிய இருவரும் இம் மன்னன் மகள்களாகப் பிறப்பெடுத்திருப்பதையும் குறிப்பிடுகிறார். பிறகு மன்னர் வேண்டுகோட்கேற்ப முனிவர் அனைவரையும் சகசி மன்னரிடம் அழைத்துச் சென்று மணம் பேசி முடிக்கிறார்.

கலிங்கராசன் அளவுக்கு அதிகமான பரிசனப் பொருள்க ளோடு தஞ்சைச் சகசேந்திரன் சபைக்குச் செல்கின்றார். ''திருமால் அவதாரமாக இருக்கின்ற மன்னனே! இந்தப் பெண் கள் இருவரையும் திருமணம் செய்து கொள்ள வேண்டும்'' என்று கேட்கிறார். அதன்பிறகு தம் பெண்களுக்கு அறிவுரை கூறுகின்றார்.

சாரசாட்சி :- கலிங்கராசனின் பட்டத்தரசி. இவள் தன் கணவருடன் அரசவைக்கும் அதன்பின்னர்ச் சகசி மன்னனின் அவைக்கும் வருகிறாள். சகசி மன்னரைப் பார்த்து, ''இந்த இரு பெண்களையும் வளர்த்தது மட்டும் நான்; இவர்கள் தனித்து ஒருநாளும் இருந்ததில்லை; முன்கோபம் இல்லாத வர்கள்; இவர்கள் உமக்காகவே பிறந்தவர்கள்; கமலை மாதின் அருளினாலே இப் பெண்களைக் கைவிடாமல் காத்தும் நிமிட நேரங்கூடப் பிரிந்திருக்காமலும் நல்ல முறையில் வைப்பது உமது கடன்'' என்று வேண்டுகிறாள். அதன்பிறகு பெண்கள் இருவரும் சகசி மன்னருக்கு மாலையிடுகின்றனர்.

திரிகாலஞானி :- சிவபெருமான் ஆக்ஞையின்படிச் சகசி மன்னரைப் பற்றிக் கலிங்கராசனுக்கு விவரம் கூறுகின்ற இடத்தில் சூத்திரதாரனால் அவையோர்க்கு அறிமுகம் செய்து வைக்கப்படுகிறார்.

''விரித்த சடையும்
புலித்தோ லாடையும்
வெண்ணீ றணிந்த
மெய்யு மாகித்
திரித்துச் சப
தாவடமும் கொண்டு''[6]

இத் திரிகாலஞானி வருகின்றார்.

இம் முனிவருக்கும் சூத்திரதாரனுக்கும் இடையில் உரை யாடல் நடக்கிறது. இதில் முனிவர்,

''தாம் இமயமலையிலிருந்து வருவதாகவும் பிராதக் காலம், மத்யான்னகாலம், சாயங்காலம், நிராகாரம் ஆகிய வற்றில் சிறந்திருப்பதாகவும் தேவாரம், திருச்சிற்றம்பலம் போன்றவற்றில மிக்க பயிற்சி உடையவராக இருப்பதாகவும் தம்மைப்பற்றிக் கூறுகின்றார். மேலும் சிவபெருமான் புகழினை ''வாசிதீரக் காசு நல்கினீர்; மாசில் மிழலையீர்; தாயும் நீ; தந்தையும் நீ'' எனப் பாடுகின்றார்.

6. விஷ்ணு சாகராச விலாசம், ப.178.

அதன்பின்னர் இம் முனிவர், கலிங்கராசனிடம் சகசி மன்னரைப் பற்றிக் கூறி அனைவரையும் அழைத்துக் கொண்டு தஞ்சை அரண்மனைக்கு வருகிறார்.

சின்னப்பண்டாரம் :- திரிகால ஞானியின் சீடர்களில் ஒருவர். சூத்திரதாரனுக்கும் சின்னப்பண்டாரத்திற்கும் இடையில் நடக்கும் உரையாடல்[7] அவையினரை மகிழ்விக்கும் விதத்தில் நகைச்சுவையுடன் இருக்கிறது.

சூத்திரதாரன் : ஏ, சின்னப்பண்டாரம், எங்கேயிருந்து வந்தாய் ?

சின்னப்பண்டாரம் : அந்த இடுக்கிலேயிருந்து இந்த முடுக்கில் புறப்பட்டேன்.

சூத்திரதாரன் : உன்னுடைய மடம் எங்கே ?

சின்னப்பண்டாரம் : சோத்துப்பானை யண்டையிலே.

சூத்திரதாரன் : உன் மடம், உன்னுடைய பேரு என்னடா?

சின்னப்பண்டாரம் : நம்முடைய பேரு குட்டிப்பண்டாரம்.

சூத்திரதாரன் : உனக்குச் சுவாமி பேரிலே பாட்டுக்கள் வருமா ?

சின்னப்பண்டாரம்: சகல வித்தைகளும் நம்மிடத்திலேதான் இதோபதேசம்.

சூத்திரதாரன் : பாட்டுப் பாடுடா!

சின்னப்பண்டாரம் ; நேசமாகவே

தோசை மீதினில்
ஆசை யாகினோம் - ஒரு
காசு யில்லையே

சூத்திரதாரன் : பளா, பளா மெத்த நன்றாயிருக்கின்றதே!

மேலும் காவியம், கணக்கு, சொல், சொற்கட்டு, இசை, தொங்கள் முதலானவற்றில் சிறந்திருப்பதாகக் கூறுகிறான். பல வேடிக்கையான பாட்டுகளையும் தெலுங்குப்பாட்டுகளையும் பாடுகிறான்.

---

7. விஷ்ணு சாகராச விலாசம், பக். 182-183.

சகி :- கலிங்கராசகுமாரிகள் இருவரின் தோழியாகச் 'சகி' வருகிறாள். திரிகாலஞானி, சகசி மன்னரை மணப்பதற்குரிய ஆலோசனையைக் கலிங்கராசனிடம் கூறுகிறார். அப்பொழுது கலிங்கராச குமாரிகளை அவைக்கு அழைத்து வருகின்ற பணியைச் சகி ஏற்று அவர்களை அழைத்து வருகிறாள்.

இன்னிசை நாட்டியப் பனுவல்

இசை நாட்டியப் பாக்கள் 'தருவு' என்ற சொல்லால் குறிக்கப்படுகின்றது. விநாயகர் தருவு, சம்வாத தருவு, சரண தருவு, தெலுங்கு தருவு போன்ற தருவுகள் காணப்படுகின்றன.

சில பாக்கள் தோடி, நாட்டை ஆகிய இராகங்களிலும் சில ஆனந்தக்களிப்பிலும் பாடப்பட்டிருக்கின்றன.

நாடகம் தொடங்கும்பொழுது நாட்டை இராகத்தில் சம்பைத் தாளத்துடன் 'தோடய மங்களம்' பாடப்படுகிறது. அடுத்து, 'மங்கள தரு' இடம்பெறுகிறது. இவ்விரண்டும் முடிந்தவுடன் சூத்திரதாரன் அவை மேடையில் தோன்றி,

''திருவீழி மிழலை தன்னில் சிவனடி பணிந்து போற்றி
வரவிஷ்ணு சகசிராச வரவிலா சத்தைப் பாட
அருள்புரி கமலா லயம்மன் அளித்தபா லகனா ரூரில்
கருணைசேர் விட்ட வாசல் கணபதி காப்புத்
தானே''[8]

என்று விருத்தத்தில் காப்புப்பற்றி அறிமுகப்படுத்துகிறான். அதன்பிறகு இடம்பெறும் 'விநாயகர் தரு'வில் மூன்று பாடல்கள் பாடப்படுகின்றன.

திருமகள்—பூமகள், கலிங்கராசன்—திரிகாலஞானி ஆகியோர் தங்களுக்குள் உரையாடும் விதத்தில் 'சம்வாத தருவு'ப் பாக்கள் இருக்கின்றன.

நூலினிறுதியில் 'மங்களம்' பாடப்படுகின்றது.

நாடக நூல்

பதினான்கு கதாபாத்திரங்களைக் கொண்ட இந் நாடக நூலில் 'உரையாடல்' சுவைமிக்கதாக அமைந்திருக்கிறது.

8. விஷ்ணு சாகராச விலாசம், ப. 160.

திருமகள்—பூமகள், திருமால்—சிவபெருமான், கலிங்க ராசன்—திரிகாலஞானி ஆகியோர் பேசும் உரையாடல்கள் பாக்களில் இருக்கின்றன. திருமால்—சிவபெருமான், திருமகள், பூமகள்—சிவபெருமான், திரிகாலஞானி—சூத்திரதாரன், சூத்திர தாரன்—சின்னப்பண்டாரம் ஆகியோர் பேசும் உரையாடல்கள் வசனநடையிலும் இருக்கின்றன. இவற்றுள் சூத்திரதாரனும் சின்னப்பண்டாரமும் பேசும் உரையாடல் நகைச்சுவையை மிகு விப்பதாக அமைந்திருக்கிறது.

இறைவன் பெருமை

சிவபெருமான், திருமால், விநாயகர், முருகன், பார்வதி, திருமகள், பூமகள் ஆகியோர் இந் நூலில் பேசப்படுகின்றனர். திருமால், திரிகாலஞானி ஆகிய இருவரும் சிவபெருமான் பெருமைகளைப் போற்றுகின்றனர். ''ஆதிமூர்த்தியானவர்; சுயம்பு லிங்க வடிவில் திருவீழிமிழலையில் வீற்றிருக்கின்றார்; சோதி யாய் வளர்கின்றவர்; உலகமெங்கும் நிறைந்திருக்கிறார்; இடையில் புலித்தோலை உடுத்தியிருக்கறார்; தலைமாலை, கொன்றை, அம்புலி, அரவு ஆகியவற்றை அணிந்திருக்கிறார்; கங்கையை மணந்து தலையில் சூடியிருக்கிறார்; இசையிற் சிறந்தவர்; வாசி தீரக் காசு நல்கியவர்; முப்புரங்களை எரித்தவர்; கலை மான், மழு ஆகியவற்றைக் கைகளில் ஏந்தியிருக்கிறார்; வெள்ளை விடையினை உடையவர்; காலன் உடல் நடுங்க அவன் விலாவில் உதைத்தவர்; பிள்ளைக்கறியினை உண்டவர்; ஐந்தெழுத்தாக நின்றவர்; நஞ்சை அமுதமாக உண்டவர்; பஞ்சசரனை எரித்தவர்; ஆரூர்ப் பரவைக்குத் தூது சென்றவர்'' என்று சிவபெருமான் பெருமைகள் பேசப்படுகின்றன.

கருடவாகனத்தில் ஏறித் துளசிமாலை யணிந்து சிவபூசை செய்வதற்காகத் திருமால் திருவீழிமிழலைக்கு வருகிறார். தாழ் வில்லா மலர்தரும் தாருகவனத்தில் வாழும் முனிவர்களை மோகினி வடிவில் மயக்கிய இத்திருமால் வீழிமாநகரில் உறையும் அண்ணலை நாள்தோறும் வழிபாடு செய்கிறார். அரி, ஆழியான், விஷ்ணு, மாதவன், பெருமாள் என்று பல்வேறு பெயர்களால் திருமால் அழைக்கப்படுகின்றார்.

தொந்திப்பிள்ளை, முருகனைப் பெற்றெடுத்தவன் சிவ பெருமான் என்று விநாயகரும் முருகனும் கூறப்படுகின்றனர். திருமாலுக்குக் காட்சி கொடுக்கும்பொழுது சிவபெருமான். பார்வதி தேவியுடன் எழுந்தருளுகின்றார். திருமகளும் பூமகளும் திருமாலுடன் இருந்து சிவபூசை செய்வதற்கு உறுதுணையாக இருக்கின்றனர்.

புராணக் கதைகள்

புலித்தோலுடுத்தியது. கங்கையைச் சூடியது, முப்புரமெரித்தது, மான் மழு தாங்கியது, காலனை உதைத்தது. யானையை உரித்தது, காளியை வென்றது, அடிமுடி தேடியது, நஞ்சுண்டது, பஞ்சசரனை எரித்தது ஆகிய புராணக் கதைகள் இடம்பெற்றிருக்கின்றன. இத்தகைய வீரச்செயல்களைச் செய்தவன் சிவ பெருமான் என்று புகழும் விதத்தில் இக் கதைகள் ஆசிரியரால் கையாளப்பட்டிருக்கின்றன.

உவமைகள்

'போல' எனும் உவமவுருபில் சில உவமைகள் இடம்பெற்றிருக்கின்றன. 'எள்ளுக்குள் எண்ணெய் போலச் சங்கரா!'[9] என்று சிவபெருமான் புகழப்படுகின்றார்.

கலிங்கராசகுமாரிகள் மணப்பருவமடைந்ததைக் கூறவந்த கலிங்கராசன்,

''அஞ்சுகம் போல் பெண்கள்
அரசனுடன் மகிழ்ந்து
பஞ்சணை மேல் சேரப்
பக்குவ மானார்''[10]

என்கிறான்.

'மார்க்கண்டன் போல வாழவேண்டும்'[11] என்று திரிகாலஞானி வாழ்த்துகிறார்.

9, விஷ்ணு சாகராச விலாசம், ப. 162.
10. மேலது, ப. 178.
11. மேலது, ப. 181.

சாரசாட்சி தன்னுடைய இரு மகள்களைப்பற்றிச் சகசி யிடம் கூறுகின்றபொழுது ''ஆலையில் கரும்புரசம் போலச் சுவை குறையாதவர்கள்''[12] என்கிறாள்.

கலிங்கராசகுமாரிகள் இருவரும் சகசி மன்னருக்கு மாலை யிட்ட பிறகு சகசி மன்னரிடம் சொல்லுகின்றபொழுது, ''எங் களுடைய குரும்பு போன்ற தனங்கள் இப்பொழுது இளநீர் போல ஆயிற்று; இரதியும் மன்மதனும் சேர்ந்து இனிதாக வாழ்வது போல நாமும் வாழ்வோம்; எங்கள் முலையிரண்டையும் வருடி வண்டுபோல் துவண்டு அலைந்திருக்கும்படிச் செய்ய வேண்டும்''[13] என்று தாங்கள் கொண்டிருந்த காமமயக்கத்தை வெளிப்படுத்துகின்றனர்.

ஏனையவை

சம்பந்தருக்காக வாசிதீரக் காசு நல்கியது, சிறுத்தொண் டருக்காகப் பிள்ளைக்கறியுண்டது, சுந்தரருக்காக ஆரூர்ப் பர வைக்குத் தூது சென்றது ஆகிய திருமுறை தொடர்பான வரலாற்றுச் செப்திகளைக் கூறிச் சிவபெருமானைப் போற்று கின்றார் ஆசிரியர்.

தொங்கலெனும் காதணி, அந்தை எனும் காலணி ஆகிய இரு அணிகலன்கள் கூறப்படுகின்றன

திருமகள், பூமகள், கலிங்கராசகுமாரிகள் ஆகியோர் மானிடருடன் ஒப்பிட்டு அழைக்கப்படுகின்றனர்.

ஆரூர், திருவையாறு, குத்தாலம், இடைமருதூர், நீடூர், புகலூர், திருநீலக்குடி, குடந்தை, திருமங்கலக்குடி, மாந்துறை, பனந்தாள், திருக்கடவூர், மாயவரம், திருப்பாம்புரம், மறைக்- காடு, வேளூர், திருத்துறைப்பூண்டி, வெண்காடு, ஆம்பல், வாளூர், திருநறையூர், திருவாலம்பொழில், வழுவூர், மாகாளம், செங்காடு, திருமருகல், கொறுக்கை, நாகை, திருக்குவளை, சுவாமிமலை, நீலமலை, வீழிமிழலை, ஆகிய முப்பத்திரண்டு

12. விஷ்ணு சாகராச விலாசம், ப. 193.
13. மேலது, பக். 198, 199

தலங்களுக்கும் சென்று இறைபுகழைப் போற்றிப் பணிந்து வழிபாடாற்றும்படிச் சிவபெருமான் திருமாலுக்கு வரம் நல்குகிறார்.[14]

வேணும் போச்சு, இருக்குது, பேரு, எண்ணிக்கோடி (எண்ணிக்கொள்). பாடுடா, நன்னாச்சு முதலான பல சொற்கள் பேச்சு மொழிச் சொற்களாகவும் அஷ்டநாகம், புஷ்பதூளி, விஷ்ணு, லக்ஷ்மிதேவி, சந்தோஷம், நமஸ்காரம், பட்டமகிஷி, ஸ்தலம், பத்னி, பர்த்தா. பாரியை. பக்ஷம், ஹிமோத்பர்வதம் முதலான சொற்கள் வடமொழிச் சொற்களாகவும் சிவ சிவ, சரணம் சரணம். பளா பளா. ஒருத்திக்கொருத்தி, தினம் தினம், வரவர, பரிந்து பரிந்து ஆகிய ஏழு சொற்கள் அடுக்குமொழிச் சொற்களாகவும் 'இரவு பகல்' எனும் சொல்லும் இந்நூலில் இடம் பெற்றிருக்கின்றன. இவற்றுள் வடமொழிச் சொற்களே மிகுதியாக ஆசிரியரால் கையாளப்பட்டிருக்கின்றன. 'லக்ஷ்மிதேவி' என்றும் 'இலக்குமிதேவி' என்றும் 'ஸ்ரீ' என்றும் 'சிரீ' என்றும் ஆசிரியர் பயன்படுத்தியிருக்கின்றார்.

14. விஷ்ணு சாகராச விலாசம், பக். 173-174.

(இ) நொண்டி நாடகங்கள்

கி. பி. பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டுகளில் எழுந்த நாடக வகைகளில் இந் நொண்டி நாடகமும் ஒன்றாகும். நகைச்சுவைக்கும் எள்ளல் சுவைக்கும் இந் நாடகவகை இடந்தருகிறது. நொண்டி ஒருவன் தன் கடந்த கால வாழ்க்கை நிகழ்ச்சிகளை இசைப்பாடலில் பாடி நடித்துக் காட்டுவதாக இந்நொண்டி நாடகம் அமைந்திருக்கிறது இது 'ஒற்றைக்கால் நாடகம்' என்றும் அழைக்கப்பட்டது.[1]

நொண்டி நாடகங்கள் வெண்பாவும் ஆசிரியப்பாவும் இடையிடையே கலந்துவரச் சிந்து, ஆனந்தக்களிப்பு என்ற பாவினங்களால் ஆனவையாகத் திகழ்கின்றன யாப்பருங்கலக் காரிகை போன்ற நூல்களில் இந் நாடகங்களுக்குரிய செய்யுள் இலக்கணங்கள் காணப்படவில்லை. இசையோடு பாடும் வகையில் கவிஞர்களது கற்பனையில் தோன்றிய புதியவகைச் சிந்துப் பாடல்கள் அக் காலத்து மக்களால் பெரிதும் விரும்பி வரவேற்கப்பட்டிருக்கின்றன.

நொண்டிச் சிந்து வகையைச் சார்ந்த இந்த நொண்டி நாடகம் தனிநிலைக் கூறாக அமைந்திருக்கிறது. ஒருவன் தீய வழிகளில் நடந்து ஒழுக்கம் கெட்டுப் பரத்தையிடம் உறவு கொண்டு இறுதியில் அகப்பட்டுக் கால் இழந்து கடவுளை வழிபட்டு இழந்த தன் காலை மீண்டும் பெறுவதே நொண்டி நாடகத்தின் பொதுக் கருவாகும்.

கந்தசாமிப்புலவர் எழுதிய 'திருச்செந்தூர் நொண்டி நாடகம்' முதன்முதல் தோன்றிய நொண்டி நாடகமாகும். இதன்பின்னர்ப் பல நொண்டி நாடகங்கள் பலரால் எழுதப்பட்டிருக்கின்றன. பொதுவாக எல்லா நொண்டி நாடகங்களும் ஒரே மாதிரியான கதைக் கருவையே கொண்டிருக்கின்-கின்றன. ஆனால் ஒன்றிரண்டு நாடகங்களில் சிற்சில வேறுபாடுகள் அமைந்திருப்பதையும் காணமுடிகின்றன.

---

1. சக்திப்பெருமாள், தமிழ் நாடக வரலாறு, வஞ்சிக்கோ பதிப்பகம், மதுரை, 1979, ப.172.

இதுவரை வெளிவந்ததாகக் கருதப்படும் நொண்டி நாடகங்கள் வருமாறு :

1. அகிலாண்டேசுவரி நொண்டி நாடகம் — ?
2. அவினாசி நொண்டி நாடகம் — குழந்தைக்கவுண்டர்
3. ஆதிமூலேசர் நொண்டி நாடகம் — மாரிமுத்தாப்பிள்ளை
4. இல்லற நொண்டி நாடகம் — ஆணல்.சதாசிவம்
5. கருவூர் நொண்டி நாடகம் — ?
6. குளத்தூர் ஐயனார் நொண்டி நாடகம் — மாரிமுத்தாப்பிள்ளை
7. குன்றக்குடி நொண்டி நாடகம் — ?
8. சாத்தூரரப்பன் நொண்டி நாடகம் — ?
9. சாத்தூர் நொண்டி நாடகம் — ?
10. சாரங்கபாணி நொண்டி நாடகம் — சீனிவாச ஐயங்கார்
11. சீதக்காதி நொண்டி நாடகம் — ?
12. செந்தில் வேலவன் நொண்டி நாடகம் — ?
13. ஞான நொண்டி நாடகம் — வேதநாயகசாத்திரி
14. திருக்கச்சூர் நொண்டி நாடகம் — மதுரகவிராயர்
15. திங்களூர் நொண்டி நாடகம் — ?
16. திருக்குருகூர் நொண்டி நாடகம் — ?
17. திருச்செந்தூர் நொண்டி நாடகம் — கந்தசாமிப்புலவர்
18. திருப்பழனி நொண்டி நாடகம் — நாராயணபிள்ளை
19. திருப்புல்லாணி நொண்டி நாடகம் — வீரராகவசாமி
20. திருமலை நொண்டி நாடகம் — மன்னார் பெருமாள் புலவர்
21. திருவிடைமருதூர் நொண்டி நாடகம் — அனந்தபாரதி ஐயங்கார்
22. தில்லைவிடங்கன் ஐயனார் நொண்டி நாடகம் — மாரிமுத்தாப்பிள்ளை

23. நொண்டி நாடகம் — சின்னத்தம்பி
24. நொண்டி நாடகம் (இலங்கை) — சீத்தாம்பிள்ளைப் புலவர்
25. புல்வயல் குமரேசர் நொண்டி நாடகம் — ?
26. பொக்கவாயன் நொண்டி நாடகம் — அம்பலம்
27. மதுரக்கவிராயர் நொண்டி நாடகம் — அப்துல்கரீம்சாகிப்
28. யானை மேலழகர் நொண்டிச்சிந்து — அனந்தபாரதி ஐயங்கார்

இவற்றுள் அனந்தபாரதி ஐயங்கார் எனும் புலவர் தஞ்சை அரண்மனை வித்துவானாக இருந்தவர். இவர் காலம் கி. பி. 1786—1864 ஆகும். திருவிடைமருதூர்ப் பெருமானிடம் மிகவும் ஈடுபாடு கொண்ட இவர் இயற்றிய பல நூல்களுள் நொண்டி நாடகமும் ஒன்றாகும். இரண்டு நொண்டி நாடகங்கள் இவர் எழுதியனவாகத் தெரியவருகின்றன. ஆயின் ஒருநூல் 'நொண்டி நாடகம்' என்ற பெயரிலும் மற்றொன்று 'நொண்டிச் சிந்து' என்ற பெயரிலும் காணப்படுகின்றன. இரண்டில் 'திருவிடை மருதூர் நொண்டி நாடகம்' மட்டுமே இதுவரை கிடைத்திருக் கிறது. 'யானை மேலழகர் நொண்டிச்சிந்து' இதுவரை கிடைக்க வில்லை. எனவே இப்பகுதியில் 'திருவிடைமருதூர் நொண்டி நாடகம்' மட்டும் ஆய்வு செய்யப்படுகிறது.

9

திருவிடைமருதூர் நொண்டி நாடகம்

இந்நூலினைச் சென்னைக் கலாரத்தினாகரம் அச்சகத்தினர் 1869 ஆம் ஆண்டில் முதன்முதல் வெளியிட்டிருக்கின்றனர். அதன்பின்னர் இந்தப் பிரதியின் துணைகொண்டு ஏற்ற திருத்தங்கள் பலவற்றைச் செய்து 1967இல் பொன். சுப்பிரமணிய பிள்ளை இந்நூலைப் பதிப்பித்திருக்கிறார். இந்நூற்பதிப்பை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆய்வு அமைகிறது.[2]

நூல் நுதலிய பொருள்

கெடிவீரசிங்கன் எனும் நொண்டி வீசங்க நாட்டில் கள்ளர் மரபில் இந்திரகுலத்தில் சூரரெத்தினத்தின் மகனாகப் பிறந்தான். சூது, வாது, பொய், களவு, புரட்டு, உருட்டு ஆகிய கலைகளில் கைதேர்ந்த இவனைக் காத்தக்குட்டி என்பவன் வலுவில் அழைத்து அவன் மகளைத் திருமணம் செய்து வைக்கிறான். திருமணத்திற்கு வந்த மொய்ப்பணங்களை எடுத்துக்கொண்டு சன்னாசி என்பவனை உடனழைத்துக்கொண்டு பல தலங்களை வழிபடச் செல்கிறான், சிரகிரி, ஆனைக்காவல், திருவரங்கம், திருவையாறு, சுவாமிமலை முதலான தலங்களுக்குச் சென்று இறைவனை வழிபட்டுக் கொண்டு கும்பகோணத்தையடைகிறான். அங்குள்ள மகாமகக் குளத்தில் நீராடி நாகேசுரர், சாரங்கபாணு ஆகியவர்களை வழிபட்டுக் கும்பேசுரர் கோயிலை அடைகிறான். இங்கு இறைவனை வழிபட்டுக் கொண்டிருக்கும் போது அங்கு நின்ற தாசிகள் கூட்டத்தைக்காண்கிறான்.

அத் தாசிகளுள் ஒருத்தியான தங்கமுத்துவின் அழகு, ஆடல், பாடல் ஆகியவற்றில் மயங்கி அவள் பின்னால் செல்கிறான். அவளும் அவன் நிலையறிந்து அவள் கூடவே இருக்கும்

2. பொன். சுப்பிரமணிய பிள்ளை (ப. ஆ.), அனந்தபாரதி இயற்றிய திருவிடைமருதூர் நொண்டி நாடகம், திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்கசுவாமி தேவஸ்தானம், திருவிடைமருதூர் 1967.

படிச் செய்து கொள்கிறாள். அவன் குடும்பத்தோடு பழமையான உறவும் உரிமையும் உடையவள் போல உரையாடி வீட்டினுள் அழைத்துச் செல்கிறாள். இவன் வந்ததை அறிந்த தாய்க்கிழவி, தனக்குப் பெரும் செல்வம் எளிதில் கிட்டி விட்டதாக எண்ணிப் பலவாறு வாயாரப் புகழ்ந்து வாழ்த்துகிறாள். அவள் பேசிய பேச்சில் கெடிவீரசிங்கன முற்றிலுல் மயங்கி விடுகிறான்.

தாய்க்கிழவியும் தங்கமுத்துவும் பல பணிவிடைகளை அவனுக்குச் செய்கின்றனர். தங்கமுத்து கையால் அறுசுவை அமுதளித்துச் சந்தனம், சவ்வாது பூசி விடுகிறாள். அவளும தன்னைத் தேவ உலகத்துப் பெண் போல் அலங்கரிததுக் கொண்டு அவன் முன்னே வந்து நிற்கிறாள். கெடிவீரசிஙகனும மனத்தை அவளிடம் பறிகொடுதது விடுகிறான். அவள் வீட்டி-லேயே பல நாட்கள் தங்கி விடுகிறான். தங்கமுத்து அவனை ஒரு பொம்மை போல ஆட்டி அறிவை மயக்கி விடுகிறாள்.

கெடிவீரசிங்கன் கையிலுள்ள பொருள்களைப் பறிக்கப் பலவித கெட்ட சரக்குகளைச் சேர்த்து உண்டை தயாரித்து அவற்றைத் தினந்தோறும் பாலில் கலந்து மருந்து என்று சொல்லிக் கொடுத்து விடுகிறாள். அதை அருந்திய அவன் சுய அறிவை முற்றிலும் இழந்து விடுகிறான. அச்சமயம் பார்த்து அவனிடமிருந்து தாய்க்கிழவியும் தங்கமுத்துவும் புடவை, பால், பசு, கட்டில, பஞ்சணை, விளக்கு போனற பொருள்கள் பல வாங்க வேண்டுமென்று கூறி அவனிடமுள்ள பொருள்கள் எல்லாவற்றையும் வாங்கி விடுகின்றனர். எல்லாவற்றையும இழந்து வறிய நிலையிலிருப்பதை அறிந்த இருவரும் அவனை வெறுத்து ஒதுக்கி வெளியில் துரத்தி விடவும் துணிகின்றனர்.

தங்கமுத்துமீது கொண்ட தீராத காதலால் கெடிவீர சிங்கன் அவளுக்குப் பணம் கொடுப்பதற்காகத் திருட முடிவு செய்கிறான். சிவபூசை திருமால் பூசை செய்கிறவர்கள், சாத்திரங்கள் வேதங்கள் படித்தவர்கள், சத்திரம் சோலை அமைத்தவர்கள் ஆகிய புண்ணியர்கள் வீட்டில் திருடுவதில்லை என்று முடிவு செய்து தாசி வீட்டிலேயே திருடுகிறான். அவ்வாறு அவன் திருடிய பொருள்களைக் கண்ட தங்கமுத்துவும் தாய்க்

கிழவியும் பெருமகிழ்ச்சி அடைந்து முன்பு இருந்ததைக் காட்டிலும் பன்மடங்கு அன்பு காட்டிப் பணத்தாசையால் பண்பு காட்டுகின்றனர்.

இதையெல்லாம் நம்பமுடியாத கெடிவீரசிங்கன், திருடிய பொருள்களைப் பெட்டியுடன் எடுத்துக் கொண்டு நாச்சியார் கோயிலை அடைகிறான். அவ்வூரிலுள்ள சேசபட்டர் வீட்டில் பொருள்களை அடைக்கலமாக வைக்கிறான். பின்னர்த் திருச் சேறை, குடவாசல், திருக்கண்ணமங்கை, திருவாரூர், கீழ் வேளூர், நாகப்பட்டணம் முதலான பல தலங்களையும் வழி பட்டுக் கொண்டு வடக்கு நோக்கிச் சென்று ஆற்காட்டை அடை கிறான்.

விலங்கு, கத்தி, பூட்டு இவைகள் தெறித்து இரண்டாகக் கூடிய பல மூலிகைகள், பொடிகள், மைகள் ஆகியவற்றைக் கையில் அடக்கிக்கொண்டு சிப்பாயி வேடம் பூண்டு, துப்பாக்கி, சிவப்பு வில்லையும் எடுத்துக் கொண்டு தலையில் நல்ல தலைப் பாகையையும் வைத்துக் கொள்கிறான். இந்நிலையில் நவாபு அரண்மனையை அடைந்து அங்குக் காவல் இருக்கின்ற கன்ன டர், தெலுங்கர், துலுக்கர் ஆகியவர்களுடன் அவரவர்கள் மொழிகளில் பேசி ஏமாற்றி அரண்மனைக்குள் சென்று விடு கிறான். நவாபு இவனுடைய கள்ள வேடத்தை அறிந்து சிறை யில் அடைத்துத் துன்புறுத்துகிறான். இவன் கையில் வைத் திருந்த மூலிகையைக் கொண்டு விலங்குகள் பூட்டுக்களை உடைத்து விடுகிறான். காவற்காரர்களுக்குப் பொட்டிட்டு விலங்குமிட்டு விடுகிறான். பணவறைக்குச் சென்று பத்துப்பை நிறையப் பணம் எடுத்துக்கொண்டு சிறையிலிருந்து தப்பிக் குதிரை இலாயத்திற்குச் சென்று அங்கிருக்கின்ற பல குதிரை களில் சுழிசுத்தம் உள்ள அழகிய பச்சைநிறக் குதிரையைத் தேர்ந்தெடுக்கிறான். அக்குதிரைமேல் ஏறிக்கொண்டு வாடிக் கடை கடந்து புதுச்சேரி வழியைக் கண்டு ஒரு காட்டுவழியாகப் புறப்படுகிறான். புலி ஒன்று குதிரையை நோக்கிக் காலைப் பற்றுகிறது. அந்த ஆபத்திலிருந்து மீளுவதற்காக அவனு டைய காலைக் கத்தியால் வெட்டி விடுகிறான். வெட்டிய காலைக் கட்டிக்கொண்டு கட்டிய சுவடு தெரியாமல் வஞ்சகம் செய்து தப்பி வந்து வியாபாரி போல் வேடங்கொண்டு புதுச் சேரியை அடைகிறான்.

புதுச்சேரியில் தான் கொண்டு வந்திருந்த பணம் எல்லா வற்றையும் வராகனாக மாற்றி மூட்டையாகக் கட்டி ஒருநாள் அங்கிருந்துவிட்டுப் பின்னர்க் குதிரையிலேறிச் சிதம்பரத்தை அடைகிறான். அங்குள்ள சிவகங்கையில் நீராடி நெற்றியில் நீறணிந்து இறைவனை வழிபடுகிறான். அக்கோயிலில் உள்ள கனகசபாபதி தீட்சிதரிடம் தன் வரலாற்றைக்கூறித் தன் கால் வளரும் மகிமையுள்ள தலம் எது என வினவுகிறான். அவர் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய இம்மூன்றாலும் சிறப்புடைய தலம் திருவிடைமருதூராகும். அங்குச் சென்று வழிபட்டால் அவன் செய்த பாவம் தீர்ந்து வெட்டுண்ட காலும் முன்போலவே வளர்ந்து விடும் என்கிறார்.

அவ்வாறு அவர் கூறியதைக் கேட்டுக் கெடிவீரசிங்கன் சீர்காழி, வேளூர், மாயூரம், குத்தாலம், திருவாவடுதுறை முதலான பல தலங்களையும் வழிபட்டு இறுதியில் திருவிடை மருதூரை அடைகிறான்.

திருவிடைமருதூர் வீதியை வலமாக வந்து திருக்கோயிலை அடைந்து ஏகநாயகரை வழிபடுகிறான் அவன் சென்ற சமயம் தைப்பூசப் பெருவிழாவானபடியினால் வீதியில் ஐந்து தேர்கள் பெருமானுடன் வந்து கொண்டிருந்தன. ஏக நாயகரின் தேரழகைக் கண்டு களித்துத் தேருடன் வீதியை வலமாக வந்து காவிரிநதியை அடைந்து கல்யாண தீர்த்தத்தில் நீராடி இழந்த காலை இறைவனருளால் திரும்பப் பெறுகிறான். மகிழ்ச்சி மிகுதி யினால் இறைவனைப் போற்றிப் பணிந்து வணங்கி ஆடிப் பாடுகிறான்.

இத்துடன் நூல் முற்றுப்பெற்று விடுகிறது. இறுதியில் வாழ்த்துப்பாடல் ஒன்று இடம் பெறுகிறது.

நூலமைப்பு

முப்பது பாக்களைக் கொண்ட இந்நாடகத்தை இரு பிரிவாகப் பிரித்து ஆய்வு செய்யப்படுகிறது.

முதற்பகுதி :- கடவுள் வாழ்த்து, அவையடக்கம், தோடை யம், மங்களம் ஆகிய தலைப்புகளில் இடம்பெற்றுள்ள ஐந்து பாக்கள் இப்பகுதியில் அடங்கும்.

தொடக்கத்தில் அமைந்துள்ள கடவுள் வாழ்த்தில் விநாயகர் காப்பு, முருகன்-வாணி-பார்வதி துதிப்பாடல்கள் எண்சீர் விருத்தத்தில் இருக்கின்றன. பெருமைபெற்ற சையமலையில் உற்பத்தியாகிக் காவிரியாகப் பெருக்கெடுத்து ஓடி வருகின்ற நதியின் தென்கரையிலமைந்துள்ள திருவிடைமருதூரில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள மருதவாணர் புகழினை இசை நாடகமாகப் பாடுவதற்கு அருள் தரும்படித் தும்பிக்கையை யுடையவனும் கடல்சூழ்ந்த உலகை ஆண்டவனும் ஆகிய விநாயகரைப் பணிந்து வணங்குகின்றார் ஆசிரியர். அத்துடன் வள்ளி, கந்தன், பார்வதி ஆகியோரையும் வணங்கி வேண்டு கின்றார்.

அடுத்து எண்சீர் விருத்தத்தில் அமைந்துள்ள அவை யடக்கத்தில், ''மருதீசர் மேல் பிரபலமாம் நொண்டி நாடகம் ஒன்றினைச் சூரியன்முன் மின்மினி போல் புலவர் முன்னே அனந்தகவி பாடினான்'' என்று கூறத்தொடங்கி மகாலிங்கர், பிள்ளையார், தேவி பார்வதி திரிபுரசுந்தரி, கலைமகள், முருகன், மேலவாசல் சுப்பிரமணியர், அப்பர், சுந்தரர், வாதவூரர், சம்பந்தர் ஆகியோரின் அருளைப் பணிந்து வேண்டு கின்றார்.

'மங்களம்' என்பதில் பல்லவி, அனுபல்லவி, சரணங்கள் எனும் அமைப்பில் பாக்கள் இருக்கின்றன. மகாலிங்கப் பெரு-மானின் பல வீரச்செயல்களையும், அருள் நிகழ்ச்சிகளையும் கூறி மங்களம் பாடுகின்றார்.

இரண்டாம் பகுதி :- தரு, விருத்தங்கள், வசனங்கள் போன்றவற்றைக் கொண்டு இப்பகுதி அமைந்திருக்கிறது. 25 பாக்களைக்கொண்ட இந்நூற்பகுதியின் தரவுப்பாக்கள் முழுவதும் ஒருவகைச் சிந்தில் அமைந்துள்ளன. இந்நூற்பகுதி பின் வருமாறு பிரித்து ஆய்வு செய்யப்படுகிறது.

அ) பாத்திரப் படைப்புகள்

ஆ) திருவிடைமருதூர்ப் பெருமை

இ) பிற செய்திகள்

ஆ) பாத்திரப் படைப்புகள்

இந்நாடகத்தில் நொண்டியாக வருகின்ற கெடிவீர சிங்கனே முதன்மைப் பாத்திரமாகப் படைக்கப்பட்டிருக் கிறான். ஏனையோர் இந் நாடகத்தை நடத்திச் செல்வதற்கு ஏற்ற துணைப் பாத்திரங்களாகவே படைக்கப்பட்டிருக்கின்றனர்.

கெடிவீரசிங்கன் :— பல அறிஞர்கள், சிவனடியார்கள், பொதுமக்கள் முதலானோர் கூடியிருக்கின்ற பொதுச்சபையில் சபையினரை வணங்கித் தோன்றிய நொண்டி என்ற கெடிவீர சிங்கன், நெற்றியில் நீறு பூசிச் சிவமந்திரத்தைக் கூறி வழிபட்டு விளம்பரப்படுத்திச் சபையில் விருது கட்டுகிறான். தன்னைப் பலவாறாக அணிசெய்து கொண்டு துதி செய்த நொண்டியை அச்சபையிலுள்ள சிவனடியார்கள் 'நீர் யார்?' என வினவுகின் றனர். அப்பொழுது அவன் தன்னைப்பற்றியும், தன் பிறப்பு வளர்ப்பு முதலான செய்திகளையெல்லாம் அச்சபையில் கூறுவ தாக இந்நாடகம் அமைந்திருக்கிறது. 'கெடிவீரச்சிங்கன்' எனப் பெயர்கொண்ட இந்நொண்டியே இந் நாடகத்தின் முதன்மைப் பாத்திரமாகும். இந்நாடகத்தின் மூலம் அறியப் பெறும் இவனுடைய பண்பு நலன்கள், கல்வி முதலானவற்றை இப்பகுதி ஆராய்கிறது.

உயர்ந்த கள்ளர் சாதியில் புகழ்பெற்ற இந்திரகுலத்தில் சூரரெத்தினம் என்பவர்க்கு மகனாகப் பிறந்தவன்; கிரந்தம், தமிழ், கன்னடம், தெலுங்கு, மோடி, துலுக்கு, இசை போன்ற கலைகளில் சிறந்தவன்; சிலம்பு, குதிரையேற்றம், ஆனை யேற்றம், சாத்திரங்கள் முதலானவற்றையும் ஆத்மாவசியங்கள், மந்திரம், தந்திரம், பச்சிலை மூலம் பூட்டுக்களைத் திறத்தல், இந்திரசால வித்தை முதலான வினோத வித்தைகள், எத்துவா வித்தனம், சூது, திருட்டு, அவதானப் பெரட்டு முதலானவற்றை யும் எதிரியை வாய்கட்டிப் பேசாமல் இருக்கச் செய்வதையும் கன்னக்கோல் இடுவதையும் கற்றுத் தேர்ந்தவன்.

உரிய வயதில் காத்தக்குட்டியின் மகளைத் திருமணம் செய்து ஆறு திங்கள்வரை மகிழ்ச்சியுடன் இருந்த பின்னர்ப் பல தலங்களுக்கும் சென்று வழிபட விரும்பினான். சன்னாசி எனும் நண்பனொருவனின் யோசனையைக் கேட்ட சிங்கன் தன் வீட்டிலேயே தன் தந்தை சேர்த்து வைத்திருந்த பொருள் களைத் திருடி எடுத்துக்கொண்டு நல்லதொரு நாளில் நண்ப

னுடன் சென்றான். சிரகிரி, ஆனைக்காவல், சீரங்கம், உத்தம சீலி, தோவூர், கல்லணை, ஐயாறு, சுவாமிமலை, கொட்டையூர், கும்பகோணம் ஆகிய தலங்களுக்குச் சென்று இறைவனை வழிபட்டதுடன் சில தலங்களில் காணிக்கையாகப் பொன் போன்றவற்றைச் செலுத்தினான்.

செல்வம் படைத்தவர்களிடமிருந்து பொன், பொருள்களைத் திருடுவதில் கைதேர்ந்தவன். கும்பகோணத்தில் தங்கமுத்து என்ற தாசிமேல் ஆசை கொண்ட மயக்கத்தாலும் வெறியாலும் அறிவின்றிப் பூசை, குரு போதித்த மந்திரம் முதலானவற்றை மறந்து விடுகிறான். இவனிடம் இருந்த பொருள் முழுவதும் தீர்ந்ததை அறிந்த தாசியும், தாய்க்கிழவியும் இவனை விட்டுவிட்டுப் பொருள் உடைய பிறரை நாடத் தொடங்கினர். இதனையறிந்த இவன் அத் தாசி வீட்டிலேயே கொள்ளையடித்து இரவோடிரவாக அங்கிருந்து புறப்பட்டுப் பல தலங்களுக்கும் செல்லத் தொடங்கினான். நாச்சியார் கோயில், திருச்சேறை வழியாகக் குடவாசல் முதலான ஊர்களுக்குச் சென்று ஆர்க்காடு போய்ச் சேருகிறான்.

ஆர்க்காட்டிற்குப் போர் வீரன் போல் கள்ள வேடமிட்டுச் செல்கிறான். பல தடைகளையும் கடந்து நவாபுவைக் காண்கிறான். இவன் பொய் வேடத்தைக் கண்டுபிடித்த நவாபு இவனைப் பிடித்துச் சிறையிலடைத்து விடுகிறான். இவன் வைத்திருந்த பல மூலிகைகளைக் கொண்டு விலங்குகளையும் பூட்டையும் தெறிக்கச் செய்து அங்கிருந்து தப்பிச் சுழிசுத்தம் உள்ள ஒரு குதிரையைத் தேர்ந்தெடுத்து அதிலேறித் தப்புகிறான். இவன் மட்டும் தப்பாமல் இவன்கூடவே சிறையில் அடைக்கப்பட்டிருந்த எண்மரையும் தப்புவிக்கிறான். தப்பிய இவர்களுடன் சேமிப்பு அறைக்குச் சென்று பத்துப்பை நிறையப் பணத்தைக் கொள்ளையடித்து, அவற்றுள் ஒருபை பணத்தைக் கூடவந்தவர்களிடம் கொடுத்துவிட்டு இவன்மட்டும் வாடிக்கடை வழியாகக் காட்டுப் பாதையில் புதுச்சேரியை நோக்கிப் பயணமாகிறான். அவ்வாறு காட்டு வழியில் வரும்பொழுது ஒரு புலி குதிரைமேல் பாய்ந்தது. அது தவறி அவன் கால்களில் ஒன்று அப்புலி வாயில் அகப்பட்டுவிட்டது. உடனே தாமதிக்காமல் அகப்பட்ட மட்டோடே

காலை வெட்டி விடுகிறான். அதன்பின்னர்ப் புதுவைக்குச் சென்று அவன் கொண்டு வந்திருந்த பணத்தை விராகனாக மாற்றி மூட்டையாகக் கட்டி எடுத்துக் கொள்கிறான்.

அங்கிருந்து சிதம்பரத்திற்குச் சென்று ஒரு தீட்சிதரிடம் தன் கதையைக்கூறித் தன் கால் வளருவதற்குரிய வழிமுறையைக் கேட்கிறான். அத்தீட்சிதர் திருவிடைமருதூர்த் தலத்திற்குச் சென்று இறைவனை வழிபட்டால் பாவம் தீர்ந்து கால் வளரும் என்று கூறுகிறார். அதன்படி அவன் சீர்காழி, வேளூர், மாயூரம் முதலான தலங்களுக்குச் சென்று திருவிடைமருதூருக்கு வருகிறான். அங்குள்ள மருதவனப் பெருமானைப் பணிந்து உள்ளமுருக வேண்டுகிறான். அவன் செய்த பாவமெல்லாம் நீங்கிக் காலும் முன்போல் வளருகிறது.

தங்கமுத்து :- கும்பகோணத்தில் இருக்கின்ற பல தாசிப் பெண்களில் இவளும் ஒருத்தி. மான் போன்றவள் என்றும், இசையில் மேனகை போன்றவள் என்றும், அழகில் இரதி போன்றவள் என்றும் இவள் அழைக்கப்படுகிறாள். கும்பேசர் கோயில் மண்டபத்தில் இவள் மேளம் கூட்டிப் பாடிப் பல அடவுகளைப் பிடித்து ஆடினாள். ஆடவர்களைக் கவர்வதற்குத் தன்னை மிகவும் ஒப்பனை செய்து கொள்கிறாள். தன் அழகில் மயங்கித் தன்னை நாடி வருபவர்களிடம் இன் முகத்துடன் உரையாடிப் புகழ் மொழிகள் பேசிக் கவர்கிறாள். மன்மதக் கலையில் சிறந்து விளங்குபவள். பலவகைப் பாக்களைத் தம்புராவை மீட்டிப் பாடுகிறாள். இவளைப் பற்றித் தாய்க்கிழவி, "என் பெண் சிறியவள்; ஏதும் அறியாதவள்; வினை, சூது அறியாள்; பரத்தையரைப் போல் பல பேரைத் தொட்டும் அறியாள்; பணம் பறிப்பதை அறியாள்; பெண் பாசாங்கு அறியாள்"[8] என்று கெடிவீரச்சிங்கனிடம் கூறுகிறாள். தேடி வருகின்ற ஆடவர்கள் தங்களிடம் இருக்கின்ற பொன், பொருள் முதலானவற்றை இழந்து விட்டுத்தான் செல்வர். அந்த அளவுக்கு இவள் அவ்ஆடவர்களிடம் இன் முகம் காட்டி இனிக்கப் பேசிக் கவர்ந்து விடுவதில் வல்லவளாகத் திகழ்கிறாள். பல வகையான மருந்து தயாரித்துக்

8. திருவிடைமருதூர் நொண்டி நாடகம், ப. 23.

கொடுத்து மயக்கியும் விடுகிறாள். இவளைத்தேடி அவ்வூரி-லுள்ள பெரிய செல்வந்தர்கள் அடிக்கடி வருவதாக நூலாசிரியர் குறிப்பிடுகிறார். இவளுக்கு உற்ற தோழிகளாகப் பலர் இவள் வீட்டிலேயே இருக்கின்றனர். 'கனிவாய்', 'மதுரக்கனி இதழினாள்', 'செல்லப் பெண்', 'பூரணகும்ப முலையாள்' என்று இவள் வருணிக்கப் படுகிறாள்.

இவளும் கெடிவீரசிங்கனும் சேர்ந்து இருந்ததையும், இருவரும் கலவி புரிந்த நிகழ்ச்சியையும் ஆசிரியர் மிக விரிவாக நூலில் கூறியுள்ளார்.

தாய்க்கிழவி :— தங்கமுத்துவின் தாய். தாழக் குனிந்த முதுகினையும், நடுக்கிய தலையையும், முழங்கால் தொட்ட முலையையும், பேழை வாயையும், ஊழமூக்கையும் உடையவள். கையில் ஒரு தடிக்கம்பை ஊணிக்கொண்டு இருமல் தாங்காமல் பெருமூச்சை வாங்கி ஏங்கித் தள்ளாடி நடந்து வருகிறாள். இவள் வருணனையைக் கூறுவதைப் பார்க்கும்பொழுது மிகவும் வயதானவளாகத் தோன்றுகிறது.

தன் மகளை நாடி வருகின்றவர்களைப் புகழ்ந்து பேசி வரவேற்கிறாள். தன் மகளின் பாங்கியர்களிடத்தில் பல பொருள்களைக் கொடுத்து அனுப்பி அவற்றைப் படுக்கை அறையில் கொண்டு வைக்கச் சொல்கிறாள். வருகின்ற ஆடவர்களை ஏமாற்றி பொன், பொருள் பறிப்பதில் கைதேர்ந்தவள். ஆடவர்களைக் கவர்வதற்காகப் பலவித கெட்ட சரக்குகளைக் கொண்டு மருந்து தயாரிப்பதிலும் இவள் சிறந்து விளங்குகிறாள்.

தன் பெண்ணுக்காக நகைகள் செய்வதற்கும், பிற ஆடம்பரச் செலவுகளுக்கும் பொன் வேண்டும் என்று சிங்கனிடம் கூறிப் பணத்தை வாங்கி விடுகிறாள். மேலும் தனக்குக் கட்டுவதற்குக் கூட நல்ல சேலை இல்லை என்று கூறியும் பணத்தை கரந்து விடுகிறாள்.

சண்டி, கிழட்டோரி, மாயக்கள்ளி, கிழக்கந்தல், நரைத் தாய்க்கிழவி, சப்பைவாய்க் கிழவி, கிழவி, தொத்தற்கிழவி என்று இவள் நூலின் பல்வேறிடங்களில் சிங்கனால் அழைக்கப் படுகிறாள்.

பாங்கியர்கள் :— கண்ணி, வெங்கி, வீரி, பெற்றி, தயிலி முதலான பல்வேறு பாங்கியர்கள் தங்கமுத்துவின் இல்லத்தில் இருக்கின்றனர். இவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான பணியைச் செய்கின்றனர். வீட்டிற்குத் தங்கமுத்துவைப் பார்க்க வந்த சிங்கனை முதலில் ஒரு தோழி விசாரிக்கிறாள். இதற்காக அவரிடமிருந்து 50 பொன் கேட்டுப் பெறுகிறாள்.

தங்கமுத்து இல்லத்திற்குள் செல்வதற்கு முன் சிங்கனின் பாதத்தை நன்றாகக் கழுவிக் கைபிடித்து அழைத்துச் செல்கி றாள் ஒருபெண். மற்றொரு பெண் விளக்குப் பிடிக்கிறாள். வேறொருத்தி பாக்கு வெற்றிலை தருகிறாள். அதன்பின்னர்ப் படுக்கை அறைக்குப் பாக்கு, வெற்றிலை, சந்தனம், பால், பழங்கள் முதலான பொருள்களையும் இப் பாங்கியர்களே கொண்டு செல்கின்றனர்.

கழுக்காணி, குட்டைச்சிறுக்கி என்று இவர்களைச் சிங்கன் அழைக்கிறான்.

தாசிப்பெண்கள் :— கும்பேசரை வழிபடுவதற்காகக் கோயி லுக்குப் பல தாசிப்பெண்கள் வருகின்றனர். அவ்வாறு வந்த முப்பத்துமூன்று பேர்களின் பெயர்களைச் சிங்கன் கூறுகிறான். அவர்கள் வருமாறு :- மங்களம், பச்சைமுத்து, சிவகாமி, லெட்சுமி, பொன்னாள், சவுந்தரி, ஞானவல்லி, பூமாலை, காமாட்சி, ராமா மணி, கமலமுத்து, அம்மைமுத்து, கல்யாணி, அம்புசம், நல்ல முத்து, சந்திரவதனாள், தங்கமுத்து, நாகாம்புசம், ரெங்கம், செல்லி, வள்ளி, ரூபாவதி, விசாலாட்சி, செங்கமலம், வாடாமுலை மங்கை, தையாள், பாலாள், வசந்தாள், சரசசிகாமணி, பெரிய நாயகம், அலமேலு, அபிராமி, சுப்புரெத்தினம்.

நாகப்பட்டணத்துக்குச் சென்றசிங்கன் அங்கும்பல தாசிகள் இருந்ததாகவும், அவர்களுள் தேன்மொழி என்பவள் சிறந்த அழகியாவாள் என்றும் கூறுகிறான்.

திருவிடைமருதூர்க் கோயிலிலும் தாசிகள் இருக்கின்றனர். இவர்கள் கோயில் பூசைகளில் கலந்து கொள்கின்றனர். பூசத் திருவிழாவின்போது நடனம் செய்கின்ற தேவதாசிப் பெண்கள் பரதநாட்டியம் ஆடவும் பாடவும் செய்கின்றனர்.

அரசர்கள் :— தஞ்சை மராட்டிய மன்னன் அமரசிம்மன் காலத்தில் இந்நூல் எழுதப்பட்டது. தஞ்சை அரண்மனையில் ஆசிரியர் இருந்திருக்கிறார். இரண்டாம் சரபோசி பட்டத்திற்கு வந்ததும் அமரசிம்மன் திருவிடைமருதூரில் தனியாக மாளிகை கட்டிச் சிலகாலம் வாழ்ந்து வந்திருக்கிறார். அப்பொழுது இவர் ஆதரவில் பல புலவர்கள் இருந்திருக்கின்றனர். ஒருவேளை அனந்தபாரதி ஐயங்காரும் இவராதரவில் இங்குச் சிலகாலம் இருந்திருக்கலாம். அதனால் தம்மைப் பேணிக் காத்த மன்னரை மறவாமல் இந்நூலுள் போற்றத் தவறவில்லை.

"........... மனுநீதி மன்னன்
வாஞ்சியான தஞ்சைப்பதி — வளர்
வாசவன் போசலை ராஜராஜன்
ராஜன் அமரசிம்ம — மகா
ராஜன் அருள்செய்யும் ராஜரெத்தினம்
போஜன் பிரதாபராம — ஜய
பூமன் சவுந்தர சோமன்" (ப. 62)

தஞ்சை மராட்டிய மன்னர்கள் போசலை குலத்தில் பிறந்தவர்கள். உலகம் போற்றுகின்ற பெருமை படைத்த துளசேந்திரனின் மகன் சரபோசியாவார்.[4]

இவர்களைத் தவிரக் காசி மன்னவன்,[5] செம்பியன் சோழன்,[6] பாண்டியன்.[7] மனுநீதி மன்னன்,[8] வரகுணன்[9] என்று வேறு அரசர்களைப் பற்றியும் குறிப்பிடுகின்றார். சோழன், பாண்டியன் போன்ற மன்னவர்களின் வினையைப் போக்கியவன் இடைமருதையராவார்.

போர் வீரர்கள் :— நவாபு ஆட்சி செய்த ஆர்க்காட்டில் பல மொழி பேசும் போர் வீரர்கள் பணிபுரிந்ததை ஆசிரியர் இந்

4. திருவிடைமருதூர் நொண்டி நாடகம், பக். 55 56.
5. மேலது, ப. 54.
6. மேலது, ப. 53.
7. மேலது, ப. 4, 53. 60.
8. மேலது, ப. 62.
9. மேலது, 6, 53, 69.

நூலில் கூறியுள்ளார். கெடிவீரசிங்கன் இந்தப் போர் வீரர்களைச் சந்தித்து அவரவர் மொழியில் பேசி ஏமாற்றி நவாபுவைக் காண்கிறான். ஒவ்வொரு போர்வீரரின் பெயரையும் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். ஜமேது அயிதர்கான், இமாம்கான் முதலானவர்களும்; இபுராம்சாய், அப்துல்காதர் முதலான துலுக்கர்களும்; சாமண்ணா, வீரண்ணா முதலான கன்னடம் பேசுபவர்களும்; ராமசிங்கு, லெட்சுமணசிங்கு முதலான சிங்கு வீரர்களும்; அப்புராவ், பாலாஜி ராவ் முதலான மராட்டியர்களும்; சொக்கலிங்க நாயக்கர், பங்காரு சுப்பா நாயக்கர் முதலான வடுகர்களும் ஆர்க்காட்டில் பணிபுரிகின்றனர்.

இந்தப் போர் வீரர்கள் பலவகைச் சாதிக் குதிரைகள், யானைகள், ஒட்டகங்கள் முதலானவற்றைக் கொண்டு படைப் பயிற்சி பெறுகின்றனர். காவல் காத்து நிற்கின்றனர். துப்பாக்கிப் பயிற்சியையும் மேற்கொள்கின்றனர்.

ஏனையோர் :— காத்தக்குட்டி என்பவனின் மகளைக் கெடிவீரசிங்கன் மணம் செய்து கொள்கிறான். சன்னாசி என்பவனை நண்பனாகத் துணைக்கு அழைத்த சிங்கன் பல ஊர்களுக்கும் இறைவனை வணங்கச் செல்கிறான்.

சில ஊர்க் கோயில் குருக்கள், தீட்சிதர் போன்றவர்களின் பெயர்களை மட்டும் ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

சீர்காழிச் சட்டைநாத செட்டியிடம் சிங்கன் தான் வைத்திருந்த பொருள் முழுவதையும் பாதுகாக்கும்படிக் கொடுக்கிறான்.

திருவிடைமருதூருக்கு வந்த நொண்டி இராமசாமி என்பவன் பக்கத்தில் நின்று தேர் பார்க்கிறான்.

ஆ) திருவிடைமருதூர்ப் பெருமை

1. ஊர் : கும்பகோணத்திற்கு வடகிழக்கில் எட்டுக் கிலோ மீட்டர்த் தொலைவில் திருவிடைமருதூர் உள்ளது. வடமொழியாளர் இதனை 'மத்தியார்ச்சனம்' என அழைப்பர் இத்தலத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள இறைவன்

'மகாலிங்கேசுவரர்' என்றும் 'மருதப்பசுசுரர்' என்றும்; இறைவி 'பெருநலமாமுலைநாயகி' என்றும் அழைக்கப்பெறுகின்றனர். இத்தலத்து மரம் 'மருது' வாகும். இத்தலத்திற்குச் சம்பந்தர் ஆறு பதிகங்களும், அப்பர் ஐந்து பதிகங்களும், சுந்தரர் ஒரு பதிகமும் பாடியருளியிருக்கின்றனர்.

இடைமருது,[10] இடைமருதூர்,[11] திருவிடைமருதூர்,[12] மத்தியார்ச்சுனம்[13] என்று நூலில் ஊர்ப்பெயர் இடம்பெற்றிருக்கிறது

வரகுண பாண்டியனுடைய அந்தணக் கொலைக் (பிரமகத்திக்) குற்றத்தை நீக்கிய ஊர் இதுவாகும். இதனை நூலாசிரியரும் குறிப்பிடுகின்றார்.[14] மேலும் சோழன், பாண்டியன் ஆகியோர் செய்த அந்தணக் கொலைக் குற்றத்தையும், அயிராவதத்தின் வினையையும் போக்கி ஆட்கொண்ட ஊருமாகும். திருமால், நான்முகன் முதலான தேவர்கள் போற்றும் பெருமையுடையது.

விருத்தப் பாக்களில் திருவிடைமருதூரின் பெருமையும், இறைவன் இறைவியர் பெருமையும் கூறப்பட்டுள்ளன.

2. இறைவன் :- இத்தலத்து இறைவன் இடைமருதர் இடைமருதீசர், இடைமருதுறைவாணர், இடைமருதையர், மகாலிங்கம், மருதவாணர், மருதீசர், மாமகாலிங்கமூர்த்தி என அழைக்கப்படுகின்றனன்[15] தம்மை நாடி வருகின்றவர்களின் பாவத்தைப் போக்கி ஆட்கொள்கின்றான். பாம்பினை அணிந்தவன்; புராந்தகன்; அழலாடி என்று போற்றப்படுகின்றான். இப்பெருமான் பரிபூரணமாக அருள் நல்குகின்றான்; உமையவளுடன் தழுவக்குழைந்த இறைவன், அடியவர்களின் பேதைமைகளை அகற்றுகின்றான். கண்ணுதலோன், விண்ணவர்க்கு அரிதாய்

10. திருவிடைமருதூர் நொண்டி நாடகம், ப.54.
11. மேலது, பக். 1, 38, 49, 52, 55.
12. மேலது, ப. 52.
13. மேலது, பக். 58, 61.
14. மேலது, ப 53.
15. மேலது, பக் 47, 67, 50, 5, 6, 49, 69, 15, 38, 50, 65,

அடியவர்க்கு எளிதானவன், மணம் பொருந்திய கொன்றை மாலையைச் சடை முடியில் அணிந்தவன் என்று போற்றி வணங்கப்படுகிறான்.

"சிவ சிவ மருதய்யா சரணம் — ஞான
சிற்பர தற்பரா னந்தனே சரணம்
புவனம் படைத்தவா சரணம் — வேத
பூரண காரண விமலனே சரணம்

மூவரும் ஒன்றான பொருளுளே — யோக
முனிவோர்கள் சித்தர்க்கும் எட்டாத பொருளே
தேவர்க்கும் எட்டாத பொருளே — தொண்டர்
சிந்தையில் வாசஞ்செ யிந்திரப் பொருளே

பிரமத்தி தீர்த்தருளும் மூர்த்தி — எங்கள்
பெருநல மாமுலை மருவவளர் மூர்த்தி
வரகுணன் பத்திசெய்யும் மூர்த்தி — அருள்
வாரிசிவ சங்கர மகாலிங்க மூர்த்தி

தொண்டர் பிணி தீர்த்தருளும் மருந்தே — ஞானந்
தோயும் வேதாந்தமாம் மலையினுள் மருந்தே
அண்டர்முனிவோர் தொழும் ஆருயிர் மருந்தே — எங்கள்
அன்புருவாம் மகாலிங்க மருந்தே" (பக். 68—69)

என்று மருதீசர் போற்றப்படுகிறார்.

3. இறைவி :- பெருநலமுலை,[16] பெருநலமாமுலை யம்மன்,[17] பெருநலமாமுலையாள்,[18] பெருநலமாமுலைவல்லி[19] என்று அழைக்கப்படுகின்றாள். குவலையம் போற்றும் தாயாக விளங்குகிறாள். ஆதாரசத்தியாக விளஙகுகிறாள். பயிரவி, பஞ்சமி, வயிரவி, மாதங்கி மயில்தனை வென்றவள். மந்திர ரூபி, அம்பிகை எனவும் போற்றப்படுகின்றாள்.

---

16. திருவிடைமருதூர் நொண்டி நாடகம, பக் 2 6, 52.
17. மேலது, பக். 51, 67.
18. மேலது, ப. 63,
19. மேலது, ப. 50.

4. வழிபாடு :- திருவிடைமருதூர்க் கோயிலில் வைகறைப் பொழுது, காலை வழிபாடு (கால சந்தி), நடுப்பகல், மாலை. இரண்டாம் காலம், நடுச்சாமம் ஆகிய பொழுதுகளில் நாள் தோறும் தவறாமல் வழிபாடு நடைபெறுகிறது.[20]

5. கட்டளைத் திருப்பணிகள் :- இவ்வூரில் நாள்தோறும் வழிபாடு நிகழ்வதற்கும் தஞ்சை மராட்டிய மன்னன் சரபோசி மூவாயிரம் பொன், ஆபரணங்கள், கிராமங்கள் போன்றவற்றை அன்புடன் காணிக்கையாக வழங்கியுள்ளார். அருணாசலன் என்பவர் அன்னதானத்திற்கும், ஞானசிவாசாரியர் என்பவர் புண்ணியத்திற்கும், தர்மத்திற்கும். சாமிநாதன், இராமலிங்கம், சுப்பிரமணியன், வேளாளர் போன்றோர் பல்வேறு கட்டளை களை நிறுவியுள்ளனர்.

வெங்கிட்டராமசெட்டி என்பவர் அன்னசத்திரம் நிறுவி யுள்ளார். அரியலூர் உடையார்பாளையம் சீமையை ஆளுகின்ற துரைமார்கள் மண்டபம் கட்டியுள்ளனர்.

கோவிந்த தீட்சிதர், பச்சையப்பமுதலி, அய்யாவையன், சாம்பசிவசாத்திரி ஆகியோர் பல தருமங்களையும் நிறுவி யுள்ளனர்.

6. தீர்த்தம் :- பல பெருமைகளையுடைய தீர்த்தங்கள் இத்தலத்தில் உண்டு. தைப்பூசத்தன்று காவிரியில் நீராடுவது மிகவும் சிறப்புடையதாகும். இச்சிறப்பினை,

''ஈச னெம்பெரு மானிடை மருதினில்
பூச நாம்புகு தும்புன லாடவே''[21]

என்று அப்பரும்

''பூசம் புகுந்தாடிப் பொலிந்தழகாய
ஈச னுறைகின்ற விடைமருதீதோ''[22]

என்று சம்பந்தரும் பாடியருளி யிருக்கின்றனர்.

20. திருவிடைமருதூர் நொண்டி நாடகம், ப. 55.
21. அப்பர் தேவாரம், 5. 14. 1.
22. சம்பந்தர் தேவாரம், 1. 32. 5.

இவ்வூரிலுள்ள கல்யாண தீர்த்தத்தில் தைப்பூசத்தன்று நீராடுகின்றவர்களின் தொல்லை வினை தீரும்; இதில் நீராடிய காக்கை சுத்தமாய்ப் பொன் நிறம் பெறும்; கெடிவீரசிங்கன் இத்தீர்த்தத்தில் நீராடி விபூதி அணிந்து இறைவனை வழி பட்டுத் தனக்கிருந்த எல்லா வினைகளையும் போக்கி விடுகிறான்.

மேலும் கனகதீர்த்தம், சந்திரதீர்த்தம், சிவகெங்கைத் தீர்த்தம் முதலான அனேக தீர்த்தங்கள் உள்ளன.

7. தைப்பூசவிழா :- இவ்வூரில் தைப்பூசவிழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இவ்விழா நடைபெறும் விதத்தை ஆசிரியர் கூறியுள்ளார். அரி, நான்முகன் முதலான தேவர்கள் 'அரகர' என்கின்றனர். முனிவர்கள், பூவுலக மன்னர்கள், மக்கள் முதலானோர் 'இறைவனே! சங்கரனே' கறைமிடற்றோனே! உமைபாகா!' என்று கூறி வணங்குகின்றனர். ஆனை முகவன், குமரேசனைப் பெற்ற தாய் எங்கள் பெருநலமுலையம்மன் என்கின்றாள். பெருமான் நந்திகேசர், சண்டேசர் சூழ்ந்து வரவும் சிவபூதகணங்களுடன் விடைமீதேறி வீதியில் உலா வருகின்றார். வீதியில் மகர தோரணங்கள் கட்டப்பட்டுள்ளன. இடைக்கியம், பெரியமேளம், சங்கீதமேளம் ஒலிக்கின்றன. நடனம் ஆடுகின்ற தேவதாசிகள் பரத நாட்டியம் ஆடுகின்றனர். பாட்டுகள் பாடுகின்றனர். வேதியர்கள் கூட்டமாகக் கூடி வேதங்கள் ஓதுகின்றனர். வரிசையாக ஓதுவார்கள் பத்தியுடன் மூவர் தேவாரத்தைப் பண்ணுடன் பாடுகின்றனர்.

திருவாரூர்ப் பண்டாரம் முதலான பண்டாரங்கள் வரிசையாக வருகின்றனர். அட்டதிக்கும் புகழும் துறைசை ஆதீன கர்த்தர், கட்டளை ஆதீனங்கள், பண்டாரச் சந்நிதிகள், தம்பிரான்கள் ஆகியோர் சூழ்ந்துவர வீதியில் எழுந்தருளுகின்றார்.

8. தேர்த் திருவிழா :- தைப்பூச விழாவையொட்டித் தேர்த்திருவிழாவும் நடைபெறுகிறது. மகாரதம், சத்திரதம் முதலான ஐந்து தேர்கள் இவ்விழாவில் மக்களால் வடம் பிடித்து இழுக்கப்படுகின்றன. இவற்றுள் 'மகாரதம்' மிகப்பெரிய தேராகும். தஞ்சை மராட்டிய மன்னன் அமரசிம்மர்

மகன் பிரதாபசிம்மர் இத்தேரைக் கட்டியிருக்கிறார். மோடி ஆவணச்சான்றும் இதை உறுதிப்படுத்துகிறது இத்தேரை ஆயிரம் ஆண்கள் வடம் பிடித்து இழுக்கின்றனர் இத்தேரில் ஏகநாயகர் வீற்றிருக்கின்றார், அடுத்து ஆகார சந்திரதத்தில் சிவகாமி பெருநலமாமுலையாள் வீற்றிருக்கின்றாள். சுப்பிரமணியர் ஒரு தேரில் எழுந்தருளுகின்றார். அஞ்சு தேரும் நிலை வந்து சேர்ந்தன.

இ) பிறசெய்திகள்

இந்நூலில் இடம் பெற்றுள்ள ஏனைய செய்திகளை இப் பகுதி ஆராய்கிறது.

1. இறைவன் பெருமை :- திருவிடைமருதூர்ப் பெருமான் புகழ் தவிர ஏனைய தலங்களில் சிலவற்றில் எழுந்தருளியுள்ள இறைவன் பெருமைகளும் இந்நூலில் ஏற்றவிடங்களில் ஆசிரியரால் போற்றப்பட்டுள்ளன.

நொண்டி ஒவ்வொரு தலத்திற்கும் சென்று இறைவனை வழிபடுகின்றான். அப்பொழுது அந்தந்தத் தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவன், இறைவியர் பெயர்களை ஆசிரியர் நூலில் குறிப்பிட்டுள்ளார். அவ்விவரம் வருமாறு -

எண்	தலம்	இறைவன்	இறைவி
1.	சிரிகிரி (திருச்சி)	செவந்தீசர்	மட்டுவார்குழலியம்மன்
2.	ஆனைக்காவல்	செம்புலிங்க சுவாமி	அகிலாண்டவல்லி
3.	திருவாரூர்	தியாகராசர்	அல்லியங்கோதை வல்லியம்மன்
4.	திருவிடைமருதூர்	மருதீசர்	பெருநலமாமுலையாள்
5.	மும்பகோணம்	கும்பேசுவரர்	மங்களநாயகி

சிவபெருமான் :- அகிலாண்ட நாயகர், அகோரசிவன், ஆதிசதாசிவன், ஈசன், ஐயாறப்பர், கயிலாசநாதன், கும்பேசர், சிவன், தியாகராசர், பரமன் முதலான பல பெயர்களால் சிவபெருமான் அழைக்கப்படுகின்றனன். தர்மசம்வர்த்தனியை ஒரு பாகம்தன்னில் வைத்த ஐயாறப்பர் என்று கூறப்படுகின்றான். ஆரணப்பொருளான பரமன், மூவுலகங்களுக்கு ஆதியாம் பரம் சோதி, தரணிபுகழ் சீர்காழிச் சட்டைநாதர், மதியை அணிந்தவன் என்று பலவாறாகப் போற்றப்படுகின்றனன்.

திருமால் :- அரி, ரெகுநாதர், திருவரங்கர், சீதரன், மாதவன். நந்தகோபன் எனப் பலவாறாக அழைக்கப்படுகின்றனன். மணமுள்ள துளசி மாலையை அணிந்தவன்;[23] திருவரங்கத்தில் பள்ளி கொண்டவர்;[24] உலகை அளந்தவர்;[25] இடைமருதீசரைப் பணிந்து போற்றித் துதித்தவர்;[26] அனுமார் கோதண்டம் பெற்ற ரெகுநாதர்[27] எனப் போற்றப்படுகின்றனர்.

விநாயகர் :- ஆனைமுகவன், பிள்ளையார், விநாயகர் என அழைக்கப்படுகின்றனன். திருவலஞ்சுழியில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளார்; ஆனைமுகத்தினன்.

முருகன் :- ஆறுமுகன், கந்தன், குகன், சுப்பிரமணியன், செவ்வேள், வேலவன் என்று அழைக்கப்படுகின்றான். சுவாமிமலையில் எழுந்தருளியுள்ளான். முருகனைப் பெற்றவள் அன்னை பராசத்தியாவள். திருவிடைமருதூர்த் தேரில் எழுந்தருளி வீதியுலா வருகின்றான்.

நான்முகன் :- அயன், வேதன் என அழைக்கப்படுகின்ற நான்முகன், திருவிடைமருதூரில் எழுந்தருளியுள்ள சிவபெருமானைப் பணிந்து போற்றுகின்றான்.

தேவர்கள் :- இந்திரன் முதலான தேவர்கள் மருதீசப் பெருமானைப் போற்றுகின்றனர். தேவருலகத்தில் இருக்கின்ற நந்திகேசர், வேள், ரதி, உருவசி, மேனகை, ரம்பை போன்றவர்களைப் பற்றிய குறிப்புகளும் ஆங்காங்கே இடம் பெற்றுள்ளன.

உமையவள் :- அகிலாண்டவல்லி, உமை, சிவகாமி, தேவி பார்வதி, பராசக்தி, பார்வதி முதலான பல பெயர்களால் அழைக்கப்படுகின்றாள். சிவபெருமான் உடம்பில் பாதியைக் கொண்டவள்.

---

23. திருவிடைமருதூர் நொண்டி நாடகம், ப.13.
24. மேலது, ப.13.
25. மேலது, ப.14.
26. மேலது, ப.65.
27. மேலது, ப.17.

ஏனையோர் :- சரசுவதி, வாணி என்று கலைமகளும், சீதேவி, அலமேலுமங்கை என்று இலக்குமியும் போற்றப்படுகின்றனர். வள்ளி, அனுமார் ஆகியோரும் குறிக்கப்படுகின்றனர்.

2. சிவனடியார்கள் :- அப்பர், சம்பந்தர், வாதவூரர் ஆகிய மூவரையும் போற்றி வணங்கி நூலைத் தொடங்குகிறார் ஆசிரியர். திருவிடைமருதூரிலுள்ள சபையிலுள்ள சிவனடியார்கள் நொண்டியைப் பற்றி வினவுகின்றனர். அவர்களுக்குத் தம் கதையைக் கூறுவதாக இந்நாடகம் அமைந்துள்ளது.

3. சமயம் தொடர்பானவை :- சமயம் தொடர்பான பல குறிப்புகள் நூலின் இடையிடையே காணப்படுகின்றன. சந்நிதி, சிவபூசை, சிவமந்திரம், சிவார்ச்சனை, தீட்சை, தோத்திரம், நைவேத்தியம், வில்வார்ச்சனை, பஞ்சாக்கரம், திருநீறு, இலிங்கம் முதலான பலவற்றைப்பற்றி ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். பஞ்சாக்கரம் மனத்தேக்கமெல்லாவற்றையும் தீர்க்கும்; மனத்தில் மாசுவைப் போக்குவதற்குத் திருநீற்றை நெற்றியில் அணியவேண்டும்; திருநீற்றைக் கொண்டே வினையைத் தீர்க்கமுடியும்.

புராணக் கதைகள் :- இராவணன் கயிலை மலையைப் பெயர்த்தது, கங்கையைச் சிவபெருமான் தலையில் சூடியது, உமையொரு பாகரானது, நஞ்சுண்டு கண்டம் கறுத்தது, திருமால் உலகளந்தது, அனுமார் கோதண்டம் பெற்றது, காவேரி நடுவில் திருமால் பள்ளி கொண்டது ஆகிய புராணக் கதைக் குறிப்புகளும் ஆங்காங்கே இடம்பெற்றுள்ளன.

கோயில்கள் :- கோயில், ஆலயம் எனும் பெயர்களில் அழைக்கப்படுகின்ற பல்வேறு கோயில்களைப் பற்றிய குறிப்புகளும் இடம்பெற்றுள்ளன. சிரக்கோயில், சுவாமி கோயில், சூரியனார் கோயில், நாகேசர் கோயில், நாச்சியார் கோயில், பொற்கோயில், சுப்பிரமணியர் ஆலயம், பிள்ளையார் ஆலயம் போன்றவற்றை ஆசிரியர் குறித்துள்ளார்.

4. தலப்பெருமை :- கதைத் தலைவன் நொண்டி 31 தலங்களுக்குச் சென்று இறைவனை வழிபட்டதாக ஆசிரியர் குறிப்

பிட்டுள்ளார். இவற்றுள் சான்றுக்கு ஒருசிலவற்றின் பெருமை களை மட்டும் இவண் காணலாம்.

முனிவர்கள் நாள்தோறும் வந்து வழிபடும் சிரகிரி என்றும்; தரணி புகழும் ஆனைக்காவல் என்றும், மூவர் பாடும் ஐயாறு என்றும், மேதினியில் புகழ் பெருகும் கும்பகோணம் என்றும், குவலயம் போற்றுகின்ற நாகேசர் கோயில் என்றும், அட்ட திக்கும் புகழும் சிதம்பரம் என்றும் ஆசிரியர் போற்றியுள்ளார்.

5. திருவாவடுதுறைஆதீனம்: துறைசைஆதீனம்எனஅழைக்கப் பெறும் இவ் ஆதீனத்தின் பராமரிப்பில் திருவிடைமருதூர்க் கோயில் விளங்குகிறது. இதனால் நூலாசிரியர் இவ் ஆதீனத்தின் பெருமையையும் நூலில் குறிக்கத் தவறவில்லை. 'நலம் சேருந் தலமிக்க துறைசை ஆதீனம்' எனப் போற்றுகின்றார். நமச்சி வாயர் என்பவர் இவ் ஆதீனத்தில் சிவஞான சீலமுனிவராக விளங்குகிறார். சகலகலை உணர்ந்த உத்தமர். நாள்தோறும் சைவாகமங்கள் கொண்டு தீக்கைகள் செய்விக்கிறார். சுப்பிர மணியத் தம்பிரான் என்பவர் இவ் ஆதீனத்துள் சேர்ந்து தீக்கை பெற்றுப் பணி செய்கிறார். இவர்கள் பராமரிப்பில் விளங்கு கின்ற திருவிடைமருதூர்க் கோயிலில் தானியங்கள் குவிந்து கிடக்கின்றன. இவர்கள் கட்டளைக்கு ஏற்பக் 'கார்பாறி' (மேலாளர்) முதல் படிப்படியாகப் பல்வேறு கணக்கர்கள், கிராமவட்ட மணியம். அன்பு பெற்ற குருக்கள், வேதிய தானீகர்கள், பிராமணப் பிள்ளைகள், வெள்ளாழப் பிள்ளைகள் முதலானோர் பணி புரிகின்றனர்.

தைப்பூசத் திருவிழாவின்போது துறைசை ஆதீனகர்த்தர் திருவீதி உலா வருகின்றார். இவருடன் பிற ஆதீனத் தலைவர்களும் வருகின்றனர்.

6. தமிழ் :- தமிழ், தமிழ்மாலை, மாதுரியதமிழ் என்ற குறிப்புக்கள் காணப்படுகின்றன.

7. எண்கள் :- இரண்டு முதல் கோடி வரை பல்வேறு எண்கள் இடம்பெற்றுள்ளன. ஆட்களுக்கும், பணத்திற்கும், வயதிற்கும், ஆயுதத்திற்கும், புள்ளோசைக்கும், உலகிற்கும் இவ்வெண்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

8. இசை-நாட்டியம் :- இசை-நாட்டியம் தொடர்பான பல்வேறு குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. தாசிப் பெண்கள் இக்கலைகளில் சிறந்து விளங்கியுள்ளனர். கோயில்களில் இசை பாடி, நாட்டியம் ஆடுவதைத் தொழிலாக இவர்கள் கொண்டுள்ளனர். தங்கமுத்து தம்புராவை மீட்டிப் பல குறவஞ்சி, பதங்கள், தெலுங்குப்பதம், இந்துத்தானி இசை, கியால்வகை (ஒருவகை இந்துத்தானிப் பாட்டு) போன்ற பலவகைப் பாக்களைப் பாடுகிறாள். தமுக்கு, தம்பட்டம், தம்புரு, தாளம், புல்லாங்குழல், பெரிய மேளம், மத்தளம் போன்ற இசைக் கருவிகளை வாசித்ததாகக் குறிப்பிடுகின்றார். தாசிப் பெண்கள் கோயிலில் பல்வேறு பதங்களுக்குப் பல அடவுகள் பிடித்து நாட்டியமாடுகின்றனர்.

நூலில் இடம்பெற்றுள்ள பாடல்கள் இசையுடன் பாடி நடிக்கப் பெற்றிருத்தல் வேண்டும். ஏனெனில் ஒவ்வொரு பாடலுக்கும் உரிய இராகம், தாளம் போன்ற குறிப்புகளை ஆசிரியரே கொடுத்திருப்பது இவண் குறிப்பிடத்தக்கது.

சுருட்டி, சங்கராபரணம், புன்னாகவராளி, ஆனந்த பைரவி, நாதநாமக்கிரியை, சாவேரி ஆகிய இராகங்களிலும் சாப்பு, ஆதி, ஏக, ரூபக தாளங்களிலும் பாக்கள் பாடப்பட்டுள்ளன. மேலும் தனனா தனதனனா தன' என்பது போன்ற சுரமும் கொடுக்கப்பட்டுள்ளது.

9. நூல்கள் :— மூவர் அருளிய தேவாரப் பாக்கள் கோயிலில் பாடப்படுகின்றன. தாசிப்பெண் தங்கமுத்து மன்மத நூலில் சிறந்தவளாக இருக்கிறாள். மேலும் இவள் கலிங்கத்துப்பரணி, கும்பநாதர் குறவஞ்சி, இராமநாடகக் கீர்த்தனை ஆகிய நூல்களில் இடம்பெற்றுள்ள காதற்சுவை நிரம்பிய பாக்களைப் பாடுகிறாள். மேலும் பல்வேறு நொண்டிகளைப் பற்றிக் கூறும்பொழுது ஆசிரியர் தம் காலத்தில் இருந்த குன்றக்குடி நொண்டி, சாத்தூர் நொண்டி, திருக்கச்சூர் நொண்டி, திருச்செந்தூர் நொண்டி, திருப்பழனி நொண்டி ஆகிய நொண்டி நாடகங்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

10. பொன்மொழி :— 'சேரிடம் அறிந்து சேர்'[28] என்று அவ்வையார் சொன்ன பொன்மொழி இடம்பெற்றுள்ளது.

28. திருவிடைமருதூர் நொண்டி நாடகம்: ப. 18.

11. அணிகலன்கள் :— ஆபரணம் என அழைக்கப்படும் அணிகலன்கள் பலவற்றை நூலில் காணமுடிகின்றன. கணையாழி, கண்டசரம், ரெத்தினம், முத்துக்கல், பாடகம், பொன் அரைஞாண், முத்துமாலை, சுட்டி, முன்கை முதாரி (வளையல்), கங்கணம், கொலுசு, பொட்டு, நகக்கடையம், பதக்கம், தண்டை, தங்க மோகனமாலை, பொன் சிந்தாக்கு, சவடி, மூக்குத்தி, கொப்பு முதலான பல்வேறு நகைகளைக் கதைத்தலைவன் செய்து தங்கமுத்துவுக்கு அணிவிக்கிறான். அவளை முதன்முதலில் கண்டபொழுது சந்திர ஆரத்தைப் பரிசாக அவளுக்கு அளிக்கிறான்.

12. உலோகம் முதலான பிற பொருள்கள் :- பாத்திரங்கள், போர்க் கருவிகள், பலசரக்குப் பொருள்கள் முதலானவை இடம்பெற்றுள்ளன.

தங்கத்தமுக்கு வெள்ளித் தமுக்கு, பொற்றகடு, தந்தச் செப்பு, பவழக்கிண்ணம், பீங்கான், பிடிசெம்பு, சட்டி, தங்கப் பாளம் ஆகிய பாத்திரங்கள் குறிக்கப்பட்டுள்ளன. இப் பாத்திரங்களில் பலவகையான பொருள்களை வைத்துப் பயன்படுத்துவது வழக்கம்.

ஆர்க்காட்டிலுள்ள வீரர்கள் பல்வேறு வகையான போர்க் கருவிகளைக் கொண்டு பயிற்சி பெறுவதாகக் குறிப்பிட்டுள்ளார் ஆசிரியர்- அப்போர்க் கருவிகள் வருமாறு :- அம்பு, அயில், ஈட்டி, சூரி, சூலம், துப்பாக்கி, வல்லயங்கத்திகள்.

அரத்தை, அருநெல்லிப்பிசின், அலகுபாக்கு, ஆதளை (ஆமணக்கு), உப்பு, கசகசா, கற்பூரம், கிராம்பு, குங்குமப்பூ, கொட்டைப்பாக்கு, கொத்தமல்லி, சாதிக்காய், சாம்பிராணி, சிறுகீரை, சீனிக்காரம், தானியம், பூண்டு, நற்சவ்வாதுப் பட்டை, வாகைப்பிசின், நெய், நெல்லிக்காய், பாக்கு வெற்றிலை சுண்ணாம்பு, பால், மஞ்சள், மத்தங்காய், வாள் மிளகு, வாழைக் கிழங்கு முதலான வீட்டு உபயோகப் பொருள்கள் குறிக்கப்பட்டுள்ளன, இவற்றுள் சிலவற்றைத் தாய்க்கிழவி மருந்து தயாரிக்கப் பயன்படுத்துகிறாள்.

இவை தவிர அபின், அம்மி, அரிதாரம், இருப்புலக்கை, கட்டில், கண்ணாடி, கதவு, சந்தனம், திண்டு, தூங்கும் மஞ்சம், தேங்காய், தென்னை, நிலைக்கண்ணாடி, பஞ்சணை, பன்னீர், மெத்தை போன்ற பொருள்களும் குறிக்கப்பட்டுள்ளன.

13. நம்பிக்கைகள் :- இந்நூலில் நற்சகுனமே இடம் பெற்றுள்ளது. பல்வேறு தலங்களுக்குச் செல்ல விரும்பிய சிங்கனும் அவன் நண்பன் சன்னாசியும் அந்தணனிடம் நல்லநாளைக் கேட்டு அதன் பின்னர்ப் புறப்படுகின்றனர்.[29]

பெண்ணுக்கு இடதுதோள் துடித்தல்,[30] பல்லி பலன்,[31] காகமும் ஆந்தையும் காதல் கொண்டது,[32] நல்ல கனவு கண்டது,[33] சுக்கிரன் உச்சத்தில் இருத்தல்[34] ஆகிய நற்சகுனங்கள் குறிக்கப்பட்டுள்ளன

14. திருட்டுத் தொழில் :- உயர்ந்த கள்ளர் சாதியில் பிறந்த கதைத் தலைவன், ஆத்மாவசியங்கள், மந்திரம், தந்திரம் போன்றவற்றைக் கற்றதுடன் திருட்டுத் தொழிலுக்குத் தேவையான கலைகளையும் கற்றுள்ளான். பச்சிலை மூலம் பூட்டுக்களைத் திறப்பது, பிறரை ஏமாற்றிப் பொருள்களைக் கவர்வது, எதிரியை வாய்கட்டிப் பேசாமல் இருக்கச் செய்வது, கன்னக்கோல் இடுவது, சொக்குப் பொடிகளைத் தூவிப் பிறரை மயக்கமடையச் செய்வது போன்ற கலைகளைக் கற்றுள்ளான்.

தன் வீட்டிலேயே தன் தந்தை சேர்த்து வைத்திருந்த பொருள்களைத் திருடிப் பல தலங்களுக்குச் செல்கிறான். தன் தந்தை சேர்த்து வைத்ததை எடுத்துச் செல்வது திருட்டு ஆகாது என இவன் நண்பன் கூறுகிறான்.

---

29. திருவிடைமருதூர் நொண்டி நாடகம், ப. 13.
30. மேலது, ப. 21.
31. மேலது, ப. 23.
32. மேலது, ப. 23.
33. மேலது, ப. 23.
34. மேலது, ப. 23.

தான் கொண்டு சென்ற பொருள் முழுவதையும் தாசி யிடம் இழந்த பின்னர்ப் பொருளுக்காகத் திருட்டுத் தொழிலை மேற்கொள்கிறான். எல்லாரிடமும் திருடுவதை மேற்கொள்ள வில்லை. திருடுவதற்கும் சில வரன்முறைகள் வைத்தே இவன் திருடுகிறான் அஃதாவது; சிவபூசை அரிபூசை செய்கின்றவர் கள், சாத்திரம் வேதங்கள் படித்தோர், பிராமணர்கள், சத்திரம் சோலைகள் வைத்த புண்ணியர், சாலைமடம் தண்ணீர்ப்பந்தல் அக்கிரகாரத் தருமங்கள் செய்யும் புண்ணியர்கள் போன்றவர் களின் இல்லங்களில் திருடுவது முறையில்லை என முடிவெடுக் கிறான். நிறைந்த செல்வம் உடையோர், நீதிமன்ற ஆங்கிலேய துரைகள் போன்றோர் வீடுகளில் திருடுகின்றான்.

தான் எந்தத் தாசியிடம் பொருள்களை இழந்தானோ அதே தாசி வீட்டிலேயே கொள்ளையடிக்கவும் செய்கிறான்.

ஆர்க்காட்டுச் சிறையிலிருந்து தப்பிய சிங்கன் அங்கே இருந்த பணம் சேமித்து வைத்திருந்த அறையிலிருந்து கொள் ளையடித்துத் தப்பிக் குதிரை ஒன்றையும் திருடி அதன்மேல் ஏறித் தப்பிப் புதுச்சேரிக்கு ஓடிவிடுகிறான்.

15. மருந்து தயாரித்தல் :- பொருள்களை ஆடவர்களிட மிருந்து கவர்வதற்காகத் தாசி வீட்டில் பலவிதமான பொருள் களைக் கொண்டு மருந்து தயாரித்துக் கொடுத்து மயக்கிப் பொருள் பறிப்பது வழக்கம். இவ்வகையில் தாய்க்கிழவி மருந்து தயாரிக்கப் பயன்படுத்திய பொருள்கள் வருமாறு :- வெள்ளைப் பாளை, நாய்ப்பாகல், பூலாவேர், சறுக்கான காஞ்சுறிஞ்சி, கருந் தொட்டிக் கஞ்சாப்பேய்க்கொமட்டி, கொட்டான், மலைகலக்கி, நல்ல கூத்தான் குதம்பை, நார்த்தையின்பூ நெட்டான வாகைப் பிசின், அருநெல்லிப்பிசின், காட்டுமல்லிகைவேர், கையாந்தகரை விரை நெல்லிக்காய், பேச்சுரைக்காய், மத்தங்காய், கொய்யா, வடவேர், மிக்க கோழி ஆவாரை, வீழிஇலை, காட்டு வெண்டை யின் வேர், பெருஞ்சுண்டையின் வேர், வாழைக்கிழங்கு, துத்தி, மாதளை, வல்லாரை, ஆதளை, நாவடக்கி, வாதம்அடக்கி, திகைப் பூண்டு, விடத்தலை, சீதேவி செங்கழுநீர், வட்டத்திப்பிலி, சிறு கீரை, குப்பைமேனி, கருந்துவரை, வெள்ளை ஏலம், கொட்டைக் கருநீலிவிரை, ஓணாங்கொடி ஆகிய இவற்றுடன் அரிதாரம்,

கற்பூரம், செவ்வீரம், இலிங்கம், விண்டிடாத திண்ணம், துத்தம், வெள்ளைச் சலாசத்துத் துள்ளுகுட்டி. துரிசு, மலைச்சுக்கு, அரத்தை, தக்கோலம், வெள்ளை ஏலம், கிராம்பு. மயல் மீறும் அபின், கூகைநீர், சாம்பிராணி, குக்கில் கொத்தமல்லி, மஞ்சள், முத்தக்காசு, நாகரிகச் சாதிபத்திரி, சிறுநாகப்பூ, சாதிக்காய், மோக மிக்க அதிமதுரம், காமவெறியை உண்டாக்கும் நெறிவிடம், செக்கச் சிவந்த கொச்சி, மஞ்சள், சிங்கி சீனிக்காரம், குங்குமப்பூ, உப்பு, காமம் பொங்கும் கசகசா ஆகிய கடைச்சரக்குப் பொருள்களை ஒன்றாகச் சேர்க்க வேண்டும். அதன்பிறகு கருங்கூகைக் கண், இளந்தோகைச்சௌ, நரியெலும்பு, புற்று மேலே நல்ல பாம்புத்தோல், செந்நாய்ப்பவள வாய், தூக்கணாந்தொண்டை, மூக்குகள், வேலியில் இருந்து கண்ட ஓணான், மாடப்புறா நாக்கு, மரவட்டை, கொட்டிடுந்தேள் கூடிப் .பனைமரத்தில் இருக்கும்படிக் கண்டத்தில் ஒன்பது, குறுமுயலின் காது, அண்ணாந்த ஆந்தையின் கண், பரிமுதுகு, கரையான், பாம்பின்முட்டை, குரங்கின் குட்டிப்பல், தேவாங்கீரல், கொட்டைப்பாக்கு, புழுகு, காக்கை நிணம், வல்லூரு நெஞ்செலும்பு, பெருமாவிற்குயிலதின் சேவலெச்சம், புலிமீசை, பசு ஈணாக்கிடாரியின்சாணிப் புழு, மொச்சைக் கொட்டைப்புழு, எலிமூளை ஆகிய இவற்றையும் சேர்த்துத் தயலிமாக வடித்தெடுத்து கடைச் சரக்கைப் பேயின் மருட்டி இலைச்சாற்றில் புரட்டி வைத்து அந்தச் சாற்றினிலே பின்னும் மைபோல் அரைத்து அதைக் கைபாகமாய் வைக்க வேண்டும். மாட்டுத் தொழுவத்தில் பல நாட்கள் வைத்துப் பின்னர் அதைஎடுத்து அம்மியில் வைத்து அரைத்துஉண்டை கூட்டவேண்டும். மறுபடியும் அதில் அழுக்குகள், காலடிமண், தாம்பூல எச்சில் வேர்வையையும் சேர்த்து அரைத்து உண்டையாகச் செய்து அதை வெல்லப் பழத்தினிலும், பாக்கு வெற்றிலை சுண்ணாம்பிலும், பாலிலும் கலந்து கொடுக்க வேண்டும். இதை அருந்திய அல்லது சாப்பிட்ட ஆடவர் மயக்கமடைந்து நினைவினறி இருப்பர். இதைப் பயன்படுத்தி அவர்களிடமிருந்து தனக்குத் தேவைப்படும் பணத்தைப் பறிப்பது தாசிகளின் வழக்கம்.

உவமைகள்

'போல' எனும் உவம உருபிலேயே எல்லா உவமைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

அம்பரம் போல் எங்கும் ஆதி சதாசிவன் நிறைந்து விளங்குகின்றான். திருவிடைமருதூர்த் தைப் பூச விழாவில் மேளகாரர் 'கடலோசை போல்' முழங்குகிறார். திருவிடைமருதூரில் பலர் அறக்கொடைகள் நல்கியுள்ளனர். அவர்களுள் செட்டிமார்களைப் போல் இனியாருமுண்டோ' என்று வினவுவதையும் காணமுடிகிறது. நொண்டி வர்த்தகன் போல் வேடமிட்டுப் புதுச்சேரிக்குச் செல்கிறான்.

சிங்கனும், தாசியும் சேர்ந்திருந்ததை வருணிக்க வந்த ஆசிரியர் பல உவமைகளைக் கையாள்கின்றார். இவன் தாசி வீட்டிற்கு வந்தபொழுது 'காணாததைக் கண்டது போல' வரவேற்கப்படுகிறான். தன் மகளைப்பற்றித் தாய்க்கிழவி கூறும் பொழுது 'பரத்தையரைப் போல் பல பேரைத் தொட்டும் அறியாள்' என்கிறாள். மேலும் இருவரையும 'வேளும் ரதியும் போல மகிழ்ச்சியுடன் இருங்கள்' எனவும் வாழ்த்துகிறாள். கலவியில் ஈடுபட்டிருக்கும்பொழுது 'பச்சைப் பிள்ளைகள் போல மொழி குளறியது' என்கிறார்.

இயற்கைப் பொருள்கள்

மரங்கள், பழங்கள், மலர்கள், உயிரினங்கள், ஆறுகள் ஆகிய இயற்கைப் பொருள்கள் ஏற்றவிடங்களில் ஆசிரியரால் பயன்படுத்தப்பட்டுள்ளன.

மரங்கள்:- கதலி, கொய்யா, கொன்றை, பலா, பனை, மா, வாகை, தென்னை போன்ற மரங்கள் இடம்பெற்றுள்ளன. கொன்றையைச் சிவபெருமான் தலையில் சூடியுள்ளான். திருவிடைமருதூருக்கு வளம் சேர்க்கும் விதத்தில் சில மரங்கள் காணப்படுகின்றன.

பழங்கள் :- எலுமிச்சம்பழம் மட்டும் குறிக்கப்பட்டுள்ளது. பல இடங்களில் கனி என்றும், பழம் என்றும் பொதுவாகக் கூறப்பட்டுள்ளன.

மலர்கள் :- அரவிந்தம், மல்லிகை, செங்கமலம், முல்லை, வாகை, பிச்சி ஆகிய மலர்கள் குறிக்கப்பட்டுள்ளன. பூச்சரங்கள் கட்டிலில் தொங்குகின்றன.

உயிரினங்கள் :- ஆந்தை, ஓணான், கருங்கூகை, மான், கவுதாரி, காகம், குதிரை, நாய், நரி, பசு, பாம்பு, புலி, மயில், புறா, முயல், யானை, அன்னம் முதலான பறவைகளும் விலங்குகளும் இடம் பெற்றுள்ளன. அன்னம் பெண்ணின் நடைக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

ஆறுகள் :— கங்கை, காவிரி ஆகிய ஆறுகள் குறிக்கப் பட்டுள்ளன. கங்கையைச் சிவபெருமான் தலையில் சூடியுள்ளான்; காவிரி, பொன்னி, பொன்னிநதி எனவும் அழைக்கப்படுகிறது. காவிரி ஆறாகவும், தீர்த்தமாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது

சொற்கள்

அக்காலத்து மக்கள் பயன்படுத்திய பல்வேறு சொற்களை ஆசிரியர் இந்நூலில் பயன்படுத்தியுள்ளார். அவ்வாறு அவர் பயன்படுத்திய சொற்களை இப்பகுதி ஆராய்கிறது.

பேச்சுவழக்குச் சொற்கள் :— பேச்சுவழக்குச் சொற்களை மிகுதியாகக் கையாண்டிருப்பதைக் காணமுடிகின்றன. அஞ்சு, அடடா, ஆச்சுது, என்கச்சே, ஓகோ, கடுதாசி, கமுக்கம், சாய ரட்சை, சுமுகம், செகம், காணும், சொன்னத்தை, தட்சமயம், தெண்டம், தென்பு, நேத்தி, முந்தாநாத்து, ராத்திரி, வரச்சே, வாடி முதலான பல்வேறு பேச்சுவழக்குச் சொற்கள் காணப்படு கின்றன. இவற்றுள் பெரும்பாலான சொற்களில் பிராமணர் களின் பேச்சுத்தமிழைக் காணமுடிகின்றன. ஒருவேளை இந் நூலாசிரியர் அந்தணர் குலத்தைச் சேர்ந்ததனால் இந்நிலை ஏற்பட்டிருக்கலாம் எனக் கூறலாம்.

பிறமொழிச் சொற்கள் :—தமிழ் தவிரத் தெலுங்கு, மராட்டி உருது, வடமொழி போன்ற பிறமொழிச் சொற்களையும் ஆசிரி யர் பயன்படுத்தியுள்ளார். இந்நாடகத் தலைவன் பல மொழி களை அறிந்தவனாகப் படைக்கப்பட்டுள்ளான். பல்வேறு மொழி பேசும் மக்கள் அனைவரும் ஒன்றாக வாழ்ந்ததை இச் சொல் ஆட்சி புலப்படுத்துகிறது அச்சா, அபிஷேகம், ஆஸ்தி, இங்கி லீஷுதுரை, கபாத்து, கஜானா, சிபாயி, ஜமதாடு, பாரா, பந் தோபஸ்து, புருஷன் மத்யஸ்தம், முஸ்தீப்பு, விஷம் முதலான

பலமொழிச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. சில சொற்கள் தமிழ் ஒலிக்கேற்ப எழுதப்பட்டுள்ளன. அவை :—

இஷ்டம் — இட்டம்
ஜெகம் — செகம்
ஜெபம் — செபம்
ஸ்தானீகர் — தானீகர்

தெலுங்கு, இந்தி, மராட்டி ஆகிய மொழிகளில் பேசப்படும் சொற்களை அப்படியே தமிழில் ஆசிரியர் பயன்படுத்தியதையும் காணமுடிகிறது. அவற்றுள் ஒருசில வருமாறு :—

1. நீயே வூரு எக்கட நுஞ்சி வஸ்தூவி
   ஏக்கட போத்தாவு; நூ எவுர் மனு ஷி
2 தெக்கிறி நுஞ்சி வஸ்தானு பெத்த நபாபு
   தெக்கிறிக் கிஜாப்ப தீஸ்குனி போத்தானு
3. துக்கோணஹெக ஹாஸெஆத்தே
4. கிஸ்கி, அதிமிஹெ யாக்க ஹாஜாத்தே
5. தூக்கோண், கொணாக் கெட ஆலாஸ
6. கொணா ஜவன் ஜாத் தேஸ

அடுக்குச் சொற்கள் :— அண்டி அண்டியே, அவுது அவுது, கொஞ்சிக் கொஞ்சி, சிவ சிவ, சுறுசுறுப்பு, நகநக, நன்று நன்று படபட, மழுப்பி மழுப்பி, மெத்த மெத்த, வரவர, வெகுவெகு போன்ற 39 சொற்கள் அடுக்குச் சொற்களாகப் பயன்படுத்தப் பட்டுள்ளன.

பிற :— செக்கச் சிவந்த, மென்மேலும், வகைதுகை போன்ற சொற்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஈ) பிற நாடகங்கள்

குறவஞ்சி, விலாசம், நொண்டி, கீர்த்தனை ஆகிய நாடக வகைகள் தவிர ஐந்து நாடகங்கள் இப்பிரிவில் அடங்குகின்றன.

10

காவேரி கல்யாணம்

தஞ்சை மராட்டிய மன்னர் இரண்டாம் சகசி இந்நூலைப் பாடியிருக்கின்றார். தமிழிசை நாட்டிய நாடகமாகத் திகழும் இந் நூல் யட்சகானத்தின் ஒரு பிரிவாகிய பாகவதமேள நாடக மரபைச் சார்ந்திருக்கிறது.[1] 'காவேரி சாகர கல்யாணம்' என அழைக்கப்பெறும் இந் நாடகம் பொதுவியல் மரபில் சகசி மன்னர் அரண்மனை நாட்டியசாலையில் அரங்கேற்றப்பட்டு நடிக்கப் பட்டிருக்கிறது.[2] இந் நாடகக்கதை திருவையாறு பஞ்சநதீசர் கோயிலில் நிகழ்த்தப்பட்டிருக்கிறது.[3] தஞ்சைச் சரசுவதி மகால் நூலகத்தில் இந்நூலின் இரண்டு ஓலைச்சுவடிகள் தெலுங்கு எழுத்தில் டி எடுக்கப்பெற்ற தமிழ் நாடகமாக இருக்கிறது.[4] வ. வேணுகோபாலன் இந் நூலினைப் பதிப்பித்திருக்கிறார்.[5]

'இரண்டாம் சகசி மன்னர்' இந்நூலைப் பாடியிருக்கிறார் என்ற குறிப்புக் காணப்படுகிறது. இந்நூலில்,

---

1. வ. வேணுகோபாலன் (ப.ஆ.), 'காவேரி கல்யாணம்', ஐந்து தமிழிசை நாட்டிய நாடகங்கள், சரசுவதி மகால் நூலக வெளியீடு, தஞ்சாவூர், 1980, ப. 203.
2. மேலது, ப. 204.
3. மேலது, ப. 204.
4. சுவடி எண்கள் 222/683 (a), 238/699 (b).
5. காவேரி கல்யாணம், பக். 203-242.

"சகசிராசன் குலதெய்வமே!" (பா. 17)

"கமலைமா தருளாலே புவியை - யாளும்சகசி
இராச தேவேந்திரன் மேலே
கருணை செய்வது போலே
கல்யாணம் செய்யும்" (பா. 29)

என்று காவேரியும்

"புகழ் பஞ்சநதி வாசா
போசல குல யீசா
சகசிராச னிரவும் பகலும்
தான் பணியுஞ் சர்வேசா" (பா. 27)

என்று கவேரராசனும்

"தினம் போசலகுல சகசேந்திரன் பணி-பஞ்சநதீசுவரா"
(பா.32)

"சகசி மகா ராசனால்
சோழ மண்டலத்தில்
தினமு மிந்தப் புவி
விளையச் செய்து
ஸ்திரமாக யெப்போதும்
வாழ்ந்திடுநீ" (பா. 33)

தண்டமிழார் சகசேந்திரன்
தானாக வளரும் சோழ
மண்டலத்தை வளர்க்கும்
தேவிக்கு மங்களம்" (பா. 34)

என்றும் வருகின்ற பாடல்களில் சகசி மன்னர் பெயர் இடம்பெற்றிருக்கிறது.

மராட்டிய மன்னர்கள் வளர்த்துப் போற்றிய இலக்கியங்களில் நூலாசிரியர் பெயர் நூற்பகுதியில் இடம்பெறுவதைக் காணமுடியவில்லை. நூலின் காப்புப் பகுதியிலேயே பெரும்பாலும் ஆசிரியர் பெயர் இடம்பெற்றிருக்கிறது. எனவே இந்நூலில் இடம்பெற்றிருப்பதைப் பார்க்கின்றபொழுது இந்நூலை இயற்றியவர் சகசி மன்னர்தானா என்ற ஐயம் எழுகின்றது. இந்நூலை இயற்றிய புலவர் தம்முடைய நன்றியறிதலை வெளிப்படுத்து

முகத்தான் தம்மை ஆதரித்துப் போற்றிய இரண்டாம் சகசி மன்னர் பெயரையே இந்நாடக ஆசிரியராகக் குறிப்பிட்டிருக்கக் கூடும் என்த் தெரிகிறது.

நூலமைப்பு

பத்துக் கதாபாத்திரங்களைக் கொண்ட இந் நாடகம், இசை நாட்டிய மரபின் வழியே இசைப்பாக்களாலும் இடையிடையே உரைநடை விவரப்பெற்றும் அமைந்திருக்கிறது

முதலில் தோடய மங்களம், மங்களம். விநாயகர் தருவு ஆகியன இருக்கின்றன. அடுத்துக் காப்பு விருத்தம் 1, இசைப் பாக்களாலான தருவுகள் 33, மங்களதருவு 1 ஆகிய நாடகப் பாக்கள் அமைந்திருக்கின்றன.

சூத்திரதாரன், இந் நாடகத்தைத் தொடங்கி வைக்கக் கட்டியக்காரனை அறிமுகம் செய்து வைக்கிறான். கட்டியக் காரன் அரங்கிற்கு வந்து நாடகத்தைத்தொடங்கி வைக்கிறான்.

நூல் நுதலிய பொருள்

கவேரராசனும் அவன் மனைவியும் தங்கள் மகள் காவேரிக்கு ஏற்ற கணவனைத் தேர்ந்து வருமாறு அமைச்சரிடம் கூறுகின்றனர். அமைச்சரும் பல நாடுகளுக்கும் சென்று வரும் பொழுது அகத்திய முனிவரைப் பார்த்துக் காவேரியின் சிறப்புகளைக்கூறி அவளுக்கேற்றகணவரைக் கூறும்படிக் கேட்கிறார். அகத்தியர், 'காவேரிக்கு ஏற்ற கணவன் சமுத்திரராசன்தான்' என்று கூறி அமைச்சருடன் கவேரராசனைச் சந்திக்க அரண்மனைக்கு வருகிறார்.

தனக்கேற்ற கணவனைக் கருதித் திருவையாற்றிலுள்ள பஞ்சநதிப் பெருமானை விரதமிருந்து வழிபட்டு வருகிறாள் காவேரி. அவளிருக்குமிடத்திற்கு அகத்தியர், கவேரராசன், அவன் மனைவி, அமைச்சர் முதலானோர் வருகின்றனர். கவேரராசன் தன் மகளிடம் சமுத்திரராசனை மணம் செய்து கொள்ளும் படிக் கூறுகிறார். அதற்குக்காவேரி, "எனக்கு ஏற்ற கணவனைப் பஞ்சநதியீசுவரர் சொன்னாலன்றிச் சம்மதிக்கமாட்டேன்" என்று மறுமொழி கூறுகிறாள்.

அதன்பின்னர் அகத்தியர் தம்முடைய தவவலிமையால் பஞ்சநதியீசுவரரைத் தோன்றச் செய்கிறார். பெருமான் காவேரியைச் சமுத்திரராசனுக்கு மணம் செய்து வைக்கச் சொல்கிறார். அதன்படி அகத்தியர், சமுத்திரராசனைத் திருவையாற்றுக்கு அழைத்து வருகிறார். பின்னர்ப் பஞ்சநதி யீசுவரர் முன்னிலையில் அகத்தியர் இருவருக்கும் திருமணம் செய்து வைக்கிறார். அனைவரும் பெருமானைப் போற்றி வணங்குகின்றனர்.

இறுதியில் 'சோபனத்'துடன் காவேரி கல்யாண நாடகம் நிறைவுறுகிறது.

பாத்திரப் படைப்புகள்

காவேரி, சமுத்திரராசன் ஆகிய இருவரும் முதன்மைப் பாத்திரங்களாகவும் சூத்திரதாரன், கட்டியக்காரன், கவேர ராசன், கவேரராசன் மனைவி, அமைச்சர், சகி, அகத்தியர், பஞ்சநதீசர் ஆகியோர் துணைப்பாத்திரங்களாகவும் இடம் பெறுகின்றனர்.

காவேரி :- மிருகசீரிட நட்சத்திரத்தில் பிறந்த இவள் இந் நாடகத் தலைவியாவள்; மென்மைக்குணம் கொண்டவள்; பெண்கள் கொஞ்சுகின்ற கிளி போன்ற வடிவுடையவள்; இசையில் குயில் தோற்றுப்போகும்; நடையில் மான் போன்ற வள். தாமரைக் கையினை உடைய இவள் சுந்தரகாவேரி என்றும் காவேரி அம்மன் என்றும் அழைக்கப்படுகிறாள். இவள் நல்ல கலவைச் சாந்தை உடம்பில் அணிந்து, கூந்தலில் மலர் களைச் சூடி, கரிய விழிகள் புரளப் பல அணிகலன்களை அணிந்து, முலைமேல் மாலை துவளத் தன் தோழியுடன் முழுநிலவு தோன்றியது போலத் திருவையாறுக்கு வருகிறாள். சந்திரகாவிச் சேலை கட்டி, சரிகை இரவிக்கை அணிந்து, காலில் அந்தை அணிந்து, அன்னம்போல நடை நடந்து கொவ்வை இதழ் துலங்க, கொடி போல் இடை துவள, செவ் விளநீரைப் போலத் திரண்ட முலைகள் குலுங்க, நெற்றியில் திலகம் இட்டு, சேல்விழிக்கு அஞ்சனம் தீட்டி நிலவுப் பூப் போல் குறுநகை புரிந்து தன் தோழியுடன் சிவபெருமானுக்கு

அருச்சனை செய்ய வருகிறாள். இவள் தனக்கு ஐந்து வயதாக இருக்கும் பொழுதிலிருந்தே பஞ்சநதிப் பெருமானிடம் மிகுந்த பற்றுக் கொண்டிருக்கிறாள். நாள்தோறும் அன்றலர்ந்த மலர்களைப் பறித்துச் சிவபெருமான் பாதங்களில் அருச்சனை செய்கிறாள். மங்கைப் பருவமடைந்தவுடன் தனக்குச் சிறந்ததொரு கணவன் வேண்டும் என்று போற்றிப் பணிந்து வணங்கிச் சிவ பூசை செய்கிறாள். மோகனாஸ்திரம் போன்று கவர்ச்சி ஏற்படுத்தும் விழிகளை உடைய இவள் பஞ்சநதிப் பெருமான் நேரில் எழுந்தருளிச் சமுத்திரராசனை மணம் செய்துகொள்ள இசைவு தெரிவித்த பின்னரே மணம் செய்கிறாள்.

சமுத்திரராசன் :— இந் நாடகத் தலைவன்; திருமால் மேனியைப் போன்றவன்; மெத்த அறிவு ஆற்றலுள்ளவன்; வடிவத்தில் மதராசன் போன்றவன்: உத்தமன்; நடுத்தர உயரமுடையவன்; எப்பொழுதும் இசை பாடிக்கொண்டிருப்பான்; நாள்தோறும் சிவபூசை செய்யாமல் உறக்கம் கொள்ளமாட்டான். அகத்தியரை நோக்கித் தவம் செய்து தனக்கேற்ற பெண்ணைத் திருமணம் செய்து வைக்கச் சொல்கிறான். அதன்படி அகத்தியரும் இவனுக்கேற்ற கவேரராசனின் பெண் காவேரியைத் தேர்வு செய்கிறார். திருவையாறில் எழுந்தருளியுள்ள பஞ்சநதிப் பெருமானைக் காண்பதற்காக வலம்புரிச் சங்கு, கனகமணி, தாமரைமலர் ஆகியவற்றுடன் மன்மதன் போல மகிழ்ச்சியுடன் அகத்தியர் அழைத்துவர வருகிறான். பின்னர் இருவருக்கும் திருமணம் நடைபெறுகிறது.

சூத்திரதாரன் :— நாடகத்தை அறிமுகம் செய்து விளக்கம் கொடுக்கிறான். கதாபாத்திரங்களை அறிமுகப்படுத்தி நாடகத்தை நடத்துகிறான். உரைநடையிலும் கவிதையிலும் இவன் பேச்சுகள் அமைந்திருக்கின்றன. நாடகக் கதாபாத்திரங்களைச் சில வேளைகளில் விசாரணை செய்கிறான்.

கட்டியக்காரன் :- சபையோர்க்கு முதலில் இக் கட்டியக்காரனைச் சூத்திரதாரன் அறிமுகம் செய்து வைக்கிறான். நாடகத்தைத் தொடங்கி வைப்பதுடன் இவன் பணி முற்றுப் பெற்று விடுகிறது.

கவேரராசன் :- கதைத்தலைவி காவேரியின் தந்தை. இவன் தன் மனைவியுடன் அரசவைக்கு வஞ்சியர்கள் புடை சூழ்ந்துவர, இருபுறமும் கவரிகள் வீசிவர, தாமரை மணி மார்பு இலங்கும்படியாக வட்டமான மதிபோன்ற குடையினைப் பிடித்துவர, புலவர்கள் கவிதைகள் பாட, கட்டியங்கள் சிலர் கூற வருகிறான். தன் மனைவியின் ஆலோசனைப்படி அமைச்சரைத் தன் மகளுக்கேற்ற கணவனைத் தேர்ந்தெடுத்து வருமாறு பல நாடுகளுக்கும் அனுப்புகிறான். அதன் பின்னர் அமைச்சர், அகத்தியரை அழைத்துக்கொண்டு சபைக்கு வருகிறார். அகத்தியர், காவேரிக்கு ஏற்ற கணவன் சமுத்திர ராசன்தான் என்று கூறுகிறார். அதன்பின்னர் அனைவரும் திருவையாறுக்குச் செல்கின்றனர். தன் பெண்ணிடம் சமுத்திர ராசன் பெருமைதனைக்கூறி மணம் செய்து கொள்ள ஒப்புதல் கேட்கிறான். பின்னர்ப் பஞ்சநதிப் பெருமான் அருளால் தன் மகளுக்கும் சமுத்திரராசனுக்கும் மணம் செய்து வைக்கிறான்.

கவேரராசனின் மனைவி :- காவேரியின் தாய். இவள் தன் கணவனுடன் சபைக்கு வருகிறாள். தன் பெண்ணுக்கு ஏற்ற கணவனைத் தேடித் திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்று தன் கணவனிடம் ஆலோசனை கூறுகிறாள். நூல் தொடக்கத்தில் இவ்வாறு ஆலோசனை கூறியதுடன் இவளுடைய பங்கு முடிந்து விடுகிறது பிற இடங்களில் இவள் பேசியதாக எவ்விதக் குறிப்புகளும் காணப்படவில்லை. ஆனால் நாடகம் முடிகின்றவரை தன் கணவனுடனேயே சேர்ந்து வருவதாகச் சூத்திரதாரன் குறிப்பிடுகிறான்.

அமைச்சர் :- மந்தார மாலையைத் தோளிலணிந்த காவேரி அரசனின் மந்திரி. காவேரிக்கு நல்லதொரு மணமகனாகத் தேடிவரும்படி அரசரிடம் அரசி ஆலோசனை கூறியதற்கேற்ப இவ் அமைச்சர் பல நாடுகளுக்கும் சென்று தேடுகிறார். இறுதியில் அகத்திய முனிவரைப் பார்த்துத் தாம் செல்கின்ற நோக்கத்தைக் கூறுகிறார். அதைக்கேட்ட அகத்தியர், சமுத்திர ராசனைப் பற்றி அமைச்சரிடம் கூறி அவருடனேயே அரசரைப் பார்ப்பதற்கு வருகிறார்.

சகி :— காவேரியின் தோழியர்களுள் ஒருத்தி. இவள் எப்பொழுதும் காவேரியுடனேயே இருக்கிறாள். காவேரி, பஞ்சநதீசுவரரைப் பூசை செய்கின்றபொழுது இவள் அறிமுகமாகிறாள். இவள் பேசியதாகக் குறிப்புகள் இல்லை.

அகத்தியர் :-

''சடையும் விரித்து வரிப்
புலித் தோலு முடுத்துத்
தவளநீறும் பூசிக் கொண்டு
அடிமே லடி நடந்துகொண்டு
மிரட்டிக் கண்ணை விழித்துக்கொண்டு
விளங்கு ருத்திராக்க மாலையணிந்து
அரஅரஅர சிவனே யென்று
அகத்திய மாமுனி வந்தாரே'' (பா. 7 ப. 212)

என்று சூத்திரதாரன் இவர் சபைக்கு வருவதை அறிமுகம் செய்து வைக்கிறான்.

'அகத்திய மகாமுனீசுவரர்' என அழைக்கப்பெறும் இவர் சமுத்திரராசன் பற்றி அமைச்சரிடம் எடுத்துக் கூறி அவருடன் கவேர மன்னனைக் காண வருகிறார் சிவ வழிபாட்டைச் சிறப்புடன் செய்த பெருமை உடையவர். காவேரிக்கும் சமுத்திர ராசனுக்கும் திருமணம் நிகழ்த்தி வைத்தற்பொருட்டுத் திருவையாற்றுப் பெருமானைத் தம் தவ வலிமையினால் நேரில் எழுந்தருளச் செய்து அப்பெருமான் மூலமாகவே அத்திருமணத்தையும் நடத்தி வைக்கிறார்.

சிவபெருமானுக்கும் பார்வதி தேவிக்கும் இமயமலையில் திருமணம் நிகழ்ந்த பொழுது தேவர்களெல்லாம் இம் மலையில் கூடியதனால் ஒரு பக்கம் உயர்ந்துநின்ற இமயமலையைச் சரி செய்வதற்காகச் சிவபெருமானால் பொதியமலைக்கு அகத்தியர் அனுப்பப்பட்ட பெருமை உடையவர்.

பஞ்சநதீசர் :- திருவையாற்றில் எழுந்தருளியுள்ள பெருமான். இந் நாடகக்கதை இத் திருவையாறு பஞ்சநதீசர் கோயிலிலேயே நிகழ்கிறது. இப்பெருமான் புகழ் நாடகக்கதை மாந்தர்க

ளால் பல்வேறிடங்களில் போற்றப்படுகின்றது. சிலவிடங்களில் இவர் கூற்றும் இடம்பெற்றிருக்கிறது.

காவேரி இப் பெருமானை வழிபடுவதற்காக வருகிறாள். அப்பொழுது ''கங்கை வேணியன், காலகால நீலகண்டன், அரவ பூஷணன், சூல கபால மேந்தியவன், அம்புலி தரித்தவன், புலித் தோலை ஆடையாக உடுத்தவன், தலைமாலை அணிந்தவன், சாமவேத கானப்பிரியன்'' என்று பலவாறாகப் போற்றித் துதிக்கிறாள்.

அகத்தியர் தம் தவ வலிமையினால் இப்பெருமானை நேரில் எழுந்தருளச் செய்வதற்குப் பலவிதமாகப் போற்றித் துதிக்கிறார். அப்பொழுது பெருமான் புகழினைப் பின்வருமாறு கூறுகிறார் :

1. திருமால் தாமரை மலர்களால் உன்னை அருச்சனை செய்கின்றபொழுது பூ ஒன்று குறைந்தமைக்காகத் தம் கண்மலரைப் பறித்து வழிபடும் வேளையில் அப் பக்திக்கிரங்கித் தோன்றியவர்.

2. பிச்சிப் பூவால் அருச்சனை செய்த மார்க்கண்டே யனைப் பிடிக்கவந்த நமனை உதைப்பதற்காகத் தோன்றியவர்.

3. கோட்டு முலைச்சி பரவை நாச்சியார்தனைக் கூடிக் கும்பிட்டுப் போற்றும் சுந்தரர் பாட்டுக் கிரங்கி வந்தவர்.

4. வாக்கிசைந்த கொங்கை உமையாள்தனைப் புணர்ந்த மணவாளக் கோலத்துடன் எனக்குக் (அகத்தியர்) காட்சியளித்தவர்.

5. அம்பல் எனுந்தலத்தில் வேதம் படிக்கும் அந்தணன் ஒருவன் யக்ஞத்தில் வரவேண்டுமென்று வருந்தும் வேளையில் (உன்) பாதம் காட்டியவர்.

6. முனிவர் வேடத்தில் வந்து செங்காட்டங்குடியில் சிறுத் தொண்டர் அளித்த பிள்ளைக்கறியை உண்டு அதன் பின் அப் பாலகனுடனே தோன்றியவர்.

7. திக்கெல்லாம் புகழ்பெற்ற மனுநீதிச்சோழன் மனத்தைச் சோதிக்க நமனென்னும் கன்றைத் தேரிலுற வைத்தபின்னும் பசு வடிவில் தோன்றியவர்.

8. திருஞான சம்பந்தர் இப்புவியில் தோன்றிப் பாலுக் காக ஏங்கி அழுதபொழுது உமையுடன்தோன்றியவர்

9. முதலை உண்ட பிள்ளையை அழைத்துத் திருமணம் முடித்து அவனுடைய காணியாகிய பதியில் வைத்தவர்.

அகத்தியர் இவ்வாறு வழிபாடு செய்த பின்னர்ப் பெரு மான் எழுந்தருளுகின்றார். ''அகத்திய மகாமுனியே, நீ பண்ணின தோத்திரத்திற்கு மிகவும் சந்தோஷம். அப்படியே காவேரி கன்னிகையை, சமுத்திரராசனுக்குக் கலயாணம்பண்ணி வைக்கிறோம். நீ சீக்கிரம் போய், சமுத்திரனை அழைத்துக் கொண்டு வருக'' என்கிறார்.

சமுத்திரராசன், ''அரவு, கங்கை, திங்கள் சடையினில் அணிந்தவன்; துடி, மான், மழு, சிரசு, சூலம் கையினில் ஏந்தியவன்; விடை மீதேறி வருபவன்; மறையோனும் மாலும் காணா மகாதேவன்; அறம் அளித்த நாயகி பங்கினில் அமர்ந் தவர்'' என்று போற்றுகிறான்.

பின்னர் இப் பெருமான் திருமுன்னிலையில் காவேரிக்கும் சமுத்திரராசனுக்கும் திருமணம் நிகழ்கிறது. அதன்பின்னர் அனைவரும் ''நல்ல முனிவர்க்கும் ஆதிசைவர்க்கும் கொழுந்தான மூர்த்தி; ஏழை பங்காளர்; கங்காளர்; விடையேறும் பரமசிவன்; வேழமுகத்தானைப் பெற்றவர்; வேதாந்த வேதியர்; பரமேசன்; ஈசுவரன்'' என்று போற்றுகின்றனர்.

இன்னிசை நாட்டியப் பனுவல்

இசை நாட்டியப் பாக்கள் 'தருவு' என்ற சொல்லால் குறிக்கப்படுகின்றன. இந்நூலில் தருவுப் பாக்கள், விநாயகர்

தருவு திரை தருவு, மங்கள தருவு ஆகிய தருவுகள் காணப் படுகின்றன.

நூல் தொடக்கத்தில் 'காப்பு'ப்பகுதி முடிந்தபின் விநாய கரைப் போற்றி வணங்கும் முறையில் மூன்று பாக்கள் 'விநாயகர் தரு'வாக அமைந்திருக்கின்றன.

காவேரி தன் தோழியர்களுடன் திருவையாறிலுள்ள பஞ்சநதீசரை வழிபடுவதற்காக வரும்பொழுது 'திரை தருவு' பாடப்படுகிறது. நாடக அரங்கின் திரைக்குப்பின் இசைப் பாக்களைக் கொண்டு கதாபாத்திரங்களின் வருகையைப் பற்றிக் கூறுகின்ற 'உள்தருவு' என்பதே திரை தருவாகவும் இருக்க லாம். ஏனெனில் உள்தருவுக்குப் பாடப்படும் முறையிலேயே இத் 'திரை தருவு'ப் பாக்களும் அமைந்திருக்கின்றன.

நாடகம் முற்றுப்பெறும்பொழுது இறுதியாக 'மங்கள தருவு'ப் பாடல் இருக்கின்றது. 'மங்களம்' என்று முடியும் வரிகளைக் கொண்டு இப் பாடல் அமைந்திருக்கிறது.

நாட்டை, மத்தியமாவதி போன்ற இராகங்களிலும் சம்பைத் தாளத்திலும் பாடல்கள் இசையுடன் பாடி நடிக்கப் பட்டிருக்கின்றன.

நாடகநூல்

இந் நாடகம் ஆண்கள் மட்டுமே நடிக்கப்பெற்ற பாகவத மேளா மரபைச் சேர்ந்தது. பெண் பாத்திரத்தையும் ஆண்களே ஏற்று நடித்திருக்கிறார்கள்.

அகத்தியர்-கவேரராசன், கவேரராசன்-காவேரி, காவேரி அகத்தியர், பரமேசுவரர்-அகத்தியர் ஆகியோர் பேசும் உரை யாடல்கள் சுவைபட அமைந்திருக்கின்றன. சகசி மன்னரின் ஆட்சிக்காலத்தில் இந் நாடகம் இம்மன்னன் அரண்மனை நாட்டியசாலையில் நிகழ்ந்திருக்கிறது. பத்துக் கதாபாத்திரங் களைக் கொண்டு இந்நூல் ஒரு நாடக நூலாகத் திகழ்கிறது.

இறைவன் பெருமை

சிவபெருமான், திருமால், நான்முகன், விநாயகர், உமை யவள், கலைமகள், இலக்குமி, இந்திரன் ஆகியோர் பெருமை-

கள் நூலாசிரியரால் பேசப்படுகின்றன. பரமேசுவரன், சிவன், சந்திரசேகரர், பரமசிவன், பரமேசன், ஈசுவரன் எனும் பெயர்களால் பஞ்சநதீசுவரர் அழைக்கப்படுகின்றார். உமை, பார்வதி, அறம் அளித்த நாயகி எனும் பெயர்களால் உமையவள் அழைக்கப்படுகின்றார். சிவபெருமான் எழுந்தருளும்பொழுது தம் துணைவி உமையவளுடனேயே எழுந்தருளுகின்றார். திருமாலும் நான்முகனும் சிவபெருமானின் அடியையும் முடியையும் தேடுகின்றனர். திருமால் ஆயிரம் மலர்களால் சிவபெருமானை அர்ச்சிக்கிறார். வேழமுகத்தவன் என்று விநாயகர் அழைக்கப்படுகின்றார். திருமால்-இலக்குமி போலவும் இந்திரன் போலவும் வாழவேண்டுமென்று நூலாசிரியர் காவேரியையும் சமுத்திரராசனையும் வாழ்த்துகின்றார்.

உவமைகள்

'போல' எனும் பொருளிலேயே பல உவமைகள் இடம் பெற்றிருக்கிருக்கின்றன.

"தண்ணீர் பாய்வதற்குப் பள்ளம் கிடைத்தது போல இந்தச் சம்பந்தம் கிடைத்தது" என்று அகத்தியர் அமைச்சரிடம் கூறுகின்றார்.

காவேரி சிவபூசை செய்வதற்காக நறுமலர்களைப் பறித்துப் பந்து போலச் சுருட்டும்படித் தொடுக்கிறாள்.

மலைக்கு மலையைச் சேர்ப்பது எவ்வளவு பொருத்தமோ அது போலக் காவேரிக்குக் கடல் பொருத்தமாகும்.

கலைக்கு எப்படிக் கலைவாணியோ அது போலக்காவேரிக்குச் சமுத்திரராசன் பொருத்தமுடையவனாவான்.

வால மன்மதன் போலவே வருகின்ற சமுத்திரராசனுக்குக் காவேரி மாலையிடுகிறாள்.

கவேரராசன் அவைக்கு வருகின்றபொழுது வட்டமான மதி போன்ற இடையினைப் பிடித்து வருகின்றனர்.

காவேரி 'பூர்ண சந்திரோதயம் போலச்' சகியுடன் வருகிறாள். அன்னம் போல் நடை நடந்து, கொடிபோல் இடை துவண்டு, நிலவுப் பூப்போல் குறுநகை புரிந்து வருகிறாள்.

சமுத்திரராசன், விட்டுணுவின் மேனியும் போலவே மேனியும் உள்ளவன்.

சமுத்திரராசனுக்கும் காவேரிக்கும் திருமணம் நிகழ்ந்து முடிந்த பின்னர்ப் பரமேசுவரன் வாழ்த்துகின்ற பாடலில் பல உவமைகள் இடம்பெறுகின்றன.

''ஆல் போலவே தழைத்து நல்ல
அருகு போலவே வேரோடி
மால் போலவும் லக்ஷ்மி போலவும்
வையகந் தனில் வாழ்ந்திருப்பீர்
இந்திரன் போலவே வாழ்ந்திருப்பீர்-இருவரும்
இருக்குவேள் போலவே வாழ்ந்திருப்பீர்
சந்திரன் போலவே வாழ்ந்திருப்பீர்-எழு
தாரகை போலவே வாழ்ந்திருப்பீர்'' (பா. 33)

என்பது அப்பாடல்.

ஏனையவை

சிவபூசை :- தனக்கு நல்ல கணவன் வேண்டுமென்று காவேரி பஞ்சநதீசரைப் போற்றிப் பணிந்து வணங்குகிறாள். இவள் செய்கின்றசிவபூசையைப் பற்றி ஆசிரியர்கூறுவதிலிருந்து அக்காலச் சிவ பூசை முறையை அறியமுடிகிறது. அஃதாவது. சந்தனம், கற்பூரம் ஆகியவற்றைச் சாத்தி அம்புயக் கையால் சுகந்தம் அருச்சனை செய்கிறாள். நல்லதொரு கனிகளைப் பறித்து நைவேதனம் செய்கிறாள். பின்னர்த் தீபம் ஏற்றுகிறாள். பஞ்சாட்சரத்தை மகிழ்ந்து சபிக்கிறாள். அதன்பின்னர் நெய்யி னால் விளக்கு வைத்து முத்துக்களாலும் இரத்தினங்களாலும் முகஅலங்காரம் செய்து சித்திரான்ன வகைகளைப் படைத்து அஞ்சடுக்குத் தீபம் முதல் ஆலத்தி செய்துசிறப்பாகப்பிரதட்டிணம் செய்து திருச்சிற்றம்பலமோடு தேவாரம் பாடி அருச்சனை செய்கிறாள். மறக்காமல் நந்தி அருகில் இருந்து மனத்தினில் பஞ்சாட்சரத்தை வகையாக நினைக்கிறாள்.

வசனங்கள் :- சூத்திரதாரன், கவேரராசன், அகத்தியர், காவேரி, பரமேசுவரன், சமுத்திரராசன் ஆகியோர் உரைநடை வசனங்களைப் பேசுகின்றனர். நாடகப் பாத்திரங்களை அறிமுகப்படுத்துகின்ற போதும் கதை நிகழ்ச்சிகளின் தொடர்பு விடுபட்டுப் போகாமல் இருக்கின்ற இடத்திலும் சூத்திரதாரன் வசன நடையில் பேசுகின்றான். இப் பேச்சுகள் அக்காலப் பேச்சுத்தமிழ் நடையில் அமைந்திருக்கின்றன.

குறியும் நிமித்தமும் :- அக்காலத்தில் குறி சொல்லும் முறையும் அதைக் கேட்கும் முறையும் மக்கள் பழக்க வழக்கங்களில் ஒன்றாக இருந்திருக்கிறது. துன்பம் வருகின்றபொழுதும் அல்லது எதிர்கால வாழ்வு எப்படி இருக்கும் என அறிந்து கொள்ளும் ஆவலும் மக்களிடையில் இருந்து வருவதில் வியப்பொன்றுமில்லை. இந்நாடகக்கதைத் தலைவி காவேரியின் இடக்கை பார்த்த இளங்குறத்தி 'இன்னும் நாலு நாட்களில் இவளுக்கு நல்ல கணவன் வருவான்' என்று கூறுகிறாள். காவேரியும் எட்டு நாளாய்த் தன் இடக்கண்துடிக்கிறது என்கிறாள். இவ்வாறு குறியும் நிமித்தமும் இந் நாடகத்தில் இடம்பெறுகிறது.

அடியார்கள் :— இந்நூல் எழுந்த காலத்தில் பெரிய புராணத்தில் கூறப்படுகின்ற நாயன்மார்களின் வரலாறு மக்களிடையே பரவலாகப் பெரிதும் பேசப்பட்டு வந்திருக்கிறது. இவற்றுள் சில அடியார்களின் வரலாற்று நிகழ்ச்சிகளை அக்காலப் புலவர்கள் தாங்கள் படைத்த இலக்கியங்களில் ஏற்றவிடங்களில் எடுத்தாண்டிருக்கின்றனர். இதற்கு இந்நூலாசிரியரும் விதிவிலக்கல்லர். இந்நூலில் சம்பந்தர் பாலுக்காக அழுதது. பரவை நாச்சியாருக்குச் சுந்தரர் பொருட்டு இறைவன் தூது சென்றது, மார்க்கண்டேயருக்காக நமனை உதைத்தது, சிறுத்தொண்டருக்காகப் பிள்ளைக்கறியுண்டது, மனுநீதிச் சோழன் மனத்தைச் சோதித்தது ஆகிய வரலாறுகள் தொடர்களாகப் பாடப்பட்டிருக்கின்றன.

சொற்கள் :- இந்நூலில் பேச்சுவழக்குச் சொற்கள், வடமொழிச் சொற்கள், அடுக்கு மொழிச் சொற்கள் போன்றவை இடம்பெற்றிருக்கின்றன. எப்படியடி, சும்மா, சேதி, நிசம்,

போச்சு, வேணும் முதலான 24 பேச்சு வழக்குச் சொற்களும் ஸ்திரீ, நமஸ்காரம், யௌவனம், பூஷணன், ஹரன், பக்ஷம், வேஷம், யக்ஞம், திருஷ்டி, லக்ஷ்மி, ஆசீர்வாதம், ஸ்திரம் முதலான 46 வடமொழிச் சொற்களும் அரஅர, நின்று நின்று, வகை வகை, முத்துமுத்து, விதவிதம், எண்ணியெண்ணி, கெஞ்சிக்கெஞ்சி ஆகிய ஏழு அடுக்கு மொழிச் சொற்களும் பாக்களிலும் வசன நடையிலும் அமைந்திருக்கின்றன. இவை அக்கால மொழி நடையை அறிவதற்கு மிகவும் பயன்படும் என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை.

நூலோதி (Bibliography)

அருணாசலம் பிள்ளை, த.அ. (ப ஆ.) — கந்தசாமிப் புலவர் இயற்றிய திருச்செந்தூர் நொண்டி நாடகம், கோபால் எலக்டிரிக் அச்சியந்திர சாலை, உடுமலை, 1948.

அறிவுடைநம்பி, ம.சா. — தஞ்சை மராட்டிய மன்னர் வளர்த்த நுண்கலைகள், அச்சிடப்படாத முதுமுனைவர் பட்ட (டி.லிட்.) ஆய்வேடு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1986.

இராசு, செ. — தஞ்சை மராட்டியர் கல்வெட்டுகள், தமிழ்ப்பல்கலைக்கழம், தஞ்சாவூர், 1987.

,, — தஞ்சை மராட்டியர் செப்பேடுகள், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1983.

இளம்பூரணர் (உ.ஆ.) — தொல்காப்பியம் பொருளதிகாரம், கழகம், சென்னை, 1974.

கல்யாணசுந்தரையர், எஸ். (ப.ஆ.) — கும்பேசர் குறவஞ்சி, உ.வே.சா. நூல் நிலையம், சென்னை, இரண்டாம் பதிப்பு 1961.

கழகப் புலவர் குழு — சிவப்பதிகள் வரலாறு. கழகம், சென்னை, 1977.

குமாரவேலன், இரா. — தமிழ் நாடக ஆய்வு அரசு பதிப்பகம், சென்னை, 1978.

கோவிந்தராச முதலியார் கா, ர. (உ.ஆ.) — பன்னிரு பாட்டியல், கழகம், சென்னை, 1970.

கோவிந்தராசனார், சி. (ப. ஆ.) — செண்டலங்காரன் விறலி விடுதூது, சரசுவதி மகால் நூல் நிலையம், தஞ்சாவூர், 1969.

சக்திப் பெருமாள் — தமிழ் நாடக வரலாறு, வஞ்சிக்கோ பதிப்பகம், மதுரை, 1979.

சாமிநாதையர், உ.வே. (ப. ஆ.) — கொங்குவேளிரியற்றியபெருங்கதை உ.வே.சா. நூல்நிலையம். சென்னை, நான்காம் பதிப்பு 1968.

,, — கொட்டையூர் ஸ்ரீ சிவக்கொழுந்து தேசிகர் இயற்றிய பிரபந்தங்கள், கேசரிஅச்சுக்கூடம், சென்னபட்டணம், 1938.

,, — திருத்தக்கத்தேவர் இயற்றிய சீவக சிந்தாமணி மூலமும் உரையும், உ.வே.சா. நூல்நிலையம், சென்னை, 1969.

சாம்பசிவனார்.ச.(உ. ஆ.) — திரிகூடராசப்பக்கவிராயர்இயற்றிய திருக்குற்றாலக் குறவஞ்சி, வளவன் வெளியீடு, மதுரை, இரண்டாம் பதிப்பு 1981.

,, — 'மதுரை மீனாட்சியம்மை குறம்', சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள், (மூன்றாவது மாநாடு), கழகம், சென்னை, 1960.

,, — வள்ளுவர் தெள்ளுரை, மதுரைத் திருவள்ளுவர் கழகம், மதுரை, 1970.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் — தேவாரத் திருப்பதிகங்கள் தருமபுர ஆதீனம், தருமபுரம், 1964.

சுப்பிரமணியபிள்ளை, கா. இலக்கியவரலாறு இரண்டாம்பாகம், ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், சென்னை, ஐந்தாம் பதிப்பு 1958.

,, (உ.ஆ.) தனிப்பாடல் திரட்டு இரு பாகங்கள், பி. இரத்தினநாயகர் & சன்ஸ், சென்னை, 1939.

சுப்பிரமணியபிள்ளை, பொன். (ப.ஆ.) அனந்தபாரதி இயற்றிய திருவிடை மருதூர் நொண்டி நாடகம், திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்க சுவாமி தேவஸ்தானம், திருவிடை மருதூர், 1967.

செயராமன், ந.வீ. சிற்றிலக்கியச் செல்வம், மணிவாசகர் நூலகம், சிதம்பரம், இரண்டாம் பதிப்பு 1979.

சொக்கலிங்கம், வீ. 'தஞ்சை மராத்திய மன்னர்கள் காலத்திய தமிழ் இலக்கியங்கள்', தஞ்சை மராட்டிய அரசர் மோடி ஆவணக் கருததரங்கு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 20, 21, 22-1-1983. உருளச்சு.

ஜான் அம்மையார், லூர். 'சரபேந்திர பூபால குறவஞ்சி', சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள், (மூன்றாவது மாநாடு), கழகம், சென்னை, 1960.

தாயுமானவர் திருப்பாடல்கள், கழகம், சென்னை, 1975.

திருஞானசம்பந்தர் தேவாரத் திருப்பதிகங்கள் முதல் மூன்று திருமுறைகள், தருமபுர ஆதீனம், தருமபுரம், 1953, 1954 1955.

திருநாவுக்கரசர் தேவாரத் திருப்பதிகங்கள் நான்கு, ஐந்து, ஆறு திருமுறைகள், தருமபுர ஆதீனம், தருமபுரம், 1957, 1961, 1963,

நிர்மலாதேவி, இரா. (ப. ஆ.) பணவிடு தூது, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1980.

பிரேமலதா, வே. (ப.ஆ.) தியாகேசர் குறவஞ்சி, சரசுவதி மகால் நூல்நிலையம், தஞ்சாவூர், 1970.

பெருமாள், ஏ. என். தமிழ் நாடகம் ஓர் ஆய்வு, தமிழ்ப் பதிப்பகம், சென்னை, 1979.

மாணிக்கவாசகசுவாமிகள் திருவாசகம் திருக்கோவையார், தருமபுர ஆதீனம், தருமபுரம், 1966.

மீனாட்சிசுந்தரம் பிள்ளை திருநாகைக்காரோணப் புராணம், திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, 1970.

,, பிரபந்தத் திரட்டு, (ப. ஆ.) உ. வே சாமிநாதையர், கமர்சியல் அச்சுக்கூடம், சென்னை, இரண்டாம் பதிப்பு 1926.

முத்துச்சண்முகன் & அசோகன், வீ நொண்டி நாடகங்கள், முத்துப்பதிப்பகம், மதுரை, 1981.

வேங்கடசாமி ரெட்டியார், கி. (ப.ஆ.) ஆழ்வார்கள் அருளிச்செய்த நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம், திருவேங்கடத்தான் திருமன்றம், சென்னை, 1973.

வேங்கடராமையா, கே. எம். தஞ்சை மராட்டிய மன்னர் கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும், தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1984.

வேணுகோபாலன், வ. (ப. ஆ.) ஐந்து தமிழிசை நாட்டிய நாடகங்கள், சரசுவதி மகால் நூல்நிலையம், தஞ்சாவூர், 1980.

வைத்தியநாத தேசிகர் — இலக்கண விளக்கம் பொருள் பாட்டியல், சரசுவதி மகால் நூல் நிலையம், தஞ்சாவூர், 1974.

வையாபுரிப்பிள்ளை, எஸ். (ப. ஆ.) — சங்க இலக்கியம் (இரு பகுதிகள்), பாரி நிலையம், சென்னை, 1967.

Hickey, W. — **The Tanjore Mahratta Prinicipality in South India,** St. Thome, 1874.

Rajayyan, K. — **A History of British Diplomacy in Tanjore,** Rao and Raghavan, Mysore, 1969.

Seetha. S. — **Tanjore as a Seat of Music,** University of Madras, 1981.

Srinivasan, C.K. — **Maratha Rule in the Carnatic,** Annamalai University, Annamalainagar, 1944.

Subramanian, K R. — **Maratha Rajas of Tanjore,** Madras, 1928.

Subramanian, N. — **History of Tamilnadu,** Koodal Publishers, Madurai, 1982.

——— — **A Descriptive Catalogue of the Tamil Manuscripts,** T. M. S. S. Library, Tanjore.

——— — **Ramabharati Padas,** D. No B 11654, T.M.S.S. Library, Tanjore.

——— — **South Indian Inscriptions Volume III,** Govt. Press, Madras.

———

பின்னிணைப்புகள்

1. தூது இலக்கியங்கள்

கி. பி. 13 ஆம் நூற்றாண்டு		
1	புலந்திரன் தூது	புகழேந்திப் புலவர்
கி. பி. 13—14 ஆம் நூற்றாண்டு		
2	தத்துவ சந்தேசம்	வேதாந்த தேசிகர்
கி. பி. 14 ஆம் நூற்றாண்டு		
3	நெஞ்சுவிடு தூது	உமாபதி சிவாச்சாரியர்
கி. பி. 16 ஆம் நூற்றாண்டு		
4	ஞானப்பிரகாசர் நெஞ்சுவிடு தூது	மாசிலாமணி தேசிகர்
5	தெய்வச்சிலையார் விறலிவிடு தூது	குமாரசாமி அவதானி
6	நெஞ்சுவிடு தூது	தத்துவராயர்
கி. பி. 17 ஆம் நூற்றாண்டு		
7	சிவஞான பாலைய தேசிகர் நெஞ்சுவிடு தூது	துறைமங்கலம் சிவப் பிரகாசர்
8	சிற்றம்பல சம்பந்தர் கிளிவிடு தூது	அழகிய சிற்றம்பலக் கவிராயர்
9	திருநறையூர் நம்பி மேகவிடு தூது	பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்
10	நாராயணசாமிபிள்ளை கிள்ளைவிடு தூது	அவிநாசி நாதர்
11	நெஞ்சுவிடு தூது	சாந்தலிங்க சுவாமிகள்
12	குருநாதசுவாமி கிள்ளைவிடு தூது	வரதபண்டிதர்

கி. பி. 18 ஆம் நூற்றாண்டு

13 அழகர் கிள்ளைவிடுதூது	பலபட்டடைச்சொக்கநாதர்
14 இராமலிங்கேசர் பணவிடு தூது	பெரிய சரவணப்பெருமாள் கவிராயர்
15 கச்சி ஆனந்தருத்திரேசர் வண்டுவிடு தூது	கச்சியப்ப முனிவர்
16 கச்சியப்பர் நெஞ்சுவிடு தூது	கச்சியப்பர் மாணவர்
17 கண்டிஅரசன் கிள்ளை விடுதூது	சிற்றம்பலப் புலவர்
18 காத்தான்பிள்ளை மதங்கிவிடு தூது	மதுரகவிராயர்
19 கூளப்பநாயக்கன் விறலிவிடு தூது	சுப்பிரதீபக் கவிராயர்
20 சண்பகநல்லூர் சிவன் வண்டுவிடு தூது	பலபட்டடைச் சொக்க நாதர்
21 சிதம்பரேசர் விறலிவிடு தூது	தில்லைவிடங்கன் மாரிமுத்துப்பிள்ளை
22 பத்மகிரிநாதர் தென்றல் விடுதூது	பலபட்டடைச் சொக்க நாதர்
23 மதுரைச் சொக்கநாதர் பணவிடு தூது	பெரிய சரவணப்பெருமாள் கவிராயர்
24 மான்விடு தூது	குழந்தைக் கவிராயர்
25 முத்துவிசய ரகுநாதர் பணவிடுதூது	பலபட்டடைச் சொக்க நாதர்

கி.பி. 18-19ஆம் நூற்றாண்டு

26 செந்தில் காத்தான்பிள்ளை பாங்கிவிடு தூது	திருவேங்கடத்தான் கவிராயர்

27	புகையிலைவிடுதூது	சீனி சர்க்கரைப் புலவர்

கி.பி. 19ஆம் நூற்றாண்டு

28	அழகர் கமலவிடு தூது	வேங்கடகிருட்டிண பாரதி
29	அன்புவிடுதூது	வே. முத்துசாமி ஐயர்
30	அன்புவிடுதூது	பி.எஸ்.இராசமாணிக்கம் பிள்ளை
31	அன்னம்விடுதூது	ந முத்துச்சாமிக் கவிராயர்
32	கழுதைவிடுதூது	மிதிலைப்பட்டிக் கவிராயர்
33	காந்தியடிகள் நெஞ்சு விடுதூது	வேங்கடசாமி ரெட்டியார்
34	காலிங்கராயன் பஞ்சவர்ணத் தூது	இ. சின்னத்தம்பிப் புலவர்
35	குமாரதேவர் நெஞ்சு விடுதூது	சிதம்பர சுவாமிகள்
36	அன்னவிடு தூது	அல்லி மரக்காயர்
37	சுப்பிரமணிய தேசிகர் நெஞ்சுவிடு தூது	மீனாட்சி சுந்தரம்பிள்ளை
38	சேதுபதி விறலிவிடுதூது	சரவணப் பெருமாள் கவிராயர்
39	தமிழ்விடு தூது	அமிர்தம்பிள்ளை
40	தானப்பாசாரியார் தசவிடு தூது	மீனாட்சி சுந்தரம் பிள்ளை
41	திருப்போரூர்க் கிள்ளை விடுதூது	கந்தசாமி முதலியார்
42	நல்லூர்க் கந்தசுவாமி கிள்ளைவிடு தூது	சந்திரசேகர பண்டிதர்
43	நெஞ்சுவிடு தூது	தி.செ.முருகதாசப்பிள்ளை
44	புகையிலைவிடு தூது	சுப்பிரமணியவேலச் சின்னோவையன்
45	மூவரையன் விறலிவிடுதூது	மிதிலைப்பட்டிச் சிற்றம்பலக் கவிராயர்

46	மேக தூதம்	நாகநாத பண்டிதர்
47	வண்டுவிடு தூது	அல்லிமரக்காயர்
48	வண்டுவிடு தூது	மீனாட்சிசுந்தரக்கவிராயர்
49	வனசவிடுதூது	கன்றாப்பூர்க் கவிராயர்
50	வானவன்விடு தூது	யாகப்பப்பிள்ளை
51	ஹம்ச சந்தேசம்	துரைசாமி மூப்பனார்

கி.பி. 19-20 ஆம் நூற்றாண்டு

52	கிளிவிடு தூது	சி.சுப்பிரமணிய பாரதியார்
53	குருவிவிடு தூது	சி. எம். இராமச்சந்திரன் செட்டியார்
54	செருப்புவிடு தூது	பின்னத்தூர் நாராயண சாமி ஐயர்
55	தத்தைவிடு தூது	சரவண முத்துப்பிள்ளை
56	திருவாவடுதுறை அம்பல வாண தேசிகர் மீதுபொன் விடு தூது	அமிர்த சுந்தரநாதம் பிள்ளை
57	பழையதுவிடு தூது	பின்னத்தூர் நாராயண சாமி ஐயர்
58	மயில்விடு தூது	கு. நடேசக் கவுண்டர்
59	மறலிவிடு தூது	நாகை. சதாசிவம்பிள்ளை
60	மாரி வாயில்	ச.சோமசுந்தர பாரதியார்
61	மேகதூதக் காரிகை	அ.குமாரசாமிப் புலவர்

2. உலா இலக்கியங்கள்

கி. பி. 8 ஆம் நூற்றாண்டு		
1	திருக்கைலாய ஞானவுலா	சேரமான் பெருமாள் நாயனார்
கி. பி. 9 ஆம் நூற்றாண்டு		
2	ஆளுடையபிள்ளையார் திருவுலாமாலை	நம்பியாண்டார் நம்பி
கி. பி. 12 ஆம் நூற்றாண்டு		
3	இராசராச சோழனுலா	ஒட்டக்கூத்தர்
4	குலோத்துங்கச் சோழனுலா	ஒட்டக்கூத்தர்
5	சங்கரசோழனுலா	ஒட்டக்கூத்தர்
6	விக்கிரம சோழனுலா	ஒட்டக்கூத்தர்
கி. பி. 14—15 ஆம் நூற்றாண்டு		
7	திருவானைக்காவுலா	காளமேகப் புலவர்
கி. பி. 15 ஆம் நூற்றாண்டு		
8	ஏகாம்பரநாதர் உலா	இரட்டையர்
கி. பி. 16 ஆம் நூற்றாண்டு		
9	சிலேடை உலா	தத்துவராயர்
10	சேயூர் முருகன் உலா	சேறைக்கவிராசபிள்ளை
11	ஞானவிநோதன் உலா	தத்துவராயர்
12	திருக்காளத்திநாதருலா	சேறைக் கவிராசபிள்ளை
13	திருப்பாலைப்பந்தல் உலா	எல்லப்ப நயினார் உண்ணாமலை
14	மதுரைச் சொக்கநாதருலா	புராணத் திருமலைநாதர்
15	வாட்போக்கிநாதருலா	சேறைக் கவிராசபிள்ளை
கி. பி. 17 ஆம் நூற்றாண்டு		
16	கயத்தாற்றரசன் உலா	அந்தகக்கவி வீரராகவர்
17	கனகசபைநாதனுலா	அம்மையப்பர்

18 கீழ்வேளூருலா	அந்தகக்கவி வீரராகவர்
19 திருக்கழுக்குன்றத்து உலா	அந்தகக்கவி வீரராகவர்
20 திருப்பூவன நாதருலா	கந்தசாமிப் புலவர்
21 திருவாரூருலா	அந்தகக்கவி வீரராகவர்
22 திருவெங்கை உலா	துறைமங்கலம் சிவப்பிரகாசர்
23 மயிலத்து உலா	வேலைய தேசிகர்
கி. பி. 17—18 ஆம் நூற்றாண்டு	
24 அடைக்கலநாயகி உலா	வீரமாமுனிவர்
25 உண்மை உலா	ஆறுமுக மெய்ஞ்ஞான சிவாச்சாரியார்
26 சண்முகர் உலா	,,
27 சிவந்தெழுந்த பல்லவனுலா	படிக்காசுப் புலவர்
28 வெற்றர் உலா	ஆறுமுக மெய்ஞ்ஞான சிவாச்சாரியார்
கி. பி. 18 ஆம் நூற்றாண்டு	
29 திருக்குற்றால நாதருலா	திரிகூடராசப்பக் கவிராயர்
30 திருத்தணிகை உலா	கந்தப்பையர்
31 திருவிலஞ்சி முருகனுலா	மேலகரம் பண்டாரக் கவிராயர்
32 தேவையுலா	பலபட்டடைச் சொக்கநாதப்புலவர்
33 மெய்கண்ட வேலாயுத உலா	அழகு முத்துப்புலவர்
கி. பி. 19 ஆம் நூற்றாண்டு	
34 அவிநாசி உலா	வடவள்ளி அருணாசலக் கவிராயர்
35 கோடீச்சுர உலா	கொட்டையூர் சிவக் கொழுந்து தேசிகர்
36 செப்பறை உலா	அழகியகூத்த தேசிகர்
37 ஞான உலா	வேதநாயக சாத்திரி

38 தஞ்சைப் பெருவுடையாருலா	கொட்டையூர் சிவக் கொழுந்து தேசிகர்
39 திருக்கடவூர் உலா	சுப்பிரமணியக் கவிராயர்
40 திருச் செந்தில் உலா	தண்டபாணி சுவாமிகள்
41 திருவிடைமருதூருலா	மீனாட்சி சுந்தரம் பிள்ளை
42 நெல்லை வேலவருலா	சரவணமுத்துப் புலவர்
43 பேரூருலா	வடவள்ளி அருணாசலக் கவிராயர்
44 மருங்காபுரி உலா	வெறிமங்கைபாகக் கவிராயர்

3. குறவஞ்சி இலக்கியங்கள்

கி.பி.12ஆம் நூற்றாண்டு

1	சோழக் குறவஞ்சி	கம்பர்

கி. பி. 13 ஆம் நூற்றாண்டு

2	துரோபதை குறம்	புகழேந்திப் புலவர்
3	மின்னொளியாள் குறம்	புகழேந்திப் புலவர்

கி.பி. 15ஆம் நூற்றாண்டு

4	வைத்தியக் குறவஞ்சி	கொங்கண நாயனார்

கி.பி. 16ஆம் நூற்றாண்டு

5	ஞானரத்தினக் குறவஞ்சி	பீர்முகம்மது அப்பா
6	பிசுமில் குறம்	பீர்முகம்மது அப்பா

கி. பி. 17 ஆம் நூற்றாண்டு

7	மீனாட்சியம்மை குறம்	குமரகுருபரர்
8	வெங்களப்பநாயகர் குறவஞ்சி	மிதிலைப்பட்டி அழகிய சிற்றம்பலக் கவிராயர்

கி.பி. 18 ஆம் நூற்றாண்டு

9	ஆதிமூலேசர் குறவஞ்சி	தில்லைவிடங்கன் மாரி முத்துப்பிள்ளை
10	காயாரோகணக் குறவஞ்சி	அழகுமுத்துப் புலவர்
11	காரைக் குறவஞ்சி	யாழ்ப்பாணம் சுப்பையர்
12	குன்றக்குடிக் குறவஞ்சி	வீரபத்திரக் கவிராயர்
13	ஞானக் குறவஞ்சி	குமரகுருபர தேசிகர்
14	திருக்குற்றாலக் குறவஞ்சி	திரிகூடராசப்பக் கவிராயர்
15	பாம்பண்ணக்கவுண்டன் குறவஞ்சி	பாலபாரதி முத்துசாமிஐயர்
16	மாந்தைக் குறவஞ்சி	வீரபத்திரக் கவிராயர்
17	முத்தானந்தர் குறவஞ்சி	ஆற்றூர் முத்தானந்தர்
18	வருணாபுரிக் குறவஞ்சி	தில்லைவிடங்கன் மாரி முத்துப்பிள்ளை

கி.பி. 18-19ஆம் நூற்றாண்டு

19	சிவன்மலைக் குறவஞ்சி	தே.இலட்சுமண பாரதி
20	நகுலமலைக் குறவஞ்சி	சேனாதிராய முதலியார்
21	நல்லைக் குறவஞ்சி	சேனாதிராய முதலியார்
22	நல்லைநகர்க் குறவஞ்சி	ப.கந்தப்பிள்ளை

கி.பி. 19ஆம் நூற்றாண்டு

23	அழகர் குறவஞ்சி	கவிகுஞ்சர பாரதியார்
24	அளலைத்தீவுக் குறவஞ்சி	முத்துக்குமாரப் புலவர்
25	இராசாமோகனக் குறவஞ்சி	கிரிராசகவி
26	கச்சபேசர் குறவஞ்சி	விச்சூர் தாமோதர முதலியார்
27	கச்சாய்க் குறவஞ்சி	சமாப்பாண முதலியார்
28	கச்சேரி முதலியார்குறவஞ்சி	இன்பகவி
29	கும்பேசர் குறவஞ்சி	பாபநாச முதலியார்
30	குறமாது குறவஞ்சி	மீறான்கனி அண்ணாவி
31	கொடுமளூர் முருகர் குறவஞ்சி	நல்லவீரப்பப்பிள்ளை
32	சகசிராசன் குறவஞ்சி	முத்துக்கவி
33	சரபேந்திர பூபாலக் குறவஞ்சி	கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர்
34	சாப்டூர்க் குறவஞ்சி	ந.முத்துசாமிக் கவிராயர்
35	சிவபெருமான் குறவஞ்சி	தாமோதரக் கவிராயர்
36	சுவாமிமலை முருகன் குறவஞ்சி	இலிங்கப்பையர்
37	சேற்றூர் முத்துசாமித் துரைக் குறவஞ்சி	இராமசாமிக் கவிராயர்
38	தத்துவக் குறவஞ்சி	முருகேச பண்டிதர்
39	திருப்போரூர்க் குறவஞ்சி	சபாபதி முதலியார்
40	திருவிடைக்கழிக் குறவஞ்சி	மீனாட்சி சுந்தரம் பிள்ளை

41	நகுலமலைக் குறவஞ்சி	விசுவநாத சாத்திரி
42	பாம்பண்ணக் கவுண்டன் குறவஞ்சி	வடவள்ளி அருணாசலக் கவிராயர்
43	பெத்லகேம் குறவஞ்சி	வேதநாயக சாத்திரியார்
44	பொய்யாமொழி ஈசர் குறவஞ்சி	சிதம்பரத் தத்துவலிங்கையன்
45	மருங்காபுரிக் குறவஞ்சி	வெறிமங்கைபாகக் கவி ராயர்
46	மல்வில் குறவஞ்சி	வெற்றிவேலுப் புலவர்
47	முத்துக்கிருட்டிணன் குறவஞ்சி	இன்பகவி
48	யாழ்ப்பாணத்துச் செல்வர் குறவஞ்சி	இன்பகவி
49	வண்ணைக் குறவஞ்சி	விசுவநாத சாத்திரி
50	வண்ண வைத்தியலிங்கக் குறவஞ்சி	கணபதி ஐயர்
51	வள்ளியம்மை ஆயலோட் டும் குறவஞ்சி	கந்தசாமி முதலியார்
52	வன்னிக் குறவஞ்சி	வெற்றிவேலுப் புலவர்
53	வீராலிமலைக் குறவஞ்சி	பிள்ளைப்பெருமாள் கவிராயர்
54	வேங்கடசாமி நாயகர் குறவஞ்சி	மாம்பழக்கவிச்சிங்க நாவலர்